# சங்க இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்

தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.)
பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
**ம.மரியசவரிமுத்து**
**சேர்க்கை எண்: 1496**

அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்–613 010**

**ஏப்ரல் 2014**

முனைவர் உ.பிரபாகரன்,
எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர்,
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்–613 010.

# நெறியாளர் சான்றிதழ்

தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறையில் முனைவர் (Ph.D.) பட்ட ஆய்வாளர் **ம.மரியசவரிமுத்து** அவர்கள் **சங்க இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்** என்னும் தலைப்பில் எழுதிய இந்த ஆய்வேடு என் மேற்பார்வையில் 2008–2014 ஆம் கல்வியாண்டில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வாளரின் சொந்த முயற்சியால் எழுதப்பட்டது என்றும், இவ்ஆய்வேடு வேறெந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்காகவும் அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : தஞ்சாவூர்,

நாள் :

நெறியாளர் கையொப்பம்

துறைத்தலைவர்

**ம.மரியசவரிமுத்து,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 010.

## ஆய்வாளர் உறுதிமொழி

**சங்க இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்** என்னும் தலைப்பில் முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக 2008–2014 ஆம் கல்வியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இவ்ஆய்வு என் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இவ்ஆய்வேடு இதற்கு முன் வேறெந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்காகவும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : தஞ்சாவூர்,
நாள் :

ஆய்வாளர் கையொப்பம்

# நன்றியுரை

**சங்க இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்** என்னும் தலைப்பில், முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்ய வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும், பதிவாளர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொருளில் ஆய்வை மேற்கொள்ளவும் ஆய்வுக்களங்களை உரிய முறையில் தெரிவு செய்யவும் தரவுகள் கிடைக்கும் வழிமுறைகளை அறியவும் நெறிப்படுத்திய என் ஆய்வு நெறியாளர் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறைப் பேராசிரியர் **முனைவர் உ.பிரபாகரன், எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,** அவர்களுக்கு என் வணக்கத்தையும் மனம் நிறை நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அயல்நாட்டுக் கல்வித்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் உள்ளிட்ட மாணவர்களுக்கும் பிற ஆய்வாளர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

இவ்ஆய்வுக்கு என்னுடனிருந்து உதவிய பேராசிரியர் **முனைவர் அரங்க.சுப்பையா** மற்றும் பேராசிரியர் **முனைவர் இரா.இராஜேந்திரன், எம்.ஏ., பிஎச்.டி.,** ஆகியோர்க்கு என் அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வை மேற்கொள்ள இசைவளித்துதவிய சென்னை, மியாசி, கல்வியியல் கல்லூரி, மேனாள், இன்னாள் தலைவர் மற்றும் செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர் மற்றும் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் ஆகியோர்க்கு என் வணக்கமும் நன்றியறிதலும் எப்போதும் உரியன.

இவ்ஆய்வுப் பணியில் தம்மால் இயன்ற வரை உதவியிருந்த என் துணைவியார் **ஜெ.கே.புஷ்பலதா**, என் மாமா திரு.**N.ஜெபமணி** ஆகியோரின் உதவிகள் மறத்தற்கரியன. இத்தருணத்தில் மறைந்த எனையீன்ற அன்னை **ம.பெர்னர்த்** அவர்களின் திருவடியை வணங்குகிறேன்.

**ம.மரியசவரிமுத்து**

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அ.த. | - | அ.தட்சிணாமுர்த்தி |
| அகம். | - | அகநானூறு |
| இ.ப. | - | இரண்டாம் பதிப்பு |
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| உ.வே.சா. | - | உ.வே.சாமிநாதையர் |
| ஏ.ப. | - | ஏழாம் பதிப்பு |
| ஐங். | - | ஐங்குறுநூறு |
| கலி. | - | கலித்தொகை |
| கு.வெ.பா. | - | கு.வெ.பாலசுப்பிரமணியன் |
| குறள். | - | திருக்குறள் |
| குறிஞ்சி. | - | குறிஞ்சிப்பாட்டு |
| குறுந். | - | குறுந்தொகை |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| சிறுபாண். | - | சிறுபாணாற்றுப்படை |
| சோ.ந.க. | - | சோ.ந.கந்தசாமி |
| த.கோ.ப. | - | த.கோ.பரமசிவம் |
| திரி. | - | திரிகடுகம் |
| திருமுருகு. | - | திருமுருகாற்றுப்படை |
| தொ.ஆ. | - | தொகுப்பாசிரியர் |
| தொல்.எழுத்து. | - | தொல்காப்பியம், எழுத்ததிகாரம் |
| தொல்.சொல். உரி. | - | தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல் |
| தொல்.பொருள். | - | தொல்காப்பியம், பொருளதிகாரம் |
| தொல்.பொருள். அகத். | - | தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் |
| தொல்.பொருள்.கள. | - | தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் |
| தொல்.பொருள்.கற். | - | தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் |
| தொல்.பொருள்.புறத். | - | தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் |
| தொல்.மெய்ப். | - | தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் |
| ந.சு. | - | ந.சுப்பிரமணியன் |
| நச்சர். | - | நச்சினார்க்கினியர் |

| | | |
|---|---|---|
| நற். | - | நற்றிணை |
| நன். | - | நன்னூல் |
| நா.ப. | - | நான்காம் பதிப்பு |
| நூ. | - | நூற்பா |
| நெடு. | - | நெடுநல்வாடை |
| ப. | - | பக்கம் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பக். | - | பக்கங்கள் |
| பட். | - | பட்டினப்பாலை |
| பதிற்று. | - | பதிற்றுப்பத்து |
| பரி. | - | பரிபாடல் |
| பரிமே. | - | பரிமேலழகர் |
| புறம். | - | புறநானூறு |
| பெரும். | - | பெரும்பாணாற்றுப்படை |
| பொரு. | - | பொருநராற்றுப்படை |
| மதுரை. | - | மதுரைக்காஞ்சி |
| மு.ப. | - | முதற்பதிப்பு |
| மு.கு.நூ. | - | முன்னர்க் குறிப்பிட்ட நூல் |
| முல்லை. | - | முல்லைப்பாட்டு |
| மேலது. | - | மேலே சுட்டிய நூல் |
| மொ.பெ. | - | மொழிபெயர்ப்பு |
| வ.சுப.மா. | - | வ.சுப.மாணிக்கம் |

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| ஒன்று | சங்க இலக்கியமும் கல்விச்சூழலும் | 11 |
| இரண்டு | சங்க இலக்கியங்களில் கற்பித்தோர் குறித்த பதிவுகள் | 53 |
| மூன்று | கற்பித்தல் முறை | 112 |
| நான்கு | கற்றோர் குறித்த பதிவுகள் | 153 |
| ஐந்து | பாடப்பொருள் | 202 |
| ஆறு | கற்றல் முறை | 248 |
| ஏழு | கல்வி குறித்த சமூக மதிப்புகள் | 277 |
| | முடிவுரை | 302 |
| | துணைநூற் பட்டியல் | i |

# முன்னுரை

*சங்க இலக்கியங்களின் தொன்மை தமிழ்ச்சமூகத்தின் தனித்த சிறப்பைக் காட்டுவதாகும். தொன்மை மிகுந்த எல்லா மொழியிலும் அச்சமூகப் பண்புகள் இலக்கியங்களின் வழியே வெளிப்படுகின்றன. தமிழில் பிற்கால வளர்ச்சியின் அடிப்படைகள் மிகப் பழங்காலத்தில் தோன்றியிருக்கின்றன. பண்பாடு, நாகரிகம், கலை, அறிவியல் போன்ற பல்வேறு தளங்களிலும் தமிழ்மொழி வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ்மொழியின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் சிறப்புகளும் சங்க இலக்கியங்களில் பதிவாகியிருக்கின்றன. கல்வியியல் சிந்தனைகளும் காலத்திற்கு ஏற்ற முறையில் தமிழ்ச் சமூகத்தில் வளர்ந்திருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. சங்க இலக்கியங்களில் பதிவாகியிருக்கும் பிற துறைகளைப் போலக் கல்வித் துறையும் இடம்பெற்றிருக்கிறது. சங்ககாலக் கல்விச் சிந்தனைகளை ஆராய்வதன் மூலம் அக்காலச் சமூகத்தின் வரலாற்றையும் வளர்ச்சியையும் அறியமுடிகின்றது. இந்த அடிப்படையில் கல்வியியல் சிந்தனைகள் தனித்தாராயப்பட வேண்டியனவாக உள்ளன. சங்க இலக்கியங்களின் வழியே அக்காலக் கல்விச் சிந்தனைகளை ஆராய்வது தனித்தன்மை வாய்ந்ததாகும்.*

*கல்வியில் தனித்த கோட்பாடுகளையும் திட்டங்களையும் கொண்ட சமூகமாகப் பழங்காலச் சமூகத்தைப் பார்க்கலாம். கல்விக்கென்று தனி நிறுவனங்களையும் அமைப்புகளையும் உருவாக்கப் பழந்தமிழ்ச் சமூகம் முயன்றுள்ளது. அம்முயற்சியை வெளிக்கொணர்வதாக இவ்ஆய்வு அமைந்துள்ளது.*

## ஆய்வுத்தலைப்பு

*‘**சங்க இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்**’ என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.*

## ஆய்வுநோக்கம்

*தனிமனிதர், குடும்பத்தார், சான்றோர், புலவர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் கல்வித் தொடர்புடையவர்களாக இருந்தமையைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

## ஆய்வுக் கருதுகோள்

*கல்வியியல் சிந்தனைகளுக்கான பதிவுகள் சங்க இலக்கியங்களில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பதிவாகியுள்ளன என்பது ஆய்வின் கருதுகோளாகக் கொள்ளப்பெறுகிறது.*

## ஆய்வு அணுகுமுறை

*தரவுகளை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் விளக்குவதற்கு வரலாற்றுமுறைத் திறனாய்வும் இலக்கிய எடுத்துக்காட்டுகளை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறைத் திறனாய்வும் இவ்ஆய்வில் பயன்படுத்தப் பட்டுள்ளன.*

## முதன்மை ஆதாரம்

*சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரமாகும்.*

## துணைமை ஆதாரங்கள்

*சங்க இலக்கியங்கள் குறித்த ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், கல்வியியல் சிந்தனை நூல்கள், கட்டுரைகள், திறனாய்வு நூல்கள், அகராதி, கலைக்களஞ்சியம் போன்றவை துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

## ஆய்வுப்பரப்பு

தொல்காப்பியம் அதற்குப் பின்வரும் இலக்கண நூல்கள், இலக்கியங்கள் தொடங்கிப் பிற்கால நீதிநூல்கள் வரை நீண்டு செல்லும் இலக்கிய இலக்கணத் தொடர்ச்சி இவ்வாய்வின் நெடிய பரப்பாகும்.

## ஆய்வு எல்லை

மேற்குறித்த இலக்கிய இலக்கணப் பரப்பில் தோன்றியுள்ள எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இவ்வாய்வின் எல்லையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

## முன்னாய்வுகள்

தமிழகத்தில் கல்வி வளர்ச்சியை இலக்கியங்கள் வழிக் கண்டறியும் முயற்சிகள் பல நூல்களின் வழியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாய்விற்கு முன்னோடியாகச் சில நூல்கள் இடம்பெறுகின்றன.

டாக்டர் மா.ராசமாணிக்கனார் எழுதிய ‘தமிழர் நாகரிகமும் பண்பாடும்’ என்ற நூலும் கே.கே.பிள்ளை எழுதிய ‘தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்’ என்ற நூலும் 1960களில் வெளிவந்தன. இவை தமிழரின் வரலாற்றைக் கூறுவதுடன் கல்விச் சிந்தனைகளையும் வெளியிட்டுள்ளன.

1980களில் வெளிவந்த சு.வித்தியானந்தனின் ஆய்வு நூலாகிய ‘தமிழர் சால்பு’ என்பது இத்தளத்தில் குறிப்பிடத்தக்க நூலாகும். 1980களில் எஸ்.சந்தானம் எழுதிய ‘கல்வியியல் தத்துவ சமூக அடிப்படைகள்’ என்னும் நூல் தமிழர் கல்வி வளர்ச்சியையும் உலகக் கல்வி வளர்ச்சியையும் எடுத்துக் கூறும் நூலாகும். 1980களில் வெளிவந்த பக்தவத்சல பாரதியின் ‘தமிழர் மானிடவியல்’ என்ற நூல் தமிழரின் பண்பாடு, நாகரிகம், பொருளாதாரம், கல்வி போன்றவற்றை விளக்குகின்ற நூலாகும்.

2000இல் ‘சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்’ என்ற கு.வெ.பாலசுப்பிரமணியன் எழுதி வெளிவந்த நூல் அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றை விளக்குவதுடன் சங்ககால மக்கள் கல்வியில் மேம்பட்டிருந்ததை விளக்குகிறது. 2000இல் கல்வியாளர் வசந்தி தேவியுடன் பேட்டி என்று சுந்தரராமசாமி தயாரித்த நூலும் தமிழகக் கல்விச் சிந்தனையை விளக்குகின்றது. உ.பிரபாகரன் எழுதிய ‘பெரியாரின் கல்வியியல் சிந்தனைகள்’ (2000) என்ற நூல் கல்வி குறித்துப் பெரியாரின் சிந்தனைகளை முழுமையாகத் தொகுத்த நூலாகும். 2010இல் திராவிடப் பித்தன் எழுதிய ‘திராவிட நாட்டுக் கல்வி வரலாறு’ என்ற நூல் பழந்தமிழ்ச் சமூகத்தின் கல்விச் சிந்தனையை விளக்கும் நூலாகும். இந்நூல்கள் யாவும் இவ்வாய்விற்கு முன்னாய்வுகளாக அமைந்து உதவுகின்றன.

## ஆய்வேட்டின் அமைப்பு

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இவ்வாய்வு ஏழு இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

1. சங்க இலக்கியமும் கல்விச்சூழலும்
2. சங்க இலக்கியங்களில் கற்பித்தோர் குறித்த பதிவுகள்
3. கற்பித்தல் முறை
4. கற்றோர் குறித்த பதிவுகள்
5. பாடப்பொருள்
6. கற்றல் முறை
7. கல்வி குறித்த சமூக மதிப்புகள்

என்பது இயல் பகுப்பாகும்.

‘சங்க இலக்கியமும் கல்விச்சூழலும்’ என்ற முதல் இயல், மக்கள் கல்வி பெறக் கிடைத்த வாய்ப்புகள் பற்றி விளக்குகின்றது. 1. சங்க இலக்கியம் 2. சங்கமும் சங்க காலமும் 3. சங்க இலக்கியத் தொகுப்பு 4. சங்கப் புலவர்களும் கல்வி ஆற்றலும் 5. புலமையைப் போற்றும் சூழல் 6. மன்னர்கள் போற்றிய

*கல்வி 7. மக்களும் கலைக்கல்வியும் 8. கலைஞர்கள் 9. தொழிற்கல்வி 10. சங்கம் ஒரு கல்வி நிறுவனம் என்று இவ்வியல் பகுக்கப்பட்டுள்ளது.*

*‘சங்க இலக்கியம்’ என்பது பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களையும் அவற்றின் சிறப்புகளையும் எடுத்துரைக்கின்றது. ‘சங்கமும் சங்ககாலமும்’ என்ற பகுதி முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் நிலவிய கால வரலாற்றினையும் இதன்கண் பங்கேற்ற புலவர்களையும் இவர்களால் இயற்றப்பட்ட நூல்களையும் விளக்கிக் கூறுகிறது.*

*‘சங்க இலக்கியத் தொகுப்பு’ என்பது சங்க இலக்கியங்களைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர், தொகுப்பித்த முறை ஆகியவற்றை விளக்குகின்றது. ‘சங்கப் புலவர்களும் கல்வி ஆற்றலும்’ என்பதில் சங்கப் புலவர்கள் சோதிடம், கணிதம், அரசியல் அறிவு, மன்னர்களுக்குச் சந்து செய்வித்தல், கல்வியை விரும்புதல் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.*

*‘புலமையைப் போற்றும் சூழல்’ என்பதில் சங்க காலப் புலவர்களின் புலமைத் திறனைப் பாராட்டிப் பரிசுகளை வழங்குதல், மன்னர்கள் புலவர்களுக்குத் தனி மதிப்பளித்தல், கல்வியின் சிறப்பைப் புலவர்கள் எடுத்துக் கூறல் போன்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. மன்னர்கள், புலவர்களைப் போலக் கவி இயற்றுதல், கல்வியைச் சிறப்பித்துப் பாடுதல் ஆகியவை இதில் விளக்கப்பட்டுள்ளன.*

*மக்கள் கலைகளை விரும்புதல், பாணர் முதலியோரின் கலைத்திறன், கூத்து நிகழ்த்துதல், யாழ் இசைத்தல் போன்ற கலை நுட்பங்கள் பல்வேறு கலைகளில் கலைஞர்கள் சிறந்து விளங்குதல் என்பன விளக்கப்பட்டுள்ளன. தொழிற்கல்வி பெற்ற இடம், தொழிற்கல்வியின் வகைகள், உழவுத்தொழிலின் சிறப்பு, பயிர்த்தொழில், மீன்பிடித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் சங்க காலத்தில் நிலவியதை இப்பகுதி விளக்குகிறது. மூன்று சங்கங்களும்*

புலவர்களை வளர்த்தல், கல்வி ஆர்வம் பெருக சங்கங்கள் உதவியது ஆகியன இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் இயல் 'சங்க இலக்கியங்களில் கற்பித்தோர் குறித்த பதிவுகள்' என்பதாகும். 1. குடும்பம் 2. தாய் 3. தந்தை 4. தலைவி 5. தோழி 6. செவிலி 7. தலைவன் 8. கற்பித்தலில் அரசர் 9. சான்றோரும் கற்பித்தோரும் 10. புலவர் 11. அந்தணர் 12. ஆசிரியர் 13. கணியன் 14. ஐம்பெருங்குழு எண்பேராயம் 15. தூதரும் ஒற்றரும் 16. தொழில் செய்தோர் வழிக் கற்பித்தல் 17. உழவுத்தொழில் 18. கைத்தொழிலும் பிற தொழிலும் என்று பதினெட்டு உட்கூறுகளாக இவ்வியல் பிரித்துப் பகுக்கப்பட்டுள்ளது.

முதலில் குடும்பம் கல்வி நிறுவனமாக இருப்பது விளக்கப்பட்டுள்ளது. தாய் ஆசிரியராக இருந்து கற்பித்தல் அது போலத் தந்தை பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறை போன்றவை விளக்கப்பட்டுள்ளன. தலைவி தோழிக்கும் பிறருக்கும் கற்பித்தல், தோழி தலைவிக்குக் கற்பித்தல், செவி தலைவி, தோழி ஆகியோர்க்குக் கற்பித்தல், தலைவன் மற்றவர்க்குக் கற்பித்தல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. அரசர்கள் அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் வீரர்களுக்கும் கற்பித்தல், சான்றோர் பொது மக்களுக்கு எடுத்துக் கூறல், புலவர்கள் அறிவுரைகளை வழங்குதல். அந்தணர்கள் வேதம் முதலானவற்றைக் கற்பித்தல், ஆசிரியர் இல்லத்திலும் கல்வி நிறுவனங்களிலும் கல்வி புகட்டல் போன்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. கணியன், கணக்காயர் போன்றோர் கல்வியை எடுத்துரைத்தல், ஐம்பெருங்குழு எண்பேராயம் போன்றன எடுத்துரைக்கும் செய்திகள், தூதர், ஒற்றர் போன்றோர் கூறும் தரவுகள், தொழில் அனுபவம் உடையோர் பிறருக்குக் கற்பித்தல், உழவுத் தொழில் செய்வோர், கைத்தொழில் செய்வோர் பிறருக்குத் கற்றுக் கொடுத்தல் ஆகிய தகவல்கள் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

'கற்பித்தல் முறை' என்பது மூன்றாம் இயலாகும். இதில் 1. கற்பித்தல் விளக்கம் 2. மரபுவழி கற்பித்தல் 3. முறைசார கல்வி 4. எண் எழுத்து கற்பித்தல்

5. அறம் கற்பித்தல் 6. இல்லங்களில் கற்பித்தல் 7. பொது மன்றுகளில் கற்பித்தல் 8. தனிமனிதர் கற்பித்தல் 9. பாடல்வழி கற்பித்தல் 10. செவியறிவுறூஉ 11. சந்து செய்வித்தல் 12. சிறந்தது பயிற்றல் 13. நூல்வழிக் கற்பித்தல் எனப் பல உட்கூறுகளாக இவ்வியல் பிரிக்கப்பட்டுள்ளது.

கற்பித்தல் என்பதன் விளக்கமும் அறிஞர்கள் தரும் விளக்கமும் கூறப்பட்டுள்ளன. மரபுவழிக் கற்பித்தல் விளக்கம், சங்க இலக்கியத்தில் அதற்கான சான்றுகள் ஆகியன தரப்பட்டுள்ளன. முறைசாராக்கல்வி விளக்கம், அதற்கான சங்க இலக்கியச் சான்றுகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அறம் கற்பித்தல் விளக்கம், சங்க இலக்கியங்களில் அறம் வற்புறுத்தியமுறை, ஆசிரியர் தம் இல்லங்களில் கற்பித்தல், ஆசிரியர்கள் பொது மன்றங்களில் மாணவர்க்குக் கற்பித்தல், மரங்களின் நிழலில் கற்றல் முறை, பாடம் கற்பிக்கும் இடமாக அரண்மனை தோன்றுதல், தனிமனிதர்களின் இல்லங்களில் கற்பித்தல், சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூறல், செவியறிவுறூஉ நிகழ்வுகள் போன்றன இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

'கற்றோர் குறித்த பதிவுகள்' என்பது நான்காம் இயலாகும். இது 1. கற்றோர் விளக்கம் 2. மாணாக்கர் விளக்கம் 3. கற்றோர் ஒழுக்கம் 4. கற்றோர் சமூகப் பொருளாதார நிலை 5. கற்றோர் ஆண்களும் பெண்களும் 6. சான்றோர் 7. அந்தணர் 8. அரசர் 9. கலைக்கல்வி 10. போர்வீரர் 11. தொழில் முனைவோர் 12. கற்றல் பிரிவு 13. இல்லறத்தினர் என்றும் பதிமூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதலில் கற்றோர் மாணாக்கர் ஆகிய சொற்களுக்குரிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. கற்றோர்க்குரிய ஒழுக்கம், கற்றோர்க்குரிய சமூகப் பொருளாதார நிலை, ஆண்களும் பெண்களும் கற்றவராக அமைதல், சான்றோர் மேலும் கற்றவராக விளங்கல் ஆகியன தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன. அந்தணர் முதலியோர் வேதம் கற்றல், போர்வீரர்கள், போர்த் தொழிலைக் கற்றுக் கொள்ளுதல், தொழில் செய்ய விரும்புவோர்

அத்தொழிலைக் கற்றல், கற்றல் பிரிவுகள், குடும்பத்தார் கற்றுக் கொண்ட இல்லறப் பண்புகள் ஆகியன இவ்வியலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

‘பாடப் பொருள்’ என்பது ஐந்தாம் இயலாகும். 1. பாடப் பொருள் விளக்கம் 2. பாடத்திட்டத்தின் சமூக நோக்கம் 3. வேதக் கல்வி 4. அறச் சிந்தனைகள் 5. ஒழுக்கம் 6. வீரம் 7. நீதி 8. ஆட்சிமுறை 9. குடும்பம் - இல்லறக் கடமைகள் 10. சான்றாண்மை 11. மரபு 12. நூல் அறிவு ஆகியன இவ்வியல் பகுப்பாகும்.

பாடப்பொருள் என்பதன் விளக்கம் முதற்கண் தரப்பட்டுள்ளது. வாழ்க்கை மதிப்புகள் பாடப் பொருளாக அமைவது, பாடத்திட்டத்தின் சமூக நோக்கம் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. பாடப்பொருளின் பல்வேறு வகைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. வேதக்கல்வி பாடப் பொருளாக அமைந்த முறை, வேதச் சிந்தனைகள் பாடப் பொருளாக அமைந்தது ஆகியன விளக்கப்பட்டுள்ளன. ஒழுக்கம், கல்விக்குரிய பொருளாக இருந்தது, போர்வீரர்களுக்குரிய வீரம் கற்றுத்தரப்படுதல், சமுதாய நீதி கற்பிக்கப்பட்டமை ஆகியன பாடப்பொருளாகக் கற்பிக்கப்பட்டமை, ஆட்சிமுறை பற்றிக் கற்பிக்கப்பட்டநிலை. குடும்பத்தார் பின்பற்ற வேண்டிய இல்லறக் கடமைகள், மரபுவழியாகச் சொல்லித் தரப்பட்ட பண்புகள் ஆகியன விளக்கப்பட்டிருக்கின்றன. மனிதநேயம் பற்றித் தரப்பட்ட நூல் அறிவு முக்கியமாகக் கருதப்பட்டது போன்ற செய்திகள் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

‘கற்றல் முறை’ என்பது ஆறாம் இயலாகும். இதில் 1. கற்றல் விளக்கம் 2. எழுதிக்கற்றல் 3. பாடிக்கற்றல் 4. உரைத்தலும் உரையும் 5. செவிவழிச் செய்தி 6. கலந்துரையாடல் 7. மனனம் செய்தல் 8. படி எடுத்தல் பயிற்சி 9. பொருள் தருதல் 10. விரதமும் கற்றலும் 11. இருப்பிடக் கல்வி 12. அரசு வழிகற்றல் எனப் பனிரண்டு பகுதிகளை இவ்வியல் கொண்டுள்ளது.

முதற்கண் கற்றல் முறை விளக்கம் தரப்பட்டுள்ளது. தற்காலக் கல்வி முறையில் காணப்படும் பல்வேறு கற்றல் முறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எழுதிக்கற்றல் முறையில் மாணவர்கள் பெற்ற பயிற்சி விளக்கப்பட்டுள்ளது. இசையுடன் பாடிக் கற்ற முறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இலக்கிய உரைகள், இலக்கண உரைகள் ஆகியவற்றின் வழி மாணவர்கள் கற்றது விளக்கப்பட்டுள்ளது. செவிவழிச் செய்தியாகக் கற்றல் முறை நிறைவேற்றப்பட்டது, கலந்துரையாடல் வழிக் கல்வி கற்றது, செய்யுளை மனப்பாடம் செய்து கற்றல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. சுவடிகளைப் படி எடுத்தல் முறையில் கல்வி கற்றல் முறை, விரதம் இருந்து கல்வி கற்றது, ஆசிரியர் மற்றும் மாணவர் இருப்பிடத்தில் இருந்து கல்வி கற்றல், அரசர்களின் வழியாகக் கல்வி கற்றல் முறை ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

‘கல்வி குறித்த சமூக மதிப்புகள்’ என்பது ஏழாம் இயலாகும். இது 1. கல்வி விளக்கம் 2. சமூக மதிப்பு விளக்கம் 3. கல்வியை போற்றும் பண்பு 4. அரசர்கள் கல்வியைப் போற்றுதல் 5. புலவர்கள் போற்றுதல் 6. பெற்றோர் போற்றுதல் 7. ஆசிரியர்கள் கல்விக்குத் தந்த மதிப்பு 8. மாணவர்கள் தந்த மதிப்பு 9. அந்தணர் போற்றுதல் என ஒன்பது பகுதிகளாக இவ்வியல் பகுப்பு அமைந்துள்ளன.

முதற்கண் கல்வி விளக்கமும் சமூக மதிப்பு என்பதன் விளக்கமும் தரப்பட்டுள்ளன. சமுதாயத்தினர் கல்வியைப் போற்றும் பண்பு, அரசர்கள் கல்வியை உயர்த்திக் கூறியமை ஆகியன எடுத்துக் கூறப்பட்டுள்ளன. புலவர்கள் கல்வியைச் சிறப்பித்துப் பாடியது, பெற்றோர்கள் கல்விக்குத் தந்த மதிப்பு என்பன விளக்கிக் கூறப்பட்டுள்ளன. பாடம் சொல்லும் ஆசிரியர்கள் கல்வியைப் போற்றியமை, மாணவர்கள் கல்வியை உயர்வாக மதித்த பண்பு, அந்தணர்கள் கல்விக்குக் கொடுத்த பண்புகள் போன்றவை இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

இயல்களை அடுத்து முடிவுரையும் துணைநூற்பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளன. சான்றாதாரங்களில் முதன்மை நூல்களில் இருந்து எடுக்கப்பட்ட தரவுகளுக்குரிய சான்றெண்கள் இயல்களிலேயே அடைப்புக்குறியில் தரப்பட்டுள்ளன. துணைநூல் ஆதாரங்கள் முழுமைக்கும் இயல்களில் எண்கள் தரப்பட்டு அவற்றின் விவரம் இயல் இறுதியில் சான்றெண் விளக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## இயல் 1

# சங்க இலக்கியமும் கல்விச்சூழலும்

*சங்க இலக்கியம் தமிழின் தொன்மையையும் பண்பாட்டு நெறிமுறைகளையும் காட்டும் ஆவணம் எனக் கூறத்தகுவதாகும். தமிழ்மொழி அமைப்பையும் மக்கள் வாழ்நிலையையும் அறிவதற்குரிய சான்றுகளாகவும் சங்க இலக்கியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழகத்து இயற்கை நீர்வளம், நிலவளம் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கும் இவை அடிப்படை ஆதாரங்களாக விளங்குகின்றன. பழந்தமிழ் இலக்கிய மற்றும் வரலாற்றாய்வுகளுக்குச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன.[1] கலை, அறிவியல் போன்றவையும் நுண்கலைகள் முதலான சில சிறப்புக் கூறுகளும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. நாகரிக வளர்ச்சியில் உலக நாகரிகங்களுடன் ஒப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ள சமூகமாகத் தமிழ்ச்சமூகம் விளங்கிய காலம் எனவும் சங்க காலத்தைக் குறிப்பர். அரசர்கள் பலர் பகுத்துணரும் ஆய்வாளர்களாகவும் நன்கு கற்றவர்களாகவும் விளங்கினர். இலக்கியத்தையும் நுண்கலைகளையும் ஆராய்ந்தனுபவித்தனர்.[2]*

*இத்தகைய சூழ்நிலையில் கல்வியும் சங்க காலத்தில் சிறந்தோங்கியிருந்ததைக் காணமுடிகிறது. கல்வி நன்கு வளர்வதற்கான சூழ்நிலைகள் தக்கமுறையில் அமைந்திருந்தன. மன்னரும் புலவரும் கல்வியைப் பரப்புதற்கான ஆக்கப்பணிகளைச் செய்துவந்தனர். பல்வகைக் கல்விமுறைகள் அக்காலத்தில் பின்பற்றப்பட்டுள்ளன.*

> முற்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த கல்விமுறை கல்வி அமைப்பு ஆகியன பற்றிப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து பல கருத்துக்களைப் பெறலாம். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் ‘அரசர் முதல் சாதாரண குடிமக்கள் வரையிலும் கல்வி அறிவு பரவிக் காணப்பட்டது. சாதி சமய வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் கல்வி புகட்டப்பட்டது. பெண் கல்விக்குச் சிறப்பிடம்

> அளிக்கப்பட்டது. கல்வி ஏற்பாட்டில் மொழிக்கல்வி முதலிடம் பெற்றது. எனினும் பிற கலைகள் புறக்கணிக்கப்படவில்லை. ஆசிரியருடைய நிலை உயர்ந்து காணப்பட்டது. அவருடைய சொல்லுக்கு வேந்தரும் கட்டுப்பட்டதாகக் காணப்படுகிறது. மாணாக்கனது ஆற்றலுக்கு ஏற்பத் தனிப்பட்ட முறையில் ஆசிரியர் பாடம் கற்பித்து வந்தனர்.' பண்டைய தமிழரசு கல்வி முறை பற்றிய தொடர்ச்சியான வரலாற்றுத் தரவுகள் கிடைக்கவில்லை எனினும் அதன் தன்மை பற்றிப் பல கருத்துக்களை இன்று பெறமுடிந்துள்ளது[3]

*என்கிறார் உ.பிரபாகரன்.*

*இவ்வாறு கல்வி வளர்ச்சி அடைவதற்குரிய அகச்சூழலும் புறச்சூழலும் ஆராய்தற்குரியனவாகும். அகச்சூழல் ஒவ்வொரு தனிக் குடும்பத்தையும் புறச்சூழல் சமுதாயத்தையும் குறிப்பன. சங்ககாலம் கல்வி வளர்ச்சிக்குரிய அக மற்றும் புறச்சூழல்களைக் கொண்டமைந்திருந்த பாங்கை விளக்குவதாக இவ்இயல் அமைக்கபட்டிருக்கிறது. இயலின் உள்ளடக்கம் கருதிப் பின்வருமாறு இவ்இயல் பகுத்தமைக்கப்படுகிறது.*

1. *சங்க இலக்கியம்*
2. *சங்கமும் சங்ககாலமும்*
3. *சங்க இலக்கியத் தொகுப்பு*
4. *சங்கப் புலவர்களும் கல்வி ஆற்றலும்*
5. *புலமையைப் போற்றும் சூழல்*
6. *மன்னர்கள் போற்றிய கல்வி*
7. *மக்களும் கலைக்கல்வியும்*
8. *கலைஞர்கள்*
9. *தொழிற்கல்வி*
10. *சங்கம் - ஒரு கல்வி நிறுவனம்*

*இவ்உட்கூறுகள் சங்ககாலக் கல்விச்சூழலை விளக்குவதாக அமைகின்றன. இவை இங்கு விளக்கப்படுகின்றன.*

## 1.1. சங்க இலக்கியம்

*சங்க இலக்கியங்களில் பல தொகுப்பு நூல்கள் ஆகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பெயரிப்பட்டு அழைக்கப்பெறும் சங்கப் பனுவல்களும் பதினெண் நூல்களும் சங்க இலக்கியங்களாகும். இவ்வரையறை தனித்த சிறப்புடையதாகும். வரலாற்றாய்விற்கும் திறனாய்வு முயற்சிகளுக்கும் சங்க இலக்கியங்கள் மிகுதியும் பயன்படுகின்றன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாகும். பொருநராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, மலைபடுகடாம், நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்னும் பத்து நூல்களும் பத்துப்பாட்டு எனப்பட்டன. சங்க இலக்கியங்கள் இலக்கிய வகையில் வடிவமும் உள்ளடக்கமும் எளிமையாக அமைந்து படிப்போர்க்கு இன்பத்தை ஊட்டுவன எனினும் வரலாற்றாய்விற்குப் பல மெய்யான ஆதாரங்களைத் தருவனவாக அமைகின்றன. வரலாற்றடிப்படையிலான கல்வியை வழங்குவனவாகவும் இவை காணப்படுகின்றன.*

> சங்க இலக்கியத்திற்கண்ட சிலசெய்திகள் கல்வெட்டு முதலிய தொல்பொருள் மூலங்களாலும், புறமூலங்களாலும் நிறுவப்படுவது நோக்க, அவ்விலக்கியத்திற்கண்ட வரலாற்றுச் செய்திகளேனும் ஏமாற்று வகையைச் சேர்ந்தவையல்ல என்பதைக் காட்டும். பிற எந்த இலக்கியத்தையும் போலத் தமிழ்ச்சங்க இலக்கியமும் மிகைப்படக்கூறும் தன்மையதேயாயினும் தவறின்றிக் குறிக்கப்பட்டுள்ள, வரலாற்றாளர்க்கு மிகவும் உதவியாய் இருக்கும், ஏராளமான செய்திகள் அவ்விலக்கியத்தில் உள்ளன. மரபுவழிச் செய்திகள் விஞ்ஞான முறையில் பயன்பாடு உடையன அல்ல. ஆயினும் அவை பிறமூலங்களால் ஆக்கப்படும் சான்றுகளையும் நிறுவும்போதும் பயனுள்ள கோட்பாடுகளைத் தக்கச் சான்றுகளாகவே கருதப்படும்[4]

*என்கிறார் ந.சுப்பிரமணியன்.*

*சங்க இலக்கியங்களுக்குக் கவிதைமரபு உண்டெனினும் அவை வரலாற்றையும் வாழ்வையும் பேசுவன என்பதை ஒருவாறு உணரலாம். பொதுவாகத் தமிழ்க் கவிதைகளின் பண்பு வாழ்வைப்பேசுவது என்றும் வாழ்வினின்று விலகிப் பிறவற்றை முதன்மைக் கருதுகோளாக ஏற்பதில்லை என்ற கருத்தும் எண்ணத்தக்கது.*

> தமிழ்க்கவிதை தத்துவம் பேசுவதில்லை. வேதாந்த விசாரம் செய்வதில்லை. காலம், வெளியென்றெல்லாம் கருத்துக் கொள்வதில்லை. கருத்தாக்கங்கள் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. வாழ்வையே பேசுகிறது. வாழ்வின் சாராம்சத்திலேயே திளைக்கிறது. அனுபவங்களையே முன்வைக்கிறது. உணர்வுகளையே வெளிப்படுத்துகிறது[5]

*என்கிறார் விக்ரமாதித்யன் என்னும் கவிஞர். இது சங்க இலக்கியம் அனைத்திற்கும் பொருந்தக் கூடியதாகும். மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் சங்க இலக்கியங்களின் இயல்பை விளக்குகின்றன.*

*சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் முதற்கண் கூறப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் அகத்திணை சார்ந்த நூல்கள் முதற்கண் வைக்கப்பட்டுள்ளன. இறுதியில் புறத்திணை நூலாகிய புறநானூறு இடம்பெற்றுள்ளது. பதிற்றுப்பத்து இடையில் உள்ளது. வரிசையில் பதிற்றுப்பத்து, அகநூல்களின் இடையில் அமைக்கப்பட்டுள்ளது.*

> கடைச்சங்கத்தார் காலத்தில் பன்னூற்றுக் கணக்கான புலவர்கள் படைற்றிறன் வாய்ந்தவர்களாய் விளங்கினரென்பது, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவற்றைப் பாடிய ஆசிரியர் கூட்டத்து வைத்துணரப்படும்[6]

*என்று கா.சு.பிள்ளை குறிப்பிடுகிறார். சங்க இலக்கியம் முழுமையும் கடைச்சங்க காலத்திலேயே பாடப்பெற்றிருக்கின்றன. கடைச்சங்கம் தற்போதுள்ள மதுரை (வடமதுரை)யில் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் அக்காலத்தே தமிழ் இலக்கிய வளர்ச்சி மேன்மையுறத் தொடங்கிற்று என்றும் அறியமுடிகிறது.*

*சங்க இலக்கியங்களுக்குரிய சிறப்புக் கூறுகளுள் ஒன்று அவை அக்காலக்கட்டத்தில் எழுந்த உலக இலக்கியங்களுடன் சில கருத்தியல்களுடன் ஒத்துப்போவதாகும். குறிப்பாகக் கிரேக்க வீரநிலைக் காலக்கவிதைகளுடன்* (Greek Heroic Poetry) *தமிழ்ப் புறத்திணையியல் செய்யுட்களின் உள்ளடக்கம் ஒத்ததாயிருக்கிறது. பொதுவாக இத்தகைய ஒப்புமை உலக இலக்கியங்களுக்கிடையே காணப்படும் என ஒப்பிலக்கிய நூலோர் குறிக்கின்றனர்.*[7] *சங்க இலக்கியங்கள் மன்னின் மரபை எளிமையாகக் காட்டுகின்றன. இரசனை உணர்ச்சி குன்றாமல் இருப்பதே அவற்றின் தனித்தன்மையாகக் கொள்ளப்படுகின்றன.*

> இரண்டாயிரம் ஆண்டுத் தமிழ்க்கவிதையும் இயல்பாகவே இருக்கிறது. எளிமையாகவே இருக்கிறது. மண்ணும் மரபும் மனசும் சார்ந்து இருக்கிறது. இதுதான் விடுதறியா விருப்பு கொள்ளும்படி வைத்திருக்கிறது. பம்மாத்தும் பாசாங்கும் இல்லாதிருக்கிறது. இதனால்தான் மறுபடியும் மறுபடியும் படிக்கத் தூண்டுகிறது. வாழ்வே போலக் கவிதைகள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. வாழ்ந்துக் கொண்டிருக்கும் கவிதைகள் வசீகரம் கொண்டிருக்கின்றன. வசீகரமே ஈழ்த்துக் கொண்டிருக்கிறது[8]

*என்று விக்கிரமாதித்யன் கூறும் கருத்து எண்ணத்தக்கது. பழமையும் சிறப்பும் வாய்ந்த சங்க இலக்கியங்கள் சங்ககாலத்தை - மக்களின் வாழ்நிலைத் தகவை வெளிக்காட்டுவன. இவற்றில் சங்ககாலப் புலவர்கள், கலைநுட்பம் உணர்ந்தோர், சான்றோர், ஆசிரியர், மாணாக்கர் என்போரை உள்ளடக்கிய கல்விச் சூழல்கள் கூறப்படுகின்றன.*

> சங்க இலக்கியத்தில் கல்வி போர்க்கல்வி, வேதக்கல்வி, இல்லறக் கல்வி, ஆட்சித்துறைக் கல்வி என்ற நான்கு வகையில் அமைந்தது. அனுபவமும், ஆழ்ந்த சிந்தனையும் இத்தகைய கல்வி வளர்ச்சிக்குத் துணை செய்தன. எழுத்துக்கல்வியும் தொழிற்கல்வியும் வாழ்க்கை நெறிக் கல்வியும் எனப் பல்வகைக் கல்வி முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.[9]

*என்று கு.வெ.பா. கூறும் கருத்து மேலதை உறுதிசெய்யும் தன்மையது.*

### 1.2. சங்கமும் சங்க காலமும்

*தமிழகத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தன. இச்சங்கங்களை அரசர்களே நிறுவி நடத்திவந்தனர். சங்ககாலத்திலிருந்த அரசர்கள் பற்றியும் புலவர்கள் பற்றியும் இச்சங்கங்களின் வரலாற்றில் காணமுடிகிறது. ஒவ்வொரு புலவரும் சங்கத்தில் தொடர்புடையராய் இருந்தார்.*

> சங்கம் என்பது சேர்க்கை என்று பொருள் படுவதோர் வடசொல்; ஆகவே புலவர் சங்கம் என்பது புலவர் குழாம் என்று பொருள்படும். தமிழ்ச்சங்கம் என்பது தமிழறிஞர் அல்லது புலவர்களின் ஒரு தொகை. அஃதாவது ஓர் இலக்கிய மன்றம். அதை நிறுவியவர்கள் பாண்டிய மன்னர்கள். அது வளர்ந்து வாழ்ந்து வந்தது வைகைக்கரை மதுரையில்; முக்காலத்தில் வேறுசில இடங்களிலும் அச்சங்கம் திகழ்ந்தது என்ப[10]

*என்று சங்கம் இருந்தது பற்றிக் கூறப்படுகின்றது. சங்கங்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்றும் அவற்றின் காலத்தை உணர்த்துகின்றன.*

> தலைச்சங்கம் இருந்ததென்பதற்கு இறையனரகப் பொருளுரை, சிலப்பதிகார உரை, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய நூல்களில் சான்றுள்ளன. ‘‘தலைச்சங்கப் புலவனார் தம்முள்’’ என்ற பெரிய புராண வாக்கும் ‘‘அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்’’ என்ற கம்பராமாயண வாக்கும் காண்க. சங்கமிருந்ததென்பது மதுரைக்காஞ்சியாலும் எட்டுத்தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றாலும் தெளியப்படும்[11]

*எனக் கூறும் கா.சு.பிள்ளையின் கருத்து, சங்கம் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் பரவிக்கிடப்பதை விளக்குகின்றது. பிற்கால இலக்கியங்களில் குறிப்பாகப் பெரியபுராணம் போன்ற சிலவற்றில் ‘சங்கம்’ என்ற சொல்லே பதிவாகியிருத்தலைக் காணமுடிகிறது. இந்த அமைப்புப் புலமை வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்ததென்பதை உணரமுடிகிறது.*

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்

தறங்கரை நாவின் நான்மறை முற்றிய

அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து[12]

*எனத் தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுவதை இரா.இளங்குமரன் சுட்டிக்காட்டுகிறார். இது பரம்பாரனார் என்னும் புலவரால் பாடப்பெற்றது. இவர் தொல்காப்பியர் காலத்தவர் எனக் கூறப்படுகிறது. 'பாண்டியன் அவையத்து' என இப்பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது 'சங்கம்' எனக் குறிப்பிடுகின்றனர். இப்போது சங்கம் எனக் குறிக்கப்படுவது அக்காலத்தே 'அவை' எனக் கூறப்பட்டது. மதுரைக்காஞ்சியில் பல்யாகசாலை முதுகுருமிப் பெருவழுதியைப் புகழ்ந்து பாடும் புலவர்,*

தொல்லாணை நல்லாசிரியர்

புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்

நிலந்தரு திருவின் நெடியோன்[13]

*என மதுரைக் காஞ்சியில் பாடுகின்றார். இதன்கண் வரும் புணர்கூட்டு என்பது பின்னர் சுட்டப்பட்ட சங்கமேயாகும் எனக் கூறப்படுகிறது. மணிமேகலையில் 'சங்கம்' என்ற சொல் காணப்படுகிறது. இது பௌத்த நூலாதலின் சங்கம் என்பது பௌத்த சங்கத்தைக் குறிக்கிறது எனலாம்.[14] "புலனா வுழவர் புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்"[15] என்பது கலித்தொகை. இங்கும் சங்கம் என்ற சொல் இடம்பெறவில்லை. 'புதுமொழி கூட்டுண்ணும்' எனப் பலர் கூடியமை மட்டும் சுட்டப்பட்டது.*

*சங்கம் என்ற சொல் முதன் முதலில் தேவாரத்தில் இடம்பெறுகின்றது. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர், சிவபெருமானைப் போற்றிப் பாடுங்கால்,*

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி,

நற்கனக் கிழிதருமிக்கு அருளினோன் காண்[16]

*என்று திருப்பத்தூர்த் திருத்தாண்டகத்தில் பாடுகின்றார்.*

தமிழில் முச்சங்கங்களும் இருந்த வரலாற்றினை இறையனார் அகப்பொருளுறை விளக்கமாகத் தருகின்றது. இந்நூல் கி.பி.முதல் நூற்றாண்டளவில் எழுதப்பெற்றிருக்கலாம். இந்நூலுக்கு நக்கீரர் உரை ஒன்று காணப்படுகின்றது. இந்நூலின் முதல் சூத்திர உரையில் மூன்று சங்கங்கள் பற்றிய குறிப்புக்களை நக்கீரர் குறித்துள்ளார். முச்சங்கங்களில் இடம்பெற்ற புலவர்களும் இக்காலக்கட்டத்தில் இயற்றப்பெற்ற நூல்களும் இதன்கண் குறிப்பிடப்பட்டுள்ளன. முதற்சங்ககாலத்தில் எழுதப்பட்ட நூல்கள் பல தற்போது கிடைக்கவில்லை. அவை முதுநாரை, முதுகுருகு போல்வன. இத்தகைய செய்திகள் இந்நூலின்கண் வழங்கப்பட்டுள்ளன. மூன்று சங்கங்களில் இயற்றி அரங்கேற்றப்பட்ட நூல்களை நோக்குமிடத்து இவற்றைப் படைத்த மக்களது பேரறிவு நன்கு விளங்கும்.

கற்ற புலவர்களே அன்றி மன்னரும் பிறரும் சங்கத்தின்பால் உயர்ந்த மதிப்பு வைத்திருந்தனர். ‘சங்கம்’ என்பது நூல் இயற்றவும் நல்ல நூல்களையும் புலவர்களையும் தேர்வுசெய்யவும் உரிய நிறுவனமாக விளங்கியதால் சங்ககாலத்தில் கல்விக்கு முதலிடம் தந்திருப்பதை எளிதாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி இதனை,

> சங்கத்தின் முக்கியமான அலுவல் தமிழகத்தின் தலைச்சிறந்த புலவர்களை ஒன்று சேர்த்து இலக்கிய ஆக்கவேலையிலும் ஆக்கியத்தின் திறனை ஆய்வதிலும் ஊக்குவிப்பதேயாகும். பாண்டிய மன்னர்கள் இவ்வறிஞர்களைப் புரந்து பாராட்டியதோடு அவ்விலக்கிய வேலைகளில் தாங்களும் ஈடுபட்டனர்[17]

என்று கூறுவதால் சங்ககாலக் கல்விச் சூழலில் புலவர்களும் மன்னர்களும் ஈடுபட்டிருந்த முறை தெளிவாகிறது.

**சங்ககாலம்**

சங்க இலக்கியங்கள் தமிழக வரலாற்றுச் சான்றுகளாகவும் தமிழர் பண்பாட்டுக் கருவூலமாகவும் விளங்கும் நிலையில் சங்கம் வீற்றிருந்த காலக்கட்டத்தை வரையறுப்பது மிகத்தேவையாகும். ‘சங்ககாலம்’ என்பது

பொதுவாகச் சங்க இலக்கியங்கள் இயற்றப்பெற்ற காலமாகும். ‘சங்கம்’ நடந்த காலக்கட்டத்தில் இயற்றப்பெற்ற நூல்களும் சங்க இலக்கியங்கள் என அழைக்கப்பெற்றன. கே.ஏ.நீலகண்டசாஸ்திரி ‘Pandian Kingdom’ என்ற தம் நூலில் சங்ககாலம் கிறித்து ஆண்டு தொடக்க நூற்றாண்டுகளில் அமையும் என்று நாம் கருதவேண்டும்”[18] எனக் கூறுகிறார். மேலும் சில அறிஞர்கள் முதற்சங்கம் கி.மு.5 ஆம் நூற்றாண்டாக இருக்கும்[19] என்றும் கருதுகின்றனர். ‘மூன்று சங்கங்களும் இருந்தகாலம் ஏறத்தாழ 1000 ஆண்டுகள் என்று கொள்வது அறிவுடைத்து என்று தோன்றுகிறது. கி.மு.500யும் கி.பி.500யும் சங்ககாலத்தின் இருகோடுகளாக அமைத்தால் நாம் தவறிவிடமாட்டோம்’[20] என்கிறார் கே.ஆர்.சீனிவாச ஐயங்கார். மேற்கூறிய சான்றுகளை அடிப்படையாகக் கொண்டால் மூன்றுச் சங்கங்களும் இருந்த காலம் சுமார் ஆயிரம் ஆண்டுகள் என்பது போதரும் அதாவது கி.மு.500 முதல் கி.பி.500 வரையிலான காலக்கட்டம் என்பது பொருந்துவதே ஆகும்.

## 1.3. சங்க இலக்கியத் தொகுப்பு

சங்க இலக்கியங்களைத் தொடுக்கும் முயற்சி சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. சங்க இலக்கியம் ஒவ்வொன்றிற்கும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். சங்க இலக்கியங்களைத் தொகுத்துத் தந்த பணிக்குச்சான்றாக விளங்குவது இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்களாகும். தனித்தனியாகக் கிடந்த சங்க இலக்கியச் சுவடிகளைச் சேர்க்கின்ற பணி தனிமனிதர்களாலும், கூட்டு முயற்சியாலும் அரசுப் பொறுப்பில் இருந்தவர்களாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் காணப்படும் தமிழ்ச்சுவடி எழுத்துக்களுக்கு முன்னர் வேறுவகையான தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் காணப்பட்டன. அவை எம்முறையில் எழுதப்பட்டிருந்தன என்பதெல்லாம் ஆய்வுக்குரியவையாகும். அவ்வாறு எழுதப்பெற்ற இலக்கண இலக்கியங்கள் பிற்காலத்தில் வேறு வரிவடிவத்தைக் கொண்டிருந்தன. அவையும் தொகுக்கப்பெற்றன. அவற்றிலிருந்து மாற்றி எழுதப்பெற்றவை தற்காலத்தே கிடைக்கும் சுவடி எழுத்துக்கள்.

> தமிழ்மொழி மிகப்பழமையானது. மிகப் பழமையான காலத்திலேயே தமிழர் தமிழை வளர்த்தனர். அவர்கள் தமிழ் நூல்களைச் சுவடிகளில் எழுதினார்கள். நூல்களை எழுதுதற்கு எழுத்து வேண்டும். எழுத்துக்களையும் அமைத்து நூல் எழுதினார்கள். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நூல்கள் எழுதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் மாறிமாறி வந்துள்ளன. எழுததுக்களின் வரிவடிவம் மாறிக்கொண்டு இருந்தபடி பண்டைக் காலத்தில் எழுதப்பட்டன தமிழ் எழுத்தின் வரிவடிவம் இன்னதென்று இப்போது தெரியவில்லை. பண்டைக் காலத்துத் தமிழ் எழுத்து மறைந்து போயிற்று[21]

*என்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி இக்கூற்றின்படி நோக்கினால் சங்க இலக்கியங்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே எழுதப்பட்டவை என்பதும் அவ்வக்காலத்திலேயே இலக்கியங்களைச் சேர்த்துவைக்கும் மரபொன்று இருந்தது என்பதும் புலனாகும். பண்டைக்காலத்திலும் இடைக்காலத்திலும் தமிழில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் மிகச் சிலவே. அவையும் தெளிவான முழுமை பெற்றவை எனக் கூற இயலாதவை. எனினும் சங்க நூல்களைப் புலவர்களும் பிறரும் தொகுத்த நெறியிலிருந்து சில ஆய்வு நெறிகளை அறியமுடிகிறது.[22]*

> பண்டைத் தமிழ்ப் புலவர் கையாண்ட இலக்கியத் தத்துவவம் கைக்கொண்ட இலக்கியக் கருவி, எடுத்துக்கொண்ட இலக்கியப் பொருள் ஆகியவைகளின் முக்கிய இயல்புகளிலிருந்து அவருடைய இலக்கியக் குறிக்கோளை ஒருவாறு அறியலாம்[23]

*என்று ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் தம் நூலொன்றில் கூறுவதை அ.பாண்டுரங்கன் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களைத் தொகுத்த இலக்கியக் கொள்கை அடிப்படையை இது உணர்த்துகின்றது.*

*சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்ட முறை குறிப்பிடத்தக்கதாகும். பாடல் அடியளவு, எண்ணிக்கை, அகம், புறம் என்ற பொருண்மை போன்ற அடிப்படையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு முறைபற்றி நுண்ணிதின் ஆய்ந்த அ.பாண்டுரங்கன் பின்வருமாறு கூறுகிறார்.*

ஒரே தொகுப்பால் ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படைகளும் காணப்படுகின்றன. தொகைநூல்கள் எட்டும் பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் தொகுக்கப்பட்டிருப்பதை இறையனார் களவியல் உரைகூறுகிறது. 4-8, 9-12, 13-31 என்னும் அளவுகளில் தொகுக்கப்பட்டனவாக முறையே குறுந்தொகை நற்றிணை நெடுந்தொகை நற்றிணை, நெடுந்தொகை (அகம்.) அமைகின்றன. பத்துப்பத்துப் பாக்கள் என்னும் எண்ணிக்கை அளவில் பதிற்றுப்பத்தும் குறுகிய (3-6) அடிகளால் ஆன நூறு பாக்களைக் கொண்ட ஐந்துகளைக் கொண்ட ஐங்குறுநூறும் தொகைநூல்களாகத் தொகுக்கப்பட்டன[24]

எனக் கூறுவது தொகுப்பு முறைக்குத் தமிழ் முன்னோர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியைக் காட்டுகின்றது. இத்தொகை முயற்சிகளைக் கணக்கிடும்போது சங்க இலக்கியங்களின் உற்பத்தி முறை நன்கு புலனாகிறது. புலவர்களின் பாடல்களை ஒருசேரத் தொகுத்தது, ஆசிரியர் பெயர் கிடைக்காதபோது பாடலிற்கண்ட அரிய தொடர்களைப் பொருத்தப்பாட்டுடன் பாடலுக்குத் தலைப்பாக்கியது, போன்றவை தொகுப்பாசிரியர்களின் மிகுந்த கவனத்தைக் காட்டுகிறது.

## 1.4. சங்கப் புலவர்களும் கல்வி ஆற்றலும்

சங்ககாலக் கல்விச் சூழலை அறிவதற்கு அக்காலப் புலவர்களின் கல்வி ஆற்றலையும் சிறப்பையும் அறிதல் தேவையாகிறது. புலவர்கள் செய்யுள் இயற்றும் திறம் உடையவர்களாக மட்டுமின்றிப் பல்வேறு திறன்களையும் பெற்றிருந்தனர். கணிதம், சோதிடம், வாணியல், சமுதாயக் கொள்கைகள் போன்றவற்றில் நுட்பம் உள்ளவர்களாகவும் காணப்பட்டனர். புலவர்களுக்கென்று தனிமதிப்பிருந்தது. அரசவையில் ஐம்பெருங்குழு எண்பேராயம் போன்ற அமைப்புக்கள் இருந்தன. இதிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் தனிச்சிறப்பைப் பெற்றிருந்தனர். எண்பேராயத்தை நச்சினார்க்கினியர் தம் உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.[25] இக்குழுவின் செயல்கள் அறிவும் நுட்பமும் வாய்ந்தனவாக அமைகின்றன. பழங்காலச் சமுதாயத்தில் விளங்கிய அறிவுடையாளர்கள் பதினெண்மர் எனப்

*பிங்கல நிகண்டு கூறுகிறது.*[26] *அதாவது ஐம்பெருங்குழுவில் ஐவரும் எண்பேராயத்தில் எண்மரும் நண்பர், அந்தணர், அடுக்களை அலுவலர், மருத்துவர், கணி எனப் பதினெட்டு உறுப்பினர்களை இந்நூல் வரையறுக்கிறது. இவர்கள் இலக்கிய இலக்கணக் கல்வியும் கணிதம் போன்றவையும் கற்றவர் ஆவர். தாம் அறிந்த நுட்பங்களைப் பிறர்க்கு எடுத்துக்கூறும் ஆசிரியர்களாகவும் இவர்கள் விளங்கினர். இவர்கள் கற்பித்த கல்விமுறை தனிமனிதர் சார்ந்திருந்தது. பள்ளி என்ற நிறுவனம் பிற்காலத்தது. 'கல்வி என்பது ஒரு சமுதாயம் ஆசிரியர் வழி மாணவர்களுக்கு முறையும் ஒழுங்கும் தம்மை உணர்ந்தொழுகும் பண்பும் ஆகியவற்றை அளிப்பதாகும் என்பர்.'*[27]

*புலவர்கள் அரவையில் அவைக்களப் புலவர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அமைச்சர் மன்னர்க்கும் நாட்டுக்கும் வேண்டிய நீதிகளை எடுத்துக் கூறினர். இவர்கள் நிரம்பக் கற்றவர்களாக இருந்தனர். அமைச்சர்களை உழையிருந்தார்*[28] *என வள்ளுவரும் 'சுற்றம்'*[29] *எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் குறிப்பிடுவர்.*

*அமைச்சர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். அக்காரணத்தால் சிலவேளைகளில் புலவர்களே அமைச்சர்களாக இருந்தனர். அரசன் அமைச்சர்களின் சொற்படி நடந்தான். சிறந்த வழிகாட்டுதல் செய்யும் திறன் உடையவர்களாக அமைச்சர்கள் காணப்பட்டனர். பொதுவாக அமைச்சர்கள் அறிவிற் சிறந்தோராய் இருந்தனர்.*

> அரசனுக்கு நேரிய வழிகாட்டுவது அமைச்சனது தொழில். அரசன் தீக்குணம் படைத்தவனோ அன்றி வக்கிரபுத்தியுடையவனோ ஆயின், மந்திரி அவனை, 'இயலுமாயின் நன்னெறியையும் தேவையாயின் தீநெறியையும் கைக்கொண்டு' திருத்த முயலவேண்டும் **(பழ.323).** 'வெள்ளம் மலைமீது மழை பெய்திருப்பதைக் காட்டுமாப்போலே, அரசவையின் அமைப்பு அரசனுடைய அறிவின் ஒரு அளவுகோலாகும்' **(பழ.264).** ஆதலால் சங்கத் தமிழர் கருத்துப்படி, வெற்றியடையும் ஆட்சிக்குக் காரணம் அவனுடைய அனுக்க அதிகாரிகளேயாயினும்,

> ஆதாரமாக நல்ல அலுவலர்களைப் பொறுக்கிக்கொள்ளும் மன்னனுடைய திறமையைப் பொருத்திருக்கும் என்பது[30]

*என்று அரசவையில் அறிவுடையோர் பெற்றிருந்த செல்வாக்கை விளக்குகிறார் ந.சுப்பிரமணியன்.*

*இரு மன்னர்களுக்கிடையில் போர் எழும் நிலை உருவாகும்போது நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்று எண்ணுகிற புலவர்கள் தூதுவர்களாகச் சென்று அமைதி உருவாக முயன்றுள்ளனர். தூதுவர்க்குரிய திறன் உடையவர்களாக இருந்தால் மட்டுமே தூதாகக் கொண்டு சென்ற செயலில் வெற்றி பெறமுடியும். அரசர்களே கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினர். அரசர்கள், கல்வி, போர், சந்து செய்துவித்தல் என்னும் மூன்று காரணங்களை முன்னிட்டுத் தங்கள் தலைநகரை விட்டுப் பிரியலாம் என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.*[31]

*அவ்வையார் என்ற பெரும்புலவர் அதியமான் நெடுமானஞ்சியிடமிருந்து தொண்டைமானிடம் தூது சென்றார்.*[32] *கோவூர்கிழார் என்னும் புலவர் அரசனுக்குரிய கடமைகள் பற்றிப் பாடிய பாடல்கள் பல புறநானூற்றில் காணப்படுகின்றன.*[33] *பழந்தமிழ்ப் புலவர்கள் ஆற்றலும் சிறப்பும் கொண்டவர்கள் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் கிடைப்பினும் திருவள்ளுவரே இதற்குரிய பொருத்தமானவராகக் காணப்படுகிறார். திருவள்ளவர் ஏனைய புலவர் பெருமக்களிடமிருந்து பல்வேறு வகைகளில் சிறந்து காணப்படுகிறார். கல்வி என்னும் அதிகாரத்தில் அவர் கூறியுள்ள பத்துக் குறட்பாக்களும் அவரது அறிவாண்மையைக் காட்டுவதாகும். வள்ளுவரது கல்விக் கொள்கை பின்னாட்களில் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன. வள்ளுவரைப் பாரதியுடனும் பிற அறிஞர்களுடன் ஒப்பிட்டுத் திறனாய்வாளர்கள் கூறியுள்ளனர்.*

> அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது வள்ளுவர் அறிவுரை. முறையான கல்வியாலும் மூத்தோர்வாய்க் கேள்வியாலும்அமைவது. 'அடியடியாய் எடுத்து வைப்பதன்றி ஒரே அடியாய்த் தாண்டுவதில் இல்லை அறிவு முன்னேற்றம்.' அறிவைத் தரும் வல்வி

அடைந்தோரையே கண்ணுடையர் என்று அடையாளம் காட்டுவார் வள்ளுவர். ‘விழுப்பம் தருதலால் உயிரினும் மேலாக ஓம்பப்படத்தக்கதாக உள்ள ஒழுக்கத்திற்கு மூலம் கல்வி[34]

*என்று வள்ளுவர் கூறும் கல்விச் சிறப்பை அறிஞர்கள் சுட்டிக்காட்டுவது வள்ளுவரின் பேராற்றலையும் அறிவுத்திறனையும் காட்டுகின்றது. பிற்காலத்தில் நீதிநூல்களை இயற்றிய புலவர்களும் இலக்கண இலக்கியங்கட்கு உரையெழுதிய ஆசிரியன்மாரும் சிறந்த புலமை ஆற்றல் உடையவர்களாய்க் காணப்பட்டனர்.*

*சங்ககாலப் புலவர்கள் பாடியிருக்கும் பாடல்களையும் கருத்து நுட்பங்களையும் நோக்க அவர்தம் கல்வியாற்றல் வியப்பிற்குரியதாயிருக்கிறது. ஒரு பெரிய அளவிலான கல்விச் சூழலில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து கற்றல் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் அவர்களுக்கிருந்தமையால் காலந்தொறும் போற்றி வியக்கத்தகும் பாக்களை அவர்கள் புனைந்தனர்.*

சங்ககாலத்தில் நமது கணக்குப்படி ஏறத்தாழ ஐந்நூறு புலவர்கள் இருந்திருக்கக் கூடும். இவர்கள் யாவரும் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுக்கால அளவிற்குள் வாழ்ந்தவர்கள். சிலர் உண்மையில் ஒரே தலைமுறையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கூட்டத்தில் மன்னரும் மகளிரும் இடம்பெற்றனர். ஏற்றுக்கொள்ளக் கூடிய செய்யுளாக இத்தனை பாக்களை இயற்றும் வன்மை எய்தும் அளவிற்குக் கல்வியற்ற இத்துணை பேர் இச்சிறுகால அளவில் வாழ்ந்து இருந்தமை வியப்பிற்குரியது. அக்காலத்தில் கற்றார்க்குச் செய்யப்பெற்ற சிறப்பே இத்துணைபேரைக் கல்வி கற்கத் தூண்டியிருக்கவேண்டும்[35]

*என்று ந.சுப்பிரமணியன் தம் நூலில் குறிபபிடுகின்றார். மிகுந்த உழைப்பின் அடிப்படையில் இத்தகைய புலமையை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பது கருதத்தக்கது.*

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்[36]

என்று திருவள்ளுவர் குறிப்பது கற்றல் செயல் எத்துணை இடுக்கண்களுக்கிடையில் நடைபெற்றது என்பதை உணர்த்துகின்றது.

## 1.5. புலமையைப் போற்றும் சூழல்

சங்ககாலத்தில் கற்றவர்களுக்குத் தனிமதிப்பிருந்தது. சாதி, சமயப் பூசல்கள் கலந்திருந்த அக்காலக்கட்டத்தில் கற்றவர்கள் எத்திறத்தராயினும் மிகவும் போற்றப்பட்டனர். குறிப்பாகப் புலவர்கள் மதிக்கப்பட்டதைச் சங்க இலக்கியச் சான்றுகள் பகர்கின்றன. இவர்கள் முன்னோர்கள் வாழ்க்கையைப் பற்றியும் தனிமனித நிலைபற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்கள். பழைய வரலாறு, பண்பாடு, கலை, நாகரிகம் போன்ற அனைத்தையும் தந்தவர்கள் புலவர் பெருமக்களே. அறிவிற் சிறந்தோர் எனவும், சான்றோர் எனவும் ஆசிரியர் எனவும் புலவர்கள் அழைக்கப்பட்டார்கள். கிடைக்கும் ஒவ்வொரு அகச்சான்றிலும் புலவர்களின் அறிவுத்திறம் வெளிப்பட்டது.

புலமையை வளர்ப்பதும் எளிமையாக வாழ்வதும் பிறர்க்கு நன்றாற்றும் அருங்குணங்களைப் பரப்புவதும் புலவர்தம் வாழ்க்கையாம். இதனை,

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே . . .[37]

என்று கோவூர்கிழார் பாடிய பாடலிலிருந்து அறியமுடிகிறது. வேந்தர்களைத் தம் அறிவுரையால் (அறிவுத்திறம்) போரினின்று தடுத்து அமைதி வழிச் செல்லச் செய்த இப்புலவரின் பாடல்கள் அனைத்திலும் கல்விப் புலமை வெளிப்படும்.

*தனியாட்சியே எங்கும் நிலவிய காலத்து மன்னரின் அடுத்த நிலையில் புலவர்கள் வைத்துப் பார்க்கப்பட்டனர். புலமையே எல்லா வளத்தையும் நல்குவது என்ற கருத்துப்பரவல் வலிமை பெற்றிருந்தது. அரசனுக்கு அகம் மற்றும் புறவாழ்வு குறித்த விளக்கங்களும் வழிமுறைகளும் புலவர்களால் தரப்பட்டன. புலவர்கள் இன்னபிற காரணங்களால் அனைத்துக்கும் தலைமை தாங்கினர். 'அறிவிற்சிறந்தோர் தேவை' என்ற உணர்ச்சி எங்கும் காணப்பட்டது. "புலமை வாழ்க்கை உலக அமைதியை அவாவுவது" என்று சங்ககாலப் புலவர்கள் சமூகத் தேவையை நிறைவு செய்தமை கூறப்பட்டுள்ளது.*[38]

> சங்ககாலச் சமுதாயத்தில் இறைவன் என மதித்துப் போற்றப் பெற்ற வேந்தனை நெறியறிந்து செலுத்தும் ஆற்றல் புலமைச் செல்வர்க்கே அமைந்தது. சமூகத்தின் இயற்கை புகழ்ச்சி, விருப்பம், அதிகாரம் பெரும்பதத்திலிருப்போர் இதற்கு ஆட்படுவதில் வியப்பில்லை. பிறர் அறியாது கொடைநேர்தலும் புகழ்கேட்டுத் துஞ்சும் மரம்போல நாணுதலும் வழிபடுவோரை ஆய்ந்து காணுதலும் குறை கூறுவோர் மொழிகளைத் தம்மொடு பொருந்திப் பார்த்தலும் நேரிய வேந்தர்க்கு இன்றியமையாப் பண்புகள் ஆயினும் பலரும் தம்மைப் பரவும் செயற்கரிய புகழ் நோய்க்கு ஆட்படும் இயல்பினராய் இருக்கக் காண்கிறோம். இன்னோர்க்கு உள்ளது கூறி அறிவுறுத்தும் புறச் செம்மலோராக அக்காலப் புலவரிற் பலர் திகழ்ந்தனர்[39]

*என்று சங்ககாலப் புலவர்தம் புலமை நலம் சமூகத்திற்கு அடிப்படைத் தேவையாய் இருந்தமை அறிஞர்களால் சுட்டப்படுகின்றது. அரச அடையாளங்களை எளிதாய்க் கருதிய புலவர்களையும் அவர் தமிழ் அறிந்த சால்பின் காரணமாக மன்னர்கள் பொறுத்தருளினர். மாறாக அத்தகைய தருணத்திலும் அவர்களைப் போற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.*

. . . . . . . . . . . . . . . . . . . .
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை

அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழிந்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு அமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே...[40]

என்ற பாடல் மோசிகீரனார் எனும் புலவர் பாடியது. முரசு(க்) கட்டிலில் படுத்துறங்கிய தம்மை வாள்கொண்டு துணியாது விசிறி கொண்டு வீசிய பண்பு தமிழையும் தமிழ் உலகையும் அறிவுத்திறத்தையும் அம்மன்னன் அறிந்ததால் உண்டானது என்கிறார் அவர். முரசு கட்டில் என அறியாது களைப்பினால் அதன்மீது படுத்துறங்கியது குற்றம் என்பதையும் கல்வியாளரை உணர்ந்த மன்னர் குற்றத்தையும் பொறுத்தான் என்பது கருத்து.

அறநூல்களுள் தலையாயது எனச் சிறப்பிக்கப்படுவது திருக்குறள். கல்விக்கு இருந்த சமூக மதிப்பை இது நன்கு அறுதியிட்டுக் கூறுகின்றது.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு[41]

என்ற வள்ளுவரின் கருத்தில் கல்விக்கும் புலமைக்கும் அக்காலச் சமூகத்தில் இருந்த மதிப்பை வெளிப்படுத்துகிறது. சமூகத்தின் எல்லாத்தரப்பிலும் புலமைக்குப் பெருத்த ஏற்புடைமை இருந்துள்ளது. இக்குறள் கல்வியின் சிறப்பை உணர்த்துவதைக் காட்டிலும் கல்வி பற்றிச் சமூகத்தில் இருந்த நிலைப்பாட்டை உணர்த்துகிறது எனலாம். இதனை வலியுறுத்தும் பரிமேலழகரும்,

> உயிரோடுசேறலின் சாந்துணையும் என்றார். பிறர் நாடுகளும் ஊர்களும் தம் போல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கு ஏதுவாகலின் கல்விபோல் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதும் செய்க என்பதாம்[42]

என விளக்குகிறார். உயிருள்ளவரை சிறப்புத் தருவதும் உலகத்தாரால் போற்றப்படுவதும் கல்வி என அதன் உயர்வைக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழகத்தில் நாட்டை ஆளும் அரசர்க்கு வழிவழியாக அரசாளும் முறை

*கிடைத்தாலும் அரியணையில் அமர்ந்த பின்னர் அவர்க்குரிய கல்வி வரையறுத்துக் கூறப்பட்டது. அரசர்க்குரிய கல்விப் பயிற்சி தனியாகத் தரப்பட்டது. பல்வேறு கலை மற்றும்போர் அறிவியல் நுட்பங்களை மன்னன் அறிந்திருக்கவேண்டும் என்று சமூகம் எதிர்பார்த்தது. இது தமக்குரிய கடமையாகவும் அரசர் எண்ணினர். கல்விப் பயிற்சியில்லாத மன்னர் அரசில் இருத்தல் அரிது எனவே கூறலாம். வரலாற்றாசிரியர் சாமிநாதசர்மா குறிப்பிடும் செய்தி இதனை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. அவர்,*

> அரசிளங்குமாரர்களுக்கு மூன்றாவது வயதிலிருந்தே முறையான கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது. தக்க ஆசிரியர்கள் மூலம் எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டன. பதினோறாவது வயதிலிருந்து உயர்தரக் கலவி ஆரம்பமாயிற்று. அன்றாடம் இன்ன நேரத்தில் இன்ன பாடம் கற்கவேண்டும் என்று ஒரு பாடக்கிரம் வகுக்கப்பெற்று அதன் பிரகாரம் அனுஷ்ட்டிக்கப்பட்டது. வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள், தர்க்க சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம், கணித சாஸ்திரம், அரசியல் சாஸ்திரம் ஆகிய பல்வகைத் துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு ஆசிரியர் இருந்ததாகத் தெரிகிறது. இவை தவிர சத்திரியர்களுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டிய யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன[43]

*என்று விளக்குகிறார்.*

*அரசர்க்கும் ஏனைய பொது மக்களுக்கும் கல்வி மிகத் தேவையென அக்காலத்து நிலையிருந்ததை இது காட்டுகிறது. கல்வி பரவலான சமூகச் செயற்பாடாக இருந்ததென ந.சுப்பிரமணியன் தம் வரலாற்று ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார்.*

> சங்க காலத்துத் தமிழர் சமுதாயம் முன்னேறிப் பண்பட்ட சமூகம்; வாணிப வளத்திலும் நுண்கலைத் திறனிலும் மிகுந்த உயர்நிலை எய்தியிருந்தது; அட்சியின் பெருமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு உணர்ந்திருந்தது. எவ்வகையிலும் அநாகரிக அல்லது மிருகப் பிராயத்தில் இருந்ததாகக் ருதக் கூடியதன்று. எம்மக்களின் உலகியல்

> கலைச் சாதனைகளுக்கும் காரணமாயிருக்க வேண்டிய கல்வியைப் பற்றி அவர்கள் அறிந்து வைத்து அதனை ஊக்குவித்தனர். அன்றியும் அஃது ஒரு பரவலான சமூகச் செயற்பாடாகவும் அமைந்தது[44]

என்று அவர் கூறப்படுவது சங்க காலத்து மக்கள் கல்விக்கு முதன்மை தந்திருந்ததை விளக்குகிறது.

> பிறப்போ ரன்ன வுன்வயிற் றுள்ளும்
> சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
> . . . . . . . . . . . . . . . . . . . . . .
> . . . . . . . . . . . . . . . . . . . . . .
> வேற்றுமை தெரிந்த நூற்பாலுள்ளும்
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பா லொருவனும் அவன்கட் படுமே[45]

என்று புறநானூறு குறிப்பிடுவது கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறும் பாடற்பகுதியாகும். தாய் தம் மக்களில் கற்றவனிடத்து மிகுந்த அன்புகாட்டினள் என்பதும் நான்கு வருணத்தில் கீழ்நிலை வருணத்தார் கற்றிருப்பாராயின் அவரிடத்து மேல் வருணத்தார் சென்று பணிவர் எனக் கூறப்படுவதும் எண்ணத்தக்கன. இது அக்காலச் சமூகம் பிற ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதாயினும் அவற்றை விடுத்துக் கற்றார்க்குப் பெருமை தந்ததை உணர்த்துகின்றது.

பொதுவாக மூத்தாரைப் போற்றுவது தமிழர் பண்பாட்டு மரபு. "மூத்தோர் சொல்கேள்"[46] என்பது தமிழ் உடன்பிறந்தாருள் மூத்தார்க்கே தகைமையும் தலைமையும் கொடுக்கப் பெறுவதாம். அவர் தம்முள் இளையன் கற்றானாயின் சான்றோர் மூத்தாரை விட்டுக் கற்ற அவ்விளையாரைப் போற்றுவர் எனச் சமூகம் கற்றாக்குத் தரும் உயர்வைப் பிறர்காலத் தமிழ்ப் பிரதிகள் சுட்டுகின்றன. "ஒரு குடியிற் கல்லாது மூத்தானைக் கைவிடுபு, கற்றானிளமை பாராட்டும் உலகு"[47] என்பது நான்மணிக்கடிகை. ஈண்டு 'உலகு' என்பது ஆகுபெயராய்க் கற்றாரைக் குறித்தது எனவும் கூறல்தகும்.

வயது முதிர்ந்த நிலையிலும் நரை தோன்றாமைக்குரிய ஏது யாதென வினவினார்க்குப் பிசிராந்தையார் என்னும் புலவர் பலவற்றை விடையாக மகிழ்ந்து கூறுகிறார். அவற்றுள் 'தம் ஊரின்கண் சான்றோர் பலர் உள்ளனர்' என்பதும் ஒன்று. 'சான்றோர்' கற்றுத் துறைபோகிய பெரியோரைக் குறிப்பது. புறநானுற்றுப் பழைய உரைகாரர் "'ஆன்றவிந்தடங்கிய சான்றோர்' என்பதற்குக் கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவவிந்து மனமொழி மெய்களால் அடங்கியவெனினும் அமையும்"[48] எனக் குறிக்கிறார். இச்சொல் மேற்சுட்டிய புலவர்தம் செய்யுளில் இடம்பெற்றுள்ளது. அப்புலவர்,

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே[49]

எனப் பாடுகிறார். மேலும் சமுதாயத்தில் நன்னெறிகளைக் கற்றறிந்த சான்றோர் பலர் இருந்தனர். எந்தச் சிந்தனைக்கும் நடத்தைக்கும் அன்னோர் கூறியதைப் பின்பற்றுவதே பண்டைச் சமூக வழக்காக இருந்தது. சமூகச்சூழலில் கற்றாரைப் போற்றும் நிலையில் அவரையும் அவர்தம் கொள்கைகளையும் "திறவோர் காட்சி"[50] எனப் புறப்பாடல் பேசுகிறது. "நன்மை கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தே மாகலான்"[51] என இதற்குப் பழைய உரை பொருள் தருகிறது. இவையாவும் அக்காலக் கல்விச்சூழலைத் தெள்ளிதின் உணர்த்துவனவாம்.

### 1.6. மன்னர்கள் போற்றிய கல்வி

மிகப் பழங்காலத் தமிழகம் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது. தம் ஆட்சியில் நிலவும் சிறப்புக்கள் யாவற்றையும் போற்றும் இயல்புடையவர்களாக மன்னர்கள் இருந்தனர். ஆடல், பாடல், கல்வி என்னும் கலைகளிற் சிறந்தாரை அழைத்து அவர்க்குப் பொருள் தந்து போற்றிய நிலையும் காணமுடிகிறது. "தமிழக அரசர்கள் இலக்கியத்தைப் போற்றினர், வளர்த்தனர், இயற்றினர்"[52] என்று சங்ககால மன்னர்க்கும் கல்விக்கும் இருந்த உறவு விளக்கப்படுகின்றது. திருக்குறள் 'கல்வி' என்ற அதிகாரத்திற்கு விளக்கம் எழுதும் பரிமேலழகர் இது மன்னர்க்குரியது என விளக்குகிறார்.

> அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன, அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையான் ஆயக்கால் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி, இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்[53]

*என்கிறார் அவர். இது அரசர்க்கும் கல்விக்கும் இருந்த அடிப்படை உறவைக் காட்டுகிறது. எல்லா வகைக் கல்வியையும் அரசர்கள் போற்றி வந்தனர் என்பது எண்ணத்தக்கது. கல்வியைப் பொதுவாக மன்னர்க்குரியதாக மட்டும் திருவள்ளுவர் கூறியிருக்க வாய்ப்பில்லை என்று இதற்கு விளக்கம் கூறுவர்.[54] சங்க இலக்கியங்களிலும் உரைகளிலும் காணப்பெறும் 'சங்கம்' பற்றிய செய்திகளை நோக்கப் புலவர்களை அவர் கற்ற கல்வியின் மேம்பாட்டால் மன்னர்கள் அவர்களைக் கூட்டியதும் போற்றியதும் தெரியவருகிறது.*

> சங்கத்தின் முக்கியமான அலுவல் தமிழகத்தின் தலை சிறந்த புலவர்களை ஒன்று சேர்த்து இலக்கிய ஆக்க வேலையிலும் ஆக்கிய இலக்கியத்தின் திறனை ஆய்வதிலும் ஊக்குவிப்பதேயாம். பாண்டிய மன்னர்கள் இவ்வறிஞர்களைப் புரந்து பாராட்டியதோடு அவ்விலக்கிய வேலைகளில் தாங்களும் ஈடுபட்டனர். அப்புலவர்கள் நான்கு வாயில்கள் கொண்ட பட்டிமண்டபம் என்னும் மன்றத்தில் கூடுவது மரபு[55]

*என்று கூறப்படும் செய்தி இங்கு எண்ணத்தக்கது. கல்வி கற்பதிலும் கற்றோரைப் போற்றுவதிலும் தாம் ஆளும் நிலப்பகுதிக்கு அது பயன்படுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டிவந்த தமிழக அரசர்களை இப்பகுதி சுட்டிக்காட்டுகின்றது. புலவர்கட்கு அவர் தம் கல்விஅறிவைப் பாராட்டி மன்னன் பரிசுகளை வழங்கிப் போற்றியதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது.[56]*

*பண்டைய நாளில் அரசர்க்கும் புலவர்க்கும் அரசியல் முறையிலும் நெருங்கிய தொடர்பிருந்தது. மன்னர்கள் புலவர்களை மிகவும் போற்றினர். அவர்களின் அனுபவத்தையும் கல்வியாற்றலையும் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். சுருங்கக்கூறின் புலவர்கள் உரைத்த நெறிப்படி தம்*

*அரசாட்சியைச் செலுத்தினர். தமிழ் ஆய்வாளர்கள் சங்கப் பாடல்களிலிருந்தே எடுத்துக்காட்டி விளக்குகின்றனர்.*

> சங்ககாலச் சமுதாயத்தில் இறைவன் என மதித்துப் போற்றப்பெற்ற வேந்தனை நெறியறிந்து செலுத்தும் ஆற்றல் புலமைச் செல்வர்க்கே அமைந்தது. சமூகத்தின் இயற்கை, புகழ்ச்சி விருப்பம். அதிகாரப் பெரும்பதத்திலிருப்போர் இதற்கு ஆட்படுவதில் வியப்பில்லை. பிறர் அறியாது கொடை நேர்தலும் புகழக்கேட்டுத் துஞ்சும் மரம்போல நாணுதலும், வழிபடுவோரை ஆய்ந்து காணுதலும் குறை கூறுவோர் மொழிகளைத் தம்மொடு பொருத்திப் பார்த்தலும் நேரிய வேந்தர்க்கு இன்றியமையாப் பண்புகள். ஆயினும் தம்மைப் பரவும் செயற்கைப் புகழ் நோய்க்கு ஆட்படும் இயல்பினராய் இருக்கக் காணுகிறோம். இன்னோர்க்கு உள்ளது கூறி அறிவுறுத்தும் அறச் செம்மலோராக அக்காலப் புலவரிற்பலர் திகழ்ந்தனர். புலமை வாழ்க்கை உலக அமைதியை அவாவுவது; போர் தவிர்க என அறிவுறுத்துவது[57]

*எனக் கு.வெ.பாலசுப்பிரமணியன் கூறுகிறார். அரசர்களின் பெருமை கல்வியறிவுமிக்க புலவர்களால் நிலைபெற்றது. அரசர்கள் தங்கள் ஆட்சிமுறைக்குப் புலவர்களே வழிக்காட்டிகள் என நம்பினர். அவர்களுடைய கல்வியறிவைப் போற்றினர்.*

> வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
> நெடிய வென்னாது சுரம்பல கடம்பு
> வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
> பெற்றது மகிழ்ந்து சுற்ற மருந்தி
> ஓம்பா துண்டு கூம்பாது வீசி
> வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
> பிறர்க்குத் தீதறிந் தன்றோ...[58]

*என்ற செய்யுளில் 'வடியா நாவின்வல்லாங்குப் பாடி' என்பது புலவர் பெருமக்களின் கல்வி அறிவை விளக்குவதாகும். 'பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி' என்பது மன்னர்கள் புலவர்களை ஆதரித்த பாங்கை உணர்த்துவதாகும்.*

வாய்மொழிப் பாடல்களாக அறியப்பட்ட சங்கப் பாடல்களை அவற்றில் ஆர்வமும் பற்றும் கொண்ட மன்னர்கள் தொகுத்த அல்லது தொகுப்பித்த வரலாறு அவர்களது கல்வி போற்றும் தன்மையைக் குறிப்பதாகக் கா.சிவத்தம்பி கூறுகிறார். இதுபற்றி அவர், "அரசர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் உணர்ந்து செய்த செய்கையாக, விலை மதிப்புடைய வாய்மொழிப் பாடல்களை எழுத்து மொழியில் பதிவு செய்த நடவடிக்கையைக் காண்கிறோம்"[59] என்று தம் நூலொன்றில் கூறுகின்றார். இதன்கண் எழுத்து மொழியில் பதிவு செய்தல் பணியை அரசர்கள் மேற்கொண்டிருந்தனர் எனச் சுட்டப்பட்டிருப்பது அவர்களது ஆர்வத்தைக் காட்டுவதாகும்.

புறநானூற்றில் மூவேந்தர்களும் குறுகிய மன்னர்களும் சிறிய நிலப்பகுதிக்கு உரிமையாளர்களாக இருந்தவர்களும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளனர். படை வீரர்களும், நிலக்கிழார்களும் பாராட்டப் பெற்றுள்ளனர்.[60] இத்தகைய சூழலை உற்று ஆராயின் கல்வியளாளர்களுக்கும் (புலவர்) மன்னர்களுக்கும் உள்ள உறவு ஆழமாக இருந்ததை அறியலாம். புலமையாளர்களுக்கு மன்னர்கள் தந்த சிறப்புத் தனித் தன்மை கொண்டது. புலவர்களுக்குப் பரிசில் வழங்கியதை வள்ளல் தன்மை என்கிறார் கா.சிவத்தம்பி.[61]

'சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்னும் மன்னன் ஆட்சிக்காலத்தே, அவனுடைய முரசு இருந்த கட்டிலில் அறியாது படுத்துறங்கிய மோசிகீரனார் என்ற புலவர்மீது சினங்கொள்ளாது அவ்வரசன் விசிறி கொண்டு வீசினான். விழித்தெழுந்த புலவர் அவன் தமிழ்மீது கொண்டிருந்த பற்றுதலே இதற்குக் காரணம் எனப்பாடுகிறார். அவர் அவனை நோக்கி நற்றமிழ் முழுதறியும் பண்புடையவன் என்கிறார்.[62]

புலவர் ஒருவர் தமக்கு வறுமை மீதூர அதனால் தம் அறிவெனும் புலனும் தன் தன்மை இழந்தது என்றும் தன்னைக் காக்கும்படியும் மன்னன் ஒருவனிடம் கூறுகிறார். தம் அறிவுப்புலன் கெட்டதென மன்னனிடம் கூறுவது

*அதனால் அவன் வருந்துவான் என்பதையும் அறிவின் பயன் உணர்ந்தவன் மன்னன் என்பதையும் உணர்த்துவதாகும்.*

சான்றோர் இருந்த அவையத் துற்றோன்
ஆசாகு என்னும் பூசல் போல
வல்லே களைமதி அத்தை உள்ளிய
விருந்து கண்டொளிக்கும் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புணர் உடம்பில் தோன்றிஎன்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே[63]

*எனப் பாடுகிறார் பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவர். இது சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியை நோக்கிப் பாடியது. அறிவு கெடுதலை மிக எளிதாக இவ்அரசன் எண்ணான் என்பது இதன் கருத்து. மேலும் சான்றோர் அவையில் அறியான் ஒருவன் செல்லல் போல என்ற உவமையும் கல்வியின் சிறப்பை மன்னர்கள் கண்டு மகிழ்ந்தனர் என்பதை உணர்த்தும்.*

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து[64]

*என்ற குறளில் கசடறக் கூறுதலால் கல்விச் சிறப்பு விளங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இத்தகையாரை மன்னர் முதலான அதிகார நிலையிலிருப்போரும் அறிஞரும் பாராட்டுவர் என்பது கருத்து.*

## 1.7. மக்களும் கலைக்கல்வியும்

*கலைக்கல்வி என்பது கலைகளைக் கல்வியாகப் பயிற்றுவித்தலாகும். ஆடல், பாடல், சிற்பம் போன்ற கலைகள் சங்ககாலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன. கலைகளை நாட்டிலுள்ள மன்னரும் அவரைச் சார்ந்தோரும் போற்றினர். கலைகளை வளர்ப்பதற்கென்று தனிக்கவனம் செலுத்தப்பட்டது. கலை நுட்பங்கள் உணர்ந்த புலவர்களும் அறிஞர்களும் இருந்தனர். இவர்கள் மக்களுக்குத் தாம் அறிந்த கலைநுட்பங்களை விளங்க உரைத்தனர். மக்கள் கலைகளைப் பயில்வதில் ஆர்வமுடையராய்க் காணப்பட்டனர். புறப்பொருளில், 'உண்டாட்டு' என்று ஒரு துறை கூறப்படுகிறது.[65] மறவர்கள் கள்ளுண்டு ஆடிப்பாடி மகிழ்தலை இது குறிக்கிறது. மறவர்களிடம் உள்ள*

*இவ்வழக்கம் மக்களிடமும் இருந்துள்ளது. "நனை முதிர் சாடி நறவின் வாழ்த்தி"[66] எனக் கள்ளிருந்த சாடியை வாழ்த்திப் பாடி மகிழ்ந்துள்ளனர். போருக்குச் சென்று புண்பட்டுத் திரும்பிய மறவர்களின் இல்லந்தோறும் ஆரவாரம் எழுந்ததாகப் புறநானூறு கூறும்,*

வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கயிர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும கல்லென் றவ்வே
........................................................
........................................................[67]

*வேம்பு சினை ஒடித்தல், காஞ்சிப் பாடல் பாடுதல் போன்றவை இல்லங்களில் நிகழ்ந்தவை. காஞ்சிப் பாடல் வருத்தத்தை வெளிப்படுத்திப் பாடும் பாடலாகும். காஞ்சி என்பது நிலையாமையை எண்ணிப் பாடும் பாடல் என்று சுட்டப்படுகின்றது.*[68]

*ஓவியம், சிற்பம் போன்றவற்றில் மக்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்கும் வழக்கம் கொண்டிருந்தனர். இதைப்போல இசைக்கலையிலும் நாட்டம் கொண்டிருந்தனர். இசை மக்களுக்குப் பயிற்சியாவதற்குப் பாடலின் வடிவம் துணை செய்தது. பாடிப்பாடி அதனைக் கேட்டுப் பிறரும் பயிற்சி பெற்றனர். இசைக்கு இருக்கும் இத்தகைய சிறப்பை எஸ்.வையாபுரிப்பிள்ளை,*

> தருக்க நெறிப்படி அதாவது காரணக் காரியத் தொடர்போடு பொருள் முழுதும் வெளியிடுவது வசனம். காரண காரியத் தொடர்பை இரண்டாவதாகக் கொண்டு, குறிப்பாற்றலாலும் ஓசையின் நயத்தாலும் பொருளை உணர்த்துவது பாட்டு. இது வசனத்திற்கும் பாட்டிற்குமுள்ள வேறுபாடுகளில் மிக முக்கியமானது. பிறிதொரு வேறுபாடும் உண்டு. பாட்டுக்களைப் பாடினால்தான் அவற்றினுடைய சுவையும் பொருள் சிறப்பும் நம்மால் அறியமுடியும். பாடாமல் போனால் இவை இரண்டும் விளங்கமாட்டா[69]

*எனக் குறிப்பிடுகின்றார்.*

*பாடல் பாடப்படும் தன்மையிலிருந்து இசைக்கல்வி கற்றுத்தரப்பட்டது. பழங்கால இசைக்கல்விக்கு 'கேள்வி ஞானமே' பெரிதெனப்பட்டது.*

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப[70]

*என்ற தொல்காப்பியம், பண்புக் கூறுகள் ஒருவர் சொல்லித் தராமலேயே மக்கட்கு அறிய வந்தன என்பதைக் காட்டுகிறது. ஆசிரியரை முன்னிலைப்படுத்தாது, மக்களே ஆசிரியர் உள்ள இடம்தேடி அவர் செவ்வியறிந்து கற்கவேண்டியதைக் கற்கவேண்டும் எனக் கல்வியை மக்கள் கடமையாகக் கூறுகிறது திருக்குறள்.[71] கல்லாதவரைக் 'கடையர்' என வள்ளுவர் கூறியதற்கு "பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வி இழந்தார் பின் ஒரு ஞான்றும் அறிவுடையார் ஆகாமையின் கடையரே என்றார்"[72] எனப் பரிமேலழகர் கூறுகின்றார்.*

*பொதுவாக இக்காலத்தே ஐந்து வயதில் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் வழக்கம் காணப்படுகிறது. நவீனக்கல்வி முறையில் இன்னும் குறைந்த வயதிலேயே பள்ளியில் சேர்க்கின்றனர். காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றாற்போல் வயது நிலை மாறினாலும் சிறுவயதில் கல்வி கற்கப் பழக்கும் சமூகநிலை மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்தது. இதனை அறிவுறுத்தற்கு ஆய்வாளர் ஒருவர் "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்"[73] என்று சீவக சிந்தாமணியில் வருவதைக் காட்டுகின்றார். இத்தொடரில் வரும் 'ஐயாண்டு' என்பது குறிப்பிடத்தக்கது. இன்று அரசுக்கல்வி நிலையங்களில் பிள்ளைகளைச் சேர்க்கும் வயது 'ஐந்து' என வரையறுத்திருப்பது பழைய மரபு என்பது புலனாம். இங்கே குறிப்பிடப்பெறும் ஐந்து வயது பருவத்தைத் தற்காலத்தொடு ஒப்பிடும் இவர்,*

> அக்காலத்துச் சிறுவர்கள் ஐந்தாண்டு நிறைந்ததும் மையோலை பிடித்துக் கல்வி கற்கத் துவங்கிய கல்வியைச் செவ்வையாகக் கற்றறிந்து வந்தார்கள் என்றும் கூறுகிறது இப்பாடலடி. மேலும் சீவக சிந்தாமணி ஆசிரியர் அக்காலத்துச் சிறுவர்கள் மாணவராகச் சேர்க்கப்பட்டது முதல் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்து வரையிலான செய்திகளைச் சீவகன்

> கல்விகற்று வந்த செய்தியின் வாயிலாகக் கூறியுள்ளார். அவைகள் யாவும் அக்காலத்துச் சிறார் கல்விகற்றுவந்த வரலாற்றைக் கூறுவனவாகும்[74]

என மக்களிடையே கல்விக்கலை வளர்ந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். எழுத்தும், சொல்லும் இன்னதென்று அறியாத அளவில் வெறும் ஓசையை மட்டும் எழுப்பி ஒருவன் பாடுங்கால் அவ்வோசையின் தன்மையானே அஃது இன்னவகைப் பாடலாக இருக்கலாம் என உணர்ந்துகொள்ளும் தன்மையைக் கேட்போர்க்கு உணர்த்துவது இசையின் பண்பாகும் என்று தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். முன்னரே மரபுவழியாக இசைபற்றித் தாம் கற்றிருந்த அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்கிற நிலை உள்ளது. இசையின் அடிப்படை இது. சங்கப் பாடல்களை இசையுடன் கற்பித்திருக்க முடியும்.

இசையோடு ஒருவன் பாடியதை 'ஓதுதல்' எனப் பேராசிரியர் குறிக்கின்றார். இசை சொல் இன்னதென்று அறியப்படாமலே ஒருவன் மனத்தில் நின்றுவிடுகிற தன்மையை இதில் உணர்த்துகின்றார். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்"[75] என்று கூறப்படுவதில் 'தமிழ் பரப்புதல்' என்பது எடுத்துக்கூறல் எனப் பொருள்படுகிறது. இதுவும் கற்பித்தலேயாம். இசையுடன் கற்பித்தல் தமிழ் மரபு என்பது புலனாம்.

நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் தொடக்கக்காலத்தில் வாய்மொழியாகவே இருந்தன. அவை மிகவும் பிற்காலத்தில் எழுத்து வடிவம் பெற்றன. ஒருவர் பாட மற்றவர் அதைக்கேட்டுப் பாடும் பயிற்சியை மக்கள் பெற்றிருந்தனர். இதனால் இவற்றை வாய்மொழிப் பாடல் என்றே குறிப்பிட்டனர். இவற்றிலும் எதுகை, மோனை போன்ற ஓசை வடிவங்கள் இணைந்து பாடல்களைச் சுவைபடச் செய்தன. எழுத்து வடிவம் இல்லாமலே இவை கற்பிக்கப்பட்டன; கற்கப்பட்டன.

> ஆல்போல் தழைத்து
> அருகுபோல் வேரூன்றி

மூங்கில்போல் கிளைகிளைத்து

முசியாமல் வாழ்ந்திருக்க

பார்த்தவர்கள் எல்லோரும்

கிளை கோத்திரமாய் வாழ்ந்திருக்க[76]

*என்ற பாடலில் அமைந்திருக்கும் மோனைகளும் பிறவும் பாடலைச் சுவைபடச் செய்துள்ளன. இதனால் மக்கள் மனத்தில் கருத்துக்கள் எளிதில் மறந்திடவியலாது நிலைத்துவிடுகின்றன. மக்கள் பழங்கலைகள் அனைத்தையும் இவ்வாறே கற்றனர்.*

*ஒரு குறிப்பிட்ட நிகழ்வைப் பற்றிய சித்திரிப்புக்களும் பாடற்சுவையும் பாடுவோரின் குரல் இனிமையும் கேட்போர் மனதைக் கவர்ந்து ஆழப்பதிந்து விடும் ஆற்றலுடையன. பழங்காலத்தில் பாடப்பெற்ற ஏர்க்களப்பாட்டு, போர்க்களப் பாட்டு ஆகியன இத்தகைய தன்மை கொண்டன. போர் நடந்ததைப் புகழ்ந்துபாடுவது போர்க்களப் பாட்டு எனவும் உழவுத்தொழில் நடந்ததை வருணிப்பது ஏர்க்களப்பாட்டு எனவும் கூறப்பட்டது.[77] புறநானூற்றில் வரும் பாடலொன்று போர்ச் செய்திகளைக் கூறுவது. இது போர்க்களச் செய்தி. இதனை ஏர்க்களமாக உருவகப்படுத்திப் பாடப்பட்டுள்ளது. அதன் திரண்ட வருணிப்பை,*

யானையே, மேகம்; வீரர் வீசும் வாளே மின்னல்;

முரசொலியே இடி; வேகமாகப் பாயும் குதிரையே,

காற்று; சிதறி விழும் அம்பே, மழைத்துளி; ஓடும்

தேர் ஏராகும்; விடியலில் புகுந்த போர்ப்படை

சாலாகும். பிடித்து எறியும் வேலினை, விதைப்பர்;

தலைசாய்த்த வீரர் பயிராவர். பேய், நரி, கழுகு,

பூதம் முதலியன களத்தில் காத்து நிற்க, பாடுவோர்

பாட வீற்றிருந்த அரசனே, தடாரி முழக்கிப்

பாடிவந்தேன். மேகம் சாய்ந்து அருவி விழும்

இமயம்போல யானையை அதன் பெண்யானை

கன்றுடன் வழங்குவாயாக[78]

*என்று விவரித்து எழுதுகின்றார். உரை வகையில் இவ்வாறு கூறப்பட்டிருப்பினும் பாடல் எதுகையும் மோனையும் ஓசையும் விரவி வரக்கேட்போர் உளம் விரும்பிக் கற்கும் நிலையில் அப்பாடல் காணப்படுகிறது.*

இருப்புமுகம் செறிந்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கையானை கொண்மூ வாக
நீண்மொழி மறவர் எறிவனர் உயர்ந்த
வாள்மின்னாக வயங்கு கடிப்பு அமைந்த
குருதிப்பலிய முரசுமுழக்காக,
அரசராப் பணிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளியாக,
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர் ஏராக,
................................................
................................................[79]

*என நீண்டு செல்கின்றது. இவ்வாறும் ஓசையும் நயமும் தோன்றப் பாடப்படும் இசையமை பாடல்களும் கற்றுக்கொள்ள எளிதாக இருந்தன. இம்முறையிலும் கற்றல் தொழில் நடந்தது.*

## 1.8. கலைஞர்கள்

*கலைஞர்கள் கலையை வளர்ப்பவர்கள். கலையால் வாழ்க்கை நடத்துபவர்கள். பழங்காலத்தில் பல்வேறு கலைகள் தோன்றி வளர்ந்து வந்தன. இசை, ஓவியம், ஆடல் போன்ற கலைகள் சமுதாயத்தில் முதன்மை பெற்றிருந்தன. நாட்டாட்சியில் பங்குகொண்டமன்னர் முதலானோரும் தொழிலாளர்களும் பிறதுறைகளில் ஈடுபட்டோரும் சான்றோரும் புலமையாளர்களும் இக்கலைகளை விரும்பிப் போற்றினர். ஆடல், பாடல், இணைந்த கூத்துக் கலை வரவேற்கப்பட்டது. இக்கலைகளை நுட்பக்கலை எனவும் கூறினர்.[80] நாடோடிக் கலைகளிலிருந்து இந்நுட்பக் கலைகள் தோன்றின. இக்கலைகளை அறிந்த அனுபவம் உடையோர் வழிவழியாகத்*

தமக்குப் பின்வரும் சமுதாயத்திற்குக் கற்றுத் தந்தனர். அவர்களுக்கு உரிய தருணத்தில் பயிற்சி கொடுப்பதன் வழியும் தம்மோடு இணைத்துச் செல்வதன் வழியும் இக்கலைகள் கற்றுத் தரப்பட்டன. ஒருவர் செய்வதைப் பார்த்து மற்றொருவர் செய்யும் போலச் செய்தல் மூலமும் இவை கற்பிக்கப்பட்டன.

> புதிய ஒன்றைப் பற்றிக்கொள்ளும் தமிழகர்களிடத்தில் மேலோங்கிக் காணப்படுவதை வரலாறு பதிவு செய்துள்ளது. 'போலச் செய்யும்' பண்பினால் இலக்கியங்களில் தெய்வக் கதைகள் பல அமைந்துள்ளமையை உணரமுடிகிறது[81]

என்று கூறப்படும் தகவல் இங்கு எண்ணத்தக்கது.

கலைகளில் இசைக்கலை ஒழுங்குடையதாகவும் அதிகாரத்தில் இருந்த அரசர் முதலானோர் விரும்பிக்கேட்ட நிலையிலும் இருந்தது. தேவைப்பட்ட பொழுது இக்கலைகளில் தேர்ச்சியுடையோரை அழைத்து இசையைக் கேட்டறிந்தனர். பாணர், கூத்தர், விறலி போன்றோர் வழிவழியாக இத்தகு கலைகளை அறிந்திருந்தனர். ஒருவகையில் தாம் கற்றதைப் பிறர்க்குத் தக்க சமயத்தில் அறிவிக்கின்றவர்களாகவும் கற்பிக்கின்றவர்களாகவும் இவர்கள் இருந்தனர். தம் வழியில் வரும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் இதனைக் கற்றுக்கொடுத்தனர்.

> பாடுவில் விறலி ஓர் வண்ணம் நீரும்
> மண்முழா அமையின்.....
> . . . . . . . . . . . . . . . . . . . .
> . . . . . . . . . . . . . . . . . . . .
> இறைவன் ஆதலின் சொல்லுபு குருதி
> மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி
> கோவெனப் பெயரிய காலை ஆங்கது
> தன்பெயர் ஆதலின் நாணி
> . . . . . . . . . . . . . . . . . . . . .[82]

என்னும் புறப்பாடலில் 'விறலி' பாடியதும் அதற்கியையக் குழுவினர் ஆடியதும் குறிப்பிடப்பட்டுள்ளமையை அறியலாம்.

'படுவல் விறலி' என்பதும் 'நீரும் மண்முழா அனமின்' என்பதும் ஓரி என்ற மன்னனின் கட்டளையாகும். 'விறலியை அழைத்துச் சந்த ஒழுங்குடைய பாடலைப் பாடுமாறு கூறி மற்றும் தம் குழுவினரை நோக்கி அதற்கேற்ப ஆட்டத்திற்குத் தயராகுமாறு கட்டளை இட்டான்'[83] என்பது கருத்து. சந்த ஒழுங்குடைய பாடல்களைக் கற்றுத் தம் பயிற்சியில் கொண்டிருந்த கலைஞர்களையும் ஆடலை அறிந்திருந்த மக்களையும் இங்கே காணமுடிகிறது. இத்தகைய கலைநுட்பம் அறிந்தவர்கள் யாவரும் பிறர்க்குத் தாம் அறிந்த கலையினைக் கற்பித்தே வந்தனர். பாணர்களுக்கு அகவல் யாப்பு உரியது[84] எனக் கூறப்படுகிறது. பாணர்கள் பாடும் பாடல்களில் இவ்யாப்பு அமைதலால் யாப்புத்திறம் அறிந்த கலைஞர்களாகவும் அவர்கள் கருதப்படுகின்றனர்.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்[85]

என்னும் பாவினுள் கூறப்படும் இசைக் கருவிகள் இசையில் தேர்ந்த கலைஞர்களின் இருப்பைத் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து வந்த திருக்குறளுக்கும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கும் கலைநுட்பப் போக்குகளில் உள்ள உறவை இது காட்டுகிறது எனலாம். "குழல், யாழ் என்பன ஆகுபெயர்"[86] என்கிறார் பரிமேலழகர். இவை இக்கருவியிலிருந்து எழுப்பப்படும் முறைசார்ந்த இசையைக் குறிக்கும். இசை பற்றிய கற்பித்தலும், கற்றலும் நிகழ்ந்திருக்கின்றன என்பதை இக்கருத்துக்கள் விளக்கும்.

சமுதாயத்தின் தனிச்சிறப்பு வறிதே பொருளியல் வளர்ச்சியால் மட்டும் நிறைவுறுவதன்று. கலை, சிற்பம், ஓவியம், இசை போன்ற கலைத்துறையின் வளர்ச்சியும் இவை பற்றிய நுண்ணறிவும் சமூக மேம்பாட்டைக் காட்டுவன. பழந்தமிழகம் இக்கலை நுணுக்கத்திறனில் மேம்பட்டதாக இருந்தது. அழகியலும் கலைத்திறனும் மிகுந்திருந்ததைத் தமிழ் இலக்கியங்களிலும் காணமுடிகிறது.[87] இவை கலைக்கல்வியை உணர்த்துகின்றன. இசைக்கலைஞர்கள் மட்டுமல்லாது தனிப்பட்டோரும், இளைஞர்களும் பாடற்கலையில் சிறந்து விளங்கினர். அவர்களுக்கு இளமையிலிருந்தே ஆடல் பாடல் பயிற்சி இருந்தது.

கண்ணியல் கண்டேத்திக் காரிகைநீர் நோக்கினைப்
பாணா தரித்துப் பலபாடப் அப்பாட்டுப்
பேணா தொருத்திப் பேசுற....[88]

*தலைவியினுடைய கண்ணழகைத் தலைவன் பாடலில் வைத்துப் பாடினான் என்பது இதன் கருத்து.*

> பழங்காலத்தில் தமிழ்ச் சங்கங்களில் மூன்று தமிழையும் ஆய்ந்து வந்தார்கள். இசைத் தமிழாராய்ச்சியும் இசைப் பயிற்சியும் அப்பொழுது ஏனைய இயல் நாடகங்கள்போல மிகச்சிறந்து விளங்கின. இசைத் தமிழ்ச்சங்கங்களே தனியாக அமைக்கப்பட்டுப் பல இசைவல்லார்கள் இசைத் தமிழை வளர்த்து வருவதற்கு நிலைக்களனாக இருந்தனவென்று தெரியவருகிறது....கடைச்சங்கத்துப் புலவர்களுள்ளும் இசையையே சிறப்பாகப் பயின்று ஆராய்ந்து நூல்கள் இயற்றிய புலவர்களும் இருந்தார்கள்[89]

*என்கிறார் உ.வே.சா. 'மூன்று தமிழையும் ஆராய்ந்தார்கள்' என இங்குக் குறிப்பிடுவது கற்றறிந்த அறிவுடைச் சான்றோரை எனலாம். இவர்கள் இசைக்கலையை நுண்ணிதின் கற்றும் கற்பித்தும் வந்தனராதலின் இவ்வண்ணம் குறிக்கப்பட்டனர். மூன்று தமிழ் இயல்களும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சங்கப்புலவர் தம்முள் இசையில் தேர்ந்தோர் இருந்தனர் என்பதும் கலைக்கல்வி (இசை) உயர்ந்திருந்ததை உணர்த்துகிறது. மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாத நாட்களில் பல்வேறு விளையாட்டுக்கள் விளையாடி மகிழ்ந்தனர்.*

அலவன் ஆட்டியும் உரவுத்திரை உழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளையாடி[90]

*என்று பட்டினப்பாலை கூறுகிறது. இத்தகைய விளையாட்டுக்கள் ஆசிரியரால் கற்றுக்கொடுக்கப்பட்டவை அல்ல. ஒருவர் செய்வதைப் பார்த்து மற்றவர் செய்தலின்வழிக்* (Imitation) *கற்கப்பட்டவை. இச்செய்யுளடிகளில் வரும் விளையாட்டும் நிகழ்ந்த இடமும் பயன்பட்ட அலவன் (நண்டு) முதலான பொருள்களும் உழைக்கும் வர்க்கச் சார்புடைய மக்களால்*

பயன்படுத்தப்பட்டவை என்பது புலனாம். பற்பல பழக்கவழக்கங்களையும் இவ்வாறே மக்கள் அறிந்திருந்தனர்.

## 1.9. தொழிற்கல்வி

சங்ககாலத் தமிழகம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றிருந்தது. மொழி செந்தமிழ் எனப் போற்றப்பட்டது. தமிழ், தமிழ்நாடு என்ற சொல்லாடல்கள் சமுதாய அளவில் பேசப்பட்டன. தமிழுடன் கலந்த பிற பண்பாட்டினின்றும் பிரித்து இன்னது தமிழ்ப் பண்பாடென வரையறுக்கப்பட்டிருந்தது. தொன்மையான குடிகள், விளைபொருள்கள் போன்றவை எடுத்துரைக்கப்பட்டன.[91] மக்களுள் உயர்ந்தோர், தாழ்ந்தோர், நிலஉடைமையாளர், உழைப்பாளர் போன்ற பிரிவுகளும் நால்வருணப் பிரிவுகளும் இருந்தன. தொழில்துறை அறிவியல் பண்புகளும் அனுபவ அறிவும் கொண்டதாக வளாந்திருந்தது.

விவசாயம் முக்கியத் தொழிலாக இருந்தது. பயிர்த்தொழில் என்றும் உழவுத்தொழில் என்றும் இது சுட்டப்பட்டது. உழவுத்தொழில் புலவர்களால் போற்றப்பட்டது. உழவுத்தொழில் மரபு வழியாகச் சொல்லித்தரப்பட்டது. 'ஓரேழ் உழவன்'[92] என்ற தொடர் தம் நிலத்தைத் தாமே உழுதுண்டு வாழும் தொழிலாளியையோ அல்லது சிறுபகுதி நிலத்தை உழும் தொழிலாளியையோ குறித்ததாகத் தெரிகிறது. பயிர்த்தொழில் ஒருவர் பெற்ற அனுபவம் மற்றவர்க்குப் பயிற்சியாக அமைந்தது. உழவுக்குரிய கருவிகள் செய்து தரப்பட்டன. கலப்பை போன்ற கருவிகள், 'கொழு'[93] போன்ற உழவுக்கருவிகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இக்கருவிகளைச் செய்து தருவோர் இருந்தனர். இக்கருவிகள் செய்வோர் தனிப்பிரிவாகக் காணப்பட்டனர். அத்தொழிலை அவர்கள் தம் குடும்பத்தார்க்கே கற்றுத் தந்தனர். தொழில் அடிப்படையில் மக்கள் பிரிந்திருந்தனர். இத்தொழில்களுக்கெனத் தனியே கல்வி நிலையங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. போதுமான அளவிற்கு இரும்பு பயன்படுத்தப்பட்டது.

தச்சுத்தொழில் மரத்தைப் பயன்படுத்திச் செய்யும் தொழிலைக் குறித்தது. 'தச்சர்' என இத்தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். 'எண்தேர்த் தச்சன்'[94] எனப்படுவது தச்சுத்தொழில் சிறந்திருந்ததைக் குறிப்பது. தச்சுத்தொழிலும் பரம்பரைத் தொழிலாக இருந்துவந்தது. இதற்கெனத் தனிப் பள்ளிகளோ தொழிற்கூடங்களோ இல்லை. தேரைப் பயன்படுத்தும் முறை மன்னர் ஆட்சியில் காணப்படுகிறது. இதனால் தேர்செய்யும் தச்சர்கள் அரண்மனைக்கென்றே பணிக்கப்பட்டவர்களாக இருந்திருக்கக் கூடும். தச்சுக்கூடங்கள் அரண்மனைக்கென்று தனியாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அரண்மனை, கோட்டை வாயில்கள், மதில் வாயில்கள் போன்றவற்றில் மரவேலைப்பாடுகள் தச்சர்களால் செய்யப்பட்டன. இத்தச்சர்கள் தமக்கு உதவியாளராகச் சிலரை அமைத்துக்கொண்டு பணியாற்றினர். இவ்உதவியாளர்கள் நாளடைவில் தொழிலைக் கற்றுக்கொண்டனர். இவ்வாறே இத்தொழில் கற்பிக்கப்பட்டு வந்தது. 'எண்தேர்த் தச்சன்' என்பதிலுள்ள எண் (எட்டு) தச்சர்களின் மிகுதியையும், அவர்தம் திறமையையும் மரவேலைப்பாட்டுத் தேவையையும் உணர்த்துகின்றது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்கட்கும் தனித்தனித் தொழிற்பிரிவுகள் இருந்ததைப் பழந்தமிழ் இலக்கண நூல்கள் வரையறுக்கின்றன. ஒவ்வொரு நிலத்து மக்களும் அவ்வந்நிலத்தில் புழங்கும் தொழிலை நன்கு கற்றிருந்தனர். ஒரு நிலத்துட்பட்ட தொழிலைப் பிற நிலத்தார் சிறப்புறச் செய்ய இயலாதநிலை இருந்தது. அந்தந்த நிலத்து மக்களுக்கு அங்கு வழங்கிய தொழிலைப் பற்றிய கற்றல் அனுபவம் இருந்தது. இத்தொழில்கள் ஒருவருடன் இணைந்து வேலைத்தளையில் ஈடுபட்டு அதனாற்பெற்ற அனுபவமே அவர்கட்குரிய தொழிற்கல்வி ஆயிற்று. இதனைத்தான் முறைறாராக் கல்வி, கற்றல் (Formal Education and Learning) என்றனர்.

**ஐவகை நிலத்திலும் முறைசார நிலையில் கற்றுத்தரப்பட்ட தொழில்கள்**

| நிலம் | கற்பிக்கப்பட்ட தொழில்கள் | கற்பித்த/கற்ற மக்கள் |
|---|---|---|
| முல்லை | ஆடு, மாடுகள் மேய்த்தல் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் |
| குறிஞ்சி | கிழங்கழ்தல், தேனெடுத்தல் வேட்டைத்தொழில் | குறவர், குறத்தியர் போன்றோர் |
| மருதம் | பயிர்த்தொழில் செய்தல் நீர்மேலாண்மை | உழவர், உழத்தியர் |
| நெய்தல் | உப்பு எடுத்துச்சென்று விற்றல், மீன்பிடித்தல் | பரதவர் |
| பாலை | வழிப்பறி முதலாயின | காளை, மீளி |

மேற்சுட்டப்பட்ட தொழில்கள் தனிப் பள்ளியோ பயிற்சிக் கூடமோ இன்றி அவரவரும் தன் முயற்சியால் ஒருவரிடமிருந்து கற்றுக் கொண்டவை ஆகும். பாலை நிலத்தொழில்கள் ஆராயத்தக்கவை. அந்நிலத்து மக்கள் வேறு நிலத்திற்குச் செல்லின் அவர்கள் மனநிலையில் ஏற்படும் மாற்றத்தால் இத்தொழில்கள் அவர்களிடமிருந்து மாறக்கூடும் என்பது கருத்து. ஒவ்வொரு நிலத்திலும் சில கருவிகளைப் பயன்படுத்தினர். அவற்றைச் செய்து தரும் உற்பத்தியாளர்களும் ஆண்டிருந்தனர். அவர்கள் மற்றவர்க்குப் பயிற்சி தந்தனர்.

### 1.10. சங்கம் - ஒரு கல்வி நிறுவனம்

பழந்தமிழகத்தில் மூன்று சங்கங்கள் நிகழ்ந்ததைத் தமிழ் இலக்கிய வரலாறுகளில் காணமுடிகிறது. இவை முறையே தென்மதுரை, வடமதுரை ஆகிய இரு இடங்களிலும் நிகழ்ந்தன. முதலிரு சங்கங்களும் தென்மதுரையிலும் கடைச்சங்கம் வடமதுரையிலும் நடைபெற்றன. இம்மூன்று சங்கங்களும் ஆயிரக்கணக்கில் புலவர்கள் இணைந்து தமிழ் இலக்கண இலக்கிய அறிவை மேம்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிந்தனர். திறமையுடைய புலவர்கள் எழுத்து, பேச்சு ஆகியவற்றில் தம் திறமையைக் காட்டிவந்தனர். தாம் எழுதிய நூலைப் புலவர்கள் இங்குக் கொண்டுவந்து விவாதத்திற்கு உள்ளாக்கிப் பிழையற்ற நூல் எனப் பெயர்தாங்கிடச் செய்தனர். இதனால் புதிய புதிய

*இலக்கிய இலக்கணங்கள் அறிவுறுத்தப்பட்டன. வாத விவாதங்கள் நிகழ்வதை முச்சங்கங்களும் மரபாகக் கொண்டிருந்தன. புலவர்கள் கேட்கும் வினாக்கட்கு விடையளித்தல் நூலாசிரியரின் கடன் என்பதைத் தொல்காப்பியப் பாயிரம் உணர்த்துகின்றது.*

*சங்ககாலத்தில் புலவர்களின் ஒழுகலாறு அறிவுடன் தொடர்புடையதே என வரையறுக்கப்பட்டிருந்தது. 'புலவர்' என்பது புலமை என்பதிலிருந்து உருவாகி அமைந்ததோர் பண்புப் பெயராம். இவர்கள் அறிவை மேம்படுத்தற்கான வழிமுறைகளை எடுத்தோதி வந்தனர். வணிகம், பயிர்த்தொழில் போன்றவற்றில் சிலர் ஈடுபட்டனர் என்பது விதிவிலக்காம். தாமறிந்தவற்றைப் பிறர்க்குணர்த்தலை அன்றாடத் தொழிலாக இவர்கள் கொண்டிருந்தனர். மன்னரும் பிறரும் அறிவைப் பெறவே புலவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.*

*ஆடவர்கள் கல்வி கற்பதைத் தம் வாழ்க்கைக்குரிய அடிப்படைகளில் ஒன்றாகக் கருதினர். 'ஓதல், தூது' என்பது அந்தணர்க்கு எனக் கூறப்படினும் உள்நாட்டில் கல்வி கற்கும்முறை பிற ஆடவர்க்கிருந்தது.*[95]

*மாணவராயினும் அசிரியராயினும் 'ஒழுக்கம்' அவர்கட்கு முதன்மையாகப் போதிக்கப்பட்டு வந்தது. நல்லொழுக்கமுள்ள மாணவர்களைத் தேர்ந்து அவர்களுக்கு கற்றுத்தருவது ஆசிரியர் கடமையாகப் போற்றப்பட்டது. ஒழுக்கம் சிறந்த கடமையாகப் போற்றப்பட்டதை மநுதர்மமும் விவரித்துள்ளது.*

> யாதொரு சுயநன்மையைக் கருதி அறத்தாறு ஒழுகல் என்பது போற்றற்குரியது அன்று. எனினும் இச்சையை நீக்குதல் இவ்வுலகில் காண்டலரிது. வேதங்களை ஓதுதலும் அவற்றில் விதிக்கப்பட்ட நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தலும் ஆன்மலாபத்தைக் கருதியே நடைபெற்று வருகின்றன[96]

என்று மேற்குறிப்பிட்ட சாஸ்திர நூலில் கூறப்பட்டது. இவ்வாறு கூறப்படும் ஒழுக்கங்கள் தமிழரிடையிலும் வற்புறுத்தப்பட்டது. ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றியவர்கள் 'சான்றோர்கள்' என அழைக்கப்பட்டனர். அறிவுடையோர், கற்றறிந்தார் போன்ற சொற்கள் அக்காலத்தில் கற்றவர்கட்கு இருந்த தனிச்சிறப்பை எடுத்துக் கூறுவனவாகும்.

இத்தகைய ஒழுக்கத்தையும் கல்வியையும் அதனால் வரும் அறிவுத் திறத்தையும் வளர்க்கும் நிறுவனமாகச் 'சங்கம்' இருந்தது. 'சங்கம்' பற்றிய மறுப்புரைகள் உள்ளன. சங்கம் இருந்தமையை மறுப்பார் கருத்தைப் பெரும்பகுதி ஆய்வாளர் ஒப்புதல் இல்லை. அது நிலவியதைப் பற்றிய கருத்துரைகளில் மாறுபடுவோர் சங்கம் இருந்தமையை மறுப்பதில்லை. அரசரையும் புலவர்களையும் பற்றிய செய்திகள் சங்க வரலாற்றின்வழி நிறையவே அறிந்துகொள்ள முடிகிறது. தலை, இடை, கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தமையைக் கா.சு.பிள்ளை பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார்.

> 'கூடலின் ஆய்ந்த ஒண்டீந்தமிழ்' என்ற மாணிக்கவாசகத் திருவாக்கால் சங்கம் இருந்தமை குறிப்பால் உணர்த்தப்பட்டது. 'மதுரைத் தொகையாக்கினான்' என்ற சம்பந்தர் அருளுரையும், 'நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி' என்ற அப்பர் மொழியும் ஐந்தாவது ஆறாவது நூற்றாண்டிலிருந்து சைவத் தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பன என்று சிலர் கூறுவர். 'பட்டிமண்டபம்' என்பது சங்கத்தார் வதிந்த இடம் என்று பொருள் கொள்ளும்படியாகத் தொல்காப்பியம் செய்யுளியல் 179 ஆம் சூத்திரத்திற்குப் பேராசிரியர் உரையில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. 'தெற்கண்வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு நக்கீரன் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு நக்கீரன் ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின' என்பதவ்வுரை[97]

என்பது அவர் கூற்று. கி.பி.6, 7 ஆம் நூற்றாண்டளவில் பாடப்பெறும் பக்தி இலக்கியங்களின்வழிச் சங்கம் இருந்ததை உறுதிப்படுத்துவதுடன் சைவத்திற்கும் சங்கங்கட்கும் இருந்த தொடர்பையும் இதன்கண் சுட்டியுள்ளார்.

*சமூகத்தில் விழுமிய கருத்துக்களாகப் பதிவாகியுள்ளவற்றைச் சங்ககால இலக்கியங்கள் எடுத்துக் கூறின. புலவர் ஒவ்வொருவரும் தம் புலமையைக் காட்ட விழைந்தனர். தமிழர் நிலம், பொழுது போன்றவற்றையும் பிரித்துப் பேசினர். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப்பட்டன. புலவர் தம்முள் அறிவு விவாதங்கள் நிகழ்ந்தன. தொல்காப்பியமே விவாதத்துக்குப் பின்னர் அரங்கேற்றப்பட்டது.[98] அறிவியல் மேம்பட்டவர்க்கு மதிப்பிலிருந்தது. சங்கம் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்தது.*

## தொகுப்புரை

*சங்க இலக்கியங்களின் பெயர்களும் எண்ணிக்கையும் பெயர் அமைந்த முறைகளும் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. மூன்று சங்கங்கள் நிகழ்ந்த இடங்கள் காலவரையறைகள் விளக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர் பற்றிய செய்திகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. சங்ககாலப் புலவர்கள் தம் பாடலில் கல்வியின் சிறப்பியல்பைச் சுட்டும் இடங்கள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. புலமையை வரவேற்றுப் போற்றிய சூழல்கள் விளக்கப்பட்டுள்ளன. சங்ககால மன்னர்கள் கல்வியைப் போற்றி உரைத்த இடங்கள் விளக்கப்பட்டுள்ளன. கலைஞர்கள் கலைத்துறையில் சிறந்து விளங்கியமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி வளர்ந்தது பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. முச்சங்கங்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

## சான்றெண் குறிப்புகள்

1. ந.சுப்பிரமணியன், "நூன்முகம்", **சங்க கால வாழ்வியல்**, ப.1.
2. மேலது., ப.70.
3. உ.பிரபாகரன், **பெரியார் ஈ.வெ.ரா.வின் கல்வியியல் சிந்தனைகள்**, பக்.31-32.
4. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.16.
5. விக்ரமாதித்யன், **தமிழ்க்கவிதை மரபும் நவீனமும்**, ப.18.
6. கா.சு.பிள்ளை, **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.137.
7. Dr. G. Subramanian, Virgil and Kamban, "Assuming that the basic human traits are the same everywhere, the literature of one region can be considered essentially comparable to that of another.", p.11.
8. விக்ரமாதித்யன், மு.கு.நூ., ப.19.
9. கு.வெ.பா., **சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்**, ப.247.
10. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.3.
11. கா.சு.பிள்ளை, மு.கு.நூ., ப.16.
12. இரா.இளங்குமரன் (ப.ஆ.), **தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்**, பாயிரம் விளக்கவுரைப் பகுதி.
13. அ.மாணிக்கனார் (உ.ஆ.), **மதுரைக்காஞ்சி**, அடி 761-763.
14. வ.சுப.மா. (ப.ஆ.), **இரட்டைக் காப்பியங்கள், மணிமேகலை**, கா.30:113-114.
15. அ.மாணிக்கனார் (உ.ஆ.), **கலித்தொகை**, பா.67.
16. முத்துக்குமாரசாமி தம்பிரான் (ப.ஆ.), **திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருப்பதிகங்கள், திருப்பத்தூர்த் திருத்தாண்டகம்**, பா.3.
17. க.அ.நீலகண்ட சாஸ்திரி, மேற்கோள்: ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.30.
18. மேலது., ப.30.
19. வி.ஆர்.ராமச்சந்திர தீட்சிதர், "Tamil Studies", மேற்கோள்: ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.30.

20. கே.ஆர்.சீனிவாச ஐயங்கார், **"The Age of Imperial Unity",** மேற்கோள்: ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.30.
21. மயிலை சீனி.வேங்கடசாமி, **சங்ககால வரலாற்று ஆய்வுகள்**, ப.37.
22. அ.பாண்டுரங்கன், **தொகையியல்**, ப.7.
23. ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், மேற்கோள், மேலது., ப.7.
24. மேலது., பக்.44-45.
25. **தொல்.சொல். நச்சர்.(உ.ஆ.),** நூ.57.
26. **பிங்கலநிகண்டு, பகுதி ஐந்து,** பக்.44-45.
27. ந.சு., மு.கு.நூ., ப.117.
28. **குறள்**.638.
29. **பெரும்.,** அடி.447.
30. ந.சு., மு.கு.நூ., ப.117.
31. **தொல்.பொருள். நச்சர்.(உ.ஆ.),** நூ.25.
32. **புறம்**.44.
33. மேலது., பக்.45-47.
34. அ.கலியபெருமாள், "அழகின் சிரிப்பு அணிகளின் சமூகநோக்கு", **பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு மலர்,** ப.317.
35. ந.சு., மு.கு.நூ., ப.394.
36. **குறள்**.395.
37. **புறம்**.347.
38. கு.வெ.பா., மு.கு.நூ., ப.250.
39. மேலது., பக்.259-260.
40. **புறம்**.50.
41. **குறள்**.397.
42. பரி. (உ.ஆ.), **குறள்**.397.
43. வெ.சாமிநாதசர்மா, **புராதன இலக்கியங்களில் அரசியல்,** ப.181.
44. ந.சு., மு.கு.நூ., ப.241.
45. **புறம்**.64.
46. **நான்மணிகடிகை,** பா.26.

47. **புறம்.161.**

48. உ.வே.சா. (உ.ஆ.), **புறம்.161.**

49. **புறம்.192.**

50. உ.வே.சா. (உ.ஆ.), **புறம்.192.**

51. மேலது., 192.

52. ந.சு., மு.கு.நூ., ப.405.

53. பரி. (உ.ஆ.), **குறள், கல்வி அதிகாரம் விளக்கம்,** 40.

54. ந.சு., மு.கு.நூ., ப.390.

55. பி.டி.சீனிவாச ஐயங்கார், மேற்கோள்: ந.சு., மு.கு.நூ., ப.10.

56. **தொல்.பொருள்.,** நூ.91.

57. கு.வெ.பா., மு.கு.நூ., பக்.249-250.

58. **புறம்.47.**

59. கா.சிவத்தம்பி, **பண்டை தமிழ்ச் சமூக வரலாற்றுப் புரிதலை நோக்கி,** ப.164.

60. மேலது., ப.87.

61. ஆர்.பார்த்தசாரதி, "அறிமுகவுரை", மேலது., ப.XIX.

62. **புறம்.50.**

63. **புறம்.266.**

64. **குறள்.717.**

65. **புறப்பொருள் வெண்பாமாலை,** பா.65.

66. **புறம்.297.**

67. **புறம்.296.**

68. **தமிழ்லெக்சிகன், தொகுதி இரண்டு.**

69. எஸ்.வையாபுரிப்பிள்ளை, **தமிழின் மறுமலர்ச்சி,** ப.104.

70. **தொல்.பொருள்.களவியல்,** நூ.96.

71. **குறள்.395.**

72. பரி.(உ.ஆ.), மேலது., 395.

73. சீவகசிந்தாமணி, மேற்கோள்: வீ.சந்திரன், **தமிழர் கல்வி,** ப.56.

74. வீ.சந்திரன், **தமிழர் கல்வி,** ப.56.

75. திருஞானசம்பந்தர், **தேவாரம்,** பா.126.

76. மா.ச.அறிவுடையநம்பி, **தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுகள்,** ப.12.

77. கா.சுப்பிரமணியன், **சங்ககால சமுதாயம்,** ப.105.

78. மேலது.,

79. **புறம்.**369.

80. கா.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.75.

81. மா.ச.அறிவுடையநம்பி, மு.கு.நூ., ப.48.

82. **புறம்.**156.

83. கா.சிவத்தம்பி, மு.கு.நூ., ப.64.

84. மேலது., ப.339.

85. **குறள்.**66.

86. பரி.(உ.ஆ.), மேலது

87. V.T.Manickam, Marutham, **An Aspect of Love in Tamil Literature,** p.12.

88. **பரிபாடல்,** பா.66-68.

89. உ.வே.சா., ஐ.சிவக்குமார் (ப.ஆ.), "பண்டை தமிழரின் இசையும் இசைக்கருவிகளும்", **செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்,** ப.127.

90. **பட்.**101-103.

91. **புறம்.**196.

92. **புறம்.**193.

93. மேலது., 58.

94. மேலது., 87.

95. வீ.சந்திரன், மு.கு.நூ., ப.91.

96. திரிலோக சீத்தாராம் (மொ.பெ.), **மநுதர்ம சாஸ்திரம்,** ப.36.

97. கா.சு.பிள்ளை, **தமிழ் இலக்கிய வரலாறு,** ப.16.

98. ந.ச., மு.கு.நூ., ப.394.

## இயல் 3

# கற்பித்தல் முறை

மனித குலச் செயற்பாடுகள் கற்பித்தலிலும் கற்றலிலும் (Teaching and Learning) தொடங்குகின்றன. பிறரிடம் மனிதன் கற்றுக் கொள்வதைப் போலவே பிறருக்குக் கற்பிப்பதிலும் அதீதமாய் முனைகிறான். கற்பித்தல் ஒரு சமூகக் கடமையாக (Social Activities) அமைகிறது. அரசு நிறுவனம் ஆக்கம் பெற்ற காலகட்டத்தில் 'கற்பித்தல் திட்டங்களே' (Planning Scheme of Teaching) மிகுதியும் தீட்டப் பெற்றன. மன்னர்கள் தம் தேயத்து மக்களுக்கு எதை எதைக் கற்பித்திட வேண்டும் எனத் தீர்மானித்தனர். குடும்பத்தில் மூத்தோர், கீழே உள்ளார்க்குக் கற்பிப்பதில் அக்கறை காட்டினர். மனிதகுலம் எழுதியும் பேசியும் செய்து காட்டியும் தகவல்களைக் கற்பித்தது. விலங்கு, பறவை போன்றவற்றின் நடவடிக்கைகள்கூடக் கற்பித்தல் ஆயின. கற்பித்தல் ஒரு வகையில் தகவல் வெளிப்பாட்டு (Exposition) முறை என்று கருதப்பட்டது. மக்கள் இதனைத் திட்டமிட்டு வெளிப்படுத்துகின்றனர். மற்ற உயிரினங்கள் தம் நோக்கத்தைத் திட்டமிடாமலே நிகழ்த்துகின்றன.[1] அரசைப் பொருத்தவரையில் (State) கற்பித்தல் கடமையாகவும் கற்றல் மக்களின் உரிமையாகவும் அமைந்தன.

'கற்பித்தல் முறை' ஒரே நிலையில் இருந்ததில்லை. காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே வந்துள்ளது. சங்க இலக்கியங்கள் வரலாற்றையும் கணிதக் குறியீடுகளையும் வானநூல் விவரங்களையும் கற்பித்தன. இச்செய்திகள் இலக்கியச் சுவையுடன் இணைத்துக் கூறப்பட்டன. ஒரு வகையில் கூறப்புகின், பண்டைய கல்விமுறை கலையோடு கலந்து வந்ததன்றித் தனித்துக் கற்பிக்கப்பட்டதாக இல்லை. இலக்கண விதிகளை விளக்கும்போது கூடச் செய்யுளையே எடுத்துக்காட்டி விளக்கினர்.

**கற்பித்தல் விளக்கம்**

'கற்பித்தல்' என்பது தொழிற்பெயர். இது செயப்படு வினைப்பொருளில் வந்துள்ளது. 'கற்றல்' தொழிலுக்கும் கற்பித்தலுக்கும் செயற்பாட்டில் ஒன்றற்கொன்று தொடர்புடையன. ஒருவரின் இரண்டு செயல் இவை. ஆங்கிலத்தில் Teaching, Education என்று இதனைச் சுட்டலாம்.

கற்க கசடறக் கற்பவை[2]

என்பதனுள் கற்பவை என்பது கற்பிக்கப்பட்டவை என்ற பொருளையும் கொண்டது. ஒருவர் தாமே கற்றது, கற்பது ஆகும். பிறரால் கற்பிக்கப்பட்டவையும் கற்பவை என்றே கூறப்படுகின்றது. மேலைத்தேயே அறிஞர்கள் இக்கற்பித்தல் குறித்த வரையறையையும் அதன் பண்புகளையும் எடுத்துரைத்துள்ளனர். தமிழ், இலக்கண இலக்கியங்களில் கற்பித்தல் குறித்த பதிவுகளை ஆராயும் அறிஞர்கள் இது குறித்த மேலைத்தேயக் கருத்துக்களையும் தொகுத்துக் கூறியுள்ளனர்.

> கற்பித்தல் என்பது தூண்டல், வழிகாட்டுதல், இலக்கு, ஊக்குப்படுத்துதல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மாணவருடைய நடத்தைகளில் மாற்றத்தை உண்டாக்குவதற்குத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது கற்பித்தலாகும். மனிதனுக்கு எதையும் யாரும் கற்பிக்க முடியாது. அவனை முழுமைப்படுத்த உதவி செய்ய மட்டுமே முடியும். குழந்தை வளர்ச்சிக்கு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்ட பணி கற்பித்தல். தாங்கள் வாழ்கின்ற உலகச் சூழலுக்கு ஒப்ப வெகு விரைவில் தங்களை மாற்றிக் கொள்ள உதவ சமூகம் பயிற்சி அளிப்பதற்குக் கற்பித்தல் என்று . . . விளக்கம் தருகின்றனர்[3]

என்று கற்பித்தல் குறித்து எழுந்த வரையறைகள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

நூற்கல்வியும் வாய்மொழிக் கல்வியும் அக்காலத்தே போதிக்கப்பட்டன. சுவடிகளைக் கொண்டு அவற்றில் கூறப்பட்ட தகவல்களும் எடுத்துரைக்கப்பட்டன. சங்க இலக்கியங்கள் சுவடிகளின் வழியே எடுத்துரைத்துரைக்குமாறு அமைந்தன. இவற்றிற்கு உரை எழுதிய

*உரையாசிரியர்களும் தம் கருத்துக்களையும் விளக்கவுரை, இலக்கண விளக்கம் போன்றவற்றையும் சுவடிகளில் எழுதி வைத்தனர். சுவடிகளைக் கற்பிப்பதற்கென்று தனி இடமும் காலமும் தேவைப்படும் வேளையில் ஆசிரியர்களும் அமைந்தனர். சுவடிகளைப் பாதுகாத்து மக்கட்குப் பயன்படச் செய்யத் தடைகள் ஏற்படும்போது சுவடிவழிக் கற்பித்தலும் தடைப்பட்டது. இதற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. சுவடிவழிக் கற்பித்தலுக்குத் தடை ஏற்பட்டபோது மொழிவளர்ச்சியே தடைப்பட்டது என அறிஞர்கள் வரலாற்றில் கூறியுள்ளனர்.*

> ஏட்டுச் சுவடிகளில் தமிழ் நூற்கள் வழி வழியாகக் காலந்தோறும் ஏற்பட்ட வடிவ மாற்றங்களுக்கேற்பப் பிரதி செய்யப் பெற்றுப் பாதுகாத்து வந்தது ஒருபுறமிருக்க மேலைநாட்டினர் வியாபாரத்தில் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி மக்களை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில் நாட்டில் குழப்பங்கள் மிகுந்த கல்வி வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் வெகுவாகச் சரிந்து விட்டன. அன்னிய ஆட்சியில் ஆளுபவர்களுக்கு வேண்டியவர்களாக அவர்கள் கூறிய விதம் எல்லாம் ஆளுபவர்களே செல்வாக்குப் பெற்றுள்ளமையால் மக்கள் தமிழ்மொழி பயில்வதையே மறந்தனர்[4]

*என்று மு.கோ.இராமன் குறிப்பிடும் கருத்து எண்ணத்தக்கது. நூல்களை முதன்மையாகக் கொண்டு கற்பிக்கும் சூழலில் தமிழகம் இருந்த ஒரு வரலாற்றுப் போக்கை இது குறிப்பிடுகின்றது. இத்தகைய கற்பித்தல் முறையில் பழந்தமிழர் அடைந்திருந்த வளர்ச்சியையும் பெற்றிருந்த கல்விப் பயிற்சியையும் அறிவதாக இவ்வியல் அமைக்கப்பட்டிருக்கிறது.*

1. *மரபு வழிக் கற்பித்தல்*
2. *முறைசாராக் கல்வி (குருகுலக் கல்விமுறை)*
3. *எண், எழுத்துக் கற்பித்தல்*
4. *அறம் கற்பித்தல்*
5. *இல்லங்களில் கற்பித்தல்*
6. *பொதுமன்றுகளில் கற்பித்தல்*
7. *தனிமனிதரிடம் பாடம் கேட்டல்*

*8. பாடல்வழிக் கற்பித்தல்*

*9. செவியறிவுறூஉ*

*10. சந்து செய்வித்தல்*

*11. சிறந்தது பயிற்றல்*

*12. நூல்வழிக் கற்பித்தல்*

*என இவ்வியல் பிரித்தமைக்கப்படுகிறது. இத்தலைப்புக்கள் வரிசைப்படி ஆராயப் பெறுகின்றன.*

## 3.1. மரபுவழிக் கற்பித்தல் (Traditional Teaching)

*'மரபுவழிக் கற்பித்தல்' சமுதாய வரலாற்றில் மிகத் தொன்மையானது. சமூகத்தில் காணக்கிடக்கும் பொருட்களையும் கட்டமைக்கப்பட்டுள்ள ஒழுங்குகளையும் தாமே அறிந்து கொள்ளும் முயற்சியாகவும் பிறர் எடுத்துக்கூறும் பணியாகவும் இக்கற்பித்தல்முறை நடைபெறுகிறது. இது மக்களின் சமூக நடவடிக்கையோடு இணைந்து காணப்படுவதாகும். இக்கற்பித்தல் முறையைப் பெரிதும் வெளித்தோற்றத்தில் காணவியலாது. இம்முறை எளிதில் நடைபெறும் ஆழமான நடவடிக்கைகளில் அடங்கும்.*

*மரபுவழிக் கல்வியில் ஒழுக்கமே அடிப்படை. முன்னோர்கள் இதுவரை போற்றி வந்ததைப் பின்பற்றிச் சமூகத்திலுள்ள பிறரும் கற்றுக் கொள்கின்றனர். பல சடங்குகள், பழக்கவழக்கங்கள் யார் யாருக்கு எப்போது கற்றுத் தந்தார்கள் என்ற குறிப்பின்றி எல்லோரும் அந்தப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வருகின்றனர்.*

> ஒழுக்கநெறி குறைவிற்கும் மக்களின் வரிப்பணம் வீணாக்கப்படுவதற்கும் அவர்கள் பயிலும் பள்ளிகளே காரணமென்று குற்றம்சாற்றப் பெறுகின்றன என்றும் அவ்வாறு குற்றம் சாட்டுவதற்குக் காரணம் பள்ளிகள் மாணவர்களைச் சமூகத்திலிருந்து விலக்கி வாரத்தில் முப்பதுமணி நேரம் தங்கள் பொறுப்பில் வைத்திருப்பதுதான் என்று சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். பள்ளி என்ற நிறுவனம் வாயிலாகத் தான் கல்வி பரவுகிறது என்ற கோட்பாடு தவறானது.

> நூலறிவு, மதிநுட்பம், குலவிச்சை எனப் பலவகை அறிவு பெறுவதற்குரிய வாயில்களாக வேறுவேறு பண்பாட்டையும் ஒழுகலாற்றையும் அவர்கள் அகவயப்படுத்திக் கொள்கிறார்கள்[5]

*என்கிறார் கு.வெ.பாலசுப்பிரமணியன். இவர் கருத்துப்படி பள்ளியைத் தாண்டிச் சமூகம் என்ற நிறுவனமே சமூக மக்களுக்கு அறிவையும் ஆற்றல் ஒழுக்கம் போன்றவற்றையும் கற்பித்து வந்தது. கற்பித்தல் முறையில் சமூக மரபுகளே அடிப்படையாக அமைந்தன. மிகப் பழங்காலத்திலிருந்தே இந்த மரபு பேண் நிலை தமிழ் கற்பித்தலில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இன்று தமிழ் கற்பித்தலை முன்னெடுத்துக் கூறும் யாரும் இதற்குத் தமிழ் மரபு அடிப்படையாக அமைவதை விளக்கிச் செல்கின்றனர்.*

> தமிழர்கள் இந்தியப் பொதுமையினுள் தமது தனித்துவத்தைப் பேண மொழிநிலைப் பண்பாட்டை விதந்து பேற்றிக் கொண்டமை ஆச்சர்யத்தைத் தருவதன்று. இதனால் தமிழ்மொழி பற்றிய சிந்தனையிலும் அதனைப் பேணுவதைப் பற்றிய விடயங்களிலும் சில மரபு பேண் நடைமுறைகளைப் போற்றி வந்துள்ளனர். இந்த மரபு எந்தக் காலக்கட்டத்தைக் கொண்டது என்பதிற்கருத்து வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. அதாவது எந்தக் காலத்தில் நிலவிய தமிழனைப் போற்றுவது என்பது தெளிவாக்கப்படவில்லை. ஆனால் மரபு பொன்னே போற் பேணப்பட வேண்டுமென்பதிற்கு கருத்து வேறுபாடு கிடையாது[6]

*என்கிறார் கா.சிவத்தம்பி.*

*சங்ககாலத் தமிழர் கல்வியிலும் நாகரிகத்திலும் மேம்பட்டவராய் இருந்தனர். சங்கப்பாடல்களே இதற்குச் சான்றுகளாகும். சங்கப்பாடல்கள் அறிவிலும் பண்பிலும் சிறந்த புலவர்களால் இயற்றப்பட்டன. இப்புலவர்கள் சமூக ஒழுங்கையும் பண்பாட்டையும் சான்றாண்மையையும் தம் பாடல்களின் வழிச் சமூகத்திற்கு எடுத்துரைத்தனர். அக்காலச் சமூகத்தில் கல்வியும் அதனைக் கற்பிக்கும் சூழலும் நேர்த்தியாகவே இருந்ததாகத் தெரிகிறது.*

> சங்ககாலத்துத் தமிழர் சமுதாயம் முன்னேறிய பண்பட்ட சமூகம்; அது வாணிப வளத்திலும் நுண்கலைத் திறனிலும் மிகுந்த உயர்நிலை எய்தியிருந்தது; ஆட்சியின் பெருமைகளையும் பொறுப்புகளையும் நன்கு

உணர்ந்திருந்தது; எவ்வகையிலும் அநாகரீக அல்லது மிருகப்பிராயத்தில் இருந்ததாகக் கருதக்கூடியதன்று. எம் மக்களின் உலகியல், கலைச் சாதனைகளுக்கும் காரணமாயிருக்க வேண்டியக ல்வியைப் பற்றி அவர்கள் அறிந்து வைத்து அதனை ஊக்குவித்தனர்; அன்றியும் அஃது ஒரு பரவலான சமூகச் செயற்பாடாகவும் அமைந்தது[7]

*என்கிறார் சங்க இலக்கிய வரலாற்றாய்வாளர்.*

*தமிழில் மரபுவழிக்கற்றலும் கற்பித்தலும் நிகழ்ந்தன என்பதற்குக் கல்வி, கேள்வி எனும் அதிகாரங்கள் திருக்குறள் போன்ற நீதிநூல்களில் அமைக்கப்பட்டிருப்பதும் சான்றாகும். திருக்குறளுக்கு முந்திய காலக்கட்டத்தில் 'கற்றல்' என்பது ஆகமங்களைக் கற்றல் என்று பெருமை கருதியும் கூறப்பட்டு வந்தது. 'கற்றதனாலாய பயன்' என்பதற்குப் பரிமேலழகர்*

ஆகம அறிவிற்குப் பயன்[8]

*என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். மரபுகளைக் கற்பித்தலே பெரிதும் போற்றப்பட்டதென்பது இதனானும் விளங்கும். கற்றவரிடமிருந்து கேட்டலும் அக்கால மரபுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. இம்மரபை, "கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்"[9] என்ற தொடர்வழி அறியலாம்.*

துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லையாக (புறம்.44:10-14)

*என்று நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடுகின்றார். இங்கு அறச்சிந்தனை, மறச்சிந்தனை ஆகியவற்றைப் பெற்றிருக்கும் நிலையில் மன்னனை நோக்கி அறவை, மறவை என்னும் சொற்களில் சுட்டுகிறார். அறம் மறம் என்பன மன்னனுக்கு மரபு வழியாகக் கற்றுத் தரப்பட்ட பண்புகளை உணர்த்துகின்றன. ஏட்டுவழிக் கற்பித்தவையல்ல.*

வடியா நாவின் வல்லாங்குப் பாடி (புறம்.47:3)

*என்பதில் 'வடியாநா' என்பது புலவரின் கல்வி மேம்பாட்டினைச் சுட்டிற்று.*

*பண்டைத் தமிழ்ப் புலவர்கள் கல்வியறிவும் அனுபவ அறிவும் பெற்றிருந்தனர். தாம் பரிசிலாகப் பெற்று வந்த பொருளைப் பிறருக்கும் கொடுத்து ஒப்புரவறிதலுடன் வாழ்ந்தனர். இலக்கணம், இலக்கியம் செய்தலில் தேர்ந்தவராயினும் மரபு வழிப்பட்ட பண்புகளைக் கற்றிருந்தனர்.*

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ இன்றே திறப்பட்ட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே (புறம்.47)

*என்பதில் மரபு வழியாகத் தாம் கற்றிருக்கும் பண்புகளைப் புலவர் பாடுகிறார். அவை வல்லாங்குப் பாடல், பெற்றது மகிழ்தல், சுற்றம் அருந்தல், ஓம்பாதுண்ணல், கூம்பாது வீசல் என்பனவாம். மேலும் புலன் உழுதுண்மார் (புறம்.46:4), புகழ்மேம் படுநர் (புறம்.48:10), நற்றமிழ் முழுதறிதல் (புறம்.50:10) போன்ற தொடர்களும் புலவர், மன்னர் போன்றோர் வழிவழியாகக் கற்ற பண்புகள், கல்வியறிவு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. கணியன் பூங்குன்றனர் இன்ப வாழ்வை வெறுக்கிறார். வாழ்வின் அடிப்படையை உணர்ந்த அவர்*

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம்.192)

*எனப்பாடுகிறார். நரிவெரூஉத் தலையார் நன்மை செய்ய இயலாமற்போயினும் தீமை செய்யாது வாழுங்கள் என்கிறார். அவர்தம் பாடல்,*

பல்சான் றீரே பல்சான் றீரே
கயல்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்

பயனில் மூப்பின் பல்சான் றீரே
கனிச்சிக் கூர்ம்படைக் கருத்திறல் ஒருவன்
பணிக்கும்காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படுஉம் நெறியுமா றதுவே (புறம்.195)

*என அமைந்துள்ளது. ஈண்டுச் 'சான்றோர்' எனக் குறிக்கும் சொல்லும் மரபு வழிப்பட்டு உயர்ந்த பெரியோரைச் சுட்டிற்று எனக் கொள்ளத்தகும்.*

சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பே ரச்சம் என்றிவை எல்லாம்
பேதைமை அல்லது ஊதியம் இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர் (புறம்.26:1-6)

*என்பதில் கூறப்பட்ட அறச்சிந்தனைகள் நூல் வழியோ, கல்வி நிறுவனங்கள் வழியோ கற்பிக்கப்பட்டவை அல்ல. இவை சமூகத்தில் வழிவழியாகப் பின்பற்றப்படும் அறச்சிந்தனைகள். இவைபோன்ற பலவும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டன.*

### 3.2. முறைசாராக் கல்வி (குருகுலக் கல்வி)

*குருகுலக்கல்வி முறை முழுதும் பாடங் கற்பிக்கும் ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. குருகுலம் என்ற சொல் சைன நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அபிதான சிந்தாமணி குறிப்பிடுகின்றது.*

> இது சைந நூல்களில் கூறப்படும் ஐவகைக் குலத்துள் ஒன்று. இதில் பிறந்தது பற்றியே சதானிகன் குருகுலத்தரசன் எனவும் உதயணன் குருகுலக்குருசில் எனவும் கூறப்படுவன்[10]

*என அவ் அகராதி குறித்துள்ளது. குரு என்ற சொல் வடசொல் எனவும் அது கற்பிக்கும் திறனுடைய ஒருவரைக் குறித்ததென்றும் கூறுவர்.*

> கர்ப்பாதான முதலிய கிரியைகளைச் செய்வித்து ஜீவனோபாயத்தைக் கற்பிப்பவன்[11]

*என்பதும் அபிதான சிந்தாமணியே. இவ்வாறு ஆசிரியன் எனும் தகுதிப்பாடுடைய ஒருவரிடம் மாணாக்கர் சென்று தங்கி உணவு, உறையுள் போன்றவற்றை ஆசிரியரிடமிருந்து பெற்று அதற்குரிய பொருளை அவர்க்குத்தந்து கல்வி கற்கும் முறைக்குக் குருகுலக் கல்வி முறையெனப் பெயர் கூறினர். இது பற்றி ஆ.பழநியப்பன் தம்முடைய 'பழந்தமிழ் இலக்கியம் ஓர் ஆய்வு' என்னும் நூலில்,*

> குருகுலம் என்பதில் 'குரு' என்றால் ஆசான். ஆனால் 'குலம்' என்ற சொல் எப்படி வந்தது? என்ன பொருளில் வந்தது? என்பது ஆராய்ச்சிக்குரியது. குருகுலக் கல்வி என்பதோடு குருவைச் சேர்த்து இருப்பார்களோ? குருகுலக் கல்வியைக் குருவைக் கொண்டு கற்பது 'குருகுலக்கல்வி' என்றால் சரியாக இருக்குமோ? ஆராய்ச்சிக்கு உரியது[12]

*என்கிறார். எனினும் தமிழில் இப்பயிற்றுவித்தல் முறை பிற்காலத்தில் ஏற்பட்டதென்று தெரிகிறது. குருகுலக் கல்விமுறை சங்க காலத்தில் இருந்தது பற்றி ஆராய்ந்தறிதல் இன்றியமையாதது.*

*சங்க காலத்தில் ஆசிரியர்கள் மிக அருகிக் காணப்பட்டனர். சமண முனிவர்களும், தமிழ்ப் புலவர்களும் ஓரிடத்திலே தங்கி அங்கு மாணவர்க்குக் கல்வி புகட்டத் தொடங்கினர். சங்க காலத்திற்குப் பின்னரும் இந்நிலை தொடர்ந்ததை வரலாற்றில் காணமுடிகிறது. சங்க இலக்கியங்களேயன்றிப் பிறவற்றையும் கற்கும் சூழல் ஏற்பட்ட நிலையில் குருகுலக் கல்வி முறை தொடங்கியது எனலாம். அக்காலக் கல்விமுறைக்கும் இக்காலக் கல்வி முறைக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. ஒரே இடத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அமர்ந்து கற்கும் நிலை இன்றைய சமூக வளர்ச்சியினால் ஏற்பட்டது. அன்று பள்ளிகளும், மாணவர்களும் இந்த அளவில் ஒன்றுசேர வாய்ப்புக்களும் இல்லை.*

> உயர்கல்வி எக்குலத்தார்க்கும் சாதியார்க்கும், பாலார்க்கும், எந்நிலையார்க்கும் தனி உடைமையன்று. சங்க காலத்தைப் பற்றி நாம் அறிநதற்கு ஒரே முக்கியமான வரலாற்று மூலமாக விளங்கும் சங்க இலக்கியத்தை இற்றிய புலவர் குழாம் பெரும்பாலும் எக்குலத்தாரையும் உள்ளடக்கிற்று என்லாம். கல்வி தன்னம்பிக்கையையும், பெருந்தன்மையையும் மனிதற்கு எய்துவித்தது என்று கருதப்பட்டது. ஆதலால் அது வேண்டப்படுவதாயிற்று[13]

*என்னும் கருத்து ஈண்டு எண்ணற்பாலது. சாதி, இன வேறுபாடுகளற்றுக் கற்றோர் காணப்பட்டதால் கற்றோரும், கற்பித்தோரும் இணைந்து கல்விச் செயலை ஒருங்கே நடத்துவதற்கு உரிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. கற்பித்தலின் பொதுநோக்கம் நன்னெறியை வளர்த்தல் என்னும் அடிப்படை தகராமல் தனிப்பட்டோர் கற்பித்து வரலாயினர். தற்காலத்தில் கற்பித்தலின் விளக்கமும் நோக்கமும் கூறப்பட்டுள்ளமை அக்காலக் கற்பித்தல் சிந்தனையையும் தொட்டுக் காட்டுகிறது. தனிப்பட்ட கல்விமுறையில் அரசர்களுக்கும் கூடப் புலவர்கள் கற்பித்து வந்தனர். அரசர்கள் இருக்கும் இடம் தேடிப் புலவர்கள் வருவதும் நிகழ்ந்தவண்ணம் இருந்தன.*

> சங்கப் பனுவல்களை பற்பல அயல்நெறிகளைப் பேசுகின்றன. புலவர் பலர் வான்மீகியார், கோதமனார், பிரமசாரி என்றெல்லாம் பெயர் பூண்டுள்ளனர். எனினும் அக்காலம் தன் அடிநிலையை அசைக்குமளவு பண்பாட்டில் இழப்பை உண்டாக்கிக் கொள்ளவில்லை. ‘ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்கு’ என்ற ஓர் அடிக்குறிப்பே இதற்குப்போதுமான எடுத்துக்காட்டாகும்[14]

*எனக் கூறுப்படுவது ஏற்றத்தாழ்வற்ற நிலையில் புலவர்கள் தனிப்பட்ட முறையில் மற்றவர்க்குக் கற்பிக்கும் தனித்திறம் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துகின்றது.*

பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும் (புறம்.12:1-2)

*என்று பாணரும், புலவரும் பரிசு பெற்றமை கூறப்படுகிறது. பாணர் பாட்டினைக் கற்பிக்கவும் புலவர் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கவும் உரியவராயினர் என்பது இதன் கருத்தாம். பண்டை நாளில் குருகுலக்*

*கல்விமுறை பயிற்சியில் இருந்ததென்பதற்குச் சான்றுக் குறிப்புக்கள் காணப்படல் இல்லையெனினும் உரையாசிரியர் காலத்தே அது வழக்கத்தில் இருந்தமையை அறிய முடிகிறது. கல்வி கற்பவர்கள் ஆசிரியர் இல்லத்தே தங்கிக் கற்றனர் என்பதை நச்சினார்க்கினியர் ஒரு பாடலின் வழி உணர்த்துகின்றார்.*

கோடல் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலா னாகி அன்பொடு கெழீஇக்
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்று[15]

*என்ற பாடலை மாணாக்கர் தம் கற்றல் செயலுக்கும் ஆசிரியர் கற்பித்தல் வரலாற்றுக்கும் சான்றாகக் காட்டுகிறார். 'இரவினும் பகலினும் அகலான்' என்பது மாணவன் உடனுறை வாழ்வைக் கல்விக்காக மேற்கொண்டதைப் புலப்படுத்தும். ஆசிரியருடன் மாணவர் தங்கியிருத்தலால் நற்பழக்கங்கள், வளர்தலும் ஐயப்பாடுகள் நீங்குதலும் குற்றம் நீங்கி வாழ்தலும் ஆகிய அறநெறிகள் மாணவர்க்கு எளிதில் கிடைத்து விடுகின்றன. இதனால்தான்*

சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம். )

*எனப் பிசிராந்தையாரும் பாடினார்.*

*இவ்வாறு மாணாக்கரைத் தம் அருகில் வைத்திருக்கும் ஆசிரியன் மிகுந்த எச்சரிக்கையுடன் பாடம் கற்பித்தலைப் பிற்கால நூல்கள் எடுத்துரைக்கின்றன.*

ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப[16]

என நன்னூல் குறிப்பிடுகின்றது. காலம், இடம், தன் தெய்வம் வாழ்த்தல் போன்றவை நிகழ்தல் இக்கற்பித்தல் முறை ஆசிரியன் இல்லத்தே நிகழ்ந்தது என்பதை உணர்த்தும்.

### 3.3. எண், எழுத்துக் கற்பித்தல்

சங்க காலத்தில், எண், எழுத்து முறைகள் கற்பிக்கப்பட்ட முறைமைக்குத் தெளிவான சான்றுகள் கிடைத்தில. எனினும் சங்கப் பாடல்களில் எண் பற்றியும் எழுத்துப் பற்றியும் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. தமிழில் நெடுங்கணக்குமுறை என்று சொல்லப்பெறும் அ முதல் ன் இறுதியிலான எழுத்துக்கள் உச்சரிப்புடன் சொல்லித் தரும் முறை தனியே இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் எழுத்து, எண் என்ற சொற்கள் காணப்படுகின்றன.

தனி எண், எழுத்துக்களைச் சொல்லித் தராமல் மொத்த எண் வடிவத்தையும் எழுத்துக்கள் சேர்ந்த சொல்லையும் கற்பித்தனர். கல்வி பயிலும் மாணாக்கர் வயது வளர்ந்தவராய் இருந்ததால் அவர்களுக்குப் பேச்சுமொழிப் பயிற்சி இருந்தது. இது சொற்களையும் சொற்றொடர்களையும் அறிந்து கொள்ள ஏதுவாக இருந்தது. சுவடிகளின் வழியே பலவற்றைக் கற்றுத் தேர்ந்தபின் ‘கணிதம்’ தனியே கற்பிக்கப்பட்டது. இதற்கென்று தனியே வாய்ப்பாடுகள் சொல்லித் தரப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கூடத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கணிதம் கற்பிக்கப் பட்டதை ஆய்வுநூல்கள் தெரிவிக்கின்றன.

> (திண்ணைப்) பள்ளிகளுக்கு எல்லார் வீட்டுக் குழந்தைகளும் செல்லுவதில்லை. தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று விரும்பியவர் மிகச் சிலரே. வசதியும் வாய்ப்பும் பெற்றிருந்த ஒரு சிலரே இவ்விருப்பம் கொண்டனர். இவர்களினும் பெரும்பாலோர் எண்ணும் எழுத்தும் கற்றநிலையில் திண்ணைக் கல்வியோடு தங்கள் படிப்பை முடித்துக் கொண்டனர். வாழ்க்கைக்குத் தேவையான கணக்கும் மொழியறிவும் மட்டுமே போதும் என்று கருதினர்[17]

என்று பூ.சுப்பிரமணியன் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கணித முறை தனியாகக் கற்பிக்கப்பட்டமைக்குச் சான்றுகள் இல்லை. எனினும் ஒன்று முதல் பத்து, இருபது, முப்பது, நூறு போன்ற எண்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. ஓர், ஒரு, இரு, மும்மை, நாற்பால் போன்ற சொற்களும் காணப்படுகின்றன. மிகப் பெரிய எண்களைக் குறிக்க ஆயிரம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இதுபோலவே, ஆம்பல், தாமரை, இலக்கம் என்ற பெயர்களும் எண்களையே குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பிற்காலத்து நீதிநூல்கள்,

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்[18]

எனக் கூறின. கணித வளர்ச்சியை இது காட்டுகிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு[19]

என்று திருக்குறள் பேசுகின்றது. ‘எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இருவகைத்து. அவை ஏரம்பம் முதலிய நூல்களுள் காண்க’ என்னும் இவ்விடத்துப் பரிமேலழகர் சுட்டியுள்ளார். அடிப்படையில் எண்ணும் எழுத்துமே கற்பிக்கப்படும் கல்வியாக இருந்திருக்கிறது. இதே நிலை சங்க காலத்திலும் தொடர்ந்திருக்கிறது. மேலும்

| | |
|---|---|
| ஓரெயில் | (நற்.43) |
| இருபெருந்தெய்வம் | (அகம்.360:3) |
| மூவேந்தர், மூவன் | (புறம்.109, நற்.18:2) |
| நாற்பால் ஒருவன் | (புறம்.183) |
| ஐம்பால் | (அகம்.8:15) |
| நூற்றிதழ் மலரின் | (புறம்.187) |

போன்ற சொற்றொடர்களில் ஒன்று, இரண்டு போன்ற எண்கள் இடம்பெற்றிருப்பதையும் எண்ணிப் பார்த்தல் தேவையாகிறது.

சங்க காலத்தில் காணப்பட்ட எண்களுக்குத் தனி வடிவம் காணப்படவில்லை. காலஞ் செல்லச் செல்ல எண்கள் எழுதும் முறை ஏற்பட்டது. தற்போது காணப்படும் சுவடிகள் அனைத்திலும் பக்க எண், சுவடி எண், பாடல் மற்றும் நூற்பா எண்கள் காணப்படுகின்றன. இவை இற்றைக்குச் சற்றொப்ப ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவை எனக் கருதலாம். ஆங்கிலேயர்

*வருகைக்குப் பின்னரே இன்றைய எண்களும் பிற எழுத்து வடிவங்களும் ஏற்பட்டன என்பர்.*

> திராவிட நாட்டு மக்கள் திராவிட மொழிகளை நன்கு கற்றுத் தேர்ச்சி பெறுவதற்கான அடிப்படைக் காரியங்கள் யாவும் மேலைநாட்டுக் கிறித்தவப் பாதிரியார்களால்தான் செய்யப்பட்டன. பொதுமக்கள் சுலபமாக எழுதவும் படிக்கவும் ஆன வழிகளையும் முறைகளையும் அமைத்துக் கொடுத்தவர்களும் மக்களிடையே கல்வி அறிவு வளர்ச்சி பெறுவதற்கான ஒப்பற்ற தொண்டாற்றியவர்களும் கிறித்தவப் பாதிரிமார்கள்தான். தமிழ் எழுத்துக்களையும் வாக்கியங்களையும் ஒழுங்காகவும் எளிய முறையிலும் அமைக்கும் வழிகளைச் செப்பனிட்டுத் தந்தவர்களும் கிறித்தவப் பாதிரிமார்களே. ஒரு வாக்கியத்தில் இடம்விட்டு எழுதும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்ததும் அவர்களே[20]

*என்று கூறப்படும் கருத்து இங்கு எண்ணத்தக்கது.*

*எனினும் பிற்கால வழக்கில் காணப்படும் எண்கள் பெரும்பகுதியில் சுவடியில் பதிவானவை என்பது குறிப்பிடத்தகும். எண்களைப் பொருத்தவரையில் மனக்கணக்குப் பயிற்சிமுறை இருந்தது. பெருக்கல் வாய்ப்பாடு முதலிய வாய்பாடுகளும் சொல்லித் தரப்பட்டன. கால், அரை, முக்கால் போன்ற பின்ன எண்ணகளும் கற்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.*

> அளவை வாய்ப்பாடு, எண் சுவடி, கணக்கதிகாரம், கணித நூல், கணிதாமிருதம் பல பெயர்களில் பலவகைக் கணித நூற்சுவடிகள் அமைகின்றன.[21]

*என்று பூ.சுப்பிரமணியன் 'சுவடியியல்' என்ற நூலில் குறிக்கிறார்.*

*எழுதும் பயிற்சி பலருக்கும் இருந்தது என்று சங்க காலத்தைக் கூறவியலாது. ஓலையில் ஆணி கொண்டு எழுதிப் பழகு முன் கைவிரல்களால் எழுதும் வழக்கமே ஆசிரியர்களிடமிருந்து கற்பிக்கப்பட்டது. அந்த நாட்களில் ஓலை, தாள் வசதியின்மை தெளிவாம். எண் கணிதம் கூட மணல் தரையில் எழுதிக் கற்பிக்கப்பட்டது.*

> எழுதும்தாள் இல்லாத அக்காலத்தில் மணலில் எழுதிப் பயிற்றுவிப்பதைத் தொடக்கநிலைப் பயிற்சியாகக் கொண்டனர். குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் தொடக்கநாளில் செந்நெல்லை ஒரு தட்டில் பரப்பி அதில் கைவிரலால் எழுதச் செய்தனர். நெல்லிற்குப் பதிலாகஅரிசியையும் பயன்படுத்தினர். இதே முறையில் நாள்தோறும் மணலில் எழுதிப் பயிற்றுவித்தனர்[22]

*என்று கையெழுத்துப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.*

*சங்க காலத்திலும் இம்முறை பயிலப்பட்டிருக்க வாய்ப்புண்டு. தமிழ் எண்களையும் எழுத்துக்களையும் இவ்வாறே எழுதிப் பழகினர் என்பதற்குச் சான்றாகப் பல சுவடிகள் கிடைக்கின்றன.*[23] *தமிழ் எழுத்து வடிவங்களைத் தொல்காப்பியமும் விளக்கியுள்ளது. இந்நூல் பொதுவான எழுத்து வடிவங்களைத் தவிர்த்துச் சிலவற்றை விளக்கிக் கூறுகிறது.*

உட்பெறு உள்ளி உருவா கும்மே[24]

*என்பது பகரம் மற்றும் மகர எழுத்துக்களின் வடிவத்தை வரையறுக்கிறது. ப-பகரத்தையும், ப்-மகரத்தையும் சுட்டுவன.*

*சங்ககாலத்தில் வீரர்களின் பெயரையும் புகழையும் நடுகல்லில் எழுதிவைத்தனர் என்ற குறிப்புத் தமிழ் எழுத்துக்களை எழுதும் முறை தெரிந்திருந்ததை உணர்த்துகிறது.*

பெயரும் பீடும் இட்டனரே கல்லில் (புறம்.17)

*என வரும் கருத்து கல்லில் எழுதப்பட்டதைக் குறிக்கும்.*

> ஆதியில் தமிழ் எழுத்துக்கள் எவ்விதம் எப்போது உருப்பெற்றன என்பது கூற இயலவில்லை. பிராமி எழுத்தே தமிழுக்குரிய எழுத்தாக இருந்தது எனவும் ''தமிழ்பிராம்மி'' எனத் தனியே எழுத்துமுறை இருந்தது எனவும் ஆராய்ச்சியாளர்கள் இன்றும் வாதிடுகின்றனர். இவையாவும் கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட செய்தியாகும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்மொழி வரிவடிவம் எவ்விதம் உருப்பெற்றது என்பதைத் திரு.சா.கணேசன் அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்ட கையேட்டில் பட்டியலிட்டுக்

> காட்டியுள்ளார். இவ் எழுத்துக்கள் யாவும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்தவையாகும்[25]

என்று சங்ககால எழுத்து வடிவம் பற்றிய உறுதிப்படாத (Uncertainity) செய்திகளும் கூறப்படுகின்றன.

இன்று கிடைக்கும் சுவடிகளில் காணப்பெறும் எழுத்து வடிவம் காலத்தால் மாறுபட்டது. தற்போது அச்சுவடிவமாகித் தமிழில் வரும் நூல்களுக்கும் சுவடிகளுக்கும் எழுத்து வடிவங்கள் மாறுபட்டே காணப்படுகின்றன.

வடமொழிச் செல்வாக்கு ஏற்பட்ட பிறகு சமஸ்கிருதம் கற்றவர் கொள்வது முக்கியக் கல்வியாகப் பட்டது. வழிபாட்டுப் பாடல்கள் தமிழிலே கற்பிக்கப்பட்டாலும் வடமொழியே குருகுலகல்வி முதலானவற்றில் பயன்படுத்தப்பட்டது.

> பொதுமக்கள் கல்வியறிவு பெற உபன்யாசங்களையே நம்பினர். சாதாரண கல்வி என்றில்லாமல் உயிர்கல்வியும் சாதி தழுவியே கற்பிக்கப்பட்டன. கற்பித்தலும் சமஸ்கிருத வாயிலாகவே கற்பிக்கப்பட்டன. இவையனைத்தும் குருகுல முறைப்படி காடுகளில் அமைந்த குருகுலத்தில் 12 ஆண்டுகள் நடக்கும் கல்வியாக அமையவில்லை[26]

என்று ஆ.பழநியப்பன் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

### 3.4. அறம் கற்பித்தல்

கற்பிக்கப்பட்ட பாடல் பொருள் பலவற்றுள் நீதி ஒழுக்கம் போன்றவையும் அடங்கும். சங்ககாலக் கல்வி நிறுவனமாகிய சமூகம் மரபு வழியாக அறத்தைக் கற்பித்தது. பெரியோர், சான்றோர் எனப்பட்டோர் சமுதாயத்தில் சிறந்தவையெனக் கருதப்பட்ட நீதிகளை எடுத்துரைத்தனர். அறம், பொருள், இன்பம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மானம், பெருமை, ஈகை போன்ற அறப்பண்புகள் ஒவ்வொருவருக்கும் எடுத்தச்

சொல்லப்பட்டன. இவற்றைக் குடும்பம், அரசு, சான்றோர் என்ற இம்மூன்று பிரிவுகளாக மக்களுக்கு எடுத்துக் கூறினர். இவற்றுள் அறம் உயர்ந்த சமூக மதிப்புடையதாகப் போற்றப்பட்டது. அறங்கூறும் அவையத்தார் என்ற பெயரில் சான்றோர் குழு அமைந்திருந்ததை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையமும் (மது.489-495)

என்பது அது. இதன்கண் அறச்சிந்தனைகள் ஒரு அவையின் மூலம் எடுத்துக் கூறப்பட்ட செய்தி காணப்படுகிறது.

மேலும் அறங்கூறல் அவையத்தாரின் இயல்பாகவும் இதனைக் கொள்ளத்தகும். இதைப் போலவே பட்டினப்பாலையில் அறச்சாலை அமைத்தல் கூறப்படுகிறது. அதில் பசித்தோர்க்கு உணவு வழங்கினர். உணவு வழங்கும் இடம் அறச்சாலை எனச் சுட்டப்பட்டது. இதனை,

புகழ்நிலைஇய மொழிவளர
அறநிலைஇய அகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி (பட்டி.42-45)

என இந்நூல் குறிப்பிடுகிறது.

அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்[27]

எனப் பரிமேலழகர் திருக்குறள் உரைப்பாயிரத்தில் குறிப்பிடுகிறார்.

மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று (கலி.62)

என்று அறநூல்கள் கூறும் அறத்தை கலித்தொகை எடுத்துக் கூறுகிறது. எனவே சங்க காலத்தில் அறங்கள் தொகுத்துக் கூறப்பட்டன என்றும் அவற்றை மக்கள் பின்பற்றினர் என்றும் அறிய முடிகிறது. பழமையான மரபுகளையும் பழங்கதைகளையும் எடுத்துரைத்து ஆடவர் மற்றும் பெண்டிற்குரிய

*ஒழுக்கங்கள் கற்பிக்கப்பட்டன. குறிப்பாகக் கற்பிற்கு அருந்ததியின் கதையை எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்தினர்.*

வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோள் அளவு அல்லதை
நினது என இலைநீ பெருமிதத் தையே (புறம்.122)

*என்ற புறநானூற்றுப் பாடல் மலையமான் திருமுடிகாரியின் வாழ்வியல் சிறப்பைக் குறிப்பிடுகின்றது.*

*மனை வாழ்க்கை சங்க காலத்தில் சிறந்து விளங்கியதைப் பாடல்கள் அறிவுறுத்துகின்றன. இல்லறப்பண்புகள் தனியே உணர்த்தப்பட்டன. மனை வாழ்க்கையை (இல்லற வாழ்க்கை) வாழ்த்திப் பாடியுள்ளனர். இல்லறத்தாரை வாழ்த்துதல் அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் கூறி வாழ்த்துவதாக அமைந்தது.*

வாழி ஆதன் அவினி
பால்பல உறுக பகடுபல சிறக்க
எனவேட் டோளே ஆயே; யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன் கேண்மை
வழிவழி சிறக்க எனவேட் டோமே (ஐங்.பா.3)

*எனவரும் பாடல்வழி மனைவாழ்க்கை உடையோர்க்கு அறிவுரை கூறி வாழ்த்தியமை அறியப்படும். பகடு பல சிறக்க என்பது பால்தரும் ஆவினங்களைக் குறித்தது எனலாம். இது குறிப்பாகச் செல்வவளம் பெருக இல்லறத்தாரை உழைக்கத் தூண்டியது எனலாம்.*

*நீதி, ஒழுக்கம் போன்றவற்றைக் கற்பித்தல் சங்க இலக்கியத்தில் நிரம்ப இடம் பெற்றிருக்கின்றன. அறம் முதலியவற்றைக் கற்பிக்கத் தனி நிறுவனங்கள் இல்லாதிருந்த காலம் அது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நல்லொழுக்கங்களையும் நீதிகளையும் சமுதாயமே கற்பித்தது. முன்னோர் கூறிய பொன்மொழிகள் பெரிதும் வழக்கிலிருந்தன. அவற்றை அறிந்திருந்த மக்கள் தம்முடன் இருப்பவர்களுக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் எடுத்துக்*

கூறினர். சான்றோரின் மூதுரைகளும் அவர்தம் நூல்களும் அறச்சிந்தனைகளைக் கற்பிக்கும் நோக்கில் அமைந்தன.

> அறம் என்ற தகவை முதலாக வைத்து அதனடிப் படையில் ஏனைய எல்லாவற்றையும் இயக்கிக் கணித்த பண்டைத் தமிழ் மண்பதை ஒரு சமூக மதிப்பு என்பது சமூக உறுப்பினர்களால் போற்றப்பட்டுத் தம் வாழ்வில் அதற்குரிய இடத்தைக் கொடுக்கப்படும் போதே 'மதிப்பு' என்ற நிலையை அடைகிறது என்பர் தத்துவ நூலார். பழந்தமிழ்ச் சமூகம் வாழ்வின் அனைத்து மதிப்புகளிலும் மேலாக அறத்தையே கருதியிருக்கின்றது. எனினும் அறக்கோட்பாடுகளும், அதனை உயர்தகவாகப் போற்றுதலும் காலவளர்ச்சியில் சில மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன[28]

என்கிறார் கு.வெ.பா.

புறநானூற்றில் நன்னெறிகளை எடுத்துரைக்கும் புலவர் தாம் சொல்லிய கருத்துக்களை அறநூல்கள் சமூகத்திற்குக் கூறியிருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்[29]

என்று திருமங்கையாழ்வார் அந்தணர்களைக் குறிக்கின்றார். அறம் செய்வதில் தலைமை பெற்றிருந்த அந்தணர் அதற்குரிய மொழிகளாகத் தமிழையும் வடமொழியையும் பயிற்றிருந்தனர்.

ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மானிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிலும் கழுவா யுண்டெனு
ஒருவர் செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே ஆயிழை கணவ (புறம்.34)

என்ற பாடலில் 'அறம் பாடிற்றே' எனக் கூறப்படுவது அறநூல் எடுத்துக் கூறியுள்ளதைச் சுட்டுவதாகும். ஈண்டு 'அறம்' என்பது திருக்குறள் என்றும் அது கூறியுள்ள அறநெறி,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு[30]

என்ற குறளென்றும் கூறுவர். இஃது ஒருபுறமிருக்க இந்நூல் கூறும் அறம் முதலியவை சமூகத்தின் பொதுப்பண்பிலிருந்து கூறப்பட்டதாகும் என்பது எண்ணத் தகுந்தது.

எவ்வகை நூலாயினும் சான்றோராயிறும் அறத்தைக் கற்பித்தலே உரிய தொழில் என்பதைப் பண்டைச் சமூகம் கொண்டிருந்தது. 'அறத்தாறு இதுவென வேண்டா'[31] என்பதில் அறத்தாறு - அறவழிகள் எனப் பொருள்பட்டு அவை மக்கட்குக் கற்பிக்கப்பட வேண்டும்; மக்களை அந்நெறிப் பழக்கத்துடன் வாழவகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நின்றதென்க.

'கற்பு' என்பதற்கும் கற்பித்தல் என்றே நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார். தொல்காப்பியர் 'கற்பியல்' எனத் தனித்துக் கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

கற்பெனப் படுவது கரணமொடு புரைக்
கொளற்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே[32]

என்ற நூற்பாவிற்கு உரையெழுதும் நச்சர்,

கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுது குரவரால் கற்பித்தல்[33]

என்று எழுதுகிறார்.

### 3.5. இல்லங்களில் கற்பித்தல்

'இல்லம்' என்பது ஆசிரியர் தங்கியிருக்கும் இல்லம் அல்லது மாணவரது இல்லம் என இரண்டையும் குறிக்கும். சங்க இலக்கியத்தில் ஆசிரியராய் விளங்கும் கல்வியாளர் பெருஞ்செல்வந்தராய் இருந்தனரா எனத் தெரியவில்லை.

சில புலவர்கள் மட்டும் கல்வியாளர்களின் பெயர்களுடன் முன்னொட்டாகக் 'கிழார்' என்ற சொல் காணப்படுகிறது. 'கோவூர்கிழார்', 'ஆவூர் மூலங்கிழார்'[34] பெயர்களை இதற்குக் காட்டலாம். நில

உரிமையாளரைப் பண்டை நாளில் கிழார், நிலக்கிழார் என்று குறித்தனர். இவர்களுக்கு நிலம் உடைமையாக இருந்தது. சராசரி உழவராக இல்லாமல் குறிப்பிடத்தக்க அளவில் நிலத்தைப் பெற்று உழுதொழிலை இவர்கள் செய்து வந்துள்ளனர். இவ்வாறிருந்த உடைமையாளரிடத்தும் அல்லாது கல்வியாளராய் இருந்த சான்றோரிடத்தும் மாணவர்கள் அவர்கள் இல்லம் தேடிச் சென்று கற்று வந்திருக்க வாய்ப்புக்கள் இருந்தன. ஏனெனில் கல்விச் சாலைகள் போன்றவை தனித்து இல்லாதிருந்த காலம் அது.

ஆசிரியர்கள் தம் இல்லத்திலே இருந்து பாடம் சொல்லி வந்ததால் பலவற்றை மனப்பாடமாகவே வைத்திருத்தல் கூடும். மேலும் சுவடிகள் அவர்கள் வசம் இருந்திருக்கலாம். இந்த ஏடுகளின் துணையோடும் மனத்திருந்த அரிய கல்விச் சிந்தனைகளோடும் மாணவர்க்குக் கற்பித்து வந்தனர். தம்முடைய பிள்ளைகளுக்குத் தம் இல்லத்திலேயே ஆசிரியர் பாடம் சொல்லி வந்தனர். இறையனார் களவியல் உரை இவ்வாறு பாடம் சொல்லப்பட்டதாக அறிய முடிகிறது.

> நக்கீரனார் செய்த களவியல் உரையைத் தம்மகனார் கீரங்கொற்றனாருக்கு உரைத்தார். கீரங்கொற்றனார் தேனூர் கிழாருக்கு உரைத்தார்[35]

என்று பூ.சுப்பிரமணியர் தம் நூலில் எடுத்துக் காட்டுகிறார். இல்லத்திலேயே கற்பித்தலுக்கு இஃதோர் எடுத்துக்காட்டு எனலாம்.

ஆசிரியர்கள் தம் வீடுகளில் இருந்தே மாணவர்க்குப் பழங்காலத்தில் கற்பித்து வந்ததை ந.சி.கந்தையாபிள்ளை தம் நூலொன்றில்,

> உயர்ந்த கல்வி கற்க விரும்பினோர் நாட்டில் ஆங்காங்கு புகழ்பெற்று விளங்கிய ஆசிரியர்களை அடைந்து அவர்களுடன் தங்கியிருந்து கல்வி பயின்றார்கள். ஆசிரியர்கள் மாணவருக்கு எளிதில் கல்வி பயிற்றற்கு உதவியாகப் புதிய நூல்களைச் செய்வதும் வழக்கமாக இருந்தது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவருக்காகச் செய்யப்பட்டவை[36]

*எனக் குறிப்பிட்டுள்ளார். சங்க காலத்திற்குப் பிந்தைய காலகட்டத்தை ஓரளவுக்கு இக்கருத்து உறுதிப்படுத்தினாலும், சங்ககால எச்சமாகவும் இதனைக் கொள்ளலாம். இந்த நிலை சங்ககாலத்திலும் இருந்தது என்பதை உணரலாம்.*

> பண்டைய இந்திய சமூகத்தில் சம்பிரதாயம் ஆனதோர் கட்டாயக் கல்வியையும் அறிஞர் மரபையும் கொண்டு ஒருதனிப் பிரிவாகப் பிராமணர்கள் இயங்கினர். வேதம், இலக்கணம், சடங்குகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டுமானால் காட்டில் தனித்து இயங்கி வந்த ஏதாகிலும் ஒரு குருகுலத்திற்கும் சீடர்களாகச் சேர்ந்த பன்னிரண்டு ஆண்டுகள் பிரமச்சரிய விரதம் பூண்டு ஒரு ஆசானுக்குப் (குரு) பணிவிடை செய்து கொண்டு சிட்சை பெறவேண்டியது அவசியம்[37]

*என்று பண்டைய இந்தியச் சமூகத்தைப் பற்றி டி.டி.கோசம்பி எழுதுகின்றார். இஃது இந்திய வரலாறே ஆயினும் சங்க காலத் தமிழர் கல்வியில் ஈடுபட்டிருந்த சூழலையும் விளக்குகின்றது. சாதாரண பொதுமக்களும் கூட முக்கியமான பிரச்சினைகளை இல்லத்தில் இருந்து பேசியதை அறிகிறோம்.*

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுளன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறம்.86)

*என்று ஆடவன் ஒருவன் போர்க்களம் சென்றதை இரு பெண்கள் இல்லத்திலே கூடிப் பேசிக் கொள்வதாகப் பாடல் புனையப்பட்டிருக்கிறது.*

*ஆசிரியருக்கு இன்னல் வருங்கால் உதவுதல், பொருள் வேண்டுங்கால் கொடுத்தல், அவரிடம் முரணின்றி நடத்தல் ஆகியவற்றை மாணவர் செய்தனர் (புறம்.183:1-2) என்னும் கருத்து சங்க காலத்தில் ஆசிரியர் உடன் இருந்து மாணவர் கற்றனர் என்பதை உணர்த்துகின்றது. "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" (புறம்.312) என்பது கல்வியிற்சிறந்த தந்தை தம் மகனுக்குத்*

தம் இல்லிருந்து பலவற்றைக் கற்பித்தலுண்டு என்ற பொருள் படவும் அமைந்துள்ளது. உ.வே.சாமிநாதையர், தாம் நன்னூல் பாடம் கேட்ட ஆசிரியர் ஒருவரின் இல்லத்திற்குச் சென்ற அனுபவத்தை,

> ரெட்டியார் எங்களுக்காக ஒரு ஜாகை ஏற்படுத்தி அதில் இருக்கும்படி செய்து, உணவுப் பொருள்களை வேண்டிய அளவு அனுப்பிச் செலவுக்குப் பணமும் கொடுத்து ஆதரித்தார். ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் தவறின்றி இரண்டுகல நெல்லும் இரண்டு ரூபாயும் அனுப்பிடுவார்[38]

எனக் கூறுகிறார். தமிழாசிரியரான விருத்தாசல ரெட்டியார் என்பவர் தம் செலவிலேயே உணவு கொடுத்துத் தங்க வைத்துப் பாடஞ்சொன்னதை இப்பகுதியில் உ.வே.குறிப்பிட்டுள்ளார்.

பிற்காலத்தில் வழங்கிய இந்நிலை மிகப் பழங்காலத்தின் தொடர்ச்சி என்பதே வரலாறு. சங்க இலக்கியம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களை அறிந்திருந்ததாகப் பிற்காலத் தமிழறிஞர்கள் குறிப்பிட்டிலர். அவர்காலச் சிற்றிலக்கியங்களையும் நன்னூல், காரிகை போன்ற இலக்கணங்களையும் அறிந்திருந்தனர். குறிப்பாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைப் பற்றியே இவ்வாறு கூறப்படுகிறது.[39] இவரும் பல ஆசிரியர்களிடம் சென்று அவர்தம் இல்லத்தில் பாடம் கேட்டுவந்துள்ளார்.

> ஐந்திலக்கணங்களையும் முறையே தெரிந்தவர்களிடம் சென்று சென்று இவர் கற்றுக் கொண்டார். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள கற்குடியிலிருந்த ஒரு பெரியவரிடத்தில் பொருத்த இலக்கணத்தையும் அஷ்ட் நாகபந்தம் முதலிய சித்திர கவிகளின் இலக்கணத்தையும் அறிந்து கொண்டார்[40]

எனக் கூறப்படுவது அக்காலக் கற்றல் முறையைச் சுட்டுவதாகும்.

### 3.6. பொதுமன்றும் பிற இடங்களும்

'பொது மன்றம்' என்பது ஊர்ப்பொதுவில் அமைக்கப்பட்ட இடம் ஆகும். 'பொது மன்றம்' எனும் முழுத்தொடர் அங்காலத்தில் வழங்கப்படவில்லை. சங்க இலக்கியங்களில் 'மன்று', 'மன்றம்' என்ற

சொற்கள் மட்டும் ஆளப்பட்டு வந்தன. மன்று என்பது மரத்தடியில் அமைந்த மேடை என்று கூறுகின்றனர்.

மன்றமென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே[41]

என்கிறார் ஆ.பழனியப்பன், ‘மன்றம்’ ஊர்ப்பொதுவில் இருந்ததாகவும் அதில் மரம் இருந்ததாகவும் அம்மரத்தில் கொடிய தெய்வம் ஒன்று வதிந்ததாயும் அது கொடியோரைத் தாக்கும் இயல்பு கொண்டது என்றும் சங்க இலக்கியத்தில் உள்ள பதிவுகளில் ஒன்று குறிக்கின்றது.

மன்ற மராஅத்த பேஎம் முதிர்கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப (குறுந்.பா.87)

என்று குறுந்தொகை கூறுகின்றது. இம்மன்றம் ஊர்மக்களின் பொது நிகழ்வுகள் குறித்துக் கூடிப்பேசும் இடமாக இருக்கலாம்.

இத்தகைய இடங்களில் மாணவர்கள் அமர ஆசிரியர்கள் பாடஞ்சொல்லி வந்திருக்கும் வாய்ப்புள்ளது. இசை, நாட்டியம், நாடகம் போன்ற துறைகள் இவ்வாறு நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. புராணக் கதைகளைப் பாடி ஆடிக் காட்டுவோர், பொருநர், கூத்தர் போன்றோர் தாம் அறிந்த கலை நுட்பங்களை இப்பகுதியில் செய்து வந்தனர். தெருக்கூத்துக்கள் இத்தகைய மன்றுகளில் கற்பிக்கப்பட்டன. கற்றவை அரங்கேற்றமும் செய்யப்பட்டன.

மன்றுகள் பிற்காலத்தில் ‘மன்றங்கள்’ என வழங்கப்பட்டன. இந்த மன்றங்கள் ஊரை ஒட்டியோ அரண்மனைகள் ஒட்டியோ அமைந்திருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தில் ஐந்துவகை மன்றங்கள் இருந்ததாக மணிமேகலை கூறுகின்றது. மக்களுக்கும் இம்மன்றங்களுக்கும் தொடர்பில்லை. ஆனால் இங்குள்ள ஐம்பூதங்கள் நீதி, ஒழுக்கம் போன்றவை நாட்டில் நன்கு நடைபெறக் கவனித்து வந்தன.[42]

சங்க காலத்திலும் அதனை ஒட்டிய பிற்காலத்திலும் ஆசிரியர் மற்றும் கலை நுட்பங்கள் தெரிந்தோர் இருந்தனர். அவர்கள் மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் பொது இடங்களில் கல்வி

புகட்டி வந்தனர். அவ்வாறு சொல்லப்பட்ட கல்வி மாணாக்களின் ஆற்றலுக்கு ஏற்பச் சொல்லப்பட்டது. பிற்கால ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் பரவிய கல்வி முறை பற்றி ஆராய்ந்துள்ளனர். அவர்கள் கூறும் கருத்துச் சங்க காலக் கல்வியை எடுத்துக் கூறுவனவதாக அமைந்துள்ளது.

> முற்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த கல்விமுறை கல்வி அமைப்பு ஆகியன பற்றிப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து பல கருத்துகளைப் பெறலாம். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் ‘அரசர் முதல் சாதாரண குடிமக்கள் வரையிலும் கல்வியறிவு பரவிக் காணப்பட்டது. சாதி சமய வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் கல்வி புகட்டப்பட்டது. பெண் கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. கல்வி ஏற்பாட்டில் மொழிக் கல்வி முதலிடம் பெற்றிருந்தது. எனினும் பிற கலைகள் புறக்காணிக்கப்படவில்லை. ஆசிரியருடைய நிலை உயர்ந்து காணப்பட்டது. அவருடைய சொல்லுக்கு வேந்தரும் கட்டுப்பட்டதாகக் காணப்படுகிறது. மாணாக்கனது ஆற்றலுக்கு ஏற்பத் தனிப்பட்ட முறையில் ஆசிரியர் பாடம் கற்பித்து வந்தனர்[43]

என்று உ.பிரபாகரன் தம் ஆய்வு நூலொன்றில் குறிப்பிடுகின்றார். அரசர்கள் கற்றோர் சொற்படி நடந்தனர். அனைத்தையும் அறிந்தவர்கள் ஆசிரியர்களாக இருந்தனர். அவர்கள் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டனர்.

### 3.6.1. மரநிழல்கள்

நல்ல நிழல் அடர்ந்த பகுதியிலும் மாணவர்கள் அமர ஆசிரியர்களும் உடனிருந்து பாடம் சொல்லி வந்ததைச் சங்ககால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மரத்தடியில் குருக்களும், முனிவரனைய பெரியோர்களும் வந்தமர்ந்திருந்தனர். சங்க காலத்தில் மரங்களே இறைவன் தங்கும் இடமாகக் கருதப்பட்டது.

மரத்தடி, கோவிலின் பத்தி அல்லது ஆசிரியரின் வீட்டுத் திண்ணை என்பவை பள்ளிகளாக இருந்தன[44] என்கிறார் ந.சி.கந்தையாப்பிள்ளை. கோயில்கள் என்று தனி இடம் இல்லாமலிருந்தது. பக்திக்காலத்திற்குப்

*பின்னர் கோயில்கள் உருவாயின. தெய்வ வழிபாடும் நீதிக்கருத்துக்களை எடுத்துக் கூறும் இடங்களும் மரநிழலாக இருந்தன என்பதை அறிய முடிகிறது. ஒவ்வோர் ஊரிலும் பள்ளிகள் இருந்தனவென்றும் பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் கல்வி பயின்றார்கள் என்ற குறிப்புக்களும் காணப்பெறவில்லை என்றும் கூறுவர்.[45] இவ்வாறு கூறப்பெறும் பள்ளிகள் திண்ணைப் பள்ளிகள் அல்லது மரத்தடியில் நடந்த பள்ளிகளாக இருத்தல் வேண்டும். இவ்வூர்களிலெல்லாம் பெரும் புலவர்கள் தங்கியிருந்து கல்வி புகட்டினர் எனத் தெரிகிறது.*

> சங்க காலத் தமிழர் கல்வியின் சிறப்பை நன்கு உணர்த்திருந்தனர். கல்வியைப் பேசும் அதிகாரங்கள் நான்கு திருக்குறளில் சேர்க்கப்பட்டுள்ளன. குற்றமறக் கற்க வேண்டும் என்றும் கற்ற பின்பு மாம் கற்ற வழியே நடக்க வேண்டும் என்றும் கல்வி கற்கக்கற்க அறிவு சுரந்து கொண்டே போடுமென்றும் கல்வி கற்ற ஒருவனுக்கு உலகம் முழுவதும் தம் சொந்த ஊராககே தோன்றும் என்றும் கல்விச் செல்வம் ஒன்றே அழியாச் செல்வமென்றும் கல்லாதவன் மேனி அழகு ஒரு பொம்மைக்கு நிகராம் என்றும் .... திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்[46]

*என்று கே.கே.பிள்ளை குறித்திருப்பது இவ்விடத்து எண்ணத்தக்கது.*

*இது, கல்விகற்றோர் எவ்விடத்தும் சென்று தம்புலமையின் வழி மற்றவர்க்குக் கல்வியறிவைப் புகட்டியதை நினைவுப்படுத்துகிறது. இவ்வாறான தகைமையினர் மரநிழல், மற்றும் மண்மேடைகளில் அமர்ந்து, காலச் சுழலுக்கேற்றவாறு கல்வி புகட்டி வந்திருக்கின்றனர்.*

> பலகுலத்தைச் சார்ந்த புலவர்கள் தமிழகமெங்கும் உலவி வந்ததையும் மன்னருதவியுடன் அவர்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்து வந்ததையும் நோக்குங்கால் அப்புலவர்கள் பாடிய பாடல்களைக் கேட்டும் கற்றும் அவற்றின் பொருளை உணர்ந்தும் வந்தனர்.[47]

*என்று கே.கே.பிள்ளை மேலும் விளக்குகிறார்.*

### 3.6.2. அரண்மனைகள்

*அரண்மனைகள் அரசன் தங்கியிருக்கும் இடமாகவும் அமைச்சர் முதலானோர் மன்னர்களுடன் நாட்டு அரசியல் முறைகளைக் கலந்துபேசும் இடமாகவும் நீதி வழங்கும் இடமாகவும் கருதப்பட்டன. நாள்மகிழ் இருக்கை, நாளோலக்கம் போன்ற சொற்களால் அரசன் அவையில் வீற்றிருந்தமை கூறப்படுகிறது. இவ்விடத்து அமைச்சர்கள் மன்னர்க்குத் தேவையான கருத்துரைகளை வழங்கினார்கள்.*

*மன்னர்கள் அவர்தம் அறிவுரைகளைக் கேட்டு நடந்தனர். அரசர்கள் நில உடைமையாளர்களாகவும் அறிவிற்சிறந்தோராயும் இருந்த புலவர்களை அமைச்சர்களாக்கிக் கொண்டனர்.[48] அரசர்க்குக் குருவாக - ஆசிரியர்களாகப் புரோகிதர்கள் விளங்கினர். தக்க அரசகுருவைப் பெறாத அரசர்களின் படையலைத் தெய்வமும் ஏற்காது எனக் கருதப்பட்டது.[49] புரோகிதர்கள் அரண்மனைக்கு வந்து தம் கருத்துக்களை மன்னர்களுக்கு வழங்கினர். தினந்தோறும் மன்னர்க்கு ஆலோசனைகள் வழங்குவதற்கென்றே மந்திரச் சுற்றம் இருந்தது. அமைச்சரும் அறிஞரும் கலந்த குழுவாக மந்திரச் சுற்றம்காணப்பட்டது. இக்காரணங்களால் அரண்மனையும் ஒரு கற்பித்தல் இடமாகக் காணப்பட்டது.*

*அரண்மனை அமைச்சரவையைக் கொண்டிருந்தது. இதில் அமைச்சர்களுக்கு முக்கியப் பங்கிருந்தது. இடைக்காலத்தில், இவர்கள் 'மந்திரி' என அழைக்கப்பட்டனர். 'மந்திரி' வடசொல். 'மந்திரம்' என்பதுடன் தொடர்புடையது.*

*கல்விக்கும் மந்திரத்திற்கும் உறவுண்டு. மந்திரம் ஓதல் என்றும் இதனை வழங்கினர். 'மந்திரம் கால் பங்கு மதிமுக்கால் பங்கு' என்ற வழக்காறும் நோக்கத்தக்கது. இவ்விடத்து 'மந்திரம்' கற்ற கல்வியுடன் இணைத்துப் பொருளுணர்த்தப்பட்டிருக்கிறது. அமைச்சரை மன்னன் உடனிருக்கும் உயர்ந்தோரில் சேர்க்கிறார் வள்ளுவர். 'அமைச்சு' என்னும் அமைச்சரின் நடத்தை குறித்துக் கூறும் அதிகாரத்தில்,*

அறிகொன் றறியான் எனினும் உறுவது
உழையிருந்தான் கூறல் கடன்[50]

*எனக் கூறப்பட்டது நோக்குதல் பொருந்தும். அமைச்சர் மதி நுட்பமும் நூலறிவும் உடையராய் இருந்தனர் என்றும் குறள் குறிப்பிடுகின்றது.*

மதிநுட்பம் நூலோ டுடையார்...[51]

*என்று அவர் தம்மை இந்நூல் இயம்புகின்றது.*

> மன்னனிடம் அமைச்சர்கள் ஏவல் கேட்டனர். அவர்களது தொழில் அறிவுரை கூறல். அவர்கள் அரசரவையில் இருந்தனர். அவர்களை அரசர் கலந்தாலோசித்து அவர்களது அறிவுரையை வேண்டியபோது அவர்கள் அதனை வழங்கினர்[52]

*என்று மன்னர்களுக்கு அமைச்சர்கள் அரண்மனையில் உடனிருந்து அறிவுரைகளையும் நீதியையும் எடுத்துரைத்திருக்கின்றனர். அரண்மனை, குறிப்பாக அரசர் வழிவந்தவர் கற்கும் இடமாகவே காணப்பட்டது. அமைச்சர் தாம் அறிந்தவற்றை மன்னர்க்கும் மற்றவர்க்கும் கற்பித்து வந்தனர்.*

*சமண பௌத்த சமயங்களின் எழுச்சியின் போது அவரவர் சூழலுக்கேற்பக் கற்பிக்கும் இடங்களை அமைத்துக் கொண்டனர்.*

> கோவில்களிலும் மரத்தடிகளிலும் அல்லாமல் சமண மடங்களிலும் சமண மடங்களிலும் பௌத்த விகாரைகளிலும் மாணவர்கள் கல்வி பயின்றார்கள்... கோயில்களில் துதிப்பாடல்கள் பாடுவதற்கு மாணவர் பயிற்றப்பட்டார்கள். மடங்கள் தோன்றிய போது மடங்களும் கல்விச் சாலைகளாக விளங்கின[53]

*என ந.சுப்பிரமணியன் கூறுகின்றார்.*

*மனுநீதிச்சோழன் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றிட ஆணை பிறப்பித்தபோது, அச்சிறுவன் மீது குற்றம் யாதொன்றும் இல்லை என மந்திரி (அமைச்சர்) மன்னனுக்கு எடுத்துரைத்ததாகப் பெரியபுராணத்தில் பதிவாகியுள்ளது. இது அரண்மனை அவையில் நிகழ்ந்தது. செங்குட்டுவனுக்கு வில்லவன் கோதை, அழும்பில் வேள் என்ற இரு அமைச்சர்கள் இருந்து அரசியல் விவரங்களை எடுத்துக்கூறியதாகக் கூறப்படுகிறது.[54] அரண்மனையில்*

நகைச்சுவைப் புலவர்கள் இருந்து அரனுக்கும் அமைச்சர்களுக்கும் மனமகிழ்வை உண்டாக்கினர்.

நகைப் புலவாணர் நல்குர வகற்றி (குறுந்.261)

என்பது நகைச்சுவைப் புலவர்களின் வறுமையை மன்னன் நீக்கிளான எனக் கூறப்பட்டதாம்.

அரண்மனையில் நாழிகைக் கணக்கர் இருந்தனர். இவர்கள் அரண்மனையகத்தே இருந்து ஒவ்வொரு நாழிகையையும் அளந்தறிந்து ஆராய்ந்தனர். அவ்வப்போது நிகழப்போகும் எதிர்காலச் செயல் நிகழ்வுகளை எடுத்துரைத்தனர். இரவு நேரத்திலும் இக்கணக்கர்கள் அரண்மனையில் தங்கியிருந்தனர் என்னும் செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

ஆரிய அரசன் பிரக தத்தனுக்குக் கபிலர் தமிழ்க் களவு நெறியைக் கற்பிக்கும் வகையில் குறிஞ்சிப் பாட்டுப் புனைந்தார்[55]

என வரும் செய்தியால் அரசனுக்குக் கற்பித்தல் அரண்மனையில் நிகழ்ந்ததென்க. "பண்டைச் சமூகத்தில்... அரண்மனை கோயில்" எனப்பட்டது.[56]

சங்க காலத்தில் அரசு நிர்வாகத்தை இயக்கிய அதிகாரிகள் அனைவரும் அரசனின் ஆணைவழி ஒழுகுவோராகவே அமைந்தனர். வேம்பும் கடுவும் போலக் கைத்த மொழிகளை உறுதி பயத்தற்பொருட்டு எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகள் சங்க இலக்கியத்தால் அறியப்படுகின்றன எனினும் அவை அதிகார வட்டத்திற்கப்பாற்பட்ட புலவர்களால் வேந்தர்க்குரைக்கப்பட்டவை என்பதை எண்ணுதல் வேண்டும்.[57]

எனக் கூறுவதும் அரண்மனையகத்தே புலவர்கள் மன்னர்கட்கு எடுத்துரைத்த நிகழ்வைக் காட்டுவதாகும்.

அரச மரபினர்க்கெனத் தனியே கல்வி கற்பிக்கப்பட்டது. அது அரசர்கள் தங்கியிருக்கும் அரண்மனையிலேயே நிகழ்ந்தது. அறிஞர்களாலும் ஆராய்ந்தறிய இயலாதவற்றை ஆய்ந்து கற்றவன் என்று சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுக்கண்ணன் சாத்தனார் என்ற புலவர் பாடுகின்றார்.

செஞ்ஞாயிற்றுச் செலவும் அந்நாயிற்றுப் பரிப்பும்
பரிப்பு சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தருதிசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
அறிவறிவாகச் செறிவினை யாகிக்
களிறு கவுளடுத்த வெறிகல் போல
ஒளித்த துப்பினை..... (புறம்.30)

என்பது அவரது பாடல். இது துறைபோகிய அறிஞர்களாலும் அறிய முடியாதவற்றை அறியும் கல்வி பெற்றவன் இம்மன்னன் எனக் கூறுகிறது. அறிவுத்திறனும் நுட்பமும் அரசியல் கூர்மையும் புலவர்களின் வழிக்கற்றலும் தாமே தம் அனுபவத்தால் அறிதலும் ஆகிய பண்புகள் இம்மன்னனிடம் இருந்தன.

### 3.7. தனிமனிதர்கள் கற்பித்தல்

ஆசிரியர்கள், கணக்காயர் போன்றோரின்றித் தனிப்பட்ட பிறரும் புலமை வாய்ந்தவர்களாக இருந்தனர். ஆசிரியர், எழுத்தாளர் போன்ற அடையுடன் பழம்புலவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருக்கின்றன. எழுத்தாளர் பூதஞ்சேந்தனார் என்பார் ஒருவர் இருந்துள்ளார். ‘எழுத்தாளர்’ என்னும் அடை, கவிதை முதலானவற்றை எழுதுவார்அல்லர். பனை ஓலையில் எழுதும் பயிற்சியுடையாரை (Scriber) இவ்வாறு அழைத்துள்ளனர்.

ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்றமாக (புறம்.26)

என்று அந்தனர்கள் குறிக்கப்படுகின்றனர். கல்வி கேள்வியிற் சிறந்த அந்தணர் அரசரின் மந்திரச் சுற்றத்தில் இணைத்துக் கூறப்படுவது அவர்களின் கற்பித்தல் தொழிலை உறுதிப்படுத்தும். இவர்கள் பிற அறிவுத்துறையில் சிற்நதவர்களாகவும் நான்குவேதங்களையும் அறிந்தவர்களாகவும் இருந்தனர். அந்தணர்கள் அக்காலத்தில் மிகுந்த கல்விச் சிறப்புடையராய் இருந்து தாம்

*கற்றவற்றை மற்றவர்க்கு எடுத்துக்கூறிப் பொருளீட்டினர் என்ற குறிப்பும் ஆய்வாளர்களால் சுட்டப்படுகிறது.*

> மறைநூல் பொருளுணர்ந்து அம்மறைப் பொருளுக்கு மாறுபட்ட புறச் சமயத்தாரோடு தருக்க நூல்கள் கூறிடும் வழிநின்று தருக்கித்து, அம்மாற்றாரும் ஏற்கும் வகையில் அவ்வேதக் கொள்கைகளை எடுத்தியம்பவல்ல அறிவும் கற்றலும் மிக்கவராய் விளங்கிவந்தனர்[58]

*என்று அந்தணர்கள் கல்வியாற்றல் பயன்பட்ட முறையை அஃதாவது அவர்கள் கற்பித்தல் தொழிலுக்குப் பயன்பட்டவாற்றை எடுத்துக் கூறுகின்றனர்.*

*கடலுள் மாய்ந்த இளம்வழுதி என்ற மன்னன் பாடிய புறப்பாடலொன்று ஏனைய பெரும்புலவர்கள் பாடிய பாடல்களுடன் ஒருங்குவைத்து எண்ணத்தக்க அளவில் உள்ளது. புலவர்களைப் போலப் பாடல் இயற்றும் திறமும் அதுவும் தத்துவ நோக்கில் சிந்தித்துக் கருத்துக்களைக் கூறும் சிந்தனையாற்றலும் இம்மன்னனுக்கு இருந்திருக்கிறது. இலக்கியம், கவிதை, தத்துவம் போன்றவற்றைப் பிறர்க்குக் கூறும் திறன் இவனுக்கிருந்ததை அறிய முடிகிறது. இம்மன்னன் பாடிய பாடல்,*

உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சு வதஞ்சி
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன்பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகி
தமக்குஎன முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே (புறம்.162)

*எனக் காணப்படுகிறது.*

*இஃது கற்றறிந்த பெரும்புலவர் குழாத்தில் சேராது அரசாட்சி நடத்திய தனிமனிதரின் கல்வி ஆற்றல் எனலாம். இவ்வாறு தனிப்பட்ட மனிதர்கள் துறைசாராதிருந்தும் அதுசார்ந்த ஆற்றலைப் பெற்றிருந்ததைச் சங்ககால*

*வரலாற்றில் காணமுடிகிறது. இதுபோலவே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பைப் போற்றும் தன்மையுடன் பாடியிருப்பதும் காணல் தக்கது. கல்வியின் சிறப்பைப் புலவர்களோ, கணக்காயர்களோ, ஆசிரியர்களோ பாடியிருத்தல் வியப்பில்லை. ஆயினும் எப்போதும் போர்த் தொழிலையே சிந்தனையாகக் கொண்டிருக்கும் மன்னர்கள் இவ்வாறு பாடுதல் தனிமனிதர்களும் கல்வியாற்றலையும் அதன்வழிக் கற்பித்தல் ஆற்றலையும் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாகும்.*

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் தரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்.183)

*என்பது இவன் பாடும் பாடல்.*

*இது சாதி சமயமற்ற - வேறுபாடற்ற சமூகத்தைக் காட்டுகிறது என்பதினும் கல்விச் சிறப்பை எடுத்துக் கூறும் பாடல் என மொழிவதே சாலச் சிறந்ததாகும். கல்விச் சிறப்பை இவ்வாறு இம்மன்னன் கூறுவதால்தான் தனிப்பட்ட மனிதர்களும் அறிவாற்றல் பெற்றிருந்தனர் என்ற முடிவுக்கும் வரமுடிகிறது.*

*கல்வி மட்டுமின்றிக் கலை நுட்பத்திலும் சிறந்திருந்த தனி மனிதர்களைக் காணமுடிகிறது. அவர்கள் தாம் தெரிந்திருந்த கைநுணுக்கத்திறனையும்* (Craftsmanship) *பிறர்க்குக் கற்பித்திருத்தலால் அக்கலை நுட்பங்கள் பரவிய*

*சமூகமாகப் பண்டைச் சமூகம் இருந்தது. மிக எளிய கைவினைஞன் ஒருவன் கட்டிலுக்குக் கயிறு பின்னுதலில் வல்லுநனாய் இருந்ததை,*

சாறு தலைக் கொண்டென பெண்ணீற்று உற்றென
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று
கட்டில் நிணக்கும் இழி சினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே (புறம்.82)

*என்ற பாடல் தெரிவிக்கின்றது. தனித்திறம் படைத்த அறிஞர் பலரும் புகழுடன் சங்க காலத்தில் வாழ்ந்ததாகவும் அவர்கள் தம் கருத்துக்களைப் பலரையும் கூட்டி வாதிட்டு அவர்களுக்கு எடுத்துரைத்தனர். இச்சூழலை,*

> கலைகள், விஞ்ஞானம் மற்றும் பிற அறிவுத் துறைகளில் தத்தம் தனித்துறையில் தமக்கிருந்த ஒப்புயர்வற்ற திறமையை உலகத்தாரிடையே நிறுவவிரும்பிய அறிஞர்கள் பலர் முன்னிலையில் விவாதங்கள் நடத்தினர்[59]

*எனக் காட்டுகிறார் ந.சுப்பிரமணியன். ஒரு கருத்தை விவாதிப்போர் ஒன்று பற்றி வாதிடுவோர் அனைவரும் கற்று வல்லராயிருந்தனர் என்பது அறியத்தக்கது.*

*தனிமனிதர்கள் சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் சிறந்த கல்வியாளர்களாய் இருந்தனர். உரையாசிரியர்கள் இதற்குப் பொருந்துவர். சங்க காலத்திற்குப் பின்னரும் அதனை ஒட்டியும் இத்தகையோர் இருந்திருக்கக்கூடும். இவர்கள் உரையெழுத்துவதோடன்றி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் இருந்தனர். அவர்கள் உரையே கூட மாணவர் வினா எழுப்புவது போலவும் அவர்கள் அதற்கு விடையிறுப்பது போலவும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. சேனாவரையர் என்னும் உரையாசிரியர் பண்புத் தொகைக்கு உரையெழுத்தும்போது 'பண்புத்தொகை' குறித்த விளக்கத்தைத் தருகிறார். அந்த விளக்கத்தில் சில ஐயப்பாடுகள் எழலாம் எனக் கருதி அதனை மாணவன் கேட்டு அதற்கு விடையிறுப்பதுபோல அந்த உரையை அவர் அமைந்திருக்கிறார்.*

> பாம்பைச் சாரை விசேடித்தல்லது சாரையைப் பாம்பு விசேடித் தின்றாகலின் ஒன்றையொன்று பொதுமை நீக்காமையால் சாரைப்பாம்பென்பது முதலாயின பண்புத் தொகையாயினவாறென்னை யெனின்; நன்று சொன்னாய்; விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய இரண்டனுள் விசேடிப்பது விசேடியாக்கால் அது குற்றமாம். விசேடிக்கப்படுவது விசேடித்தலின் றென்றலும் விசேடிக்கப்படுதலாகிய தன்றன்மைக்கு இழுக்கின்மையான் விசேடியாது நிற்பினும் அமையு மென்க[60]

*என்பது சேனாவரையர் கூற்று. இதில் அமைந்துள்ள முன்னிலை ஒருமை மாணவனை நோக்கியது. இத்தகைய திறம் வாய்ந்த கல்வியாளர்களால் வடமொழி போன்ற பிற மொழிச் சொற்களும் தமிழில் கலந்தன. அவை மொழிக்கலப்பா அன்றி விளக்கமா அன்றிப் பிறமொழி அறிவுறுத்தலா என்பன ஆராயத்தக்கன. இதனை ந.சுப்பிரமணியனின் 'சங்ககால வாழ்வியல்' என்ற நூலில் காணலாம். அவ்வாசிரியர்,*

> பல தனிப்பட்ட ஆசிரியர்கள் தத்தம் நூல்களில் எடுத்துக் கொண்ட பொருளுக்கு இயைய ஏறத்தாழ வடமொழிச் சொற்களைப் பயின்றுள்ளனரேயன்றி, வடமொழியின் ஊடுருவல் மிகுந்து இருந்த தாகத் தோன்றவில்லை[61]

*எனக் கூறுகிறார்.*

### 3.11. சிறந்தது பயிற்றல்

*சங்ககாலத்தில் பெரும்பகுதி அறக்கருத்துக்களே கற்பிக்கப்பட்டன. பண்பாட்டு நெறிமுறைகளுக்கே முதலிடம் தரப்பட்டது. சங்க இலக்கியங்கள் வழியாக அறநெறிகள் எடுத்தோதப்பட்டன. பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் (கலி.133) எனக் கலித்தொகை பாடியுள்ளது. மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்ட வேளையில் அறக்கருத்துக்களும் போதிக்கப்பட்டன. சங்ககாலத்திற்கும் பின்னும் இந்நிலை தொடர்ந்தது என்பதை அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.*

*ந.சி.கந்தையாபிள்ளை, தமிழர் பண்பாடு என்ற தம் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

> உயர்ந்த கல்வி கற்க விரும்பினோர் நாட்டில் ஆங்காங்கு புகழ் பெற்று விளங்கிய ஆசிரியர்களை அடைந்து அவர்களுடன் தங்கியிருந்து கல்வி பயின்றார்கள். ஆசிரியர்கள் மாணவருக்கு எளிதில் கல்வி பயிற்றற்கு உதவியாகப் பல புதிய நூல்களைச் செய்வதும் வழக்கமாக இருந்தது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெருமம்பாலும் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவருக்காகச் செய்யப்பட்டவை[62]

*எனக் கூறுகின்றாா அவர்.*

*சங்கப் பாடல்களில் கூறப்பட்ட அறம், பொருள், இன்பம் ஆகியவை மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன. 'அறச்சாலை அமைத்தல்' (பட்.42-43) பற்றிப் பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ளது. வீர வாழ்க்கையில் மக்கள் நாட்டம் கொண்டிருந்தனர். போர், வீரம் பற்றிய சிந்தனைகளும் எடுத்துரைக்கப்பட்டன. போருக்குச் சென்று வெற்றி பெற்று வரத் தாயே தன் மகனை அனுப்பும் செய்திகளைக் காண முடிகிறது.*

> ..... ..... ..... .....
> மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
> யானை எறிந்து களத்து ஒழிந்த னனனே
> நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
> பொருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே
> இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
> வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்
> பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
> ஒருமக னல்லது இல்லோள்
> செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே (புறம்.279)

*எனத் தன் மகனுக்குத் தாய் வீரத்தை உணர்த்தி அனுப்பியதாக வருஞ்செய்யுள் வழியும் கற்பித்தல் நடைபெற்றது எனலாம்.*

*அறங்கூறும் அவையத்தார் என்னும் குழுவினர் இருந்து அறக்கருத்துக்களை எடுத்துக் கூறினர் என்பதையும் சங்க இலக்கியத்தின் வழி உணரலாம் (மதுரைக்காஞ்சி, 489-492). தமிழின் பண்டைய நூல்கள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டன. அவையே மக்களுக்கும் கற்றுத்தரப்பட்டன. நூலின் பயனே இம்மூன்றென்று விதி வகுத்துள்ளனர். அவ்வாறெனில் கல்வி கற்பித்தலும் கல்வி கற்றலும் இவற்றின் பயனே என்பது போதரும்,*

> நமது பண்டை நூல்களிலே அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே என்று கூறப்பட்டுள்ளது. இவை புருஷார்த்தங்கள் என்றும் உறுதிப் பொருள்கள் என்றும் சொல்லப்படும். அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஒருவன் அடைவதற்கு உதவுவதுதான் நூலின் பயன் என்பது இதன் கருத்து[63]

*என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். எனவே பழந்தமிழ் நூல்கள் இயற்றப்பட்டதும் கற்பிக்கப்பட்டதும் அறத்தின் பயன் என்னும் அறக்கோட்பாடு என்றது புலனாகிறது. டாக்டர் ஜான்சன் என்ற ஆங்கில அறிஞர் 'வாழ்க்கை இன்பத்தை நுகர்வதற்கும் வாழ்க்கை துன்பத்தைப் பொறுத்தற்கும் நமக்குக் கற்பிப்பதே இலக்கியம்'[64] என்கிறார். இத்தகு பண்பைக் கொண்டது கபிலரின் பாடல்கள் என இரா.மோகன் விளக்கியுள்ளார்.*

> உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளி உண்டாக்கும் என்பார்
> கவியரசர் பாரதியார் இத்தகு உண்மை
> ஒளியும் அனுபவ முத்திரையும் பளிச்சிடும்
> வாழ்வியல் விழுமியங்கள் கபிலர்
> பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன[65]

*என்று கபிலரின் பாடல் சிறப்பை அவர் எடுத்துரைக்கின்றனர்.*

**செவியறிவுறூஉ**

'செவியறிவுறூஉ' என்பது ஒருவர்க்கு அருகிலிருந்து அவர்க்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதாகும். செவியின்கண் எடுத்துக் கூறப்படும் செய்தி என இது பொருள் கொள்ளப்படுகிறது. அவ்வையார், கோவூர்கிழார் போன்ற புலவர்கள் மன்னர்க்கு இதன்வழி அறிவுரை கூறுவதில் மேலோங்கியிருந்தனர். புறநானூற்றில் செவியறிவுறூஉ எனும் துறை நிரம்பக் காணப்படுகிறது. அரசர்க்கு உள்ளது கூறி அறிவுறுத்தும் திறன் உடையவர்களாக அக்காலப் புலவர்கள் இருந்தனர். கோவூர் கிழாரின் பாடல்கள் இத்தகுநிலையிலிருந்ததை, கு.வெ.பாலசுப்பிரமணியன் பின்வருமாறு எழுதுகிறார்.

> புலவரைக் கொல்லும் செயலிலிருந்தும் மலையமான் மக்களை யானைக்கிடும் தொருமையிலிருந்தும், வேந்தரைத் தம் அறிவுரையால் தடுத்து நிறுத்தி அவர்கள் உய்யக் கொண்ட ஒரு மனிதநேய உணர்வைக் கோவூர்கிழார் பாடலின் வழி அறியலாம்.[66]

என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அறச்செயல்களும் பண்புகளும் புலவர்களால் மன்னர்க்கு எடுத்துக் கூறப்பட்டன.

> மாற்சரியமும் கெடுதலுமில்லாத பெரிய எண்ணத்தை அரசனுக்குச் சொல்லுதல் அரசன் செய்ய வேண்டும் உகலம் காவல் முறையை அவனிடம் சொல்லி அவன் செவியிற் புகுத்தி அறிவித்தல்[67]

என்கிறார் உ.வே.சா.

எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானில் பரக்கும் யானைய முன்பில்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலின் நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குறைத்தே (புறம்.5)

என்ற செய்யுள் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட்கோப் பெருஞ்சேரல் இரும்பொறையை நரிவெரூஉத் தலையார் பாடியது. இதன்கண் அருளையும்

அன்பையும் நீக்கிப் பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமது இடமாக்கிக் கொள்பவரோடு சேராது உன்தேயத்தை குழவி வளாப்பவரைப் போலப் பாதுகாக்க வேண்டும் எனப் புலவர் மன்னன் காதிடையே படும்படி பாடுகிறார்.

### தொகுப்புரை

இவ்வியல் கற்பித்தலில் இடம்பெறும் பல்வேறு துறைகளை விளக்குகிறது. மரபு வழிக்கற்றலின் செல்வாக்கு இதில் கூறப்பட்டுள்ளது. குருகுலக் கல்வி முறை இவண் விளக்கப்பட்டுள்ளது. எண், மற்றும் எழுத்து ஆகியவற்றைப் பண்டைநாளில் கற்பித்தமுறைகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. ‘அறம்’ முக்கியக் கற்பித்தலாய் இருந்தமை விளக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின்றி இல்லங்களிலேயே கல்வி கற்பித்தல் கூறப்பட்டுள்ளது. பொது இடங்களில் கற்பிக்கப்பட்ட முறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பாடம் கற்பித்த தனிமனிதர் சிறப்புக்கள் பேசப்பட்டுள்ளன. புலவர்களின் செவியறிவுறூஉ அளித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன. சிறந்த தத்துவங்களும் அறச்சிந்தனைகளும் கற்பிக்கப்பட்டமுறை எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## சான்றெண் குறிப்புகள்

1. R. Elavarasu, Rhetorical Linguistics: The aim of exposition is to transfer the ideas to the minds of the audience, and if offers information in order to explain or clarity a matter..... The aim of exposition is transfer securely and efficiently the idea from men's mixed to other. p.35.
2. **குறள்**.391.
3. து.சேகர், **தமிழ் இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள்**, ப.54.
4. மு.கோ.இராமன், "தமிழ்ச் சுவடிகளில் பயிற்சியும் பதிப்பும்", **சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்**, ப.11.
5. கு.வெ.பாலசுப்பிரமணியன், **சங்ககாலச் சமூக அமைப்புகள்**, ப.243.
6. கா.சிவத்தம்பி, **தமிழ் கற்பித்தலில் உன்னதம்-ஆசிரியர் பங்கு**, ப.77.
7. ந.சுப்பிரமணியன், **சங்ககால வாழ்வியல்**, ப.390.
8. **குறள்**. 4.
9. பரிமேலழகர் (உ.ஆ.), மேலது., **குறள்**.4.
10. ஆ. சிங்காரவேலு முதலியார், "குருகுலம்", **அபிதான சிந்தாமணி**,
11. மேலது.,
12. ஆ.பழநியப்பன், **பழந்தமிழ் இலக்கியம்-ஓர் ஆய்வு**, ப.191.
13. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.392.
14. கு.வெ.பாலசுப்பிரமணியன், மு.கு.நூ., ப.241.
15. நச். (உ.ஆ.), **தொல்.எழுத்து.பாயிரம்**.
16. ச.தண்டபாணிதேசிகர் (உ.ஆ.), **நன்**. நூ.36.
17. பூ.சுப்பிரமணியன், **சுவடியியல்**, ப.18.
18. அவ்வையார், **கொன்றைவேந்தன்**, 7.
19. **குறள்**. 392.
20. திராவிடப்பித்தன், **திராவிட நாட்டுக் கல்வி வரலாறு**, ப.113.
21. பூ.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.55.
22. மேலது., ப.21.
23. உ.வே.சா., **என் சரித்திரம்**, ப.80.

24. இரா.இளங்குமரன் (ப.ஆ.), **தொல்.எழுத்து**. நூ.38.
25. பூ.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.18.
26. ஆ.பழநியப்பன், மு.கு.நூ., ப.132.
27. பரிமேலழகர் (உ.ஆ.), மு.கு.நூ,. உரைப்பாயிரம்.
28. கு.வெ.பாலசுப்பிரமணியன், மு.கு.நூ., ப.157.
29. திருமங்கையாழ்வார், **நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், திருமங்கை யாழ்வார் பாசுரம்,** பா.8.
30. **குறள்.**110.
31. **குறள்.**37.
32. இரா.இளங்குமரன் (ப.ஆ.), **தொல்.பொருள்.கற்.,** நூ.1.
33. நச். (உ.ஆ.), இரா.இளங்குமரன், மு.கு.நூ., நூ.1.
34. **புறம்.** பா.38, 40, 322.
35. பூ.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.20.
36. ந.சி.கந்தையாபிள்ளை, **தமிழர் பண்பாடு**, பக்.105-106.
37. டி.டி.கோசம்பி, மேற்கோள்: ஆ.பழனியப்பன், மு.கு.நூ., ப.190.
38. ஆ.பழனியப்பன், மு.கு.நூ., ப.223.
39. மேலது., ப.204.
40. மேலது., ப.203.
41. மேலது., ப.195.
42. புலியூர்கேசிகன் (உ.ஆ.), **மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை,** பக். 266-267.
43. உ.பிரபாகரன், **பெரியார் ஈ.வெ.ரா.வின் கல்வியியல் சிந்தனைகள்**, ப.32.
44. எஸ்.சந்தானம், ந.சி.கந்தையாபிள்ளை, **தமிழர் பண்பாடு**, ப.105.
45. கே.கே.பிள்ளை, **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**, ப.159.
46. மேலது., ப.158.
47. மேலது., ப.160.
48. கு.வெ.பாலசுப்பிரமணியன், மு.கு.நூ., ப.88.
49. மேலது., ப.88
50. **குறள்.** 638.

51. **குறள்.** 636.

52. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.116.

53. மேலது., ப.117.

54. **பெரியபுராணம் முதற்காண்டம், திருநகர்ச் சிறப்பு**, பா.62.

55. கு.வெ.பாலசுப்பிரமணியன், மு.கு.நூ., ப.58.

56. மேலது., ப.78.

57. மேலது., 85.

58. வீ.சந்திரன், **தமிழர் கல்வி**, ப.109.

59. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.398.

60. கணேசையர் (ப.ஆ.), **தொல். சொல். சேனா.**, நூ.416.

61. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.390.

62. ந.சி.கந்தையாபிள்ளை, **தமிழர் பண்பாடு**, பக்.105-106.

63. எஸ்.வையாபுரிப்பிள்ளை, **இலக்கியச் சிந்தனைகள்**, ப.25.

64. மேலது., ப.25.

65. இரா.மோகன், **இலக்கிய ஆளுமைகள்**, ப.123.

66. கு.வெ.பாலசுப்பிரமணியம், மு.கு.நூ., ப.251.

67. உ.வே.சா.(உ.ஆ.), **புறநானூறு மூலமும் பழைய உரையும்**, ப.632.

# இயல் 4

# கற்றோர் குறித்த பதிவுகள்

'கற்றல்' என்பது முழுமையும் சமூகம் சார்ந்தது. கற்றல் வளர்ச்சி சமூக வளர்ச்சியைக் காட்டுவது. பண்டை நாள் முதல் சமூகப் பொறுப்பிலுள்ளோர், ஆட்சி அதிகாரத்திலுள்ளோர் எனப் பலரும் சமுதாயம் கற்று முன்னேறுவதற்கான வழிமுறைகளைச் செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். தனிமனிதர்கள் கற்றுத் தேர்ந்திருந்த நிலையில் அவர்களைச் சமுதாயம் கற்பதற்குப் பயன்படுத்துவதில் பண்டைநாள் அரசுகள் முயன்றுள்ளன. அத்தகைய கற்றவர்களிடத்தும் சமூகச் சிந்தனைகள் மேலோங்கி இருந்தன. 'யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'[1] என்பது சமூகச் சிந்தனை அமைந்த புலவரின் கூற்றாகும். கற்பித்தல் தொழில் நிகழ்ந்ததற்கு சங்க இலக்கியங்களில் ஆதாரங்கள் கிடைத்தது போலவே கற்பதில் மக்கள் கொண்டிருந்த ஆர்வமும் பெற்றிருந்த வாய்ப்புக்களும் பதிவாகியுள்ளன. கற்றோரின் வாழ்க்கைச்சூழல், அவர்தம் கற்றல் ஆர்வம், ஒழுக்கம் போன்றவற்றின் அடிப்படையில் கற்றோரை விளக்கமுடியும். கற்றோர் பதிவுகள் தனித்தெடுத்து ஆராயும் நிலையிலும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் நாகரிகமும் பண்பாடும் அறியப்படுகின்றன. இந்த அடிப்படையில் சங்க இலக்கியங்களில் கற்றோர் குறித்த பதிவுகள் பற்றி இவ்இயல் ஆராய்கிறது.

இயலின் தலைப்பையொட்டி இவ்இயல் பல உட்கூறுகளாகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

1. கற்றோர் - விளக்கம்
2. மாணாக்கர் - விளக்கம்
3. கற்றோர்க்குரிய ஒழுக்கம்
4. கற்றோர் - சமூகப் பொருளாதார நிலை
5. கற்றோர் - ஆண்களும் பெண்களும்
6. சான்றோர்

7. *அந்தணர்*
8. *அரசர்*
9. *கலைக்கல்வி*
10. *போர் வீரர்*
11. *தொழில் முனைவோர்*
12. *கற்றல் பிரிவு*
13. *இல்லறத்தினர்*

## 4.1. கற்றோர் - விளக்கம்

*உலக அறிவையும் ஒழுக்கம் முதலான உயர்பண்புகளையும் அக்காலத்தில் கற்றுத் தந்தனர். இவை கல்விப் பொருளாயின. இப்பொருளை அறிந்தவர் கற்றோர் அல்லது மாணவர் எனப்பட்டனர்.*

> கல்வி, கலை போன்றவற்றை முறைசாரா முறையில் (non-formal) கற்றுவந்த சமுதாயமாகச் சங்ககாலச் சமூகம் அமைந்திருந்தது. கல்வியைக் கற்பிப்பதற்கென்று தனிப்பட்ட நிலையில் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படவில்லை. ஆயினும் தனிப்பட்ட மனிதர்கள் வழியாகவும் தாமே முயன்றும் கற்று வந்தவர் காணப்பட்டனர். 'கல்வியாளர்' என்பது கல்வியைப் பிறருக்குக் கற்றுத் தருவோரையும், அவ்வாறின்றித் தாமே முயன்று கற்றோரையும் சுட்டிற்று, கற்றார், கற்போர் போன்ற சொற்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.[2]

*என்ற மேற்கோள் கற்றோர் பற்றித் தெளிவாக்குகிறது.*

*பிற்காலத்தது என வழங்கப்பெறும் திருக்குறள் கல்வியறிந்தோரைக் 'கற்றார்' என வெளிப்படையாகவே சுட்டுகிறது.*

> கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையார் கல்லா தவர்[3]

*என்பது குறள். கற்றோர் பெற்றிருந்த சமூக மதிப்பையும் இது சுட்டிக்காட்டுகிறது. இதற்கு உரை எழுதிய பரிமேலழகர் கூற்றால் பலவகைப்*

பொருள் நூல்கள் பழங்காலத்தில் கற்பதற்கு உரியனவாய் இருந்தன என்பதும் கற்றார் சிறந்தாராய்ப் போற்றப்பட்டனர் என்பதும் உணர்த்தப்படுகின்றன.

> மேல் கண்ணன்மை உணரநின்ற ஊனக் கண்ணின்
> மெய்ம்மை கூறியவாற்றான், பொருள் நூல்களையும்
> கருவி நூல்களையும் கற்றாரது உயர்வும் கல்லாதாரது
> இழிவும் இதனான் தொகுத்துக் கூறப்பட்டன[4]

என்கிறார் அவர். கற்றல் எல்லா உயிர்களுக்கும் அவசியமானதாகும்[5] என்று தற்காலத்தார் கூறுவர். மேலும் கல்வித்திட்டத்தில் 'கற்றல்' என்பது பற்றிய விளக்கங்களும் தரப்படுகின்றன. கற்பது வீடுபேறு பெறுவதற்கு என்ற நோக்கமும் அக்காலத்தில் இருந்தது.

> எழுத்தும் சொல்லும் கற்பது வீடுபேறு பயக்கும். பொருணூல்களைக் கற்பதற்கன்று என்று வாதிட்ட தமிழ் மொழியுமே கடவுளால் படைக்கப்பட்டதெனக் கூறினர்[6]

என்கிறார் அ.சண்முகதாஸ்.

'கற்றல்' தொழிற்பெயர். கல் " அல் என இது பிரியும். மற்றத் தொழில்களைக் காட்டிலும் கற்றல் அடிப்படைத் தொழிலாக எல்லாராலும் வரவேற்கப்பட்டது. நால்வருணச் சாதிப் பாகுபாட்டில் கீழ்நிலையில் இருப்பவன் கற்றானாயின் அவனை உயர் குலத்தினரும் மதித்தனர். கற்பதற்கு எளிமையான முறையில் பாடம் சொல்லப்பட்டது. இலக்கண நூற்பாக்களைத் தொல்காப்பியர் கூறியுள்ள முறைகூடக் கற்போர்க்கு எளிமையாகவும் இன்சுவை பயப்பதாகவும் அமைந்திருக்கிறது என்பர்.

> ஒவ்வொரு திணையும் இவ்வளவு துறைகளை உடையது என்று எண்ணிக்கூறும் இயல்பும் தொல்காப்பியரிடம் காணப்படும். பெரும்பாலும் கவிதையைப் படிப்பது போலவே அவர்தம் நூற்பாக்கள் அமைந்திருக்கின்றன[7]

என்றெழுதுகிறார் சோ.ந.கந்தசாமி. கற்றாரைப் பொருளாராய்ச்சி செய்வோர் என்றும் கற்றார் மிகுந்துள்ளனர் என்றும் கற்றல் நிலையை வீரசோழியம் சுட்டும்.

ஆற்றும் அகமே புறமே அகப்புறம் அன்றிவென்றி
போற்றும் புறப்புறம் என்றாம் பொருள்...இவையுமன்றிச்
சாற்றும் புலவரும் எண்ணிறந் தாரென்பர் தாழ்குழலே[8]

*என்கிறார் இந்நூலாசிரியர் புத்தமித்திரர். இதில் சாற்றும் புலவர் என்பது மிகுந்த இலக்கணம் கற்றாரை என்பது தெளிவு. கல்வி மக்களுக்கு அறிவை வளர்க்கவும் சமூக ஒழுக்கங்களைக் கற்றுத் தரவும் சங்ககாலத்தில் பயன்பட்டது. அதனால் சமுதாய நல்லொழுக்கங்களைக் கற்றவதே 'கற்றோர்' எனப்பட்டனர்.[9]*

## 4.2. மாணாக்கர்

*'மாணாக்கர்' என்ற சொல் மாண், மாண்பு என்னும் சொல்லடியாகப் பிறந்தது. மாணவர், மாணவி என்று பால் வேறுபாட்டுடன் இச்சொல் வழங்கப்படுகிறது. மாண் " அர் - மாணவர், மாண் " இ - மாணவி என்றும் விகுதிகள் பெற்றுவரும் சொற்களாய் இவை நின்றன. 'மாணாக்கண்' என்னும் சொல் சங்க இலக்கியப் பயிற்சி உயடைது.* "அவனோர் இளம் மாணாக்கன்"[10] *எனக் குறுந்தொகை சுட்டும். இளமையும் உலகியலை முற்றும் அறியா நிலையிலும் உள்ளதோர் இளைஞனை இச்சொல் குறிப்பிடுகின்றது. பிற்கால உரையாசிரியர்கள் இச்சொல்லைத் தம் உரைகளில் பதிவு செய்தனர்.* "குரீஇபுக்க குரிசில்போல மாணாக்கன் இடர்ப்படும்"[11] *என்று நன்னூல் உரையில் குறிப்பு இடம்பெற்றுள்ளது. தற்கால ஆய்வாளர்கள் பலரும் 'மாணவர்' என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்.*

> கற்றலை முறையாகக் கற்க, கற்றலைப் பற்றிச் சிந்தித்தல் அவசியம். கற்றலை எண்ணிய இலக்கினை அடையக் கற்கும் பொருளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்துக் கற்கவேண்டும். மாணவர்கள் கற்றலில் வெற்றிகரமாக விளங்க முறையாகத் திட்டமிட்டு ஒழுங்கமைத்தல் அவசியம்[12]

*எனக் கூறப்படும் பகுதி கற்றல் பற்றிய நுட்பத்தைச் சுட்டுவதுடன் கற்பாரைக் குறிக்க இங்கு 'மாணவர்கள்' என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளது.*

சமூகத் தகவுகளையும் பண்பாட்டுக் கூறுகயையும் ஆசிரியச் சிற்பி மாணவர்களின் மனத்தகத்தே உருவமையப் பதியவைக்கும் செயல் கல்விக்குரியது எனலாம்[13]

*எனக் கூறப்படும் ஆசிரியர் கல்விப் பணியிலும் மாணவர்கள் இடம்பெறுகின்றனர். மாணவர், கற்போர் என நேரிடையாகக் கூறாது நூல் உரைக்கப்படுவோர் அல்லது ஆசிரியரிடம் உரைகேட்போர் என்னும் பொருளிலும் மாணவர் சுட்டப்படுகின்றனர். இதனை,*

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோளாளற் குரைப்பது நூலே[14]

*என்ற நன்னூலின் வழி அறியலாம். கற்போர் என்னும் பொருள்படும் 'உரைகோளாளர்' என்ற சொற்றொடர் அறியத்தக்கது. இதற்கு உரையாசிரியர்கள் தம் உரைக்குறிப்பில் 'மாணவர்' என்றே குறிக்கின்றனர். சங்க இலக்கியத்தில் 'இளமாணக்கன்'[15] எனக் குறிப்பிட்டிருப்பது இளமையிற் கற்றல் என்னும் சமூகப் பாங்கை வெளிப்படுத்துகிறது. 'புரையோர்'[16] ஆசிரியரையும் 'படர்தல்'[17] அவரிடம் நூற்கேட்டலையும் குறிக்கும் சொற்கள் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளன.*

யாஅ அகத்தியர்க்கு மாணாக்கர் பன்னிருவர்[18]

*என மாணாக்கர் சுட்டப்படுகின்றனர்.*

கற்பவர் மாணவர் என்றும் கற்பித்தான் - நூல் முதலிய கற்பித்த ஆசிரியன் என்றும் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது[19]

*என்றும்,*

'கற்பன்' என்ற சொல்லுக்குக் கல்வியுள்ளவன் என்றும் 'கற்பு' என்பதற்குக் கல்வி என்றும் சங்க இலக்கியங்களில் பொருள் கூறப்படுகிறது[20]

*எனவும் கூறப்படும் செய்திகள் எண்ணத்தக்கன.*

*ஆசிரியர்கட்கு ஒழுக்கங்கள் கூறப்பட்டது போலவே மாணவர்களுக்கும் உரிய ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டன. அவை ஆசிரியரினும்*

கட்டாயப்படுத்தப்பட்டன. மாணவர்களும் அவ்வாறே நடந்துவந்தனர். இத்தகையக் கற்பித்தல் நடவடிக்கையும் கற்றல் செயற்பாடும் முக்கியப் பொருண்மையாகச் சமுதாயத்தில் பின்பற்றப்பட்டன. இவை சமூக ஒழுக்கங்களில் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. ஒழுக்கம் தவறிய ஆசிரியரும் மாணவரும் கல்விச் சொற்பாட்டிற்குப் பொருத்தமற்றவராக எண்ணப்பட்டனர். ஆசிரியர் தெய்வத்திற்கு இணையாகவும் மாதா, பிதா என்னும் (பெற்றோர்) சமூக உறவில் இணைக்கப்பட்டும் போற்றப்பட்டனர். ஆசிரியர் மாணவர் உறவு பணப்பட்ட உறவாக வளர்ந்தது. குருகுல வாழ்க்கையிலும் மாணவர்கள் விரதங்காப்பவர்களாகவே கருதப்பட்டனர். ஆசிரியர் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளோடு இருந்தனர். மாணவர்கள் பண்பும் பாண்டித்தியமும் உடையவர்களாகப் படித்து வெளியேறினர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருந்த உறவையும் (Teacher Pupil Relationship) அறிந்து கொள்ளும்படி கற்றல் பணி நிறைவேறியது. ஆசிரியர்தம் பிள்ளையென மாணவரை நடத்தினர். அறிவு வளர்ச்சி, ஒழுக்கம் ஆகியவற்றில் மாணவர் சிறந்து விளங்கிட ஆசிரியர் விருப்பம் கொண்டனர்.[21] கற்பான் மாணவன் அல்லது பிள்ளை எனப்பட்டான். பெருவாரியான மாணவர்களைக் கூட்டிப் பெரியதொரு கல்விச் சூழ்நிலையை யாக்கும் ஆசிரியர்கட்குக் குலபதி என்று பெயர்.[22]

### 4.3. கற்றோரும் ஒழுக்கமும்

கல்வி பயிலும் மாணக்கர் நிறைந்த ஒழுக்கத்தில் வளர்ந்தவராக இருத்தல் வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. சங்ககாலம் கற்பித்தோர்க்கும் கற்றோர்க்கும் உரிய ஒழுக்கங்களை முதன்மைப்படுத்தியது.

கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்[23]

என நச்சினார்க்கினியர் கூறுகின்றார். கல்வி அறிவைப் பெறும் அனைவர்கும் கற்றார் அடையாளமாய் இருப்பதை இத்தொடர் குறிப்பிடுகின்றது. சங்க காலத்தில் ‘கற்றல்’ என்பது தருகண்மையை வெளிப்படுத்தும் கருவியாகவும் கருதப்பட்டது.

செறுத்த செய்யுள் செய்செந்நாவின்

வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் (புறம்.53)

*என்று கபிலரின் கற்றல் பெருமை கூறப்படுகிறது. அறத்தையும்அறிவையும் அரசர்க்குரியவற்றையும் செவியறிவுறுஉ எனக் கற்பித்து வந்த கபிலரின் கற்றல் திறனை இவ்விலக்கியம் இவ்வாறு போற்றுகின்றது.*

யானும் கல்வியறிவு உடையேன் காண்[24]

*என ஒரு வீரன் போரில் பகைவரின்முன் மொழிவதாகக் கூறப்படுகிறது.*

அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்

தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ

இரந்தூ ணிரம்பா மேனியொடு

விருந்தி னூறும் பெருஞ்செம் மனேனே (குறுந்.33)

*என்பதில் 'ஊண் நிரம்பா மேனி' என்பது தம்மை வருத்திக் கல்வித் தொழிலில் ஈடுபட்ட ஒருவனைக் குறிக்கிறது. நால்வகை வருணத்தாரில் அந்தணர், அரசர், வணிகர் என்ற மூவருமே கல்விக்காகப் பிரிவர் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.*

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன[25]

*என்பது தொல்காப்பியம். இது பிரிவினுள் ஓதற்பிரிவே சிறந்ததென்றும் பெருமைக்குரியதென்றும் வரையறை செய்கிறது. கற்பது தெய்வச் செயலுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுவதைச் சங்க இலக்கியம் எடுத்துக் கூறுகின்றது.*

கைதொழு மரபிற் கடவுள் சான்ற

செய்வினை மருங்கிற் சென்றோர் (அகம்.125)

*என்ற பாடல்வழி இதனை அறியலாம்.*

*பண்டைக்கால இந்தியாவில் நிலவிவந்த கல்விமுறை மாணவர்களின் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மாணவர்கள் விரதம் முதலானவற்றைப் பின்பற்றித் தேர்ச்சி அடைந்த பின்னரே கல்வி கற்கவேண்டும் என்ற நியதி பின்பற்றப்பட்டது. இத்தகைய கல்விமுறையை டி.டி.கோசம்பி தம் ஆய்வு நூலில் விளக்குகிறார். அவரது விளக்கம்,*

பண்டைய சமூகத்தில் சம்பிரதாயம் ஆனதோர் கட்டாயக் கல்வியையும் அறிஞர் மரபையும் கொண்டு ஒரு தனிப்பிரிவாகப் பிராமணர்கள்

> இயங்கினர். வேதம், இலக்கணம், சடங்குகள் ஆகியவற்றில் தேர்ச்சிபெற வேண்டுமானால் காட்டில் தனித்து இயங்கிவந்த ஏதாகிலும் ஒரு குருகுலத்திற்குள் சீடர்களாகச் சேர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மசரிய விரதம் பூண்டும் ஒரு ஆசானுக்குப் (குரு) பணிவிடைகள் செய்துகொண்டு சிட்சை பெறவேண்டியது அவசியம். மறை நூல்களை அசை பிறழாமலும் அவ்வாறே சுரம் தவறாமலும் நினைவிற்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் வேதங்கள் எழுத்து வடிவம் பெறவில்லை. இவ்வாறு கேள்வி ஞானத்துடன் பாராயணம் செய்து கற்கும் முறையும் குருகுலப் பணிவிடைகளும் சீலர் காலத்தில் ‘கால்’ இனத்திற்கு உரிய ட்ரூயட்களின் வழக்கத்தை நினைவுபடுத்தினாலும் இவை அவற்றைவிட உயர்ந்த நிலை அறிவுப் பயிற்சிகள்[26]

*என அமைந்துள்ளது.*

*இக்கருத்து பிராமணர்களுக்கு என்று வரையறுக்கப்பட்டதெனினும் அக்காலக்கட்டத்தில் நிலவிய தமிழகக் கல்விச் சூழலுக்கும் பொருந்தும் எனலாம். தொல்காப்பிய உரையாசிரியர் பலரும் மாணவர்கள் பின்பற்றவேண்டிய ஒழுக்கங்களையும் அவர்களின் பண்புகளையும் விளக்கியுள்ளனர். இவர்களின் விளக்கத்தின் அடிப்படையில் நன்னூல் மாணவர்க்கு அமையவேண்டிய நற்குணங்களை வரிசைப்படுத்துகிறது. மாணவர்களின் செயலைக் ‘கோடல் மரபு’ என்கிறது.[27] ஈண்டுக் ‘கோடல் மரபு’ எனக் கூறப்படுவது கற்றல் பணி ஆகும். ‘மரபு’ என்பது கற்றலின் வரைமுறைகளையும் பழமையையும் உணர்த்துகின்றது.*

*பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது பல்வேறு சடங்குகள் நிகழும். கல்வியும் அதனைக் கற்றுத்தரும் ஆசிரியரும் உயர்வாகப் போற்றப்படும் சமூகநிலை மாணவர்களுக்கு உணர்த்தப்பட்டது. மாணவர்க்குக் கல்விச்சாலை மனநிறைவு தரும் இடமாகச் சொல்லி வைக்கப்பட்டது. இதனை ஆ.பழனியப்பன்,*

> பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கருதப்பெறும். அன்று உபாத்தியாயருக்குப் பலவகையான ஊதியம் கிடைக்கும். ஏட்டின்மீது மஞ்சளைப் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை முறை வைப்பது என்று கூறுவார்கள். அட்சரப்பியாசத்திற்குப் பிறகு ஒவ்வொரு திருவிழாவாகச் செல்வர்களால் கொண்டாடப்பெறும். சுவடி துவக்கலென்று அதைச் சொல்வார்கள்[28]

*எனக் குறிப்பிடுகின்றார். தாங்கள் வசிக்கும் இல்லத்தினின்று புறச்சூழலாலும் அகச்சூழலாலும் மாணவர் மனதைக் கவரும் இடமாகப் பழங்காலத்தில் கற்பிக்கும் இடங்கள் இருந்தன.*

*மாணவர்கள் பள்ளியிற் சேர்க்கப்படுவது இவ்வாறாக விழாவாகக் கொண்டாடப்படுதல் என்பது கல்வியின் சிறப்பையும் கற்றோர் மிகக்குறைவு என்ற கருத்தையும் உணர்த்துகின்றது. கல்வி அரிதாகிய பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் ஒரு சிலரே கற்றனர்.*

> பிள்ளைகள் தமிழ் எழுத்தைத் தொடங்கும்போது 'ஓம் நமச்சிவாய' என்றும் 'ஓம் நமோ நாராயணாய' என்றும் சொல்வது வழக்கமாக இருந்தது. ஜைனர்கள் 'ஓம் ஜநாய நம' என்று தொடங்கினர். பள்ளியில் சேர்ப்பதற்கு நல்ல நாள் பார்த்துச் சேர்த்தனர்.[29]

*இத்தகைய பழக்கங்கள் சங்ககாலத்தில் இருந்ததற்குச் சான்றுகள் இல்லை எனினும் ஏதோ ஒரு வழக்கம் பின்பற்றப்பட்டு வந்ததை உய்த்துணர முடியும். ஆசிரியரையே தெய்வமாக வழிபட்டுக் கல்வியைத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிகிறது. இதனைப் புத்தசமயக் கல்வி கற்றல் வழக்கம் என்பர்.*

*கடின உழைப்புக்குத் தயாராகாது செல்லும் மாணவர்கள் தவறான ஒழுக்கத்தைப் பின் தொடர்வர். அதனால் அவர்களது சிந்தனை கல்வி கற்கும் நோக்கிற்கு எதிராக அமைந்துவிடும். இந்தப் பண்புகள் ஒருவரிடம்*

*ஏற்பட்டுவிட்டால் அன்னோர்க்குக் கல்வி எனும் பழக்கம் ஏற்படாதென்பது கருத்து. அத்தீய பழக்கங்கட்குரியாரை,*

களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே[30]

*எனக் கூறுகிறது நன்னூல். இத்தகையோர்க்கு ஆசிரியர் பாடஞ்சொல்லித் தருதல் இல்லை. மாணவர்களைச் சேர்க்கும் போதே சோதனை நடந்துள்ளது என அறியலாம்.*

*இலக்கண இலக்கியங்களைக் கற்பதற்கு நற்பழக்கமும் ஒழுக்கமும் தேவையெனினும் கற்கப்படும் பொருள் மாணவனை மனிதனாக்குகிறது. எதிர்காலத்திற்கு வேண்டிய நற்சிந்தனைகளை உண்டாக்குகிறது. சங்க இலக்கியத்திற்கும் இது பொருந்தும். சங்க இலக்கியங்கள் வாழ்வின் அகப்புறச் சிந்தனைகளைத் தெரிவித்து மனதைத் தெளிவாக்குகின்றன. இலக்கியங்களை நன்கு கற்றதன் பயனாக ஆசிரியர்கள் உருவாகின்றனர். அவர்கள் கற்பிக்கும் இலக்கியப் பாடங்களைக் கேட்டு மாணவர்களும் உயர் நிலையை அடைகின்றனர். சங்க இலக்கியத்தின் ஒவ்வொரு பாடலிலும் வாழ்வைப் பற்றிய ஒரு தனிச்சிறப்பைக் காணமுடிகிறது.*

*மாணாக்கர் கல்வி பயிலும் முறையை நன்னூல் நன்கு விளக்குகிறது. இது மாணவர்க்குரிய குறிப்பிட்ட நல்லொழுக்கங்களை வற்புறுத்துகின்றது. மாணவர்கள் பின்பற்ற வேண்டிய கடமைகளாகச் சில விளக்கப்படுகின்றன.*

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தோடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லி
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்

செவி வாயாக நெஞ்சு களனாகக்

கேட்டவை கேட்டவை விடாது ளதமைத்துப்

போவெனப் போதல் என்மனார் புலவர்[31]

*என்பது நன்னூல். கற்றலிற் சிறந்த புலவர்கள் தாம் கற்றிருப்பினும் நல்லொழுக்கம் சிதையாது வாழ்ந்து வந்ததைத் தெரிவித்துள்ளனர். எனவே பண்டைக் காலக் கல்வியில் கற்றோர் ஒழுக்கத்திற்கு முதன்மை தந்தனர். பாடிப் பரிசில் பெற்று வாழும் இவ்வாழ்க்கை பிறருக்குத் தீங்கு தருவதாக அமையக்கூடாது என்று புலவர்கள் உறுதியுடன் இருந்தனர்.*

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீதறிந் தன்றோ[32]

*என்ற புறப்பாடல் புலவர்களின் வாழ்க்கையும் சமூக நிலையையும் காட்டுகிறது. 'பிறர்க்குத் தீதறிந்தன்றோ' எனப் புலவர் கூறுவது எண்ணத்தக்கது. இலக்கியக் கல்வியின் தனிப்பயனை விளக்க முயலும் எஸ்.வையாபுரிப்பிள்ளை.*

> இலக்கியங்களைக் கற்பதிலே நமக்கு ஒரு தனி இன்பம் விளைகின்றது என்று முன்பே கூறப்பட்டது. நாம் ஒரு புது உலகிலே புகுகிறோம்; நமது பாவனா சக்தி அங்கே விரைந்து தொழிற்படுகின்றது. இதனால் விளையும் இன்பத்தைத் தவிர, வேறொரு முக்கியமான பயனும் இவ்வகைக் கல்வியால் நமக்கு உண்டாகிறது. மனித இயல்பை உள்ளவாறு உயர்வதுதான் அப்பயன். மனிதனுக்கு இரண்டு தனிப்பட்ட பண்புகள் உள்ளன. ஒன்று வெளிப்படையாக உள்ளது; பிறிதொன்று உள்ளிடமாக இருப்பது. அவன் செய்கைகளைச் செய்யும் கர்த்தாவாய் இருப்பது மட்டுமின்றி, கனவு காணும் கனவாளனாகவும் இருக்கிறான். ஆதலால், அவன் எவ்வகைப் பருவத்தினனாயினும், அவனை அறிந்து கொள்வதற்கு அவனுடைய வெளி வரலாற்றை மட்டும் உணர்வது போதியது அன்று; இன்னும் ஆழ்ந்து சென்று அவனை நோக்குதல் வேண்டும். வெளி வரலாறு அவனுடைய செய்கைகளையும் அவன் பலருக்குத் தெரியும்படியாக ஒழுகுகின்ற ஒழுக்கங்களையும் பெரும்பாலும் உணர்த்துகிறது. ஆனால் ஒவ்வொரு பெருஞ்செயலும் ஒவ்வொரு நோக்கம் பற்றி, லட்சியம் பற்றி எழுகின்றது.[33]

*என்றெழுதுகின்றார்.*

இத்தகைய பயனைக் கற்றல் தொழிலில் ஈடுபடும் மாணவர்களும் பெறுகின்றனர். கற்போருக்குரிய ஒழுக்கம் ஆசிரியரைப் போற்றும் வகையில் அமைதல் வேண்டும் என்று புறநானூறு கூறுவதைச் சுட்டிக்காட்டியவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற மன்னன் ஆவான். இம்மன்னனது கூற்றை விளக்கும் பழைய உரைகாரர்,

தம்மாசிரியர்க்கோர் ஊறுபாடு உற்றவிடத்து அது
தீர்த்தற்குவந்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும்
வழிபாட்டு நிலைமையை வெறாது கற்றல் ஒருவற்கு அழகிது[34]

என்றெழுதுகிறார். இவ்வாறு குறிக்கப்படுவனவெல்லாம் மாணவரின் ஒழுக்கத்தை எடுத்துக்கூறுவனவாகும்.

ஆன்முலை அறுத்த அறனிலோர்
மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்
பார்ப்பார் தப்பிய கொடுமையோர்[35]

எனத் தீயோரைச் சமூகம் எடுத்துக் கூறிற்று. இக்குற்றங்களைச் செய்யாது ஒழுகவேண்டும் எனக் கல்வி கற்பிக்கப்பட்டது. ஒளியோர் பிறந்த இம்மலர்தலை உலகம்[36] என்பதற்குக் "கல்வியால் விளக்கமுடையோர் பிறந்த பெரிய இடம்"[37] எனப் பொருள் விளக்கம் தரப்படுகின்றது.

### 4.4. கற்றோர் சமூகப் பொருளாதார நிலை

சங்ககாலத்தில் அனைவரும் கல்வி கற்கும் வாய்ப்பு இருந்ததில்லை என்பர்.[38] எனினும் ஏனும் ஒரு வாய்ப்பைப் பெற்றுக் கற்றுத்தேர்ந்திடின் அவனைச் சாதி வேறுபாடு கருதாது போற்றி வந்திருக்கின்றனர்.[39] சமுதாயத்தில் 'இழிந்தவர்' என மக்களுள் ஒரு சிலர் கருதப்பட்டுள்ளனர். 'இழிசினன்' ஒருவன் குறிக்கப்பட்டுள்ளான்.[40] ஆனால் சாதியில் இழிந்தோனாயினும் அவன் கலைநுட்பம் தொழில்நுட்பம் கற்றவனாய் இருந்திருக்கின்றான்[41] என்பதும் தெரியவருகிறது.

இவ்வாறு கீழ்நிலையில் இருந்தோர் கற்ற கலை மற்றும் தொழிலை அனைவருக்கும் கற்றுத்தர வாய்ப்பிருக்க இடமில்லை. அவன் தம்மைச்

சார்ந்தோர்க்கே தாம் கற்றதைக் கற்றுத்தந்திருக்க இயலும். சமுதாயத்தில் தாம் உயர்ந்த பிரிவினர் எனக் கூறித் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் வழக்கம் அந்தணர் போன்ற சாதியினர்க்கு இருந்துள்ளது. "யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்"[42] என்று தம்மைக் கூறிக் கொள்கிறார் கபிலர். இதற்கு உரையெழுதும் பழைய உரையாசிரியர், "யான் பரிசிலன்; அதுவன்றியும் நிலைபெற்ற அந்தணன்"[43] எனக் கபிலர் கூறுவதாகப் பொருளெழுதுகிறார்.

உறுபொருள் கொடுத்துக் கற்றல் வேண்டும் எனப் புறநானூறு கூறுகின்றது. உறுபொருள் என்பது மிகுபொருள் என்பதைச் சுட்டும். உறு-மிகுதி எனும் உரிச்சொல். மிகுந்த பொருளை ஏழைகள் தருதற்கில்லை. மேலும் பாடம் கேட்கும் சொல்லும் மாணவர்களின் இடத்தினை வரையறுக்கும் நன்னூல்,

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோளா ளற்கு ரைப்பது நூலே[44]

எனக் கூறுகிறது. இதில் வரும் 'வழிபடுதல்' என்பது தொடர்ச்சியாக உள்ளது. மாணவன் பொருள் கொடுத்தாலும் கொடாது போயினும் வழிபடுதல் இன்றியமையாததாகும். மன்னனின் 'மகன்' கற்க வருதல் அவன் அதிகாரத்தையும் பொருளாதார நிலையையும் காட்டுகின்றது.

சங்ககாலத்தை ஒட்டிய காலக்கட்டத்தில் சிற்றரசர்களும் மிகச் சிறிய அளவிலான நிலப்பகுதியை ஆண்ட மன்னர்களும் இருந்தனர். இவர்களும் இவர்கள்தம் குழந்தைகளும் ஆசிரியரிடத்திலே சென்று கல்வி கற்றனர். இவற்றையெடுத்து ஆய்வாளர்கள் உரைக்கின்றனர்.

> மாணவரானோர் செல்வ நிலையிலும் சமுதாய நிலையிலும் உயர்ந்தோராயினும் அவ்வுயர்வை மனங்கொள்ளாது பணிவுடையராய் நின்று ஆசிரியரிடம் பாடங்கேட்டலே நன்னெறியாகும் எனக் கூறுகின்றது இப்பாடல். (புறம்.183) வள்ளுவப் பெருந்தகையும் அக்காலத்து மாணாக்கர்கல்வி கற்றுவந்த வரலாற்றுச் செய்தியைத்

தெரிவித்துள்ள ஒரு குறளில் தாழ்ந்து வணங்கித் தொழுவதான ஆசிரிய வழிபாட்டையே மாணவரின் தலையாய நெறியாகக் கூறியுள்ளார்[45]

*என்கிறார் வீ.சந்திரன்.*

*மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலையையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பகுதி. செல்வந்தனாயிருப்பினும், 'ஏழை செல்வந்தன் முன் பொருளுக்காக நிற்பதைப் போலப் பணிந்து நிற்கவேண்டும்' என்கிறார் இவ்வாசிரியர். பிற்காலத்தே திருக்குறளும்,*

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்[46]

*எனக் கூறுகிறது. பழங்காலக் கல்விமுறைகள் மாற்றப்பட்டுப் புதிய கொள்கைகள் தற்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளுடையாரிடம் பெறும் பொருளுக்கு ஏழை எதிர்நிற்கும் மனநிலையை மாணவனுக்கு வற்புறுத்துகிறார் வள்ளுவர். மாணவன் தன்னைத் தாழ்த்திக் கொண்டு கல்வி பெற வேண்டும் என்று இக்குறள் கூறுகிறது.*

*பழங்காலக் கல்வியில் விளிம்புநிலை மக்களுக்கு இடம் இல்லாதிருந்தது. மறைகளைக் கற்று முற்ற ஓதும் வேத அந்தணர்களும் புலவர் என்று பொதுச்சொல்லால் அழைக்கப்பட்டனர்.*

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் (பரி.9)

*என்ற பரிபாடலில் அந்தணர், அரசர் கூறப்படினும், அவர்கள் சமமாகச் சுட்டப்படினும் நடைமுறையில் அந்தணர்க்குத் தனித்த இடமிருந்தது. சமூகத்தில் பலதரப்பட்டவரிடத்தும் கல்வி பரவும் வாய்ப்பிருந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். திராவிடப் பித்தன் என்பார் இதனைத் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.*

சங்ககாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சமூகத்தின் பலதரப்பட்ட பிரிவினரிடமும் கல்வியறிவு பரவலாக இருந்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், இசைக்கலைஞர்கள், மருத்துவர்கள், கணியர்கள், மன்னர்கள், குயவர்கள் குறவர்கள் எனப் பல பிரிவினரும் புலவர்களாக

> இருந்துள்ளனர். மேலும் நாற்பது பெண்பாற் புலவர்கள் எழுதிய பாடல்கள் சங்க இலக்கியத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இப்பெண்களும் சங்கத் தமிழ்ச் சமூகத்தின் பலதரப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்[47]

என்பது அவர் குறிப்பிடும் செய்தியாகும்.

பண்டைத் தமிழகத்துக் கல்வி நிலையை வேறுமுறையில் எடுத்துக் கூறமுனையும் சிலர் மேற்சுட்டிய கருத்தை மறுத்தும் எழுதி உள்ளனர்.

> இவர்கள் கல்வி கற்க நிறுவனங்கள் இருந்ததா? எந்த வகைக் கல்வியைக் கற்றனர் என்பதற்கு விடையாகச் சங்க காலத்தில் பாடல் பாடும் திறம் பெற்றோர் பலரிருந்தனர். இப்புலவர்கள் தமது பாடல்களை அரசர்களின் முன் பாடினர். எனினும் இவர்களுடைய பாடல்களைப் பயிலும் முறை இருந்தமையை அறிய இயலவில்லை. அதே நேரத்தில் பாடலியற்றும் திறம் பெற்றிருந்த சங்கப் புலவர்கள் எந்த வகையான கல்வியைக் கற்றுப் பாடல் எழுதினர் என்பதை அறிய இயலவில்லை[48]

எனப் பழங்காலக் கல்வி நிலையின் பிறிதொரு கோணத்தை வரையறுக்கிறார் ஒருவர்.

> சங்க காலத்தில் கிடங்கில் குலப்பதி நக்கண்ணனார் என்ற சங்கப் புலவரைப் பற்றிக் குறுந்தொகை வழி அறிகிறோம். இவர் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைத் திரட்டிக் கல்வி புகட்டினார்[49]

என்பர்.

சங்க காலத்திலேயே தமிழ்ச் சமூகத்தில் பரவியிருந்த பௌத்த சமயம் கல்விப் பணிகளில் ஈடுபட்டது. மக்களில் ஏழை, பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு கற்பிக்காமல் அனைவரையும் சமமாக எண்ணியது. கல்விப் பணியையும் அது செய்யத் தொடங்கியது. அறிவுடையோர் எல்லோராலும் போற்றிப் புகழப்பட்டனர். ஏழையாயினும் செல்வந்தராயினும் கற்றார்க்குத் தனிச்சிறப்பு இருந்தது. சங்ககால அரசர்கள் கற்றவர்களின் சொற்கேட்டு நடந்தனர். ‘அறிவுடையோனாறு அரசும் செல்லும்’ (புறம்.187) எனப் புலவர்கள் பாடியிருக்கின்றனர். கற்றவர்கள் தாம் அனைத்தையும் கற்றவர்கள் என்ற தற்பெருமையற்றிருந்தனர்.

### 4.5. கற்றோர் ஆண்கள், பெண்கள்

சங்ககாலத்தில் சமூக அமைப்பில் ஆண்களுக்கே முதன்மை தரப்பட்டது. பெண்கள் இரண்டாம் நிலையில் இருந்தனர். பெண்கள் கூலித் தொழிலாளர்களாகவும் ஆடவர்க்குச் சேவை செய்பவராகவும் குடும்பப் பணிகளைக் கவனிக்கிறவர்களாகவும் இருந்தனர். ஒருசிலர் கல்வியில் மேம்பட்டு விளங்கினர். சங்க இலக்கியங்களில் ஆடவர் வீரர் என்றும், சான்றோர் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். கல்வி நிலையைப் பொருத்த வரையில் ஆண்களே கற்று முதன்மைபெற வாய்ப்புக்கள் இருந்தன. ஆசிரியரிடமோ, பள்ளிகளிலோ பெண்கள் சென்று படித்ததற்கான சான்றுகள் காணப்பட்டில. பெண்களுள் ஒரு சிலரே புலவர்களைப் புகழப்பட்டனர்.

> ஒருசில பெண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்கள் திண்ணைப் பள்ளிக் கூடத்திலோ குருகுலத்திலோ கற்றதினால் பெற்ற பயன் என்று எண்ணக்கூடாது. மாறாகப் படிப்பதற்குப் பெண்கள் தெரிந்தது அவர்கள் தந்தையர் வீட்டில் கற்றுக்கொடுத்ததாய் அறிந்ததே. அககல்வியும் ஒரு எல்லைக்குமேல் தாண்டவில்லை[50]

என்கிறார் ஆ.பழனியப்பன். இது சங்ககால நிலை குறித்த கருத்துப் பதிவாகும். இல்லற நிலையில் பண்பாட்டு நெறிமுறைகளில் பெண்கள் சிறந்து விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் கற்பிக்கின்றன. இல்லத்திலிருந்து உணவு செய்து வரும் விருந்தினர்க்கு விருந்தளிக்கும் பண்பை அவர் கற்றிருந்தனர் என்பதைப் புறநானூறு,

> . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
> அமிழ்தட் டானாக் கமழ்குய் அடிசில்
> வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
> மகளிர். . . . . . . .                    (புறம்.10:7-9)

எனக் கூறுகிறது. மாணிழை மகளிர் கருச்சிதைத்தல்[51] பெரும்பழி எனக் கருதப்பட்டது. வெளியிற் சென்று இல்லத்துக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுவருவது பெண்கள் பணிகளுள் ஒன்று.

> பெருந்துறை, நீர்தரு மகளிர் குற்ற குவளையும்,
> வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தமரும்[52]

*என வருவது மகளிர் பறித்து வந்த குவளை மலர் விருந்தினர்க்கு வழங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும். சங்ககால ஆண், பெண் உறவில் கூடக் கற்றல் அடிப்படையாக இருந்ததை அறிஞர்கள் சுட்டியுள்ளனர்.*

> காதலையும் அதன் உறவினையும் தெளியவேண்டின் தெளிவுக்கு வேறிடமில்லை. தமிழ்ப்பேரினம் கண்ட அகத்திணையை நாடுக. தொல்காப்பியம் சங்க இலக்கியம் திருக்குறள் என்ற முத்தமிழ் நூல்களைக் கற்க முந்துக[53]

*என்கிறார் வ.சுப.மா.*

> ஆணும் பெண்ணும் ஓரிடத்தில் கற்கும் கல்விக் கூடங்கள் சங்ககாலத்தில் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. பண்பாட்டுத் தளத்தில் சமூக ஒழுங்கிற்கேற்றாற்போல நடந்துகொள்ளும் பெண்களைக் காணமுடிகிறது. இத்தகைய பண்புக்கூறுகள் பெண்களுக்கு வழிவழியாகக் கற்பிக்கப்பட்டன. ஊடல் தீர்க்கும் வாயில்களும் ஆற்றியிருக்கும்படி தலைவிக்கு அறிவுரை கூறும் தோழியரும், அறத்தொடும் நிற்கும் பெண்களும் தலைவிக்குக் கற்பித்தனர் என்றே கூறலாம். இயல்பான வாழ்க்கைக்குரிய புள்ளி விவரங்களை அவர்கள் கற்றிருந்தனர் எனத் தெரிகிறது. தலைவன் பிரிந்து சென்றபின் அவன் வரும் நாட்களை எண்ணிச் சுவற்றில் கோடிட்டு வந்தாள்[54]

*எனச் சங்க இலக்கியம் பேசுகின்றது. எண் வடிவங்களைக் கற்கும் வாய்ப்பற்றிருந்த பெண் சமூகத்தை இது உணர்த்துகிறது.*

> போர்மேற் செல்ல வேண்டாமெனத் தலைவனை வேண்டும் பெண்ணையும் காணமுடியவில்லை. பொதுநலனுக்கு இடையூறாக ஒருவனுடைய தனி வாழ்க்கை பற்றிய எண்ணம் அமையலாகாது என்றும் சமூகக் கடனாற்றும் ஆடவனுக்குக் குடும்பத்தின் பிற உறுப்பினர் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இச்செய்யுட்கள் வற்புறுத்துகின்றன என்று கூறுவது தவறாகாது[55]

*என ஆணையும் பெண்ணையும் பண்பாட்டுக் கூறுகளில் ஓர் இடத்தில் வைத்து அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

*சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் கலைஞர்களுள் பலர் பெண்களாக இடம்பெற்றிருந்தனர். திணைமகள், ஆடுமகள், விறலி, பாடினி என்பன போன்ற பெயர்கள் பெண்களைக் குறிக்கும். இவர்கள் ஆடல், பாடல், இசைக்கருவிகளை இசைத்தல் போன்றவற்றில் வல்லவராயிருந்தனர். இக்கலைகளைக் கற்பதில் நாட்டமுள்ளவராயும் நன்கு கற்றுத் தேர்ந்தவராயும் காணப்படுகின்றனர். மரபுசார்ந்த நிலையில் இக்கலைகளை இவர்கள் கற்றுக் கொண்டனர்.*

> கலைக் குடும்பப் பெண்டிற்குரிய பெயர்களில் பாடினி என்பது பாணன் என்பதற்கிணையான பெண்பாற் சொல்லாகும். தொல்காப்பியத்தில் பாட்டி என்றும் வழங்கப்படுகிறது. கிணை என்றும் பறையைக் கொட்டிப் பாடுதலின் கிணைமகள் எனப்பட்டாள். 'விறல் என்னும் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும்.' மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவது இவர் இயல் பாதலின் விறலி என்றும் பெயர் அமைந்தது[56]

*என்கிறார் அ.தட்சிணாமூர்த்தி. இவர்கள் அறிந்திருந்த கலைகள் யாவும் கற்பிக்கப்பட்டவை என்பது உறுதி.*

*கே.கே.பிள்ளை தம் ஆராய்ச்சி நூலில் சங்ககாலக் கல்வி நிலையை விவரிக்கிறார். சமுதாயத்தில் கல்விபெறும் நிலை எவ்வாறிருந்ததென்பதைச் சங்ககால இலக்கிய வரலாற்றுடன் இணைத்து நோக்கி எழுதுகிறார். அவருடைய ஆய்வில் ஆண், பெண் கல்வி பெற்றது பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.*

> கல்வி பயிலும் உரிமை சங்ககாலத்தில் தனிப்பட்ட ஒரு சிலரின் உரிமையாக இருந்ததில்லை. எக்குலத்தைச் சார்ந்தவர்களும், செல்வர்களும் வறியவர்களும், மன்னரும் எளிய குடிமக்களும் ஆகிய ஆண்களும் பெண்களும் கல்வியைத் தேடிப் பெற்றனர். இளைஞர்கள் மணமான பிறகும் தங்கள் மனைவியைப பிரிந்து சென்று கல்வி கற்பதுண்டு[57]

*என்கிறார் கே.கே.பிள்ளை.*

*கல்வி வளர்ச்சியை ஒப்பீட்டளவில் நோக்க ஆண்களும் பெண்களும் கல்வி கற்பதில் சம வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என்ற முடிவிற்கு அறிஞர்கள் வருகின்றனர். சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை சற்றொப்ப நாற்பதுக்கு அருகில் காணப்படுகிறது. அதிலும் அவ்வையார் போன்ற செல்வாக்குமிக்க பெண்பாற்புலவர்களும் காணப்படுகின்றனர். சமுதாயத்தின் பெண்களின் நிலை சிறப்புற்றிருந்ததாலே கல்வியிலும் இவர்கள் மேம்பட்டிருந்தனர் என்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளனர். அக்காலப் பெண்கள் கல்வியில் ஆடவர்க்கு நிகராக முழுமையும் வளர்ந்ததாய் இல்லை என்பதை,*

> அக்காலத்துப் பெண்பாற் புலவர்கள் சிலரைப் பற்றி நாம் கேள்வியுறுகிறோமாயினும் மகளிர் கல்விப் பரப்பு ஆடவர் கல்வியினும் மிகக் குறைந்ததாகவே இருந்திருக்க வேண்டும்[58]

*எனக் கூறுகிறார் ந.சுப்பிரமணியன்.*

*'கணிகையர்' என்ற பிரிவினர் சங்க அக இலக்கியத்தில் குறிக்கப்படுகின்றனர். பரத்தையரே கணிகையர் என்று குறிக்கப்படுகின்றனர்.[59] பரத்தமை சங்கச் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தலைவன், தலைவியர் கூற்றிலும் பரத்தையர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் சேரிப் பரத்தையர் என்றும் காமக்கிழத்தியர் என்றும் கூறப்பட்டனர். சேரிப் பரத்தையர் தனிப்பட்ட புரவலர்களுடன் வாழ்பவர் அல்லர்.[60]*

*காமக்கிழத்தியர் ஒருவருடன் உறவு கொண்டு அவரையே வாழ்க்கைத் துணை எனக் கொண்டு வாழ்பவர் ஆவர். இவர்கள் இசை, நடனம் போன்ற கலைகளைக் கற்றிருந்தனர்.*

> இவர்கள் நகரங்களில் பரத்தையர் சேரிகள் என்னும் தனிப் பாக்கங்களில் வசித்தனர். மதுரையில் இருபெருந்தெருக்களில் இவர்களே வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இவர்கள் நடனம், இசை, நாடகங்களில் மிக வல்லுநராய் இருந்தனர். நாட்டியமும் இசையும் இவர்கள் பயிலும் தொழிலாக இன்று வரையில் நடைமுறையில் உள்ளது[61]

*என்கிறார் ந.சுப்பிரமணியன். சங்ககால மகளிரின் கற்றல் அனுபவத்தை ஆராயுங்கால் கணிகையரின் (பரத்தையர்) கல்விச் செயல்களையும் குறிப்பிட வேண்டியுள்ளது.*

*இக்கணிகையர்கள் கற்க வேண்டிய கலைநுட்பங்கள் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டிருப்பதை ந.சுப்பிரமணியன் வரிசைப்படுத்தியுள்ளார். 1. இருவகைக் கூத்து, 2. பந்தெறிந்தாடுதல், 3. உணவு வகை பற்றிய கலை அறிந்திருத்தல், 4. காதற்கலை, 5. நயம்படப் பேசுதல், 6. பிறர்காணாது திரியும் கலை, 7. பிறர் எண்ணங்களை அறிதல், 8. கையெழுத்துக்கலை, 9. பூமாலை கட்டுதல், 10. வேடமணிதல், 11. முத்து மாலைகள் கோத்தல், 12. சோதிடம் அறிதல் என வகைபப்டுத்துகிறார் இவ்வாசிரியர்.*[62]

## 4.6. சான்றோர்

*'சான்றோர்' என்னும் சொல் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வருகின்றது. பாடல்களைப் பாடியுள்ள புலவர்களின் கூற்றிலும் நாடாளும் மன்னர்களின் கூற்றிலும் பொதுமக்கள் கூற்றிலும் இச்சொல் இடம்பெற்றுள்ளது. கவிஞர், பாவலர் என இன்று வழங்கப்படும் சொற்கள் பழங்காலத்தில் இல்லை. புலவர், இரவலர், சான்றோர் என்ற சொற்கள் கற்றறிந்தாரைக் குறித்துவந்துள்ளது.*

> சங்க காலத்தில் அறிவாளர் என்னும் பொருளுடைய புலவர் என்னும் சொல்லாலேயே அவர்கள் அறியப்பட்டனர். 'புலவாணர் என்ற சொல் அருகிக் காணப்படுகிறது.' இசைக் கலைஞனான பாணனும் கட்டிடக் கலைஞனுங்கூட இப்பெயர்க்குரியராய் இருந்தனர். எனினும் இச்சொல் கவிஞர்க்கே சிறப்பாக வழங்கிற்று...புலவர்களைக் குறிக்க வழங்கிய பிற சொற்கள் சான்றோர், பரிசிலர், இரவலர் என்பனவாகும். சால் என்ற சொற்கு 'நிறைவு என்பது பொருளாகும்.' எனவே அறிவானும் ஒழுக்கத்தானும் நிறையுடையார் - முழுமை பெற்றவர்கள் என்னும் பொருளில் சான்றோர் என்னும் சொல்லை ஆண்டனரெனத் தெரிகிறது[63]

*என்று சான்றோர் பற்றியும் புலவர்கள் பற்றியும் அ.தட்சிணாமூர்த்தி கூறுகின்றார். சான்றோர் என்பது ஒரு காலத்தில் போர் வீரர்களைக் குறித்தது.* தேர் தரவந்த சான்றோர்[64] *என்ற தொடரில் வீரர் குறிப்பிடப்பட்டுள்ளனர். கல்வியும் அறிவும் உடையோரைச் சான்றோர் என வழங்கிப் பின்னர் அவர்களுக்குச் சமமான போர் வீரர்களைக் குறித்தது.*

> ஒரு நாட்டின் பண்பட்ட மரபுகளைக் கட்டிக் காக்கும் காவலராயும் வாழ்வுக்குக் கரையமைத்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பாளராயும் விளங்குவோர் கற்றறிந்த சான்றோர்களேயாவர். இதனை நன்குணர்ந்த சங்ககாலச் சமூகம், புலவர்கட்கு மிகப்பெரிய சிறப்பளித்தது எனத் தெரிகிறது. அறிவுடையான் காட்டும் வழியிற்செல்ல மன்னர்கள் தயங்கவில்லை. கல்வியின் பெருமை கூறவந்த பாண்டிய மன்னன் ‘அறிவுடையோனாறு அரசும் செல்லும்’ என்றான்[65]

*என்பது சான்றோர் பற்றியும் அவர் பெற்ற கல்விச் சிறப்புப் பற்றிக் கூறப்படும் செய்தியாகும்.*

உயர்ந்த கேள்வி
மாங்கு மருதன் (புறம்.72:13-16)

*என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் கூறுகிறான். ஈண்டு ‘உயர்ந்த கேள்வி’ என்பது புலவரின் கல்வியாற்றலைக் குறிக்கிறது. ஊரின்கண் கற்றுவல்ல சான்றோர் இருப்பின் அனைவர்க்கும் பயன் உள்ளதாகப் புறநானூறு குறிப்பிடும் (புறம்.191).*

செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் (புறம்.53:11-13)

*என்பதில் கபிலரின் அறிவாற்றலே சுட்டப்பட்டுள்ளது. அது போலவே,*

பொய்யா நாவிற் கபிலன் (புறம்.174:10)
திருந்து மொழி மோசி (புறம்.158:12-13)
அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் (புறம்.235:13)
புகழ்ந்த செய்யுட் கழாத்தலை (புறம்.202:13)

*என வரும் தொடர்கள் யாவற்றிலும் அவ்வப்புலவர்களின் கல்வித் திறமை கூறப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட ‘சான்றோர்’ என்ற சொல் புலவர்களின்*

கல்வியைக் குறித்தும் அதனால் அவர்கள் பெற்றிருந்த புகழையும் குறிப்பதாகும். சங்ககால வாழ்வில் கல்வி கற்றோரில் புலவர், சான்றோர் என்போர் முதன்மையாக வைத்தெண்ணப்படுகின்றனர்.

### 4.8. அந்தணர்

சங்ககாலத்து மக்களுள் அந்தணர்களும் அடங்குவர். அந்தணர் என்போர் அறவோர்[66] என வள்ளுவர் குறித்ததும் சங்ககால அந்தணரையே என்பது பொருந்தும். இவர்கள் கற்றலையும் கற்பித்தலையும் செய்து வந்தனர். சங்க ஆய்வுகளில் இவ்விரு திறத்தானும் இவர்கள் ஆராயப்படுகின்றனர். அந்தணர்கள், பாங்கன், வாயில் என இருவகையிலும் குறிப்பிடப்படுவதுண்டு. சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் இவர்கள் இருந்தனர்.

> தொல்காப்பியர் காலத்திலேயே இன்னும் கூர்ந்து நோக்கினால், அவருக்கு முற்பட்ட முதற்சங்க காலத்திலேயே வடமொழித் தொடர்பும் வடநாட்டிலிருந்து குடியேறியவர் தொடர்பும் வேரூன்றியிருந்துள்ளன. தமிழரோடு தமிழராகக் கலப்புற்றுப் போனாலும் அவர்களுள் ஒருசாரர் தங்களுடைய வடமொழித் தொடர்பையும் சடங்குகளையும் கைவிடாது வந்துள்ளனர். தமிழர்களின் கேள்வி ஆழ்வமும் புதுமை வேட்கையும் வடமொழியையும் வேதியர்களையும் போற்றச் செய்தன. பாணரும் புலவரும் தமிழ் மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் பெற்றிருந்த சிறப்பையும் நெருக்கத்தையும் பரிசில் முதலியவற்றையும் அந்தணர்கள் பெறத் தொடங்கினர்[67]

என்று அந்தணர்களின் செல்வாக்கு ஓங்கியமை குறித்து சோ.ந.கந்தசாமி எழுதுகிறார்.

வேதம், கல்வி போன்றவற்றில் சிறந்து விளங்கிய இவர்கள் தமிழ் மக்களிடத்தில் தனிச்சிறப்பைப் பெற்றுவந்தனர். பிற்காலத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்கட்கு உரையெழுதத் தொடங்கினர். தமிழ்ச் சமூகப் பண்பாட்டை நிறுவும் தொல்காப்பியம் போன்ற நூல்களுக்கு எழுதப்பட்ட

உரைகளில் வடமொழிச் சார்பும் அம்மொழி இலக்கண அமைப்பும் எடுத்துக் கூறப்பட்டன. தமிழறிஞர்களும் அதிகாரத்திலிருந்த தமிழர்களும் அவற்றைக் கற்றுத் தம் புலமையை நிறுவ முயன்றனர். இந்தப் போட்டி முயற்சி சங்க இலக்கியங்களைப் படைத்த புலவர்களிடமும் இருந்திருக்க வாய்ப்பு உள்ளது.

> சங்ககாலத்துத் தமிழர் சமுதாயம் முன்னேறிய, பண்பட்ட சமூகம்; அது வாணிப வளத்திலும், நுண்கலைத் திறனிலும் மிகுந்த உயர்நிலை எய்தியிருந்தது; ஆட்சியின் பெருமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு உணர்ந்திருந்தது. எவ்வகையிலும் அநாகரிக அல்லது மிருகப் பிராயத்தில் இருந்ததாகக்கருதக் கூடியதன்று. இம்மக்களின் உலகியல், கலைச் சாதனைகளுக்கும் காரணமாயிருக்க வேண்டிய கல்வியைப் பற்றி அவர்கள் அறிந்து வைத்து அதனை ஊக்குவித்தனர். அன்றியும் அது ஒரு பரவலான சமூகச் செயலாகவும் இருந்தது[68]

என்று தமிழ்ப் புலவர்கள் பற்றிய கண்ணோட்டம் உள்ளது.

கற்பதற்குரிய நூல்கள் என்பவை சுவடிகளாகவே இருந்தன. எல்லா நூல்களும் அறமுதலிய சிந்தனைகளைக் கொண்டவையான இருந்தன. மேலும் கணிதம், சோதிடம் போன்றவையும் சுவடி நூல்களாகக் காணப்பட்டன. இவற்றை முழுவதும் ஒரு மாணவனால் அல்லது தனிப்பட்ட மனிதரால் கற்க முடியாது. அதனால் பலவற்றைக் கேட்டறிந்தே அறிவைப் பெற்றனர். இத்தகைய அறிவைத் தருவதற்குப் பிராமணர்கள் (அந்தனர்) தகுதியுடையராயிருந்தனர்.

> அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்[69]

என்று அந்தணரின் தகுதி உணர்த்தப்படுகிறது. எவ்வுயிர்க்கும் தீமை செய்யாது வாழ்தல் யாவர்க்கும் எளிதன்று. மனத்தூய்மை நிரம்பப்பெற்ற சான்றோரால் மட்டுமே அவ்வாறு வாழ இயலும். இந்தப் பயிற்சிகள் அந்தணர் பெற்றவராகக் காட்சியளித்தனர். அந்தணர்கள் வேதத்தையே முதன்மைப் பாடமாகப் படித்தனர். வேதம் கற்பது அந்தணர்க்குச் சிறப்புத்தருவது.

*அதனினும் கற்றபடி நடத்தல் என்றும் உயர்ந்த வித்தையையும் அவர்கள் கற்றிருந்தனர்.*

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்[70]

*என்பதில் அந்தணர் கற்றுவந்த பாடமும் பழகிவந்த ஒழுக்கமும் குறிப்பிடப்படுகின்றன.*

சங்ககாலச் சமூகத்தில் அந்தணர்கள் மிகவும் கற்றவர்களாகவே சுட்டப்பட்டுள்ளனர். அவர்களுக்கென்று தனிக்கல்வி முறையும் பயிற்சிகளும் இருந்தன. அந்தணர்கள் வைதீகக் கல்வியைப் பெரிதும் போற்றினர். வானியல் கல்வியிலும் சிறந்து விளங்கினர்[71]

*என்பர். இவற்றை இவர்கள் தொழிற்கல்வி என்றே எண்ணிப் படித்தார்கள்.*

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும்
பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்
எம்மம்பு கடிவிடுதும்
நும்மரண் சேர்மின் (புறம்.9)

*என்ற பாடலில் பிரமணர்களுக்கு இருந்த சமூக மதிப்புக்* (Social value) *கூறப்பட்டுள்ளது. 'ஆனியல் பார்ப்பனர்' என்பது அவர்தம் சான்றாண்மைக் குணம். அஃது அவரின் கல்வி கேள்வியால் வந்ததாம். பார்ப்பனர்கள் தாம் பெற்ற கல்வியறிவைப் பிறர் பயன்படும்படி செய்தனர்.*

பார்ப்பனர்கள் யாகம் செய்தார்கள். தம் மனைவியர் துணைபுரிய அவர்கள் 'அறவாழ்க்கை வாழ்ந்தனா.' களவு வாழ்க்கையில் தலைவனுக்கும் தலவிக்கும் திருமணம் முற்றுப்பெறுவதற்குப் பார்ப்பார் துணை நிற்பர். அவர்கள் அருள் நிறைந்த அறவாழ்க்கை வாழ்ந்து வந்ததால் அரசனுக்கும் குடி மக்களுக்கும் அவர்கள் பால் நல்ல ஈடுபாடு இருந்து வந்தது. மன்னர்கள் அயல்நாட்டின்மீது போர் தொகுக்கும்போது முதலில் பார்ப்பனரை ஊரை விட்டுப் போய்விடும்படி முன்னறிவிப்புச் செய்தல் போர் அறமாக இருந்தது. பண்டைய தமிழகத்துப் பார்ப்பனர்கள் தம்மைத் தமிழராகவே நினைந்து, தமிழ் பயின்று தமிழ்ச் சமுதாயத்தில் தாமும் இன்றியமையாத ஓர் உறுப்பாய் அமையுமாறு நடந்து கொண்டனர்.

> சமயக்கல்வி, தத்துவம் ஆகியவற்றில் வல்லுநராய் இருந்தனர். கபிலரைப் போன்ற பார்ப்பனப் புலவர்கள் சங்கப் புலவர்களாய் விளங்கினர்[72]

*என்று பார்ப்பனர்களின் கல்வியாற்றலையும் அதனை அவர்கள் சமூகத்திற்குப் பயன்படுத்தியமையையும் கே.கே.பிள்ளை விளக்கியுள்ளார்.*

> தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவற்றில் அந்தணர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவர்களின் அடிப்படைத்தொழில் வேதம் ஓதல் என்று கூறப்படுகிறது. இவர்களுள் சிலர் சங்ககாலப் புலவர்களாகவும் காணப்படுகின்றனர். அந்தணர் என்பதற்கு அந்தத்தை (வேதாந்தத்தை) அணவுவார் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகிறார்.[73] . . . ஆறறி அந்தணர், நான்மறை அந்தணர், அறக்களத்து அந்தணர் என அடைமொழிகளுடன் வரும் பெயர்கள்யாவும் அந்தணரின் கல்வித் திறனை மேம்படுத்திக் காட்டுவனவாகும்.[74] . . . கற்றல், கற்பித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறுவகைத் தொழில்களும் பார்ப்பார்க்குரியது எனத் தொல்காப்பியம் கூறுகிறது.[75]

*என வரும் அந்தணர்கள் கல்வித் திறத்தால் வாழ்க்கை நடத்தினர் என்பதை வலியுறுத்தும் அவர்களுக்கு அறிவு கருவியாக அமைந்தது.*

> அந்தணர்கள் அரசவையில் சோதிடராகவும் இருந்தனர். சபையில் ஆலோசனைகளை வழங்குபவராகவும், தூதுவராகவும் இவர்கள் செயற்பட்டனர். அந்தணர்கள் எழுதாக்கிளவி என வழங்கப்பெறும் வேதத்தைக் கற்றுப் பிறர்க்கு அதனைக் கூறும் பயிற்சி உடையவராயிருந்தனர் எனத் தெரியவருகிறது (திருமுருகு.179-185)
> தாமரைப் பூ அந்தணர்க்குரியது. அவர்களுக்குப் பரிசளிக்க விரும்பிய அரசர்கள் பொற்றாமரைப்பூக்களை அளித்தனர். தாமே நாபிக்கமலத்தில் உதித்தவனாதலின் தாமரை பிரமனுக்குரிய மலர்; கல்வியின் அதிதேவதையான சரஸ்வதி தேவதையும் வெண்டாமரையோடு தொடர்புடையள்;[76]

*என்று பிராமணர்களுக்கும் கல்விக்குமுள்ள உறவுநிலை விளக்கப்படுகிறது. கற்றுத் தாம் கற்றதைப் பிறர்க்கு உணர்த்தி அறவழிப்படுத்தியவர்களாக இவர்கள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் சுட்டப்படுகின்றனர்.*

*காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த நான்கு வேதங்களையும் கற்ற பிராமணர்கள் புகழ்ந்து பாராட்டப்பட்டனர். பிராமணர் வழிபாட்டுமுறை அந்நகர மக்களிடம் பரவியிருந்தது. வேள்விகள் செய்தும் வேள்விகளில் பலியிடுவதற்குரிய ஆக்களையும் ஆனேறுகளையும் வளர்த்தனர். கல்வியிற் சிறந்த அந்தணர்கள் ஆங்கே இருந்ததை,*

அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
நல்ஆனொடு பகடு ஓம்பியும்
நான் மறையோர் புகழ்பரப்பியும் (பட்.200-202)

*என வரும் தொடர்கள் மேற்குறித்த செய்திகளைக் குறிப்பிடுவதுடன் அக்காலச் சமூகத்தில் கற்றுவல்ல திறனுடையராய் அந்தணர் இருந்ததையும் குறிப்பிடுகின்றனர்.*

*அறம் முழுதும் உணர்ந்த ஒழுக்கம் சிறந்த அந்தணர் அவை என அந்தணர்கள் தலைமையேற்ற அவை கூறப்படுகிறது. அது,*

அறம் அறக்கண்ட நெறிமாண் அவையத்து
முறைநற்கு அறியுநர்....
வேத வேள்வித்தொழில் முடித் ததூஉம் (புறம்.224:4-9)

*எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியன் நெடுஞ்செழியன் நான்மறை அறிந்த அந்தணர்களைத் தம் சுற்றமாகக் கொண்டான் என்பதை,*

ஆன்'ற வேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக... (புறம்.26)

*எனவரும் அடிகள் உணர்த்துகின்றன. பரம்பரை வைதீகக் கல்வியை அந்தணர் போற்றி வந்தனர். பார்ப்பனர் கிரகணங்களின் நிகழ்ச்சியை வருமுன் கூறும் அளவிற்கு வானியல் கல்வி கற்றனர். அது அவர்களின் தொழில் சார்ந்ததாக அமைந்தது.*

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி
உயர்நிலை உலகம் இவணின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்

பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளி (மதுரைக்.468-474)

*என அந்தணர்கள் வாழ்ந்த குடியிருப்பைக் கூறும் போதும் அவர்கள் வேதம் அறிந்தவர் என்றும் ஒழுக்கம் நிறைந்தவர் என்றும் கூறப்படுகிறது.*

## 4.8. அரசர்

*பொதுமக்களையும் புலவர்களையும் போலவே மன்னர்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இருந்தனர். அரசர்க்குரிய போர்ப் பயிற்சி உள்ளிட்ட பல்வகைக் கலைகளையும் அவர்கள் கற்றிருந்தனர். திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் பண்டைத் தமிழ்மன்னர்கள் மிகப் பழமையான காலத்திலேயே அரசாண்டனர் என்பதை, 'படைப்புக் காலந்தொட்டு' நாட்டை ஆண்டு வந்தனர் என்கிறார்.*[77]

*சங்ககாலத்தில் மூவேந்தர்களும் இருந்தனர். அவர்களைச் சேர, சோழ, பாண்டியர் என அழைத்தனர். இவர்கள் தமிழகத்தையும் தமிழகம் சார்ந்த பிற பகுதிகளையும் ஆண்டு வந்தனர். சங்க கால மன்னர்கள் பரம்பரை பரம்பரையாக முடிசூட்டிக் கொண்டனர்.*

> சங்க காலத்தில் மிகவும் பொதுவாகப் பயின்ற அரசு முறை பாரம்பரிய முடியாட்சியே. பொதுவாக ஆட்சியிலிருக்கும் அரசனுடைய மூத்த மகன் தந்தையைத் தொடர்ந்து மன்னனானான். அரசுகட்டில் உரிமை பற்றி அவனால் பெறப்பட்டது. அதனை முறை முதல் கட்டில் என்பர்[78]

*என்று அரசர்கள் அரசுகட்டிலில் அமர்ந்து ஆட்சிபுரிந்த உரிமை முறையைக் கூறுகின்றனர். மன்னர்கள் அரியணை ஏறியபின் பொது அறிவும் அனுபவமும் உடைய பலர் அறிவுரை கூறினர். அவர்கள்தம் சொற்களைச் செவிமடுத்து மன்னன் பின்பற்றினான்.*

> முழுமை அனுபவம் அறிவு கல்வி என்பவை உடையோர் துணிந்து மன்னற்கு அறிவுரைப்பர். உலகியற் பொருள்களையும் வாழ்க்கை வசதிகளையும் ஈட்டுதலிலும் போரிலும் செலவிடப்பட்ட வாழ்க்கை விரும்பத்தக்கதன்று. நிலைபேறில்லாத உலகில் மக்கள் அமைதி, ஈகை,

> பண்பு, கடவுள் வழிபாடு முதலியவற்றை நினைக்க வேண்டும். பொதுவாக வீடுபேறான அழிவில் இன்ப நிலையை எய்தும் நிலையில் நிற்றல் வேண்டும்... கசப்பான ஆனால் தேவையான அறிவுரைகளையும் மரபு வகைப் புகழ்ச்சி என்னும் தேன் கலந்த மருந்தாக அளித்தனர்[79]

*என்று அரசர்க்கு எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களும் முறையும் விவரிக்கப்பட்டுள்ளன.*

*அரசர்க்குரியனவாகச் சில கடமைகளும் எடுத்துக் கூறப்பட்டன. அவற்றை அவர்கள் மரபு வழியாகப் பின்பற்றி வந்தனர். இவற்றை நிறைவேற்றும் முறைகளையும் கற்றிருந்தனர்.*

1. *கற்றல்*
2. *வேள்வி செய்தல்*
3. *ஈதல்*
4. *குடிகளைக் காத்தல்*
5. *தீயோர் மற்றும் குற்றவாளிகளைத் தண்டித்தல்*

*என்பவை அரசர்க்குரிய கடமைகளாகக் கற்பிக்கப்பட்டன. இவற்றுள் முதற்கண் 'கற்றல்' கூறப்பட்டிருப்பது எண்ணத்தக்கது. எண், எழுத்துப் போன்றவற்றையும் பிற நீதிக் கருத்துக்களையும் மன்னன் கற்றிருப்பதுடன் இங்குக் கூறப்பட்ட பண்புகளையும் மன்னன் கற்றிருந்தான் எனத் தெரிய முடிகிறது.*

> அரசர்கள் சற்று வேறுபட்ட பாடத்திட்டத்தைப் பின்பற்றியிருக்க வேண்டும். அவர்கள் விற்பயிற்சி, குதிரையேற்றம், மற்போர் முதலியவற்றையும் பயின்றிருத்தல் வேண்டும்[80]

*என்று கூறப்படும் கருத்து எண்ணத்தக்கது.*

*அரசர்கள் கல்வி கற்றமையை இது கூறுகின்றது. பாண்டிய மன்னர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கம் பாதுகாக்கப்பட்டது என்பது மன்னர்களின் கல்வி ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டாகும். அரசர்க்குரிய நன்மை தீமைகளைக் கற்பிக்க 'அரசகுரு' எனத் தனியாக ஆசிரியர்கள் இருந்துள்ளனர். இவர்கள்தம் போதனையால் அரசனுக்கே சில அனுபவங்கள் கிடைத்தன. ஒரு*

*வகையில் குருகுல ஆசிரியன் போலவே இவர்கள் செயற்பட்டனர். குருகுலத்தில் மாணாக்கர் ஆசிரியரிடம் காட்டிய நட்பைப் போலவே இவர்கள் இக்குருவிடத்தில் பணிவும் அன்பும் காட்டி வந்தனர். இதனை,*

> அரச குருவாக விளங்குகின்ற புரோகிதர் அவையின் இரத்தினங்களுள் ஒருவராக இடம் பெறுகிறார். தக்க அரச குருவைப் பெறாத அரசனின் படையலைத் தெய்வம் ஏற்காது என நம்பப் பெற்றது. தெய்வத்திற்கு அளிக்கப்பெறும் பலிகளாலேயே போர் வெற்றிகள் கிடைக்கின்றன என்ற நம்பிக்கை மிக்க காலத்தில் இவ்வெண்ணம் தவிர்க்க முடியாததாக அமைந்தது. வேத காலத்தில் அலுவல் இரத்தினங்களாக இன்னோர் மதிக்கப்பட்டிருக்க வாயு புராணத்தில் அரசி, புரோகிதர், தானைத் தலைவர், தேர்ப்பாகர் ஆகியோரோடு யானை, குதிரை, வில்வாள், கேடயம் ஆகியனவும் மதிக்கப் பெற்றிருக்கின்றன[81]

*என்ற கருத்தின் வழி அறிய முடிகிறது.*

*சிக்கல் நிறைந்த இடங்களில் அமைச்சரை மட்டுமின்றிக் கற்றறிந்த மூத்தோரைக் கலந்து முடிவெடுத்தல் வேந்தர் இயல்பு[82] எனக் கூறப்படுகிறது. இவையெல்லாம் அரசர் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் என்பதைக் காட்டுவன. ஒவ்வொரு பகுதிக்கும் அவ்வப் பகுதியில் திறம் வாய்ந்த அறிஞர்கள் அரசவையில் இருந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரிடத்தேயும் அரசன் பலவற்றைக் கலந்தாலோசித்துக் கற்றுக் கொண்டான் எனலாம். அரசவையில் பல்வேறு அறிஞர்களும் இருந்து செயலாற்றினர் என்றும் அரசவை ஒரு கல்விச் சாலை போலவே விளங்கியது என்னும் குறிப்பிடுவர்.*

*ஆசான், பெருங்கணி, அமைச்சர், தானைத் தலைவர் ஆகிய நால்வகை அலுவலர்கள் அரசனுடன் உறைந்தனர். இவர்களுடன் ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற அமைப்புக்களும் இருந்தன என அறிய முடிகிறது. அரசனுக்குரிய அறிவுரைகளைத் தவிர்த்துப் பிற பணிகள் இவர்களுக்கு இல்லை எனக் கூறலாம். இவர்களன்றி வேறு சில அலுவலர்களும் இருந்தனர். அவர்களை,*

1. *படைவீரர்கள்*
2. *கருமவினைஞர்*
3. *கணக்கியல் வினைஞர்*
4. *தரும வினைஞர்*
5. *தந்திர வினைஞர்*

*எனக் குறிப்பிடுவர்.*[83]

*இவர்களுள் படை வீரர்கள் படைநடத்துதலில் ஏற்படும் சிக்கல் போன்றவற்றைத் தெரிவித்தனர். கணக்கியல் வினைஞர் 'கணக்காயர்' எனக் கூறுப்படும் ஆசிரியர்களைப் போன்றவர்கள். கணிதமுறைகள் தேவைப்படும் காலத்தில் இவர்கள் உதவினர். தருமவினைஞர் அறஞ்செய்தல் பற்றி எடுத்துக் கூறினர். அறநூல்களைக் கற்றுத் தேர்ந்த புலவர்களாக இவர்கள் விளங்கினர். நீதிநெறிமுறைகளையும் இவர்கள் விளக்கிக் கூறிவந்தனர்.*

*அரசக்குடியினர் அரசாவதற்கு முன்பு பல பயிற்சிகளைப் பெற்றனர். அறிவுத்துறைகளில் அரசர்கள் நிரம்பிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று திருக்குறளில் பொருட்பால் பகுதியில் கூறப்பட்டுள்ளது.*[84] *புலவர், சான்றோர் அறிவுரைகள் தக்கமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அரசர்களிடம் உள்ள குறைகளை அவர்கள் சுட்டிக்காட்டினால் மன்னர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர்.*

*சோழன் கரிகால் வளவனின் திறத்தைப் பாடும் புலவர் ஒருவர் சோழன், "குலவிச்சை கல்லாமல் பாகம் பெறும்"*[85] *என்று பாடுகிறார். கல்லாமல் என்பதால் கற்றல் தொழில் அவர்களுக்கும் உண்டு என்பது தெளிவு.*

### 4.9. கலைஞர்கள் (கூத்தர், பொருநர்)

*இசை, சிற்பம், ஓவியம், கூத்துப் போன்றவற்றை நன்கு தெரிந்திருந்த கலைஞர்களையும் அவர்தம் கலைத்திறனையும் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. மாளிகைகளிலும் அரண்மனைகளிலும் சிறந்த ஓவியங்கள்*

வரையப்பட்டன. இசையிற்பாடுதலும் இசைக்கருவிகளை இயற்றுதலும் காணப்படுகின்றன. கூத்தர், விறலியர் போன்றோர் ஆடற்கலையில் சிறந்து விளங்கியமையை அறிய முடிகிறது. இக்கலைகளை ஒருவரிடமிருந்து ஒருவர் வழிவழியாகக் கற்றுத் தேர்ந்தனர். இக்கலைகளுக்கெனத் தனிப் பள்ளிகள் இருந்ததாகத் தெரியவில்லை.

> நுண்கலையில் ஓவியம் பெரிதும் போற்றப்பட்டது. வரைதற்கலை ஓவியக்கலை எனப்படும். வரையப்படுவது ஓவியம். வரைவோர் குழாம் ஓவியர். செல்வந்தர், கணிகையர், என்போர் மனைச் சுவர்களில் அவ்விடத்திற்குப் போருத்தமாக ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. நாடக மன்றங்களில் ஏற்ற ஓவியங்களை ஏற்ற எழினிகள் அசைந்தன. அவற்றை 'ஓவிய எழினி' என்றனர். இக்கலை பற்றி 'ஓவிய நூல்' என்றொரு நூலிருந்தது. அதில் பண்டைய ஓவிய மரபுகள் கூறப்பட்டன. அன்றியும், அசையும் மற்றும் அசையாப் பொருள்களை வரையும் விதமும் கூறப்பட்டது. மனைகள், அரண்மனைகள் இவற்றின் மேல் பல பொருள்களும் காட்சிகளும் வரையப்பட்டன. தமது துதிக்கையில் ஆம்பல் மலரேந்திய களிறுகள் புடைசூழ வீற்றிருக்கும் 'திரு'. பலமுறை ஓவியர் எழுதிய ஒரு இயற்கைப் பொருள்களான மலர்கள் கொடிகள் என்பவற்றை வரைதலும் மரபு[86]

என்கிறார் ந.சுப்பிரமணியன். சங்க காலத்தில் சிற்பம் ஓவியம் போன்ற பல நுண்கலைகள் வளர்ந்திருந்தன என்பதும் இதனைக் கற்றுத் தருவோரும் கற்போரும் இருந்தனர் என்பதும் இதனால் விளங்கும்.

சிற்பக்கலை மக்கள் அறிந்த கலையாக இருந்தது. குகைகளிலும் பாறைகளிலும் கிடைக்கும் கற்களை வெட்டி அவற்றில் கல்வெட்டுக்களையும் சிற்பங்களையும் பொறித்தனர். தமிழரது சிற்பக்கலை பானை வனையும் தொழிலிருந்து உருவாயிற்று. சங்க காலத்தில் சிற்பங்களும் ஓவியங்களும் இருந்தன என்றும் அவை எளிதில் அழியக்கூடியனவாய் இருந்தமையின் அழிந்துவிட்டன என்றும் கூறுகின்றனர்.[87] ஆயினும் அக்கால இலக்கியங்களில் இவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்விலக்கியக் குறிப்புக்கள்

*கலைக்கல்வி வளர்ச்சிக்குச் சான்றாக அமைகின்றன. நெடுநல்வாடையில், அரசி படுக்கையிலிருந்த தோற்றத்தை,*

அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப புனைவில்
தளிரேர் மேனி (நெடு.83-85)

*எனப் பாடுகின்றார் ஆசிரியர். புனைந்து அழகொளிர எழுதப்படும் ஓவியங்கள் அக்காலச் சமூகத்தில் பயிற்சியில் இருந்ததை இது உணர்த்துகின்றது. ஓவியப் பயிற்சி தரும் பள்ளிகள் இருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்தில.*

*இசையும் நாடகமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. நாடகமும் இசையும் அக்காலத்தே சிறந்து விளங்கியுள்ளன. மாதவி நடனக் கலையில் வல்லவளாயிருந்தாள். மாதவிக்குச் சேரன் செங்குட்டுவன் 1000 கழஞ்சுப் பொற்காசுகளைக் கொடுத்து அவளைப் பாராட்டுகிறான். பிற்காலத்தே சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கூத்துவகைகள் சங்ககாலத் தொடர்ச்சி எனக் கூறலாம்.*

*இசைக்கு அடுத்தாற்போலக் கூத்திற்கு முதன்மை தரப்பட்டது. கூத்து இருவகையாகப் பிரிக்கப்பட்டது.*

1. *வேத்தியல்*
2. *பொதுவியல்*

*வேத்தியல் என்பது வேந்தர்க்கு முன் ஆடுவது என்றும் பொதுவியல் என்பது மக்களிடையே நிகழ்த்தப்படுவது என்றும் கூறுப்படுகிறது.*

> தொல்காப்பியர் காலந்தொடங்கி இளங்கோ காலம்வரை பழந்தமிழ்ச் சமூகத்தின் நிகழ் கலைகளின் ஒட்டுமொத்தமாகக் கூத்து இடம் பெற்றிருத்தலைக் கணலாம். ஓர் இரண்டாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட கூத்து என்னும் சொல்லின் வேர்ச் சொல் வடிவம் என்ன என்பது பற்றி இன்று ஆய்வாளர்களிடையே பலத்த விவாதங்கள் எழுந்துள்ளன[88]

என்று கூறப்படுவது கூத்தின் தொன்மையைச் சுட்டுவது. இதனால் கூத்துக்கலை வளர்ச்சியுற்ற கலைவடிவமாக இருந்துள்ளது எனத் தெரிகிறது. இவற்றை நன்கு தெரிந்திருந்த ஆசிரியர்கள் மற்றவர்களுக்குக் கற்பித்த நிகழ்வுகள் நடந்துள்ளன. அவரவர் சமூகத் தேவைக்கேற்ப இதனைக் கற்றுப் பயன்படுத்திக் கொண்டனர்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளித் தற்று[89]

என்ற திருக்குறளில் நாடக அரங்கும், அதில் நிகழ்த்தப்படும் கூத்தும் குறிப்பிட்ட இடமும் குறிப்பிடப்பட்டுள்ளன. நாடக அரங்கை, அல்லாது கூத்து நிகழும் இடத்தை 'அவைக்களம்' என்று கூறியுள்ளனர். மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் அரண்மனையில் மன்னர்களின் முன்னர் கூத்து நிகழ்வதற்கு இடம் தேர்வு செய்யப் பெற்றிருந்தது. முதலில் அது அவையில் நடந்தது. பின்னர் இக்கலை நிகழ்த்துதற்குரிய இடமாக அது கூறப்பட்டிருக்கலாம். இத்தகைய வரலாறுகள் யாவும் கலைஞர்கள் கலைத் தொழிலைக் கற்றும் கற்பித்தும் வந்தனர் என்பதைக் காட்டுவன. இவ்வாறு கூத்துக்கள், பாடல் போன்றவை கூத்தர், பாணர் போன்றோரால் பழந்தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்தப் பெற்றிருப்பினும் அக்காலத்தே தமிழில் நாடகம் தோன்றவில்லை என்ற கருத்தையும் சிலர் முன்வைக்கின்றனர். மற்றக் கலைகளைப் போலத் தமிழ் நாடகம் வளராமையை கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் நாடகம் எடுப்படவே இல்லை[90] எனக் கூறுகிறார்.

பாணர்களில் ஒரு சில நரம்புகளைக் கொண்ட சிறிய யாழில் வல்லவர், பற்பல நரம்புகளைக் கொண்ட பெரிய யாழில் வல்லவர் என இருவகையினர் உள்ளனர்[91]

என்று சங்ககால இசைக்கலைஞர்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சிறிய யாழ் வல்லவர், பெரிய யாழ் வல்லவர் என இங்குக் குறிக்கப்படுவது யாழ் இசைப்பதில் சிறந்தவர்களை என்று உணர முடிகிறது.

இன்னிசை நல்யாழ் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணும் அம்பி
கைபிணி விடாஅது பையக் கழிமின் (மலைபடு.381-383)

என வரும் தொடர்களால் யாழும், முழவும் இசைக்கத் தெரிந்த கலைஞர்கள் இருந்தனர் என்பதை அறியலாம்.

### 4.10. போர்வீரர்கள்

பண்டைக் காலச் சமூகம் போர்த் தொழில் சமூகம் என அறுதியிட்டுக் கூறலாம். அதன் அடிப்படைத் தன்மை போர்த் தொழில் புரிவதிலேயே இருந்தது. சங்க இலக்கியங்களிலும் திருக்குறள் போன்ற நீதி இலக்கியங்களிலும் அமைச்சர், போர்வீரர் போன்றோரின் செயல்கள் சுட்டப்படுகின்றன. போருக்குச் செல்லுதல் ஒவ்வொரு ஆண் மகனுக்கும் கடமையாக இருந்தது. அது பெருமையாகவும் கூறப்பட்டது. "காளைக்குக் கடனே" (புறம்.312) எனக் கூறப்படுவது ஒவ்வொரு இளைஞனுக்கும் உரிய கடமையை வரையறுப்பதாகும். தாம் போருக்குச் செல்ல இயலாதெனப் பொதுமக்கள் பகுதியிலிருந்து குரல் எழுப்ப இயலாது. முடியாட்சிக் காலத்தில் மன்னது ஆணையே தலையாயது. "மன்னர் முதற்றே மலர்தலை உலகம்"[92] என்பதும் "மன்னவன், மக்கட்கு இறையென்று வைக்கப்படும்"[93] என்பது முடியாட்சிக் காலத்தில் மன்னனது அதிகாரத்தைச் சுட்டுவனவாகும். எனினும் இவர்கள் தம் நாட்டு மக்களைப் பேணிக் காத்தல் தம் கடமையெனக் கொண்டனர்.

குறும்பறை பயிற்றும்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் (அகம்.141:21-23)

என்று கரிகாலன் ஆணிறை மேய்க்கும் குறும்பர் குடியைப் பேணிக் காத்தான் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு ஆட்சி செய்த மன்னர்களுக்குப் போர்ப்படை முக்கியமாக இருந்தது. மன்னனின் கொடைச் சிறப்புக் கூறப்படுவதுபோல வெற்றிச் சிறப்பும் கூறப்படும். வெற்றிச் சிறப்பு என்பது அவனது படைவீரர்கள் வென்று வந்த சிறப்பே ஆகும். பெரும்பாலான மன்னர்கள் இவ்வாறே சிறப்பித்துக் கூறுப்படுவதும் அதற்கு அடிப்படையாக அவனுடைய படைவீரர்கள்

இருப்பதும் உணர்த்தப்படும். போரில் பல்வேறு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துதல் திடீரென எய்தாது. அதற்குத் தக்க பயிற்சிகள் தனியே தருதல் வேண்டும். இப்பயிற்சியை வீரர்கள் பெற்றிருந்தனர்.

போர்க்கு உரைஇப் புகன்று கழித்த வாள்
உடன்றவர் காப்புடை மதில் அழித்தலின்
ஊன்உற மூழ்கி உருஇழந் தனவே
வேலே குறும்பு அடைந்தன்ன அரண்கடந்து அவர்
நறுங்கள்ளின் நடுநைத் தலின்
சுரைதழிஇய இருங் காழொடு
மடைகலங்கி நிலை திரிந்தனவே (புறம். 97:1-8)

என்ற பாடலில் வாள், வேல் போன்ற போர்க் கருவிகள் கூறப்பட்டன. மேலும் போரிடுதலால் இசை சிதிலமடைந்ததும் இப்பாடலின்கண் கூறப்பட்டன. இக்கருவிகள் பயிற்சியுடன் தொடர்புடையனவாகும். இதுபோலவே குதிரை மீதேறியும், யானை மீதேறியும் போர்வீரர்கள் போர் புரிந்தமையும் இச்செய்யுளின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. போரில் இறப்பது புகழ் என்று பண்டைநாள் வீரர்களுக்குக் கூறபட்டது.

தாயொருத்தி தன் மகன் பேரின்கண் யானையால் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டு உவகையுற்றாள் எனக் கூறப்படுகிறது. இது சமூகத்திற்கு வழிவழியாகக் கற்பிக்கப்பட்ட மறவழி அறம். இது போர் வீரர்களுக்கும் பொருந்தும்.

மீன்கண் கொக்கின் தூவி அன்ன
வாள்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே (புறம்.227:1-4)

என்னும் பாடலால் இதனை அறியலாம். மேலும் இதன்கண் ‘சிறுவன்’ என்றது பயிற்சியுடைய போர் வீரனா அன்றிப் பொதுமக்களுள் ஒருவனா என்பது ஆராயத்தக்கது. “களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” *(புறம்.312:4)*

வரையறுக்கப்பட்ட வித்தைகளை அறிந்த போர் வீரனைக் குறிப்பதாகும். மேலும் இச்செய்யுளில் "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" (புறம்.312) என்று போர்க்கருவிகள் செய்தமை கூறப்பட்டிருப்பதால் கருவிகளைப் பயன்படுத்தும் பயிற்சி முறைகளும் கற்றுத் தரப்பட்டிருத்தலை உறுதி செய்யலாம்.

## 4.11. தொழிற்கல்வி

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் தொழில்கள் நிரம்பியிருந்ததைச் சங்க இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது. நில உடைமைச் சமூகமாக இருந்ததால் பயிர்த்தொழில் குறிப்பிடத்தக்கதாய் வளர்ந்திருந்தது. உழவுத் தொழிலில் பல்வேறு நுட்பங்களை மக்கள் கையாண்டு வந்தனர். உபரித் தொழிலாளர்கள் காணப்பட்டனர். அவர்கள் வேலையின்றி வறிதே இராமல் உழவுக்குத் தொடர்புடைய பல்வேறு தொழில்களைச் செய்து வந்தனர். இவ்வாறு வளர்ச்சி பெற்ற தொழில்கள் குறிப்பிடத்தக்க பள்ளிகளின் வழிக் கற்பிக்கப்பட்டவில்லை. அத்தகைய கல்விச் சாலைகள் இருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கப் பெற்றில. படைக்கலங்களை அடுக்கி வைக்கும் இடங்கள், யானை, குதிரைகள் போன்றவற்றைக் கட்டும் இடங்கள், சமையல் செய்யும் இடங்கள் போன்றவை காணப்படுகின்றன. இரும்புத் தொழில், மரத் தொழில், பிற உலோகங்களைப் பயன்படுத்தல் போன்றவை மக்கள் அறிந்த தொழிலாக இருந்தன. கொல்லர், தச்சர், மண்பாண்டம் செய்வோர், கயிறு பின்னல், ஆடை தயாரித்தல், போர்க்களக் கருவிகள் தயாரித்தல் போன்ற தொழில்களைச் செய்வோர் எனப் பல திறத்தினரும் காணப்படுகின்றனர். ஆனால் இத்தொழில்கள் முறைசாரா முறையில் கற்றுக் கொள்ளப்பட்டன. ஒருவரைப் பார்த்து ஒருவர் இத்தொழில்களைக் கற்றனர்.

### பூமாலைகள் கட்டுதல்

ஆண்களும் பெண்களும் மன்னர்களும் மற்ற அரசவை உறுப்பினர்களும் பூ மாலை அணியும் வழக்கம் அக்காலத்தே இருந்து வந்தது. முத்து மற்றும் பிற மணிகளையும் கோத்துக் கட்டப்படும் மாலைகளும் இருந்தன. இவைகள்

*குறிப்பிட்ட ஒரு சிலரால் செய்யப் பெற்றன. இதற்கெனத் தனி ஆட்கள் இருந்தனர். அவர்கள் இத்தொழில்களைச் செய்து வாழ்க்கை நடத்தினர்.*

சூடின இருங்கடல் முத்தமும் பல்மணி பிறவும் ஆங்கு
ஒருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேல்
அரும்பார் கண்ணிக்குச் சூழ்நூலாக
அரும்பவிழ் நீலத்து ஆய்இதழ்காண
அரும்பாற்றுப் படுத்த மணிமருள் மாலை (கலி.85:12-16)

*எனப்படும் தொடர்களில் முத்துமாலை, பூமாலை போன்றவை இடம்பெற்றுள்ளன.*

*தலைவி பல்வேறு பூக்களால் ஆன மாலைகளை அணிந்திருந்தாள் என்றும் அவற்றை விரும்பி வந்த தலைவன் பின்னர் விலகினான் என்றும் காமக்கிழத்தி கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. இதன் கண்ணும் மாலை கட்டுதல் தொழில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளதைக் காண முடியும்.*

அரிநீர் அவிழ்நீலம் அல்லி அணிச்சம்
புரிநெகிழ் முல்லை நறவோடு அமைந்த
தெரிமலர்க் கண்ணியும் தாரும் நயந்தார் (கலி.91:1-4)

*என்கிறாள் அவள். இதன்கண் பல்வேறு மலர்கள் இணைக்கப்பட்டிருந்ததால் மாலைகட்டும் தொழில் அக்காலத்தில் நிகழ்ந்தது எனக் கூறலாம். இதுபோல அரையில் அணியும் ஆபரணங்களும் செய்யப் பெற்றன. இவை குடும்பத் தொழில்களாகவே இருந்துள்ளன.*

பொலம்பசும் பாண்டிற் காசுநிறை . . .
இலங்குவளை மென்தோள் இழைநிலை நெகிழப் (ஐங்.310:1-2)

*எனவரும் தொடர்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டில், வளை போன்றவை பெண்கள் இடையிலும் தோளிலும் அணிந்த ஆபரணங்களாகும். மேலும் அகநானூற்றிலும் 'பொலங்காசு அணிதல்' (அகம்.15-16) எனக் கூறப்பட்டுள்ளது அறியலாம். கழல், சிலம்பு போன்ற அணிகலன்களும் கூறப்படுகின்றன (குறுந்.7:1).*

ஆட்டுத் தோலைப் பதப்படுத்தி அதனைப் படுக்கையாகப் பயன்படுத்தி உள்ளனர் என்னும் செய்தியை மலைபடுகடாம் கூறுகிறது.

பல்யாட்டு இனநிரை எல்லினிர் புதினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயிர் அடக்கிய சேக்கை அன்ன
மெய்உரித்து இயற்றிய மிதிஅதட் பள்ளி
தீத்துணை ஆகச் சேந்தளிர் கழிமின் (மலைபடு.416-420)

என்பது அப்பாடற்பகுதி. இவை பழங்கால மக்களால் கற்றுக் கொள்ளப்பட்டவை எனலாம். இத்தொழில்கள் ஒருவர் செய்ய, அவரிடமிருந்து அதனைப் பிறர் கற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறே தச்சர், பொற்கொல்லர் போன்றோரும் வாழ்ந்து வந்தனர். தச்சர் தேர் செய்த செய்தியினை,

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெரிர்ந்து
எம்முளும் உள்ள ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே (புறம்.87)

என்று அதியமான் அஞ்சியை ஔவையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

மன்னனைப் புகழ்ந்து பாடும் புலவர் அவன் வலிமைக்குத் தேர்க்காலை உவமையாக்குகிறார். எட்டுத்தச்சர் கூடிய எட்டு நாட்களில் ஒரு தேர்க்காலைச் செய்தனராம். சங்க காலத்தில் தேர் செய்தல் போன்ற தொழில்கள் கற்றுத் தரப்பட்டன.

ஆடை நெய்தல், ஆடை அணியும் முறை, ஆடை தைத்தல், ஆடைகளைப் பாதுகாத்தல் போன்ற கருத்துக்களையும் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. தொழில் சார்ந்த நிலையிலும் பொருளாதார உற்பத்தியிலும் பொதுமக்களில் பலரும் ஈடுபட்டிருந்தனர். பல்வேறு தொழில்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் செய்யப்பட்டன. ஒரு குழுவினர் மற்றக் குழுவினர்க்கு இத்தகைய தொழில்களைக் கற்றுத் தந்தனர்.

> பொதுமக்களில் பெரும்பாலோர் குடியானவர்கள் அன்றி இடையர், வேடுவர், மீனவர் அல்லது கைத்தொழில் செய்வோர், வணிகர் சிறப்புடை மரபினராகப் புரோகிதரும், மிகச் சிறப்புடையனான மன்னனது வேலையாட்களும் விளங்கினர். நிலைப்படைஞரும், கூலிப் படையினரும், வழிப்பறிக் கொள்ளைக்காரரும் யாண்டும் திரிதரும் பாணரும் விறலியரும் சமூகத்தின் பிறபகுதியினர், நாட்டின் வெவ்வேறு (நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என்னும்) பகுதிகளில் இருந்த வெவ்வேறு பிரிவினர் தமது உடை, ஊன் மற்றும் பிற பழக்கங்களும் இட்டுக் கொண்ட பெயர்களும் சூழ்நிலையால் வேறுபட்டன. மக்கள் பெருந்தொகுதியாக இடம்விட்டு இடம் பெயர்வது சிறுவரவிற்றாதலின் அவர்கள் தமது சொந்த ஊர்களில் பெரிதும் பற்று வைத்திருந்தனர்[94]

என்று ந.சுப்பிரமணியன் கூறுகின்றார். தொழில் செய்து நாட்டு உற்பத்தி பெருக்கப்பட்டமையும் தொழிலால் மக்கள் வாழ்க்கை நடத்தியமையும் இங்கு உணர்த்தப்பட்டுள்ளன. இவ்வகையான தொழில்கள் ஒருவரிடமிருந்து மற்றவர்க்குப் பழக்கப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. புரோகிதர் தொழிலும் ஒவ்வொருவரின் குடும்பம் சார்ந்ததாகவே இருந்தது. “உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்ற அடிப்படையில் உணவு உற்பத்தி முக்கியமானதாகக் கருதப்பட்டது. எனவே உழவுத் தொழில் பெரும்பான்மையான மக்களால் தெரிந்து வைக்கப்பட்டிருந்தது. நிலத்தைப் பொருத்தவரையில் அனைவரும் நிலம் உடையவராக இருந்திலர். ஒரு சிலர் நில உடைமையாளராகவும் மற்றவர் உழைப்பாளராகவும் இருந்தனர். உழைப்பாளர் உழவுத் தொழில் முறையை அறிந்து வைத்திருந்தனர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல் என்பன நிகழ்ந்தன. நெசவுத் தொழில், வீடு கட்டுதல், படைக்கலங்கள் தயாரித்தல் போன்ற தொழில்களும் பலர் சேர்ந்து செய்யும் தொழில்களாக இருந்தன. இதனால் அவற்றை ஒரு கூட்டு முயற்சியாகவே ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுத்தனர்.

தமிழகத்தில் பண்டைக் காலந்தொட்டுச் சிறப்பான தொழிலாக உழவு போற்றப்பட்டது. “சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்”[95] என்றது தமிழகத்து

*நிலையே ஆகும். உழவுத் தொழிலில் பின்பற்றப்படும் பல்வேறு நுட்பங்களையும் அனைத்து உழவர் குடும்பங்களும் அறிந்திருந்தன. இது மரபு வழியாகக் கூறப்பட்டதாகும். நடவு, அறுவடை போன்றவற்றில் பின்பற்றப்பட வேண்டிய முறைகளையும் அவர்கள் கற்றிருந்தனர். இன்றைய காலகட்டத்தில் உழவுத் தொழிலை நவீனப்படுத்தவும் நவீன முறைகளுடன் அதனைக் கற்றுத்தரக் கல்விநிலையங்களும் பல்கலைக் கழகங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் இந்த ஏற்பாடுகள் இல்லை எனலாம். விலங்குகளையும் சில கருவிகளையும் துணையாகக் கொண்டு இத்தொழில் நடந்தது.*

*சங்ககாலத் தமிழகம் உழவுத் தொழிலுடன் பலவகைத் தொழில்களையும் வளர்த்தது என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியலாம். உள்நாட்டு மக்களுடன் வெளிநாட்டார் சிலர் வந்து கூடித் தொழில் செய்த வரலாற்றையும் காண முடிகிறது. மகத வினைஞர், அவந்திக் கொல்லர், மாராட்டக் கம்மர், யவணத் தச்சர் என அவர்கள் சுட்டப்படுகின்றனர். கலிங்கத்திலும் காழகத்திலும் செய்யப்பெற்ற துணி வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பூவேலையுடன் கூடிய துணிகளாக அமைந்தன. சீனாவிலிருந்து இறக்குமதியான பட்டு 'சீனப்பட்டு' என அழைக்கப்பட்டது. நூல் நூற்றலில் மகளிர் ஈடுபட்டிருந்தனர். இது அவர்தம் இல்லங்களிலேயே நடந்தது.*

ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் புலாவிட் டரற்ற
சிறையும் செற்றையும் புடையுநள் ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறம்.326:1-5)

*என வரும் புறப்பாட்டுப் பகுதியில் 'பருத்திப் பெண்டிர்' என்பது நூல் நூற்ற பெண்களைக் குறித்தது. அதுவும் அவர்தம் இல்லங்களில் நிகழ்ந்தது எனச் சுட்டப்பட்டிருக்கிறது. பட்டுடை நெய்த செய்தி பொருநராற்றுப்படையில் கூறப்பட்டிருக்கிறது (பொரு.81). பூவேலையுடன் கூடிய துணி வகைகள்*

*நெய்யப்பட்டதைக் கலித்தொகை கூறுகிறது (கலி.56). மரவுரி ஆடைகளைத் துறவிகள் தரித்திருந்தனர் (திருமுருகு.126) "உண்பது நாழி உடுப்பது இரண்டே" (புறம்.189) எனக் குறிப்பிட்டிருப்பது இரண்டு உடைகள் என்பதையும் அவை வேட்டி, துண்டு என இரண்டு என்பதையும் குறித்திருப்பதாகக் கொள்ளலாம். இத்தகைய துணிவகைகளை உற்பத்தி செய்த நெசவுத்தொழில் அந்தந்தக் குடும்பத்திலும் கற்றுத் தரப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து வந்தோர் தாம் அறிந்தவற்றைத் தமிழகத்தில் சில வணிகர்களுக்கோ அல்லது தொழில் செய்வோருக்கோ கற்றுத் தந்திருக்க வாய்ப்புகள் இருந்தன.*

> கயிறு திரித்தல், போர்ப் படைகளுக்கு வேண்டிய தோல் உறைகளைச் செய்தல், வளைகள் செய்வதற்காகச் சங்கறுத்தல் தந்த வேலை முதலிய மேற்கோடல் ஆகிய செயற்பாடுகள் அக்காலத்து இலக்கியங்களில் கூறப்படுகின்றன. வீட்டில் தானியங்கள் முதலிய உலர் பண்டங்களை இட்டு வைத்ததற்குப் பயன்படும் கூடைகள் கைத்தொழிலாளர் சிலரால் முடையப்பட்டன[96]

*என்று மேலும் சில தொழில்கள் அக்காலத்தே நடந்ததை ந.சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார். இவைகளும் மரபு வழியாகக் கற்றுத் தரப்பட்டவையே.*

### 4.12. இல்லறத்தார் : கற்போர்

*ஆண், பெண் இணைந்த வாழ்க்கை இல்லற வாழ்க்கையாகும். பண்டைத் தமிழ்ச் சமூகம் இல்லறத்திற்கு முக்கிய இடம் தந்தது. அறமும், புறமும் இரு இன்றியமையாப் பண்புகளாகத் தமிழரிடையே காணப்பட்டன. கல்வி முறையில் கணவன் மற்றும் மனைவி, குழந்தைகள் எனப் பலரும் இணைந்து பலவற்றைக் கற்க முயல்வர். அதில் வெற்றி பெறுவோரும் உள்ளனர். 'குடும்பம்' என்னும் நிறுவனம் நாகரீக சமூக வாழ்வைக் காட்டும் அடையாளம் எனக் குறிக்கின்றனர். இல்லறத்தார்க்கென அமைந்த பண்புகள் யாவும் கற்பிக்கப்பட்டவையாக அமைந்துள்ளன. சிறிய குடும்பமாயினும் அல்லது பெரிய குடும்பமாயினும் குடும்பத்தில் 'மூத்தோர்' எனச் சிலர் காணப்பட்டனர். அக்குடும்பத்தில் இல்லையாயினும் பக்கத்திருந்த சான்றோர் சிலர் அறிவுரைகள் கூறிக் குடும்பத்தை நல்வழிப்படுத்தினர். நீதிநூல்கள்*

இல்லறப் பண்புகளுக்குரியனவாகப் பலவற்றை எடுத்துக் கூறுகின்றன. திருக்குறளில் 'வாழ்க்கைத் துணைநலம்' என்றதொரு அதிகாரம் அமைக்கப்பட்டிருத்தலும் தமிழ்ச் சமூக இல்லற மரபை எடுத்துரைக்கின்றன.

> இல்லறத்தானின் வாழ்க்கைக் குறிக்கோள் துறவிகள் பிரமச்சாரிகள் என்போர்க்கு உணவளித்துச் சமுதாயத்தைத் தாங்குதலேயாம். இவன் ஆற்றும் சிறந்த வேள்வி குன்றாத தன்மையோடு, விருந்தோம்புதல் இதுவள்ளுவரால் வற்புறுத்தப்பட்டது[97]

என ந.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். இதிற்குறிப்பிடப் பெற்ற சான்றோரை இல்லறத்தார் வருவித்துப் போற்றும் காரணங்களை ஆராய்ந்தால் உண்மை புலனாகும். பொதுவாகத் தற்காலத்தில் முனிவர்களையும் சந்நியாசிகளையும் சமயநோக்கோடு உபசரிக்கின்றனர். விதியையும் ஊழ்வினையையும் நம்பி, இவர்களை உபசரித்தல், எதிர்கால அல்லது மேலுலக வாழ்க்கைக்கு நலம் பயக்கும் என்னும் நோக்குடன் வரவேற்கின்றனர். சங்ககால நடைமுறை அவ்வாறில்லை. அழைக்கப்பெறும் சான்றோர்களும், துறவிகளும், கற்றவர்கள், வாழ்க்கைக்குப் பயன்தரும் கல்வியைப் போதிக்கிறவர்கள் அவர்களிடமிருந்து வாழ்க்கை குறித்த பல்வேறு அனுபவங்களை இல்லறத்தார் பெறுகின்றனர். அந்த நோக்கத்தினாலேயே அவர்கள் வரவேற்கப்பட்டனர். ஆடவர்களைப் பொருத்தவரையில் திருமணத்திற்கு முன்னரே இத்தகைய பயிற்சிகள் பல்வேறு வழிகளில் கிடைத்தன.

ஒவ்வொரு இல்லறத்து ஆண்மகனும் ஐம்பெருங்குரவர்களை வணங்க வேண்டும்; போற்றித் தம் வாழ்நாளைக் கழித்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது. அவர்கள் பெற்றோர், தமையன், ஆசிரியர், அரசர் எனப்பட்டனர். இவர்களுள் தாய் தந்தையர் முதன்மையாகக் கருதப்பட்டனர்.

முதுபெரும் புலவர்களும் சான்றோரைப் போற்றி வந்தனர் என்பதும் குடும்பத்தார்க்கும் கற்றறிந்தார்க்கும் உள்ள மொத்த உறவு இருந்ததென்பதையும் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இல்லறத்தார்க்குக்

*கற்பிப்பதும் நல்லுரைகளை எடுத்துக் கூறுவதும் சான்றோர் கடன் என்பதாகவும் பண்பட்டதொரு கல்விச் சமூகமாகச் சங்ககாலச் சமூகமும் இருந்ததாகவும் அறியமுடிகிறது.*

*சமூக மரபாகச் சிலவற்றை இல்லறத்தார் அறிந்திருந்தனர். இவை வழிவழித் தம் பெற்றோர்களாலும் முன்னோர்களாலும் நடத்திக் காட்டப்பெற்றன. விருந்தினர்களை உபசரித்து அவர்களை வழியனுப்பும்போது ஏழடிதூரம் (7 அடி) பின்னே சென்று அனுப்ப வேண்டும் என்பதை இல்லறத்தார் அறிந்து செய்து வந்தனர் என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது. கரிகால்வளவன் என்ற மன்னன் தன்னைக் காணவந்த புலவரை விருந்தளித்து விடைபெறச் செய்து அவர்பின் ஏழடிதூரம் சென்று தேரில் ஏற்றிவிட்டு வந்தான் என்று அம்மன்னனையே இந்நூல் குறிப்பிடுகிறது.*

பால்புரை புரவி நான்குடன் பூட்டி
காலின் ஏழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந்து ஏறு ஏறு என்றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்டனை தழீஇய தளரா இருக்கை
நன்பல் ஊர் . . . .                (பெருந.166-170)

*என வரும் பாடல் தொடர்கள் அரசனின் கடமைமட்டுமின்றி இல்லறத்தாரின் கடமையாகவும் கூறுதல் வேண்டும். இச்செயல்கள் மரபு ரீதியாக ஒருவரிடமிருந்து மற்றவர்க்கு வந்தடைந்தன. சில அறிவியல் தகவல்களையும் நம்பிக்கையின் அடிப்படையில் இல்லறத்தார் அறிந்து வைத்திருந்தனர்.*

மனைவியின் பூப்பிற்குப் பின் பதினைந்து நாட்கள் கணவன் அவர்களை நீங்காமை வேண்டும் என்று விதித்தனர். பூப்புக்காலத்தில் அவளோடு கலவாமை வேண்டும். விஞ்ஞான முறையில் நோக்கினும் இவை வெற்று நம்பிக்கைகள் அல்ல. கவனத்தால் பிறந்த அறிவு என்பது போதரும். அம்மூன்று நாட்களும் கூப்பிடும் தூரத்திற்கும் அவளை அணுகக் கூடாது. ஈன்றணிய மகளிர் ஊர்ப் பொதுக் குலத்திற்குக் குளிக்கச் செல்வர். தீட்டுக் காலத்தில் அவர்கள் தீண்டாதார் மட்டுமல்லர்

நெருங்கற்கும் ஆகார். அவர்கள் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக் கூடாது[98]

என அறிந்திருந்தனர். அதன்படியும் நடந்தனர். இப்பழக்கவழக்கங்கள் யாவும் இல்லறத்தார் அறிந்து வைத்திருந்தவை. குடும்பம் என்ற எல்லையில் அறிய வேண்டிய கடமைகளாகவும் இவை இருந்தன. மேலும் குடும்பத்தில் பெண்களுக்கெனத் தனியே சில கடமைகள் கற்பிக்கப்பட்டன. அவற்றை அவர்கள் பின்பற்றி நடந்தனர். கணவனும் மனைவியும் இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டனர். குழந்தைகளுக்கு அறிவுரைகள் வழங்கினர். பல குடும்பங்களில் தந்தையே மகனுக்கு இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தந்தார். ‘தந்தை சொல் மந்திரம்’ எனக் கற்பிக்கப்பட்டது.

பண்டைத் தமிழ் சமூகம் தனிக்குடும்பத்திற்கு முதன்மை தந்ததாகத் தெரிகிறது. கணவன், மனைவி, தாய், தந்தை, செவிலி, நற்றாய் போன்ற உறவுகளைத் தவிரப் பிற உறவுகள் அருகியே காணப்படுகின்றன. அண்ணன், அத்தை, தம்பி, மாமன் போன்ற உறவுகள் இல்லையெனவே கூறலாம். பெண் இல்லத்துக்குள்ளே இருந்து சமையல் தொழிலையும் பிற பணிகளையும் கவனிக்குமாறு கற்பிக்கப்பட்டாள்.

## தொகுப்புரை

கல்வியைக் கற்கும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் குறித்த ஆய்வாக இவ்வியல் விளங்குகிறது. இதில் ‘கற்றோர்’ பற்றிய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. கற்றோர் செயல்முறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மாணவர்களின் கடமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆண்களில் கற்போர், பெண்களில் கற்போர் பற்றிய தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கற்போரின் சமூகப் பொருளாதார நிலை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மாணவர்களின் குணநலன்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுள் கற்போர் பற்றிய செய்திகள், அந்தணரின் கற்றல் முறைகள், அரசர்கள் கற்போராய் இருந்த சூழல்கள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. கற்போருக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள் கற்போரிடம் இருக்கக் கூடாத தீக்குணங்கள் ஆகியன எடுத்துக்

கூறப்பட்டுள்ளன. கலைஞர்கள் கலைத்தொழிலைக் கற்றமுறைகள் கலைஞர்களின் வகைகள் ஆகியன எடுத்துக் கூறப்பட்டுள்ளன. நாடகம், கூத்து, இசை, ஓவியம் ஆகியவற்றைக் கற்றோர் விளக்கப்பட்டுள்ளனர். தொழிற்கல்வி கற்றோர் விவரிக்கப்பட்டுள்ளனர். உழவு, கருவிகள் செய்திகள், ஆடைகள் செய்தல், கட்டிடக் கலை போன்றவற்றைக் கற்றோர் பற்றியும் இவை கற்பிக்கப்பட்ட முறை குறித்தும் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது.

# இயல் 5

# பாடப்பொருள்

*சங்க இலக்கியங்கள் அகம், புறம் என இருவகையிற் பிரியும். அகத்தைப் பாடும் நூற்கள் மிகுதியாகவும், புறம் பற்றியன அடுத்த நிலையிலும் உள்ளன. இவ்விருவகை நூல்களே கற்றுத் தேர்தற்கு உதவியாய் அக்காலத்தில் அமைந்தன. தொல்காப்பியம் என்ற ஒரே நூல் குறிப்பிடத்தக்க இலக்கண நூலாக இருந்தது. மற்ற இலக்கணப் பனுவல்கள் பிற்காலத்தவை. தமிழரிடையே பல்வேறு சமயக் கருத்துக்கள் வந்து புகுந்த காலகட்டத்தில் பிற்கால இலக்கண நூல்கள் தோன்றின. அறம், ஒழுக்கம், எண், எழுத்து, யாப்புப் போன்ற அனைத்திற்கும் மேற்குறித்த நூல்களிலிருந்தே காட்டுக்கள் தரப்பெற்றன. பள்ளி என்ற தனிப்பட்ட நிறுவனம் இன்மையால் கல்வியும், கல்விக்குரிய பாடப்பொருளும் ஒட்டுமொத்த சமூகம், மரபு வழியாகப் போற்றி வந்ததையே சங்ககாலத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்குக் கற்றுத் தந்தனர். அடிப்படையில் எழுதவும் படிக்கவும் தெரிந்த நிலையில் சங்க இலக்கியங்களும் உரைகளும் இலக்கண நூல்களும் இலக்கணநூல் உரைகளும் பாடப்பொருள் போலத் திட்டமிட்டுக் கற்பிக்கப்பட்டன.*

*சங்க காலக் கல்வி பற்றிய ஆய்வில் சமுதாயத்தில் அமைத்துக் கொண்ட பாடப்பொருள் பற்றிய கருத்துக்களைச் சங்க அகச் சான்றுகள் வழியாகவும் புறச் சான்றுகள் வழியாகவும் உறுதி செய்து கொள்ளும் தேவை ஏற்படுகின்றது. அந்த வகையில் இவ்இயல் பாடப்பொருள் என்னும் தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அக்காலத்து நடைமுறையிலிருந்த பாடப்பொருளைப்* (Curriculam) *பல கூறுகளாகப் பகுத்துக் கொண்டு ஆராய்வது தேவையாகிறது. இந்நிலையில் இவ்வியல் பின்வருமாறு பிரித்தமைக்கப்படுகிறது.*

1. *பாடப்பொருள் விளக்கம்*
2. *பாடத்திட்டத்தின் சமூக நோக்கம்*
3. *பாடப்பொருளின் பல்வேறு வகைமைகள்*
4. *வேதக் கல்வி*

5. அறச்சிந்தனைகள்
6. ஒழுக்கம்
7. வீரம்
8. நீதி
9. ஆட்சிமுறை
10. குடும்பமும் இல்லறக் கடமைகளும்
11. சான்றாண்மை
12. மரபு
13. நூலறிவு

போன்றவை கற்கும் பணியில் ஈடுபட்ட அனைவர்க்கும் அவரவர் தேவைக்கேற்றாற்போலக் கற்பிக்கப்பட்டன.

## 5.1. பாடப்பொருள் விளக்கம்

'பாடப்பொருள்' என்பது மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டித் தேர்ந்தெடுக்கப்படும் பாடப்பகுதியாகும். பாடப்பொருள் பாடத்திட்டத்தில் (Syllabus) அடங்கும். தற்காலத்தில் இலக்கணம், இலக்கியம், அறிவியல் வரலாறு என்னும் பலவகைப் பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. அவற்றுள் மாணவரின் வயது, திறன் போன்றவற்றைக் கணக்கில் கொண்டு அவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாடப்பொருள்களைத் தெரிவு (Select) செய்கின்றனர். இது சமூக முன்னேற்றம், தனிப்பட்டோர் திறன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. தொடர்புடைய கல்வியாளர்களே இதைத் தீர்மானிக்கின்றனர். ஆனால் ஆதிகாலக் கல்விமுறையில் (Primitive Education) இத்தகைய திட்டமிடல் இல்லை.

> மனித சமுதாயம் நாகரிகமற்றுப் பண்படாத நிலையில் இருந்தபோது அதில் காணப்பட்ட கல்வி எளியதாகவும் முறை, ஒழுங்கு ஆகியன அற்றதாகவும் (unorganised) இருந்தது. மனிதனின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலேயே அக்கல்வி அமைந்திருந்து. நடைமுறைப் பயன்களைப் பெறுவதற்கேற்றதாகவே, கல்வி முறை

> உருவாக்கப் பெற்றிருந்தது. சமுதாயத்தில் நிகழும் செயல்களில் உண்மையாகப் பங்கு பெற்று, நேர் அனுபவங்களின் வழியே தாம் கற்க வேண்டியவற்றை அக்காலக் குழந்தைகள் கற்றனர்[1]

*என்று பழங்காலத்தில் பாடப்பொருளாகப் பின்பற்றப்பட்டவையும் அவற்றின் நோக்கத்தையும் எஸ்.சந்தானம் தம் நூலொன்றில் கூறியுள்ளார்.*

*அரசுருவாக்கத்தில் அரசின் கடமைகள் இவைஇவையெனக் கூறப்பட்டன. இவ்விதிகளைக் கூறும் தனி நூல்களும் சங்க காலத்தில் இல்லை. ஆனால் சங்க இலக்கியங்களில் அரசனின் கடமைகள் போன்றவை ஆங்காங்கே சுட்டப்பட்டிருக்கின்றன. சங்கப் புறப்பாடல்கள் அனைத்தும் அரசுடன் இணைந்த பண்பாட்டு நெறிமுறைகளைப் பதிவு செய்வனவாகக் காணப்படுகின்றன. ஆசிரியரிடம் பாடம் கேட்கும் மாணவர்களுக்குச் சில சங்கப் பாடல்கள், சில நீதிப் பாடல்கள், சமயஞ்சார்ந்த பாடல்கள் போன்றவற்றைத் தேர்வு செய்து அவற்றை ஆசிரியர்கள் விளக்கி வந்தனர். நீதி நூல்களில் காணப்பெறும் அறங்கள் முன்னரே சமூகப் பயிற்சியில் இருந்தன. சில இல்லங்களில் இவை மனப்பாடமாகவும் முதியோர்களால் கற்பிக்கப்பட்டன. சமுதாயத்திலுள்ளோர் இன்னின்னவற்றை அறிதல் வேண்டுமெனக் கற்றோரும் நூல் வல்லுநரும் கருதினர். அதையே சமூகம் கற்க வேண்டும் என விரும்பினர்.*

> தமிழர் உருவாக்கிய தூய உயர் ஒழுக்கம் அவர்கள் நாகரீகத்தின் அடிப்படையாகும். அறஉணர்வும் சமயமுமே தமிழர் உள்ளத்தில் மேம்பட்டிருந்தன என்பதை அவர்கள் பண்டை இலக்கியம் தெளிவாகக் காட்டுகிறது. நூலாசிரியர்கள் பற்றார்வம், ஈகை, வாய்மை, உயிர்களிடத்து அருளிரக்கம் ஆகிய பண்புகளைப் போற்றினர். பொருளியல் உலகின் அழிதன்மை வாய்ந்த கூறுகளை அவர்கள் ஏளனமாகக் கருதினர்[2]

*என்று வி.கனகசபை கூறுகின்றார். இந்தக் கருத்தின் அடிப்படையில் நோக்கப் பண்டைத் தமிழர்கள் அறக்கோட்பாடுகளையே பாடப்பொருளாக முன் வைத்துக் கற்றிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.*

*பாடப்பொருள் மாணவரின் நலம் கருதி அமைக்கப்படுவதாகும். திட்டமிட்டுப் பாடப்பொருள் அமைக்கும் இந்நாட்களிலும் முறைசாராக் கல்வி நிலவி வந்த பாழைய நாட்களிலும் கற்றுத்தரத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள், கருத்துரைகள் போன்ற யாவும் மாணவனின் உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை. இந்நோக்கம் நிறைவேறப் பல்வேறு செயல்முறைகள்* (Method and activities) *பிரித்தமைக்கப்படுகின்றன. தமிழைப் பொருத்தவரையில் இலக்கியம், இலக்கணம், நீதி எனப் பல்வேறு பொருண்மைகள் பாடப்பொருளாக* (curriculum) *அமைக்கப்படுகின்றன.*

> கல்வி, இலக்கிணையும் இதனோடு இணைந்து காணப்படும் வாழ்க்கை மதிப்புகள், வாழ்க்கை இலட்சியங்கள் ஆகியவற்றையும் எளிதில் அடைவதற்குப் பள்ளிப் பாடங்களும் பள்ளிச் செயல்களும் மாணக்கர்களுக்கு உதவுகின்றன. இவற்றைக் கல்வி ஏற்பாடு (curriculum) எனக் குறிப்பர். 'எவற்றைக் கற்பிப்பது என்னும் முக்கிய வினாவிற்கு விடையாகக் கல்வி ஏற்பாடு அமைகிறது.' கற்றல் என்பதற்கு ஆன்மீகக் கல்வியைப் பெறுதல் என்று பழந்தமிழகத்தில் பொருள் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. ஆகவேதான் கல்வி சம்பந்தமான அடிப்படைச் சொற்கள் சமயப் பொருண்மை உடையதாக விளங்குகின்றன. கீழை நாடுகளிலும் தொடக்கத்தில் சமயக்கல்வியே பயிற்றுவிக்கப் பெற்றது[3]

*என்று பழங்காலப் பாடப்பொருள் பற்றிக் கூறப்படுவது எண்ணத்தக்கது. இது சங்க காலத்திற்கும் பொருந்தும். குறிப்பிட்ட சமயத்தாக்கம் சங்க காலத்தில் இல்லையெனினும் 'இறைவன்' பற்றிய கருத்துக்கள் நம்பிக்கை ஊட்டி வந்தன. இதன்கண் கூறப்பட்டுள்ள,*

1. *வாழ்க்கை மதிப்புகள்*
2. *வாழ்க்கை இலக்கியங்கள்*
3. *ஆன்மீகச் சிந்தனைகள்*

*போன்றவை சங்க காலத்தில் அடிப்படையில் மாணாக்கர்க்குக் கற்பிக்கப்பட வேண்டிய பொருள்களாகச் சமுதாயத்தால் கருதப்பட்டன. இவற்றைக்*

கொள்கையாகக் கொண்டொழுகியவர்கள் ஆசிரியர்கள் என்றும், சான்றோர் என்றும், கற்றோர் என்றும் போற்றப்பட்டனர். இறைவனே வேத முதல்வன், அனைத்தும் கற்றவன் என்பதை, இயன்ற எல்லாம் பயின்று அகத்தடக்கிய வேதமுதல்வன்[4] எனக் கூறப்பட்டதும் சிந்திதக்கத்தக்கது. இறைவனுக்கு இருக்கும் அனைத்துப் பெருமைகளினும் 'கற்றவன்' என்ற பெருமை உயர்த்திக் கூறப்படுகிறது.

பழங்காலக் கல்வி முறையில் 'பாடப்பொருள்' இதுவெனத் தனித்துக் குறிப்பிடாது மரபைப் பின்பற்றினர். ஆசிரியர் பாடம் சொல்லும் முறையை நன்னூல் இலக்கணம் "ஈதல் இயல்பு"[5] என்கிறது. இவ்வியல்பை வெளிப்படுத்தும் ஆசிரியர், "உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து"[6] பாடம் கூற வேண்டும் எனவும் கூறுகிறது. இவ்வாறு கூறுவதால் பாடப்பொருள் நண்குணரப்படும். உரைக்கப்படும் பொருளை ஆசிரியர் முன்னரே தேர்ந்து விடுகிறார். எதை எதை மாணாக்கர்க்குக் கூற வேண்டும் என்று ஆசிரியர் திட்டமிடுகிறார். இத்திட்டமிடலே பாடப்பொருளாக அமைகிறது. தாகூர் தமது கல்விக் கொள்கையில் பாடத்திட்டத்தை வரையறுத்துள்ளார். இதனால் எந்தக் கல்விக் கொள்கையிலும் பாடப்பொருளே இன்றியமையாததாக அமைகிறது என்பதை உணரலாம். அவர் தம் கல்வி நிறுவனமான 'சாந்தி நிகேதன்' நிறுவனத்தில் அமைய வேண்டிய பாடத்திட்டத்தை வரையறுத்துக் கூறுகிறார்.

> பாடத்திட்டம் பற்றிக் குறிப்பிடும் இவர் வரலாற்றுப் பாடம் அனைவரும் படிக்க வேண்டும். உயர்நிலைகளில் அறிவியல் முக்கியத்துவம் பெற வேண்டும். தாய்மொழியிலேயே தொடக்கக் கல்வி அமைவதும் உடல் உழைப்பை மேற்கொள்வதும் நலம். மொழி இலக்கியம், புவியியல், இயற்கைப் பாடம், இசை, கலை முதலிய பாடங்களும் அவசியம் என்பனவற்றை வலியுறுத்துகிறார். புத்தகப்படிப்பை மட்டும் நம்புவது தவறு. வளமான கற்றல் செயல்களான நாட்டியம், நாடகம், ஓவியம், வண்ணம் தீட்டுதல், கைவேலை, இன்ப பயணங்கள், தோட்டக்கலை, இசைக்கலை ஆகியவை பாட ஏற்பாட்டிலே முக்கிய இடம் வகிக்க

> வேண்டும். அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வியை அளிக்க முற்படுதல் தீமை பயக்கும்[7]

*என்பது அவர் கருத்தாக அமைகின்றது.*

*பாடப்பொருள் பற்றிய கருத்தை வரையறுக்கும் போது கல்வியின் நோக்கத்தை வரையறை செய்து கொள்ள வேண்டியுள்ளது. கல்வியின் நோக்கத்தை வரையறை செய்து அதனை நிறைவேற்றும் வகையில் பாடப்பொருள் அமைய வேண்டும் எனக் கல்வியியல் அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். மக்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ற கல்வியும் மாணவர்களின் உடல்நலத்தையும் உள்ளப் பண்பையும் வளர்க்கும் கல்வியும் பாடப்பொருளில் எடுத்துக் கூறப்படவேண்டும் என்கின்றனர்.*

> அடிப்படை இலக்கினையும் இதனோடு இணைத்துக் காணப்படும் வாழ்க்கை மதிப்புகள், வாழ்க்கை இலட்சியங்கள் ஆகியவற்றையும் எளிதில் அடைவதற்குப் பள்ளிப் பாடங்களும் பள்ளிச் செயல்களும் மாணாக்கர்களுக்கு உதவுகின்றன. இவற்றைக் கல்வி ஏற்பாடு (curriculam) எனக் குறிக்கின்றனர்[8]

*என்பர்.*

*சங்க கால மக்கள் சடங்குகளுக்கு முதன்மை தந்தனர். இனக்குழுக் காலத்தில் பின்பற்றப்பட்ட சடங்குகள், சங்க காலத்திலும் தொடர்ந்தன. சடங்குகளைச் செய்து முடிப்பதற்குத் தனியாட்கள் நிறுவப்பட்டிருந்தனர். அவர்கள் பெரும்பகுதியும் பார்ப்னர்களாக இருந்தனர். சடங்குகளைச் செய்யும் முறைகள் பற்றி இவர்கள் நன்கறிந்திருந்தனர். இதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. அதற்கெனத் தனி ஆசிரியர்களும் இருந்தனர். அவர்கள் சடங்குகள் செய்யப்பட வேண்டிய முறைகள் பற்றி அறிவித்தனர்.*

> இனக்குழு மக்கள், தமது அன்றாட ஆர்வங்கள் நிறைவேற, முதலில் மந்திரச் சடங்குகளைச் செய்தனர். இச்சடங்குகள் அவர்களுக்கு அவசியமான மழை, உணவு, வேட்டை, கால்நடை, வெற்றி, பாதுகாப்பு, சேமிப்பு ஆகியவற்றைத் தரும் என்று கருதினர். இவை

> ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சடங்கு செய்தனர். இச்சடங்குகளைக் கூட்டாகச் செய்தனர். அதனைத் தொடர்ந்து கூட்டாக அம்முயற்சியில் ஈடுபட்டனர். அம்முயற்சியில் வெற்றியோ தோல்வியோ ஏற்படும். வெற்றி பெற்றால் மகிழ்ச்சியில் 'உண்டாட்டு' நடைபெற்றது. தோல்வியால் சோர்வு பெற்றனர். மறுமுறை மீண்டும் மந்திரச் சடங்கு செய்தனர். அதனால் உற்சாகமும் ஊக்கமும் பெற்றுச் செயலாற்றினர். இவ்வாறு இனக்குழு வாழ்க்கையில் சடங்கே வாழ்கையாகவும் வாழ்க்கையே சடங்காகவும் அமைந்தன[9]

*என்று கா.சுப்பிரமணியன் தம் நூலொன்றில் குறிப்பிடுகின்றார். எனவே சிறு தொழில்கள் முதற்கொண்டு பல்வேறு கலைத் தொழில்கள் வரை நிரம்பப் பெற்றிருந்த காலமாகச் சங்க காலம் இருந்தது. ஒவ்வொன்றையும் கற்பிக்கத் தனிமனிதர்கள், நிறுவனங்கள் எனத் தனித்தனியே செயற்பட்டனர். இவருள் சமூக ஆய்வாளர் குறிப்பாகக் கல்வியாளர் போன்றோர் காணப்பட்டனர். அவர்களுள் பெரும் பகுதியினர் அந்தணர்களாக இருந்தனர்.*

## 5.2. பாடத்திட்டத்தின் சமூக நோக்கம்

*பாடத் திட்டங்கள் சமூக நோக்குடன் அமைக்கப்படுகின்றன. சமுதாயமின்றிக் கல்விச் செயல் அமையாது. சமுதாயத்தில் தனி மனிதன் முதன்மையாகக் கருதப்படுகிறான். ஒவ்வொரு தனி மனிதனையும் சீர்படுத்திப் பண்பாட்டு நிலையிலும் பொருளாதார நிலையிலும் சமூகத்தில் அவன் சிறந்தவனாக வாழ வேண்டும் என்பது சமூக நோக்கமாக அமைகிறது. இதற்கேற்றாற்போலக் கல்வித் திட்டங்களும் அமைதல் வேண்டும். சமுதாயம் பல்வேறு குழுக்களால் ஆனது. தன்னைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு மனிதனும் மற்றவரின் வாழ்க்கைக்கு முரணாக வாழ இயலாது. எனவே பிறர்க்கு உதவியோ அல்லது பிறரைச் சார்ந்தோ வாழ வேண்டியுள்ளது. அதற்கான நெறிமுறைகளை மனிதர்களுக்குக் கற்றுத் தர வேண்டும் என்ற நோக்கிலும் பாடத்திட்டங்கள் அமைகின்றன. பாடப் பொருளின் தலையாய நோக்கத்தை சி.பக்தவத்சலபாரதி தம் நூலில் பின்வருமாறு கூறுகிறார்.*

> பண்பாட்டை இளந்தலைமுறையினர்க்கு அளிக்க வேண்டும் என்பது கல்வி நோக்கங்களில் தலையாயது. பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது. மனிதன் பிறந்த நாள் முதற்கொண்டு இறக்கும் நாள்வரை பண்பாட்டைச் சமுதாயவயமாக்கம், பண்பாட்டு வயமாக்கம் மூலம் கற்கிறான். கற்பிக்கும் நிறுவனம் பெற்றோர்களாகவோ, குடும்பமாகவோ, ஒப்பார் குழுவாகவோ நிறுவனங்களாகவோ இருக்கின்றன[10]

*என்கிறார் அவர். மேலும் மனித குலத்தின் தொடர்ந்த நல்வாழ்விற்கு அடிப்படைகளாக அமையும் அறிவு, செயல்திறன்கள், மனப்பான்மைகள் போன்றவை யாவும் பண்பாட்டுக் கூறுகளுள் அடங்கும் என்கின்றனர்.*[11]

*திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகாரத்தில் உலகத்தோடு ஒன்றி ஒழுகும் பண்பாட்டை இணைத்துள்ளார். அதனையும் கற்றல் என்றே குறிப்பிடுகின்றார்.*

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்[12]

*என்கிறார் அவர். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலைக் கற்றவரே கற்றவர் என்றும் அதனைத் தவிர்த்துப் பிறவற்றைக் கற்றிருப்பராயின் அவர் தம்மைக் கல்லாதவர் என்றும் குறிப்பிடுகின்றார். இது கல்வி சமூகம் சார்ந்த ஒன்றாக அமைந்திருப்பதை விளக்குகின்றது. இதனை விளக்கும் பரிமேலழகரும்,*

> உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகிய ஆற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க உலகத்தோடு ஒட்ட என்று கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றும் கூறினார்[13]

*எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து மேலதை வலியுறுத்துவதே ஆகும். மனிதனுடைய மனம் பலவற்றை விரும்புகின்றது. அவன் அதனால் ஆசையில் மிதக்கிறான். அவன் அறிவும் எண்ணமும் எதை விரும்புகின்றனவோ அதனைச்*

*சூழ்நிலையே அவனுக்கு அளிக்க வேண்டும்*[14] *என்று இரவீந்திரநாத் தாகூர் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அமைக்கப்படும் சமூகக் கல்வி தேசிய அளவிலும் முக்கியத்துவம் பெறுகிறது. நாடு முழுமைக்குமான கல்வியும் சமூக நோக்கம் கொண்டதாக அமைய வேண்டும் என்று கல்வியாளர் கூறிவருகின்றனர்.*

> தேசியக் கல்வி கொள்கை, சுயவேலை வாய்ப்பு, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, ஆளுமைத்திறன் ஆகியவற்றை இன்றைய இளைஞர்கள் பெற்றிடக் கல்வி உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. மேலும் சிந்தனைத் திறனை வளர்த்தல், ஆழ்ந்த அறிவுக்கு வழிவகுத்தல் ஆகியவையும் சிறப்பு நோக்கங்களாகும். படைக்கும் திறனையும் சிந்தனைத் திறனையும் வளர்த்து எதிர்காலத்தில் ஈடுகொடுக்கும் எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குவது கல்வியின் தலையாய நோக்கம் ஆகும்[15]

*என்று இ.பா.வேணுகோபால் தம் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே சமூகம் அடுத்த கட்ட வளர்ச்சியை எட்டும் நோக்கில் கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும் என்பது கருத்தாகிறது. இவையாவும் பாடப்பொருள் சமூக நோக்குடன் அமைவதே தேவை என்பதை வலியுறுத்துவன.*

*கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள் என்ற நூலில் கல்வியியல் அறிஞர் எஸ்.சந்தானம் பலவற்றைக் குறிப்பிடுகின்றார். அவர்,*

1. *உடல்நலம்*
2. *தொழில்திறன்*
3. *பொதுத்திறன்கள்*
4. *குடும்ப ஒத்துணர்வு*
5. *சிறந்த பெற்றோராக விளங்குதல்*
6. *சமூக ஒப்புரவு*
7. *ஓய்வுநேரப் பயன்பாடு*

*என்பவற்றை முக்கியமாகக் குறிப்பிடுகின்றார். இதில் உடல்நலம் என்பது யாவர்க்கும் பொதுவானது. ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களும்*

நோயின்றி நலத்துடன் வாழ வேண்டும் என்பதை முடியாட்சிக் காலநூல்களே வரையறுத்துள்ளன. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் காதலை உணர்த்துவதும் எடுத்துக் கூறுவதும் 'கல்வி' என்று பிற்காலச் சான்றோர்களால் எண்ணப்பட்டது.

> காதலையும் அதன் உணர்வையும், அதன் கல்வியையும் தெளிய வேண்டின், தெளிவுக்கு வேறிடமில்லை. தமிழ்ப் பேரினம் கண்ட அகத்திணையை நாடுக. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் என்ற முத்தமிழ் நூல்களைக் கற்க முந்துக[16]

என்கிறார் வ.சுப. மாணிக்கம். பொதுவாகப் பாடத்திட்டம் சமூக நலம் சார்ந்ததாய் அமைய வேண்டும் என்றும் ஏதோ ஒரு குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் மட்டும் அமையக் கூடாதென்றும் கல்வியாளர்களும் அறிஞர்களும் அரசியல் சிந்தனையாளர்களும் கருதுகிறார்கள். பல்கலைக்கழகங்களுக்குக்கூட இவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்திற்கும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் பிற தமிழ் அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் இத்தகைய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மதுரைப் பல்கலைக்கழகத்திலும், தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் 'ஜோதிடம்' பாடமாகப் போதிப்பதில் உள்ள அரசியல் சமூகப் போக்கைச் தலைவர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் சோதிடம் பாடமாக வைக்கப்பட்டதை எதிர்த்துப் 'போராட்டம்' என்னும் தலைப்பில் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சோதிடத்தைப் பாடமாக வைப்பதைக் கண்டித்து வரும் மார்ச் 3 ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும். . . சோதிடத்தைச் சொல்லிக் கொடுக்கும் பட்டய வகுப்பை நடத்தவிருப்பதாக ஏடுகளில் விளம்பரம் வெளிவந்துள்ளது. அறிவியலுக்கு விரோதமான மூடநம்பிக்கையின் மறுவடிவமான சோதிடத்தை ஒரு பல்கலைக் கழகத்தில் சொல்லிக் கொடுக்க முடிவெடுப்பது அபத்தமானது - கண்டிக்கத்தக்கது . . . இந்திய அரசமைப்புச் சட்டத்தில் (51-A(H)) விஞ்ஞான மனப்பான்மையைப் பரப்ப வேண்டியது ஒவ்வொரு குடிமகளின் அடிப்படைக் கடமை என்று

> வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கே விரோதமாக ஒரு பல்கலைக்கழகம் சோதிடத்தைக் கற்பிக்க முயற்சிக்கலாமா? . . . மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இப்படித்தான் சோதிடப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. . . சோதிடம் (Astrology) என்பது வேறு. வானியல் (Astronomy) என்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் போன்றவர்கள் சோதிடத்தை அறிவுலகம் ஏற்காது என்றும் எத்தனையோ லட்சம் மைல்களுக்கு அப்பால் உள்ள கிரகங்கள் பூமியில் மனித வாழ்வைப் பாதிக்கும் என்று எப்படித்தான் நம்புகிறார்களோ என்ற அறிவார்ந்த வினாவை எழுப்பியுள்ளார்[17]

என்று செய்தித்தாள் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. இக்கருத்து மாணவர்களுக்கென அமையும் பாடத்திட்டம் பெற வேண்டிய தன்மையையும் சமூக நோக்கத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

பாடத்திட்டத்தில் சமூக நோக்கம் பெரும்பகுதியும் உடல்நலம் மனநலம் குறித்த பதிவுகளாக அமைய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. உடற்பயிற்சி, விளையாட்டுப் போன்றவை இந்த நோக்கத்திற்காகவே அளிக்கப்படுகின்றன. பள்ளிகளில் ‘விளையாட்டுப் பாடவேளை’ என்ற பாடவேளையும் (period) மாலை நேரங்களில் ஒதுக்கப்படுகிறது. உடற்கல்வி ஆசிரியர் என்று பள்ளியிலும் உடற்கல்வி இயக்குநர் (Physical Director) கல்லூரிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் அழைக்கப்படுகின்றனர். இதனைத் தவிர்த்து, NSS, NCC போன்ற அமைப்புகளும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இயங்குகின்றன. இவற்றின் மூலமாக உடற்பயிற்சியும், சமூக நலன் சார்ந்த ஒழுக்கம் தொடர்பான பயிற்சிகளும் மாணவர்கட்குத் தரப்படுகின்றன.

‘பாடத்திட்டம்’ சமூக இழிவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் போக்கக் கூடியதாக அமைய வேண்டும். அனைவருக்கும் இலவசக் கல்வி என்ற திட்டம் இந்த நோக்கத்திலேயே கொண்டுவரப்பட்டது.

> உண்மையான கல்வி அவனுக்கு (மாணவனுக்கு) வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை உயர்ந்த குறிக்கோள்களை, உயர்ந்த நிலையை அடைய உதவ வேண்டும். அதைப் பெற நம் முன்னோர்கள் நல்நம்பிக்கை, அந்த நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்த நல்ஞானம், அந்தக் கல்வி வழியில் நல்லொழுக்கம் ஆகிய மூன்று இரத்தினங்கள் வேண்டும் என்றனர்[18]

*என்கிறார் அகம்பன் எனும் ஆய்வாளர் ஒருவர். சமூக நோக்கத்தில் வாழ்வின் தாழ்வுகளைப் போக்கி மக்களை நன்னிலைக் கொண்டுவரும் கல்வி பாடத்திட்டத்தில் அமைய வேண்டும் என இவர் இதன்வழி வற்புறுத்துகிறார். மேலும் இவர்*

> கல்வி முறை இந்திய மயமாக்கப்பட வேண்டும் நம் நாட்டு வாழ்க்கை முறைக்கும் உண்மை வாழ்க்கைக்கும் உதவும் வகையில் அது அமைய வேண்டும். மகாத்மாகாந்தி அறிவித்த தொழில் வழிக்கல்விமுறை நடைமுறைக்கு வர வேண்டும். ஒரு நாளில் ஒரு வேளை கல்வி கற்றல், மறுவேளை தொழில் பயிலுதல், பயிற்சி பெறல், சமூகசேவை போன்றவற்றைச் செய்தல் வேண்டும்[19]

*என்றும் சமூகக் கல்வியை விளக்குகிறார்.*

## 5.3. பாடப்பொருளின் பல்வேறு வகைமைகள்

*'பாடப்பொருள்' பற்றிய நோக்கங்களும் தேவைகளும் காலத்திற்குக் காலம் வேறுபட்டே வந்துள்ளன. மாணவர்களின் வாழ்க்கை வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாய்க் கொண்டது இது. பழங்காலத்தில் பாடப்பொருள் வரையறுக்கப்படவில்லையெனினும் அடிப்படையில் மரபு வழியில் ஒரு கொள்கை பின்பற்றப்பட்டு வந்தது. சமூகக் குழுக்களுக்கேற்பச் சிலவகைப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் முறையில் இவை கற்பிக்கப்பட்டன.*

> பண்டைக்காலக் கல்வியின் நோக்கங்கள், முறைகள், அமைப்பு, பள்ளி நிருவாக விவரங்கள் ஆகியவை பற்றி அறிந்து இன்றைய கல்விநிலையுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கல்விக்

கருத்துக்கள், முறைகள் ஆகியன பொதுவாக எவ்வாறு காலப்போக்கில் வளர்ச்சி பெற்றன என்பதனை நம்மால் உணரமுடியும். . . . சமூக அமைப்பிலும் கல்வி முறையிலும் மாறுதல் எழுவது இயற்கை ஆகும். அம்மாறுதல்களை ஓரளவேனும் கட்டுப்படுத்தித் திசைப்படுத்த (Guide) கல்வி வரலாறு நமக்கு உதவும். . . . . கல்வி உலகில் ஒரு கருத்து அல்லது ஒரு போக்கு காணப்பட்டால் எந்த அளவுக்கு அது பயனள்ளது. அது போன்ற கருத்தோ, போக்கோ முற்காலத்தில் காணப்பட்டது அன்று. அதனால் எத்தகைய நன்மை எழுந்தது என்பன பற்றி ஆராயாமல் செயற்படும் மனப்பான்மை சிலரிடம் எழக்கூடும். அல்லது புதியது என்று ஒன்றுமே கிடையாது, முன்னேற்றம் என்று கூறுவது மாயையேயாகும். எல்லாம் நமது முன்னோர்களால் முன்பே சிந்தித்துச் செயலாக்கப்பட்டுள்ளன என்ற மனப்பான்மை எழுந்து குறுகிய பழமைப் பற்றினைத் தோற்றுவிக்கக்கூடும்[20]

*என்று எஸ்.சந்தானம் தெரிவிக்கின்றார். இது பழங்கால நிலை. பழங்காலக் கல்வி முறையில் மக்களின் மனநிலையையும் இதன்கண் ஆசிரியர் விளக்குகின்றார்.*

## 5.4. வேதக்கல்வி

*வேதக்கல்வி என்பது வேதங்கள் கூறுகின்ற கருத்துக்களை எடுத்துக்கூறி இறைவன் பற்றிய கருத்துருவைப் பதிவு செய்தலாகும். குறிப்பாக இக்கல்வி முறையில் வேதங்கள் மாணவர்க்கு மனப்பாடம் செய்யுமாறு வற்புறுத்தப்பெறும். இக்கல்வி முறையை பிராமணர்களே கற்று வந்தனர்.*

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
குலவொழுக்கம் குன்றக் கெடும்[21]

*என்கிறார் வள்ளுவர். ‘மறத்தல்’ என்பது கற்றதை மறத்தல். பார்ப்பனர்களே வேதத்தை மனனம் செய்தனர் என்பதும் அது மறத்தல் அரிது என்பதும் இதனாற் சுட்டப்பட்டன. வேதத்தைக் கற்றல் அந்தணர்களுக்கே உரியது என்பதை இக்குறள் வலியுறுத்துகின்றது. இது ஒழுக்கத்தையே வலியுறுத்துகிறது எனக் கூறவரும் பரிமேலழகர்,*

> மறந்தவழி இழிகுலத்தானாம் ஆகலின் மறக்கலாகாது என்னும் கருத்தான் 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின் இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்[22]

*என்கிறார் பரிமேலழகர். இஃது வேதம் கற்றலும் அதனை மறவாது பயிற்சி செய்தலும், ஒழுக்கம் தவறாது நடத்தலும் அந்தணர்க்குரியது என்பதை வலியுறுத்தும். பழங்காலத் தமிழகக் கல்வி முறையை 'பண்டைய தமிழர் கல்விமுறை' என்ற தலைப்பில் விளக்கும் எஸ்.சந்தானம்,*

> முற்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த கல்வி முறை, கல்வி அமைப்பு ஆகியன பற்றிப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து பல கருத்துக்களை நாம் பெறலாம். பிராமணக் கல்வி முறையின் தன்மையைச் சார்ந்தமையால், அதே காலத்தில் தனிச்சிறப்போடு ஒருப்பெற்று வளர்ந்த கல்விமுறை அன்று தமிழ்நாட்டில் கல்வி சிறப்புற்று விளங்கியதென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் அரசர் முதல் சாதாரண குடிமக்கள் வரையிலும் கல்வியறிவு பரவிக் காணப்பட்டது. சாதி, சமய வேறுபாடின்றி, எல்லா மக்களுக்கும் கல்வி புகட்டப்பட்டது என்பதும் பெண் கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டதென்பதும் தெளிவு் கல்வி ஏற்பாட்டில் மொழிக் கல்வி முதலிடம் பெற்றது. எனினும் பிறகலைகள் புறக்கணிக்கப்படவில்லை[23]

*என்று தமிழர் கல்விமுறை கூறப்படுகிறது. இதற்கு முற்றிலும் மாறாக வேதக்கல்வி முறை இருந்தது.*

*'வேதகாலக்கல்வி முறை' பிராமணக் கல்விமுறை என்றே அழைக்கப்பட்டது. இந்தியப் பண்பாட்டுடன் இந்தியக் கல்விமுறை இணைந்ததாகும். ஆசிரியர்கள் எனப்படும் பிராமணர்கள் இந்தியக் கலை, சமயம், தத்துவம் போன்றவற்றை உருவாக்கியதிலும் முக்கியப் பங்கு கொள்கின்றனர். இந்தியப் பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியன வேதங்களிலிருந்து கிடைக்கின்றன. இவற்றை வேதங்கள் பரவலாகக் கூறுகின்றன. வேதங்களுள் பழமையானது ரிக் வேதமாகும். வேதங்களில்*

*காணப்படும் துதிப்பாக்கள் (hyms) தந்தையிடமிருந்து மகனுக்கு வழிவழியாகக் கற்றுத்தரப்பட்டது.*

> வேத அறிவு பெற்ற பிராம்மண மதக்குருக்கள் இத்துதிப்பாக்களையும் காலத்தால் இவற்றிற்குப் பின் எழுந்த சடங்கு முறைகள் பற்றிய விவரங்களையும் தங்களது குடும்பத்திலுள்ள தம் மகன், பிற நெருங்கிய ஆண் உறவினர் ஆகியோருக்குக் கற்பித்துத் திரும்பத் திரும்ப அவற்றை அவர்கள் பயிலுவதன் மூலம் அவற்றை நெட்டுருச் செய்ய வழிவகுத்தன. இந்நிலையே பிராம்மணக் கல்வியின் தொடக்கமாகும்[24]

*என்று வேதகாலக்கல்வி பிராமணர்க்குரிய கல்வி என உறுதி செய்கின்றனர். ஆயினும் பிற்காலத்தில் 'கல்வி' அனைவர்க்கும் பொது என்ற நிலை ஏற்பட்டது. தொன்மை அறநூலாம் திருக்குறள் எல்லார்க்கும் பொதுவாகவே,*

> கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக[25]

*எனக் கூறுகிறது. இக்கல்விமுறை எல்லாப் பொருளையும் சுட்டியதாம்.*

> வள்ளுவர் குறிப்பிட்ட ஒருவருக்கன்றி உலகிற்கே கட்டளை இடுகின்றாராதலின் ஏவலில் (முன்னிலையில்) கூறாது, வியங்கோளில் (படர்க்கை) கூறுகின்றார். கற்க வேண்டுவனவற்றைக் குற்றமறக் கற்பாராக என்பது ஒரு கட்டளை. "கற்றவாறு வாழ்வாராக" என்பது மறுகட்டளை[26]

*என்கிறார் அகம்பன் என்னும் ஆய்வாளர்.*

*பொதுவாகத் தமிழகச் சூழலில் கல்வியைப் புகட்டும் நூல்கள் அகம், புறம் என்ற இருபொருளையும் அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுள் ஒன்றன் பண்பு கொண்டு இந்நூல்கள் காணப்படுகின்றன. வேதநூல்களைக் கற்பிக்கும்போது இப்பொருள்கள் அவற்றுள் இல்லையென்பதை வெளிப்படையாகவே சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன.*

> பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
> செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
> தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
> படிவ உண்டிப் பார்பன மகனே

எழுதாக் கற்பின் நின்சொல் லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே (குறுந்.157)

*என்று நெடுங்கண்ணனார் என்ற புலவர் பாடுகின்றார். 'பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின் மருந்தும் உண்டோ?' என்பதில் வரும் ஓகார வினா இல்லையென்பதன் பொருட்டு. எனவே தக்க கல்வியும் தமிழர் கல்வியும் அடிப்படையிலேயே வேறுவேறானவை என்பதை இச்செய்யுள் உணர்த்துகின்றது.*

வைதீக நெறியினரின் துறவொழுக்கையும் அகப் பொருள் நெறிநுவலா வேதக் கல்வியையும் தெளிவுற இப்பாட்டு எடுத்துரைக்கின்றது. குறுந்தொகை அகநூலாயினும் அதில் சமயக் கருத்துக்கள் சிற்சில வேறுவடிவில் இடம்பெற்றிருக்கக் கூடும். பௌத்த சமய நெறிகளின் சிறந்த கூறுகள் எவையேனும் தமிழ்ச் சான்றவரைக் கவர்ந்திருக்கலாம். 'நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார், விலங்கிரு முந்நீர்க்காலிற் செல்லார்' என்பன புத்தரைக் குறித்த என்பர் அறிஞர்[27]

*என எஸ்.என்.கந்தசாமி தம் நூலிற் குறிப்பிட்டுள்ளதை, கு.வெ.பா. எடுத்துரைக்கிறார்.*

*பழங்காலத்தில் சங்கச் செய்யுட்களைக் கற்பதே தமிழர் கல்வியாயிற்று. இவையன்றி நிகண்டு போன்ற பலவற்றையும் தமிழர் கற்றனர். வேதக்கல்வி தமிழர்க்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. கலைஞர்கள் வாய்வழியாகப் பாடி வந்த பாடல் பிற்காலத்தில் புலவர்களால் செய்யுட்களாகப் பாடப்பட்டன. குறிப்பாக ஆசிரியப்பாவால் பாடப்பெற்றன. எனவே சங்கச் செய்யுட்களும் அவற்றில் அமைந்த யாப்பு, எழுத்து, சொல் பற்றிய இலக்கணங்களும் பாடப்பொருளாயின எனத் தெரிய வருகிறது. சங்க இலக்கியங்கள் நிரம்பப் பாடப்பெற்ற நிலையிலும் அவை தமிழகத்தே வதிந்த அந்தணர்களுக்குப் பயன்பட்டதே ஆயினும் அவர்கள் வேதத்தையே தமது கல்விப் பொருளாகக் கொண்டனர் எனவும் தெரிகிறது.*

புலவர்கள் உருவாகி எழுத்திலக்கத்தியத்தைப் படைத்தற்கு முன்னர்ப் பாணர்கட்கும் வள்ளல்கட்கும் இடையே மிகவும் நெருக்கமான உறவு

> இருந்ததென்றும், புலவர்கள் தோன்றிய பின்னும் பாணர்க்கும் அவர் போலும் பிற கலைஞர்கட்கும் பழைய உறவு நீடித்ததெனினும் கற்றுவல்ல சான்றோரோடு அவர்களால் போட்டியிட முடியவில்லையென்றும் நாளாக ஆகப் புலவர்களின் செல்வாக்கு மிகவே, கலைஞர்கள் பின்னணிக்குத் தள்ளப்பட்டனரென்றும் கருத வேண்டியுள்ளது[28]

*என்று அ.தட்சிணாமூர்த்தி தம் நூலில் எழுதுகிறார்.*

*பழந்தமிழ்ச் செய்யுட்கள் தோன்றிய முறையும் அவை சமூகத்தில் செல்வாக்குப் பெற்றமையும் எவ்வகையிலும் வேதக்கருத்துக்களைப் புலவர்கள் எடுத்துக்கொள்ள முயலாமையும் இதன்வழி அறியப்படுகின்றன. 'வேதக்கல்வி' அந்தணர்க்குரியது என்பதைத் தொல்காப்பிய மரபியலும் உணர்த்துகின்றது.[29]*

## 5.5. அறச்சிந்தனைகள்

*சங்க காலச் சமூகத்தில் அறச்சிந்தனைகள் இல்லந்தோறும் கற்பிக்கப்பட்டன. இதற்கெனத் தனிப்பள்ளிகள் இல்லை. இளைஞர்களுக்கு நல்லொழுக்கம், நற்செயல்கள் போன்றவை இல்லங்களிலுள்ள பெரியோர்களால் கற்பிக்கப்பட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் முதியோரின் நடத்தை முறைகளே கற்றல் செயல்களாக அமைந்தன. 'அறம்' என்பது கற்றறிந்த சான்றோர்களால் விளக்கி உரைக்கப்பட்டது. ஒரு சூழலில் ஆரியர்களின் நூல்களில் குறிப்பிடப்பட்ட அரசியல் மற்றும் சமூக நற்செயல்கள் அறம் என உணர்த்தப்பட்டன. இவை சமூகக் கட்டுப்பாட்டையும்* (etiquette of society) *வளர்ந்தன.*

> அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்[30]

*எனப் பரிமேலழகர் உரைத்திருப்பது வள்ளுவர்க்கு முன்னுள்ள சமூக நிலையை உணர்த்துவது. அறம் இன்றியமையாத ஒன்றாக ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவன் வாழும் சூழ்நிலைக்கேற்றவாறு கற்பிக்கப்பட்டது. ஆசிரியரிடம் சென்று பாடம் கற்கும் முன்னரே, எண், எழுத்து ஆகியவற்றைக் கற்கும் முன்னரே*

*தத்தமக்கு உரைக்கப்பட்ட ஒழுக்கங்களைப் பின்பற்றும்படி மக்கள் வற்புறுத்தப்பட்டனர்.*

> அந்தணர் முதலிய வருணத்தார் தம்தமக்கு விதிக்கப்பட்ட பிரமச்சரிய முதலிய நிலைகளினின்றும் அவற்றிற்கோதிய அறங்களின் வழுவா தொழுகல்[31]

*எனக் கற்றல் ஒழுக்கம் பற்றிக் கூறுகின்றனர். இது ஒவ்வொரு வருணமும் அவரவர்க்குரிய ஒழுக்க முதலியவற்றைக் கற்பித்தது என்பதைச் சுட்டுகிறது. நாட்டில் வாழும் அரசர் முதலிய அனைத்துப் பிரிவினர்க்கும் அவரவர்க்குரிய அறமும் ஒழுக்கமும் கற்பிக்கப்பட்டன. அதனால் ஒவ்வொவரு தனிக்குழுவும் அவரவர்க்குரிய பள்ளியாகவும் இவ்வொழுக்கங்கள் யாவும் பாடப் பொருளாகவும்இயல்பாய் அமைந்தன.*

> 1. நாடோறும் வேந்தர் ஒழுகும் நெறி 2. அந்தணர் வேதமோதி உயர்நிலை உலகம் எய்தும் அறநெறி 3.சமயத்துறையினரால் அறியப் பெறும் உலக நடக்கை நெறி 4. மன்னர் கற்றோரைப் பழிதூற்றும் அம்பல் நெறி 5. தலைவன் தலைவியை வரைந்து கொள்ளுதல் 6. காதலரைப் பழிதூற்றும் அம்பல் மொழிதல் 7. உள்ளத்தை அடக்கி ஒழுகும் சான்றோர் வாழ்வியல் 8. வறுமையுற்ற காலத்தும் தந்தையின் செல்வம் நினையாத மகளின் மதுகை மாண்பு 9. முக்கோல் பகவரின் அன்றாட வாழ்க்கை நெறி 10. மன்னரின் அரசியல் 11. இல்லற வாழ்வு[32]

*போன்றவை சிறந்த அறமாகவும் ஒழுக்கங்களாகவும் சமுதாய அளவில் கற்பிக்கப்பட்டன எனத் தமிழிலக்கிய ஆய்வாளர்கள் கருதுவர்.*

*பேராசிரியன் ஆத்திரையன் பொதுப்பாயிரத்தின் விளக்கம் குறித்துப் பாடியுள்ள பாடலொன்று ஆசிரியர், மாணவர்களின் ஒழுக்கம் பற்றி விளக்குகிறது. பாடம் குறித்து ஆசிரியரும் மாணவரும் இணையும் முன்பே ஒழுக்கம், பண்பாடு ஆகியவை நிறைந்தவர்களாக அமைதல் வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது.*

> வலம்புரி முத்தின் குலம்புரிப் பிறப்பும்
> வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
> நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்

திங்களன்ன கல்வியும் திங்களொடு
ஞாயிறன்ன வாய்மையும் யாவதும்
அ.்.கா அன்பும் வெ.்.கா உள்ளமும்
இலைநா அன்ன சமநிலை உளப்பட
எண்வகை உறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாளர் வாழ்க்கையும் தாளா அண்மையும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
தொன்னூற் புலமைத் துணிபுணர் வோரே[33]

*என்பது அவர் கூற்று. இதனை ஆசிரியர்கள் தம் நூலில் எடுத்தாளுகின்றனர். தற்காலத்தில் இவையே நேரடிப்பாடத் திட்டங்களாக வகுத்துரைக்கப்பட்டுள்ளன. இதிலும் நல்லொழுக்கம், வாய்மை போன்ற முக்கிய நிகழ்வுகள் பண்பாட்டுக் குறிப்புகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

## 5.6. ஒழுக்கம்

*அறச்சிந்தனைகள் பெரும்பகுதி பிறர்க்கு உதவுவனவாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களிலும் ஒழுக்கம் குறித்த சிந்தனைகள் பயன்படுகின்றன. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பொதுமக்களுக்கும் அரசர் முதலான அதிகாரத்திலிருப்போருக்கும் உரிய ஒழுக்கங்களை வரையறுத்துக் கூறுகின்றனர்.*

> உலகக் கல்விச் சிந்தனையாளர்கள் பலர் தமது நாட்டு மக்களுக்குப் பயனுள்ள சிறந்த கல்வியை அளிப்பதற்குரிய விதப்புரைகளை அரசுக்கு வழங்கியுள்ளனர். ஆனால் அரசாட்சியைக் கைப்பற்றி ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமது கல்விச் சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமென்றோ அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாக அம்மாற்றங்களோடு இணைந்து கல்விமாற்றங்களை ஏற்படுத்துவதே நடைமுறைச் சாத்தியமான வழிமுறை என்றோ பெரும்பாலும் அவர்கள் கருதவில்லை. உலக ஏகாதிபத்ய நாடுகள் தாம் அடிமைப்படுத்திய நாடுகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியதன்

> பயனாகவே அந்நாடுகளில் தம் கல்வி முறையை ஏற்படுத்தி அதைத் தமது ஏகாதிபத்ய நலன்களைப் பேணுவதற்காகப் பயன்படுத்தினர் என்பது இவ்விடத்தில் சிந்தனைக்குரிய விடயமாகும்[34]

என விளக்குகிறார் அறவாம்பிள்ளையோன் பெனடிகல். இப்பகுதி இன்றைய கல்விமுறையில் மேலைத்தேயக் கல்விமுறை குறித்து விளக்குகின்றது. மன்னர்களுக்கு அறிவுரை கூறும் புலவர்கள் அருள், அன்பு, அறம் பற்றி எடுத்துக் கூறியுள்ளனர்.

> அருளும் அன்பும் நீக்கி நீங்கா
> நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
> குழவி கொள்பவரின் ஓம்புமதி (புறம்.5)

என்று புலவர் ஒரு மன்னனைப் பாடுகின்றார்.

மன்னர்கட்கு அவர்தம் அரண்மனையிலேயே இவ்அறிவுரைகள் கூறப்பட்டன. மன்னர்களுக்கு உரியவை இவையெனக் கருதி எடுத்துச் சொல்லப்பட்ட நெறிமுறைகள் எண்ணத்தக்கன. சங்க இலக்கியத்திற்குப் பின்னர் எழுந்த திருக்குறள் தமிழ்ச் சமூக மரபைப் பிரதிபலிக்கச் செய்வதொரு நூலாம். அது ‘ஒழுக்கமுடைமை’ என்னும் ஓர் அதிகாரமே வகுத்துள்ளமை அறியத்தக்கது. அந்நூலில்,

> **1.** ஒழுக்கமே குடிமைக்கு அடையாளம், **2.** ஒழுக்கத்தாலேயே ஒருவன் உயர் பிறப்பினர் ஆகிறான், **3.** ஒழுக்கத்தால் உயர்வு எய்துவர், **4.** ஒழுக்கம் அறத்திற்கு வித்தாகும், **5.** ஒழுக்கம் உடையவர் தீயவற்றைச் சொல்லவும் மாட்டார், **6.** உயர்ந்ததோர் ஒழுகுநெறியே ஒழுக்கம்[35]

எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவர்.

பண்டைத் தமிழ்ச் சமூகம் ஆணாதிக்கச் சமூகமாகவே இருந்தது. எனினும் பெண்கள் அன்புடன் நடத்தப்பட்டனர். ஆண்களுக்கு அடங்கியே நடக்க வேண்டியிருந்தனர். தம் விருப்பம்போல் எதையும் செய்தனர் இல்லை. தாம் தங்கியிருக்கும் இல்லத்தருகிலேயே அவர்கள் பழக வேண்டும். வெளியிடத்திற்குச் செல்லல் கூடாதெனத் தடுத்து வைத்துள்ளனர்.

> சமூகங்கள் பலவற்றிலும் ஒழுக்கவரையறை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு தன்மையதாக இல்லை. சங்க காலச் சமூகத்தில் பரத்தையர் பிரிவு இருந்தது என்பதோடு அதை இலக்கணப்படுத்தி மொழியும் அளவு சமூகத்தால் ஒட்டிக் கொள்ளப்பட்டதாகவும் அமைந்தது. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும் மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின் விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் கற்பியலில் கிழத்திக்குரிய பண்புகளாக ஓதப் பெற்றன. இவற்றுக்கு நிகராகத் தலைவனுக்குப் புலத்தலும் ஊடலும் உரியன என்றாரேயன்றிக் கற்பு நிறை ஒழுக்கம் ஆகியவற்றைக் கூறவில்லை[36]

*என்று பெண்களுக்குரிய ஒழுக்கம் கற்பிக்கப்பட்டது. இவை இல்லத்தின் எல்லைக்குள் நிகழ்ந்தன. இல்லம் என்ற நிறுவனத்தில் வாழ்க்கைக் கல்வியும் அதன் பாடப்பொருளாக ஒழுக்கமும் இவ்வாறே கற்பிக்கப்பட்டன. அறம் என்பதும் ஒழுக்கம் என்றே வரையறை செய்யப்படுகின்றது. மனத்தூய்மை அறத்துடனும் அறம் ஒழுக்கத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. அறநூல்கள் யாவும் மனித ஒழுக்கத்தையே வற்புறுத்தியுள்ளன.*

> அறம் கூறும் நூல்கள் தம் பெயராலும் அறம் பற்றிய குறிப்புக்களை உணர்த்துகின்றன. உலக நீதி எனுங்கால் அறமானது அது தோன்றிய மொழிக்கோ அல்லது இனத்திற்கோ தனித்த சிறப்புடையதாக நின்று விடாது. உலகம் முழுமைக்கும் பொதுவானது என்பதைப் பெறலாம். மூதுரை, முதுமொழிக் காஞ்சி என்பன அறமானது காலத்தை வென்று நிற்கும் சிறப்புடையது, வழிவழி வழங்கி வருவது என்பதைச் சுட்டுகின்றன. நல்வழி, நன்னெறி என்பன வாழ்க்கைப் பாதையினை நல்வழியினைக் காட்டுவதை உணர்த்துகின்றன. இனியவை நாற்பது வாழ்வில் மேற்கொள்ள வேண்டியவை பல உள என்பதையும் அறிவுறுத்துகின்றன. ஆசாரக் கோவை வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுகிறது[37]

*என்கிறார் ப.சிவகாமி.*

*மேற்சுட்டிய நூல்கள் பற்றியும் அவற்றுள் அடங்கியுள்ள பாடுபொருளாம் ஒழுக்கங்கள் பற்றியும் இந்நூற்களின் அடிப்படையில்*

*பள்ளியில் எடுத்துரைக்கப்பட்டன. அதே வேளையில் குடும்பத்திலுள்ள முதியோராலும் இவை கற்பிக்கப்பட்டன. ஒரு குடும்பம் என்றிருந்தால் நீதிகளையும் ஒழுக்கம்சார் கருத்துக்களையும் கற்ற பெரியோர்களுக்கு இதுவே முக்கியப் பணியாக இருந்தது. ஒவ்வொரு முதியோரும் ஓராசியராகவும் ஒழுக்கங்கள் பாடப்பொருளாகவும் குடும்பத்தார் கற்போராகவும் அமைந்திருந்தமை எண்ணத்தக்கது.*

*சங்கச் சமூகம் ஒழுக்கத்தை வாழ்வாகக் கொண்ட சமூகமாகும். ஒழுக்க விதிகளும், மரபு வழிப் பின்பற்றப்பட்டு வந்த விதிகளும் நிறைந்த சமூகம் இது. குடும்பம் என்ற நிறுவனம் சங்கச் சமூத்தின் முதுகெலும்பாக இருந்தது. ஆணைவிடவும் பெண்ணுக்கு ஒழுக்கம் மிகுதியாகக் கற்பிக்கப்பட்டது. சமூக ஒருமை கெடாதவாறு காக்கத்தக்க பண்புகள் பெண்களிடம் காணப்பட்டன.*

### 5.7. வீரம்

*சங்ககாலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பிக்கப்பட்டவற்றுள் வீரம் குறிப்பிடத்தக்க பண்பாக உள்ளது. பெண்களே போரைக் கண்டு அஞ்சாத நிலையில் தங்கள் தந்தை, கணவர், பிள்ளைகள் என அனைவரையும் போருக்கு அனுப்பி அவர்களை இழந்தபின் தாமே போர்க்களம் செல்லும் காட்சிகள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. போருக்குச் சென்று யானைகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றியுடன் வருவது பிள்ளைகளின் கடன் எனப் பெற்ற தாய் கூறுகிறாள். காதலும் வீரமும் இரு கண்களென எடுத்துரைக்கப்பட்டன. போரில் சாதல் வீரமரணம் என்றுரைக்கப்பட்டது. புறப்புண் ஏற்படக் கூடாதென்றும் புறப்புண் ஏற்பட்டால் அதற்காக நாணி மன்னர்களும் வீரர்களும் செத்து மடிந்திருக்கிறார்கள். அரசர்களுக்கும் வீரர்களுக்கும் போர் குறித்த நிலையில் தொடர்பு இருந்தது. வீரர்களின் போர்த்திறன் மன்னர்களால் பாராட்டப் பெற்றது. மன்னர்கள் அவர்களைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினர்.*

நாடாளும் மன்னர்களுக்கிடையே நட்பு அதிகமாகக் காணப்படுவதன்றிப் பகையே தொடர்ந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அரசர்களுக்கிடையே அமைந்திருந்த பூசலைப் புலவர்கள் தீர்த்து வைத்தனர்.

மன்னர்கள் தமக்குரிய நாடு காத்தல் போன்ற கடமைகளுள் போர் செய்து வருதலும் கடமையாகக் கற்பிக்கப்பட்டன. போரில் இறந்துபடல் குடிப் பெருமையாகக் கற்பிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக மன்னர் பலரையும் அவர்தம் போர்ச் செயல்களையும் காணலாம். அதியமான் நெடுமானஞ்சியின் போர்த்திறனையும் அவன் படை வீரர்களையும் போர்ச் செயல்களையும் வியந்து பாடுகின்றார் அவ்வையார்.

இழையணிப் பொலிந்த ஏந்துகோட் டல்குல்
மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி
பொருநரும் உளரோ நும் அகன்றலை நாட்டுஎன
வினவல் ஆனாப் பொருபடை வேந்தே
எறிகோ லஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மன்னரும் உளரே அதாஅன்று
பொதுவியல் தூங்கும் விசியுறு தண்ணுமை
விளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னையும் உளனே (புறம்.84)

என்பதில் அதியமான் நெடுமானஞ்சியின் வீரச் செயல் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேந்தன் ஒருவன் இம்மன்னனது நாட்டிலுள்ள பெண்ணொருத்தியை நோக்கிக் கேட்டதாகவும் அதற்கு அப்பெண் விடை கூறுவதாகவும் இப்பாடல் அமைக்கப்பட்டிருக்கிறது. எம் நாட்டிலே அடிக்கும் கோலுக்கெதிரே சீறி எழும் பாம்பு போன்ற வலிமையுடைய படைமறவர் எண்ணற்றோர் உள்ளனர் என்கிறாள் அவள். வீரன் அரசுக்கேற்றாற்போலத் தம் கடமைகளைச் செய்தல் வேண்டும் எனப் பணிக்கப்பட்டது. போரில் இறந்தோர்க்குப் புகழ்ச்சி கிடைத்ததை வீரர்கள் கண்டனர். வஞ்சினம் கூறும் அளவிற்குச் செய்திகள் வீரர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. உடற்பயிற்சி, போர்ப் பயிற்சி, ஓய்வு

போன்றவை வீரர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. வீரர்களுக்கென உணவுப் பழக்கவழக்கங்கள் உண்டாக்கப் பெற்றன. நாட்டுப்பற்று வீரர்களுக்கு எப்போதும் சொல்லித் தரப்பட்டது. அனைத்தும் வீரத்துடன் இணையாகக் கூறப்பட்டன.

மனித வாழ்க்கை உண்டு உறங்கி வாழ்நாளைக் கழித்தல் என்று எண்ணப்படவில்லை. மாறாக அன்றாட வாழ்வில் மன்னன் நடத்தும் போரில் பொதுமக்களுக்கும் பங்குண்டு என்ற நிலை இருந்தது. போருக்கென்று தனிச் சமுதாயம் ஒதுக்கி வைக்கப்படவில்லை. போருக்கு வீரர்களைத் தயார் செய்து அவர்களுக்குத் தேவையான பயிற்சி கொடுக்கப்பட்டது. பொழுது வாய்க்குங்கால் பொதுமக்கள் பலரும் போரில் ஈடுபடும்படியான அடிப்படைப் பயிற்சிகள் தரப்பட்டிருந்தன. ‘அரசு’ உருவாக்கத்தில் போர்முறைக் கல்வி தனித்து வைக்கப்பட்டது. அதற்கென்று பொருள்செலவும் செய்யப்பட்டது. அம்பு, வில், வேல், வாள், குந்தம், கோல், கைக்கோடெரி, எஃகம் போன்ற கருவிகளைத் தூக்கிப் போர் செய்து வெற்றி பெற்றதாகப் போர் வீரர்கள் புகழப்பட்டனர்.[38]

வீரர்களுக்கென்று தனிஉடைகள் இருந்தன. அவற்றை அணிந்து கொள்வதற்கென்று தனிப் பயிற்சிகள் தரப்பட்டன. படைப் பிரிவுகள் பல இருந்தன. குறிப்பாக யானைப் படை, தேர்ப்படை, குதிரைப் படை, காலாட்படை, கப்பற்படை போன்ற பல்வகைப் படைப்பிரிவுகள் இருந்தமையால் அவற்றிற்குத் தனிப் பயிற்சிகளும் இருந்துள்ளன. யானை, குதிரை போன்ற விலங்குகளைப் போரில் இயக்கப் போர் வீரர்களுக்குத் தனிப் பயிற்சிகளும் தரப்பட்டன.[39] போர் தொடங்கும் முறை, போர் செய்யும் முறை ஆகியன குறித்த அறிவுரைகளும் பயிற்சிகளும் போர் வீரர்களுக்குத் தரப்பட்டது. போர் நடக்கும் முறையை,

> படை ஆயத்தமானதும் புறப்படு முன் நன்னிமித்தங்கள் பார்த்தனர்.
> படைபுறப்படு முன் நல்ல நேரத்தில் போர் வாளினை நீராட்டினர்.
> குடையுடனும் முரசுடனும் அணிவகுப்பு நடத்தினர். போருக்குப் புறப்படும்

> மன்னர்களும் வீரர்களும் வஞ்சினம் கூறினர். போர்க் களத்தில் சாதனை புரிவேன் அல்லது வீழ்வேன் என்று வாக்குறுதி செய்யும் நிகழ்ச்சியே வஞ்சினம் எனப்பட்டது. போரின் வெற்றிக்கு வழிபடு கடவுள்களை வேண்டினர்[40]

*என்று தி.செல்வம் தம் நூலொன்றில் குறிப்பிடுகின்றார். இவை நிகழ்கின்றனவெனில் இவற்றிற்குரிய பயிற்சியும் தரப்பட்டுள்ளது என அறியலாம்.*

## 5.8. நீதி

*'நீதி' என்பது அறத்தைக் குறிக்கும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை 'நீதிநூல்கள்' என்றும் அறநூல்கள் என்றும் அழைப்பர். நீதி வடசொல். சங்க காலச் சமுதாயத்தில் மன்னர் ஆட்சியே நடந்தது. குற்றங்கள் நிகழ்ந்த காலை அவற்றை விசாரித்து யார் குற்றம் செய்தவர் என்பதை உணர்த்தி அவர்க்குத் தண்டனை வழங்கிய முறையை 'நீதி' எனக் குறிப்பிட்டனர். இந்த அறநெறி அரசன் முதலான அதிகாரத்தில் இருந்தோர்க்கும் ஊர்ப் பொதுமக்கட்கும் பொதுவாக உணர்த்தப்பட்டிருந்தது. தனி ஆசிரியரிடம் பாடம் கேட்டு வந்தவர்களுக்கு ஆசிரியர் வாயிலாகப் பல கதைகள் எடுத்துரைக்கப்பட்டன. பிற்காலத்தே இவை சுவடிகளிலும் எழுத்து வடிவமாக அமைந்தன. நீதிக் கருத்துகள் கல்வி பயிலும் ஒவ்வொருக்கும் பாடப்பொருளாகக் கூறுப்பட்டன. இவை சமூக நீதியை வலியுறுத்தின. இவை குற்றம் இவை குற்றமற்றவை எனப் பகுத்துணர்வதற்கு ஏதுவாக அமைந்தன. நீதி நிர்வாகம் போன்றவை பழங்காலத்தில் நடைபெற்ற முறையை,*

> நகரங்களில் அவைகளும் ஊர்களில் மன்றங்களும் நீதி நிர்வாகப் பணிகளைச் செய்தன. அரசவை நீதிமன்றமாகச் செயல்பட்டபோது கற்றறிந்தவர்கள் மன்னர்களுக்கு உதவினர். இது உயர்நீதிமனற்றமாகவோ முறையீட்டுமன்றமாகவோ செயல்பட்டது. நீதிவழங்கத் தனி நீதிமன்றங்கள் இருந்தன என்பதற்கு அறக்களமே சான்றாகும். அறங்கூறும் அவையம் அல்லது நீதி வழங்கும் இடம் அறக்களம் எனப்பட்டது. தற்காலத்து முறையிலான நீதிபதிகள் அல்லது

> அமைதி காப்பு நடுவர்கள் (Magistrates) இருந்தார்களா என்பதை அறிய முடியவில்லை. . . நீதித்துறை உரிமை இயல் (civil) குற்ற இயல் (criminal) என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எளிதான வழக்கு விசாரணை முறையைப் பின்பற்றினர். சான்றாளர்களை (witness) விசாரித்துக் குற்றவியல் வழக்கில் முடிவு எடுக்கும் முறை இருந்தது. குற்றஇயல் வழக்குகளே மிகுதியாக இருந்தன[41]

*எனக் குறிப்பிடுகின்றார் தி.செல்வம்.*

*சமூக நீதிகளைக் கற்றறிந்த சான்றோர்கள் பண்டைக் காலத்தே இருந்தனர். அவர்கள் ஓர் அவையாக இயங்கினர். குழுவாகக் காணப்பட்டனர். அரண்மனையில் இருந்து செயல்பட்டனர். மன்னன் முன்னிலையில் இவர்கள் நீதியை வழங்கினர். இவர்கள் வழங்கும் நீதிநெறிமுறைகள் மக்களுக்குப் பாடமாக அமைந்தன. சிறுவர் சிறுமியர்க்கும் பிறர்க்கும் இவ்வகை நீதிகள் இல்லத்திலேயே எடுத்துக் கூறப்பட்டன.*

> சோழர் தலைநகர்களில் ஒன்றான உறையூர்க்கண் இருந்த அவை ‘அறங்கெழு சோழர் உறந்தை அவையம்’ என்று புகழப்பட்டது. நீதிமன்றம் ‘அவை’ எனப்பட்டது. அது மன்னன் அவைக்களத்தினின்றும் வேறானதன்று. ஆயினும் அவற்றிடையே வேறுபாடு காண, ‘அறங்கூறு’ என்னும் அடைச்சொல் சேர்க்கப்பட்டது. சட்ட அறிஞர் மன்னன் முன்வந்த வழக்குகளை ஆய்ந்து வாதிட்டனர். ஆயினும் மன்னனே வழக்குகளைத் தீர்த்தான். நீதிபதிகட்கும், வழக்குரைஞர்கட்கும் ‘பொதுநோக்கு’ வேண்டப்பட்டது. நியாயம் வழங்கும் நிலையில் செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும் இடையே வேறுபாடு காண்டல் ‘தவறு’ என்று அறங்கூற்று அவையத்தினர் எச்சரிக்கப்பட்டனர். அவையுடன் கலக்காமலே மன்னர் தீர்ப்புகள் அளித்தலும் உண்டு. ஆனால் சங்க இலக்கியத்தைப் பொருத்தவரை மன்னனின்றி அவையத்தாரே தீர்ப்புக் கூறிய அமையங்கள் கேள்வியுறுவதில்லை[42]

*என்று ந.சுப்பிரமணியன் தம் ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார்.*

மேலே இவர் கூறிய செய்திகள் பலவற்றிற்கும் சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுக்களைத் தருகின்றார். புறநானூற்றில் அவை, அவையம் என்ற சொற்கள் காணப்படுகின்றன. வழங்கிய முடிவு தீர்ப்புமுறை எனப்பட்டது.[43] இவ்வாறு கூறப்பட்ட நீதிமுறைகள் மக்கள் கல்விக்குப் பாடப்பொருளாக அமைந்தன. இவையே பிற்காலத்தில் சிற்சில மாற்றங்களுடன் நீதிநூல்களிலும் இடம்பெற்றன. சமூக ஒழுக்கங்களை நீதிநூல்கள் பாடிச் சென்றன. அவை சமுதாயத்தினரால் பின்பற்றப்பட வேண்டும் என்ற கொள்கை இருந்தது.

## 5.9. ஆட்சிமுறை

நாட்டை ஆளும் மன்னர்க்கு அரசாட்சி பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. இதற்கென்று தனிப் பயிற்சிக் கூடங்கள் இல்லை. அரண்மனையில் நடக்கும் நிகழ்வுகளைப் பட்டத்திற்கு வரும் இளவரசன் ஆண்டுள்ள சான்றோர், அமைச்சர் ஆகியோரின் வழிக் கற்றறிந்தான். இது அரசர்க்குரிய கல்வி ஆயிற்று. எனவே ஆட்சி செய்வதற்குரிய சில பயிற்சிகள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டன என்பதை அறியலாம். தற்காலக் கல்விமுறையில் அரசியல் (Politics) என்னும் பாடத்திட்டம் தனியே அமைக்கப்பட்டுள்ளது. இது மேல்நிலைப் பள்ளிக்கல்வியிலும் கல்லூரிக் கல்வியிலும் பயிற்றுவிக்கப்படுகிறது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் ஆட்சிமுறை பற்றிய கல்வி அரசர்க்கும் அவரைச் சார்ந்தோர்க்கும் நடைமுறை வழியாக வழங்கப்பட்டது. சங்ககால அரசியல் சூழலை விளக்கும் பேராசிரியர் ந.சுப்பிரமணியம்,

> சங்ககாலத் தமிழர் வலுப்பெற்ற மன்னர்களால் ஆளப்பெற்றனர். அக்காலத்திற்கு முன்பு அவர்கள் மன்னராட்சி தவிர வேறுவகை ஆட்சி முறைகளை அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்று யாதுமில்லை. பலவகைப்பட்ட தட்பவெட்பநிலைகளும் புவி நிலைகளும் பொருந்திய பரந்த நிலப்பரப்பே தமிழகமாயிற்று. பலதரப்பட்ட நிலைகளில் அந்நிய நாட்டின் பல பகுதிகளில் நன்கு அமைக்கப்பட்ட ஆட்சி முறை, தோன்றியிருத்தல் வேண்டும் அவ்வரசுகளுக்கிடையே எல்லைக்

> கோடுகள் உறுதியாகவோ அல்லது தெளிவாகவோ அல்லது அவ்வாறு ஏற்றுக்கொள்ளபட்டதாகவோ இருந்திருக்க முடியாது[45]

*எனக் கூறுகிறார்.*

*ஆட்சி முறையில் நிர்வாகத்திலிருப்போர் தெரிந்து கொள்ள வேண்டியவை நிரம்ப இருந்தன. ஊரை நிர்வாகம் செய்தல், வரி செலுத்துமுறை, இதற்கென நிர்வாக அமைப்புக்களை அமைத்தல் போன்றவை முக்கியமானவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. அவர்கள் இவற்றை அறிந்து கொள்வது அவர்களுக்குரிய கல்வியாயிற்று. 'நிர்வாகமுறை' தனிப்பாடப்பொருள் என்பதாயிற்று. தற்காலத்தில் நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி தருகின்றனர்.*

> வரி இறை எனப்பட்டது. பலவகையான வரிகள் இருந்தன. அவற்றுள் நிலவரி முக்கியமானது. மகசூலில் ஆறில் ஒரு பங்கு வரியாகச் செலுத்தினர். வரியை வாரியத்தில் செலுத்தினர். . . . சிற்றரசர்களும் முறைப்படி முடி மன்னர்களுக்கு இறை (திறை) செலுத்தினர். தோற்கடிக்கப்பட்ட எதிரிகளும் திறை செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர்[45]

*என்று சங்ககால நிர்வாகவியல் பற்றிக் குறிப்பிடுகின்றார் தி.செல்வம்.*

> அகநானூறு குறுந்தொகை போன்ற அகத்தொகைப் பாடல்களிடையே வீரர், வேந்தர், குறுநில மன்னர் போன்றவர் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் உவமையாக இடம் பெற்றுள்ளன. அகப்பாடல்களின் அடிக்குறிப்புகள் (Colophon) அகப்பொருள் விளக்கம் தருவனவாகவே அமைந்துள்ளன. புறநானூற்றுப் பாடல்களின் கீடுழே அமைந்துள்ள அடிக்குறிப்புகள் அப்பாடலுக்குரிய வேந்தர், குறுநில மன்னர், வீரர், வள்ளல் போன்றோரின் பெயரையும் பாடலொடு தொடர்பு சுட்டும் நிகழ்ச்சிகளையும் உணர்த்துவதாக உள்ளன[46]

*என்று அ.மா.பரிமணம் கூறுகிறார்.*

*இது சங்கப் பாடல்களில் அரசர்கள் பற்றிய பதிவுகளைக் கூறுகின்றது. எனவே புறப்பாடல்கள் அனைத்தும் ஆட்சி அமைப்போடு தொடர்புடையவை.*

ஆட்சி முறையில் மரபுகளே பின்பற்றப்பட்டன. ஆட்சி முறையை நடத்தியமைக்கும் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் நடந்தமைக்கும் சான்றுகளாச் சுவடிகளும் செப்பேடுகளும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் போன்ற இலக்கணநூல்களால் பண்டைத் தமிழரின் அரசியல் மற்றும் ஆட்சி முறைகள் தெளிவாக உணர்த்தப்படுகின்றன. புறநானூறு முழுமையிலும் அரசியல் போக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொல்காப்பிய நூலாக்கத்திற்குப் பின்னர் அந்நூற் செய்திகளே மக்களுக்கு அரசியலைக் கற்பிக்க வேண்டியவைகளாயின.[47]

தொல்காப்பியம் ஒரு முன்னோடி நூலாக இருந்துள்ளது. இது அதற்கு முன்னிருந்த இலக்கண இலக்கிய சமூக அமைப்பையும் பிறவற்றையும் எடுத்துக் கூறும் நூல் என்பதை, கே.கே.பிள்ளை தம் ஆய்வுநூலில்,

> தொல்காப்பியர் இரண்டாம் சங்க காலத்தில் வாழ்ந்தவர். தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் என்ப, மொழிப, என்மனார் புலவர், பாங்குற உணர்ந்தோர், பன்னுங்காலை என்று கூறித் தமக்கு முற்பட்டிருந்த இலக்கண ஆசிரியர்களின் முடிபுகளின்மேல் தொல்காப்பியனார் தம் முடிபுகளைச் சார்புறுத்துகின்றார். எனவே தொல்காப்பியத்துக்கு முன்பு இலக்கண நூல்கள் வழங்கி வந்திருக்க வேண்டுமென்றும் அவ்விலக்கணங்கள் தோன்றுவதற்குக் காரணமாக உயர்வகை இலக்கியம் தமிழ்மொழியில் பெருகியிருக்க வேண்டுமென்றும் கொள்ளுவதுதான் பொருத்தமாகும். இவ்விலக்கியப் படைப்புகள் யாவும் முதற்சங்க காலத்திலோ, அன்றி அதற்கு முன்போ பின்போ தோன்றியிருக்க வேண்டும். எனவே கடைச்சங்கத்துக்கு முன்பு இரு சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இயங்கி வந்தன என்பதைத் திட்டமாக மறுக்கவே முடியாது[48]

எனக் கூறுகின்றார்.

பண்டைத் தமிழக ஆட்சிமுறை குறித்த அரசியலில் மன்னனுக்கே முதன்மை தரப்பட்டது. சேர சோழ பாண்டியர் என்போர் பழமையான வரலாற்றை உடையவர் என்பதைத் தொல்காப்பியத்தால் அறியலாம். குறுநில

*மன்னர்களும் பேரரசர்களும் பண்டை நாட்களில் தமிழகத்தை ஆண்டு வந்தன. பாண்டிய நாட்டைப் பற்றிய செய்திகள் இராமயணத்திலும் மகாபாரதத்திலும் காணப்படுகின்றன. மன்னர்களின் அரசப்பட்டத்திற்கென்று சில விதிமுறைகளைப் பின்பற்றினர். மன்னனுக்குப் பின்னர் அவனுடைய மூத்த மகனே ஆட்சிக்கு வந்தான்.*[49] *சிற்றரசர் பலர் ஆங்காங்கே ஆட்சி புரிந்தனர். அவர்கள் சிறு சிறு நிலப்பகுதியை ஆண்டனர் எனத் தெரிகிறது. அதியமான் நெடுமானஞ்சி, பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், நள்ளி போன்றோர் சிலர் இவருள் அடங்குவர். தமிழகத்தில் மன்னர்கள் ஆட்சி முதன் முதலில் தோன்றிய காலகட்டம் வரலாறெழுதுவோராலும் உறுதி செய்யப்படவில்லை. நில உடைமைச் சமூகத் தோற்றத்திலிருந்து இது அறுதியிட வேண்டியதாக உள்ளது. உலகம் தோன்றிய காலந்தொட்டே சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தரும் ஆட்சிபுரியத் தொடங்கினர் எனப் பரிமேலழகர் குறிப்பிடுவது போதிய சான்றின்றி நிற்கிறது.*

> சங்க காலத்திற்கு முன்னதாகவே அரசாட்சி தலைமுறை தலைமுறையாகத் தகப்பன் பின் மைந்தன் அரசனாகும் முறை அமைந்திருக்க வேண்டும். மன்னனின் மூத்த மகனே அம்மன்னனாட்சியைத் தொடர்ந்து நடநத்தும் உரிமை பெற்றிருந்தான். சேர மன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மூத்த புதல்வன் செங்குட்டுவன் அரசு கட்டில் ஏறுவதற்குத் தகுதியற்றவன் என்று கணி கூறியதன் விளைவாகக் குடும்பச் சச்சரவு நேரிடாமலிருக்கும் பொருட்டு இளையவன் (இளங்கோ) துறவியாயினான் என்பது பற்றி அறிகிறோம். இதிலிருந்து மூத்த புதல்வனே அரச பதவிக்கு உரியவன் என்று கருதப்பட்டமை புலனாகும். இளைய அரசகுமாரர்களுக்கு இளங்கோ, இளங்கோசர், இளஞ்செழியன், இளஞ்சேரல், இளவெளிமான், இளவிச்சிக்கோன் போன்ற பெயர்கள் வழங்கியிருந்தன[50]

*என்று சங்ககால மன்னர்களின் ஆட்சிமுறை குறித்து கே.கே.பிள்ளை கூறும் விளக்கம் பொருத்தமாகத் தோன்றுகிறது. இந்த சட்டவரை முறைகள் மரபு வழியாலும் சான்றோர்கள் எடுத்துக்கூறும் ஆலோசனைகளாலும் பின்பற்றப்பட்டு வந்தன.*

*சங்ககால மன்னர்கள் செங்கோலாட்சி நடாத்தி வந்தனர் என்பதைச் சங்கப்பாடல்கள் அறிவுறுத்துகின்றன. நீதி வழுவாநெறிமுறையில் அவர்கள் மேதினியில் ஆட்சி முறையைச் செலுத்தி வந்தனர் எனக் கூறப்படுகிறது. பொதுவாக மன்னர்கள் நற்பண்புகளும் நற்செய்கைகள் கொண்டவர்களாகவும் இறைப்பக்தி உடையவர்களாகவும் இருந்தனர். சிலர் கொடுங்கோல் மன்னர்களாகவும் காணப்பட்டனர். மன்னர்கள் நற்பண்புகளையும் நற்பண்பின்றி மாறி நடக்கும்போது வருந்தீமைகளையும் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. இரு பண்புகளும் சமூகத்தில் காணப்பட்டன என்பதற்குத் திருக்குறளே சான்றாகும்.*

*ஆட்சிமுறையில் ஊராட்சிமுறையே மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. ஊரமைத்து, சீரமைத்துத் தருவது மன்னரின் கடமையாகப் பட்டது. ஊர்கள் ஒவ்வொன்றிலும் மன்றங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.*

> எக்காலத்திலும் பாரத நாட்டில் அடிப்டையாயிருந்தவை சிற்றூர்களே. பண்டைத் தமிழகத்திலும் அஃது அவ்விதமே இருந்தது விந்தையன்று. ஆகவே, ஊராட்சி பற்றி அறிவது மிகத் தேவை. பிற்காலம், குறிப்பாகச் சோழப் பேரரசு காலத்தில் ஓங்கி வளர்ந்த ஊராட்சிக்கு வழிகோலியிருந்தது சங்க கால வழக்கமேயாகும். ஊர்களில் கூடின கூட்டத்திற்கே மன்றம், பொதியல், அம்பலம், அவை என்னும் பெயர்கள் விளங்கியிருந்தனவாகப் பணடைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். இவையாவும் ஊர்க் கூட்டத்தின் பெயர்களெனவே கருதலாம். திருமுருகாற்றுப்படையில் மட்டிலும், மன்றமும், அம்பலமும் வேறுபடுத்திக் கூறுப்பட்டுள்ளன. அதன் உரையாசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார். மன்றம் என்பது ஊர் நடுவிலுள்ள மக்கள் கூடிய இடம் எனவும், அம்பலம், பொதியில் என்னும் இரண்டும் ஒரு சிறு மாளிகையைக் குறிப்பிட்டனவென்றும் அதன் நடுவில் ஒரு பீடம் இருந்ததாகவும் கருதுகின்றனர். இதை ஒட்டிப் பலர் பல ஊகங்களை வெளியிட்டுள்ளனர்[51]

*என்று குறிப்பிடப்படும் கருத்து எண்ணத்தக்கது.*

*தொடக்கக் காலத்தில் மன்னர்கள் செய்த பணியையே பிற்காலத்தில் ஊர்மன்றங்கள் செய்யத் தொடங்கின. குறிப்பாக அரண்மனைக்குக் கொண்டு செல்லப்பட்ட வழக்குகள் யாவும் இவ்வூர் மன்றத்தாரால் விசாரிக்கப்பட்டன. தண்டனைகளும் குற்றம் புரிந்தோர்க்குக் கிடைத்தன. ஊரில் மூத்தோர்கள் விசாரித்துத் தீர்ப்பளித்தனர். இவர்கள் ஊரில் மிக முக்கிய மனிதர்களாகக் காணப்பட்டனர். இதுபற்றி மேற்குறித்த ஆய்வறிஞர் கே.கே.பிள்ளை,*

> மன்றம் அல்லது பொதியில் என்ற கூட்டங்களின் சிறந்த பணி மக்களிடையே நிகழ்ந்த வழக்குகளைத் தீர்ப்பதாகவே இருந்தன. அக்கூட்டங்களின் முதியோர் இவ்வழக்குகளைத் தீர்த்து வைத்தனர். இத்தலைவர்கள் ஊர்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரெனக் கூற முடியாது. வயதிலும் அறிவிலும் முதியோராயிருந்தவர் தாமாகவே தலைவராக அமர்ந்திருந்தனரெனவே கருத வேண்டும். வழக்குகளை ஒழுங்குபடுத்துவதைத் தவிர ஊர்ப் பொதுக்காரியங்களையும் சமூக நலத் திட்டங்களையும் மன்றத்தார் பொறுப்பேற்று நடத்தி வந்தனரெனவும் கூறலாம். அரசு ஊர்களின் அன்றாடச் செயல்களிலும் பொறுப்புகளிலும் தலையிட்டதென்பதற்குச் சான்றுகள் இல்லை[52]

*எனக் கூறுகிறார். நீதியும் தீர்ப்பும் வழங்கப்படுவதற்குத் தனி இடங்கள் காணப்படுகின்றன. சமூகக் கட்டுப்பாடுகள் மிகுந்ததிருந்த சூழலில் இத்தகைய நீதிமன்றங்களே துணை செய்தன. மன்னற்கு ஆலோசனைகள் வழங்குவதற்கெனக் குழுக்கள் இருந்ததோடன்றித் தனிப்பட்ட வகையிலும் அறிஞர்கள் பல இருந்தனர். இவர்கள் கூறும் கருத்துக்களே நீதியெனும் பாடப்பொருளாகும். இதனை,*

> முழுமை, அநுபவம், அறிவு, கல்வி என்பவையுடையோர் துணிந்து மன்னற்கு அறிவுரைப்பர். உலகியற் பொருள்களையும் வாழ்க்கை வசதிகளையும் ஈட்டுதலிலும் போலிலும் செலவிடப்பட்ட வாழ்க்கை விருப்பத்தக்கதன்று நிலைபேறில்லாத உலகில் மக்கள் அமைதி, ஈகை, அன்பு, கடவுள் வழிபாடு முதலியவற்றை நினைக்க வேண்டும். பொதுவாக வீடு பேறான அழிவில் இன்ப நிலையை எய்தும் நெறியில் நிற்றல் வேண்டும். இத்தகைய அறிவுரைத்தபோதும் மிகவும் பிறர் உணர்ச்சி போற்றும் நயத்தக்க வாசகத்தையே மேற்கொண்டனர்.

> கசப்பான ஆனால் தேவையான அறிவுரைகளையும் மரபு வகைப்புகழ்ச்சி என்னும் தேன்கலந்த மருந்தாகவே அளித்தனர். ஏனெனில் (இக்காலத்திற்போல) அக்காலத்திலும் திருப்தியடையாத அல்லது சினங்கொண்ட ஆட்சியாளன் முறைகேடாக நடந்து கொள்ள முடியும்[53]

*எனக் கூறுகிறார் கே.கே.பிள்ளை.*

*மன்னனுடைய ஆணையே கற்கப்படும் பொருளாயிற்று. மக்களுக்கு ஆணையிடும் வரன்முறைகளை முன்னோர்களிடம் இருந்து கற்றதாகத் தெரிகிறது. ஆலோசனைகள் கேட்பதும் முடிவுகளை எடுப்பதும் மன்னனது கடமையாகவும் இருந்தது.*

> அரசன் எப்பொருளைப் பற்றியும் யாரையும் கலந்து ஆலோசிக்கலாம். அதாவது எந்த ஒரு அலுவலனும் தன் கருத்தை வற்புறுத்திக் கூறும் உரிமை பெற்றவனல்லன். அவையில் குடிமக்கள் கொடுக்கும் விண்ணப்பங்கள் செய்யும் முறையீடுகள் என்பவற்றை ஏற்று அறக்களத்து அலுவலரின் அறவுரையைக் கேட்டு அவற்றை ஆய்ந்து மரபுப்படி குற்றவாளிகளை ஒறுத்தல் என்பவை மன்னனுடைய முக்கியமான அலுவல்கள். சட்டமியற்றுதல் (சட்டங்கள் முன்பே இருந்தன அவன் கடன் அவற்றைப் போற்றுவது; மக்கட்கு அவற்றின் பலன் கிடைக்குமாறு செய்தல்) மன்னனுடைய வேலையன்று. ஆயினும் ஒவ்வோரமயங்களில் அவன் ஆணைகள் பிறப்பிப்பதுண்டு; அவை முரசறைந்து அறிவிக்கப்பட்டன[53]

*என்கிறார் ந.சுப்பிரமணியன். நாட்டின் எல்லாப் பகுதியிலும் மன்னனின் ஆணை செயல்பட்டதும் சான்றோர் பலரும் இதனை இணைந்தே செய்துள்ளனர்.*

*மன்னர்கள் புலவர்களை ஆதரித்தலும் பரிசுகள் வழங்குவதும் மகிழ்ச்சிமிகு தருணங்களில் விருந்தளித்தலும் அவர்களது பண்பாட்டு அடிப்படையில் அமைந்த இயல்புகளாகக் காணப்படுகின்றன. இவை மரபு வழியாகக் கற்றுக் கொண்டவை. இதனை,*

> சங்க இலக்கியத்தில் முந்நூற்றுக்கு மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் அவர்களுடைய அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதுவதற்கான குறிப்புகள் சங்க நூல்களில் கிடைக்கவில்லை. வேந்தர்கள் பலர் வியப்பூட்டும் வீரச்செயல்கள் ஆற்றியுள்ளனர். பாரதப் போரில் பங்கு கொண்டவரெனக் கூறப்படும் மன்னர் மூவரின் பெயர்கள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. வரலாற்றில் நம் கருத்தை முதன் முதலாகக் கவர்ந்தவன் உதியஞ்சேரல் என்னும் சேர மன்னனாவான். பாரதப் போரில் சோறு வழங்கியவன் இச்சேர மன்னன்றானா என்பதைப் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் ஆய்வாளரிடையே காணப்படுகின்றன. இவன் மகன் இமயவரம்பன் இரண்டாம் பத்துக்குப் பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்றான்[55]

*என கே.கே.பிள்ளை விளக்கியுள்ளார். இப்பண்பியல்புகள் மிகப் பழங்கால முதலே காணப்படுகின்றன. இத்தகைய பண்புகளும் சமூக வழிக் கற்றலே ஆகும்.*

## 5.10. குடும்பமும் இல்லறக் கடமைகளும்

*‘குடும்பம்’ சங்க காலத்தில் இறுக்கமான நிறுவனமாகவே இருந்தது. ஆயினும் குறிப்பிட்ட சில பண்புக்கூறுகள் குடும்ப உறுப்பினர்கள் இடையே தொடர்ந்து காணப்படுவதாக உள்ளன. இவை பண்பாட்டுடன் நெருக்கமானவை. இத்தகைய பண்பாட்டுச் செயல் முறைகள் பழக்கத்தாலும் பின்பற்றலாலும் ஏற்பட்டன. பழகுதல் முறை கற்றலாகவும் பண்பாட்டுக் கூறுகள் பாடப் பொருள்களாகவும் அமைகின்றன. குடும்பம் என்ற நிறுவனத்தில் மரபு வழிச் செயல்களே பாடப்பொருள்கள் எனலாம். இவற்றைக் கற்று அவற்றின் வழி நடத்தலே குடும்ப வாழ்க்கையாகிறது.*

> பாலியல் தேவைகள் மற்றும் மனித உற்பத்திகள் ஆகியவை நிறைவு செய்யப்பட அமையும் மக்கள் தொகுதி குடும்பமாகும். இதில் ஒன்றுக்கு மேற்பட்டவர் இருவர். இரத்த உறவிலோ அல்லது மற்றவர்களாலோ இது அமையலாம். இவர்கள் ஒன்றாக வாழ்வர். குடும்பத்தில் தனிக்குடும்பம் அல்லது கூட்டுக்குடும்பம் என இருவகை உண்டு. இது பற்றி ஆராயும்

போக்கிற்குக் குடும்பச் சமூகவியல் (Sociology of family life) என்று பெயர். சமுதாயத்தில் குடும்பம் பெறும் மதிப்பை இது விவரிக்கிறது[56]

என்று குடும்பத்தின் அமைப்புப் பற்றிக் கருத்துக்கள் கூறப்படுகின்றன. குடும்பங்களில் அறிவிக்கப்பெறும் சில கருத்துக்கள், குடும்பப் பழக்கவழக்கங்களாகவே கூறப்படுகின்றன. இல்லறத்தார் கற்றறிந்த கடமைகளுள் முதன்மையானது 'விருந்தயர்தலாம்'. இதனை ஆங்கிலத்தில் 'ஹாஸ்பிடாலிடி' (Hosibitality) எனக் கூறுவர். துறவிகள், பிரம்மச்சாரிகள் எனச் சமுதாயத்தில் போற்றப்பட்டவர்களை இல்லறத்தார் வரவேற்று விருந்தளிக்க வேண்டும் என்பதைக் கடனாகக் கொண்டனர். விருந்தோம்புதலை வள்ளுவர் பொறுப்புடன் செய்ய வேண்டிய ஒன்றாகக் குறிப்பிடுகிறார்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு[57]

என்று சிறப்பிக்கிறார் வள்ளுவர்.

குடும்பத்தார் தம் தாய் தந்தையரைப் போற்ற வேண்டும். ஆசிரியர்களைப் போற்ற வேண்டும். தமக்கு முதுமை ஏற்பட்டாலும் தலையில் நரைமுடி தோன்றாமல் இருப்பதற்குக் காரணமாக, தன் ஏவலைக் கேட்டு நடக்கும் இளையவர்கள் இல்லத்தில் இருப்பதாகக் கூறுகின்றார் பிசிராந்தையார் என்ற புலவர். "யான் கண்டனையர் என்னிளையர்" என்பது அக்கருத்தை விளக்குமிடமாகும். கணவனைத் தெய்வமாக மனைவியர் எண்ணி வணங்கினர். பிற தெய்வங்களை இல்லறத்துப் பெண்கள் வணங்கிற்றிலர். "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்..."[58] என்று மனைவியர் கற்றுக் கொண்டிருந்த நற்பண்புகளைத் திருக்குறள் குறிப்பிடுகின்றது. விருந்தினரை உபசரித்து வழியனுப்ப வேண்டும் என இல்லறத்தார்க்குக் கூறப்பட்டது.

விருந்தினர் வந்தால் எழுந்து வரவேற்பதும் அவர்கள் புறப்படும்போது பின்னரே சென்று வழியனுப்புவதும் தமிழரிடையே இன்றும்

*காணப்படுகின்றது. உணவு உண்ணுமுன் காக்கைக்குப் பிடிசோறு அளிப்பதும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.[59] மேலும் பல இல்லற ஒழுக்கங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்பிக்கப்பட்டிருந்தன.*

> மனைவியின் பூப்பிற்குப் பின் பதினைந்து நாட்கள் கணவன் அவளை நீங்காமை வேண்டும் என்று விதித்தனர். பூப்புக்காலத்தில் அவளோடு கலவாமை வேண்டும். விஞ்ஞான முறையில் நோக்கினும் இவை வெற்று நம்பிக்கைகளல்ல, கவனத்தாற் பிறந்த அறிவு என்பது போதரும். ‘அம்மூன்று நாட்களும் கூப்பிடு தூரத்திற்கும் அவளை அணுகக்கூடாது.’ ஈன்றணிய மகளிர் ஊர்ப்பொதுக் குளத்திற்குக் குளிக்கச் செல்வர். தீட்டுக் காலத்தில் அவர்கள் தீண்டாதார் மட்டுமல்லர் நெருங்கற்கும் ஆகார். அவர்கள் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக்கூடாது[60]

*என்று ந.சுப்பிரமணியன் கூறுகிறார்.*

### 5.11. சான்றாண்மை

*‘சான்றாண்மைப் பண்பு’ தமிழ்ச் சமூகத்தில் எல்லோருக்கும் வற்புறுத்தப்பட்டது. அறிஞர்கள், புலவர்கள் ஆகியோர் சான்றோர் என அழைக்கப்பட்டனர். ‘சான்றோர்’ என்ற சொல் சங்க இலக்கியத்திலும் பதிவாகியுள்ளது. சான்றோர் என்ற சொல் பழங்காலத்தில் போர் வீரர்களையும் போரில் இறந்தவரையும் குறித்தது. பின்னர் அறிவுத்திறமையையும் ஒழுக்கமும் உடைய பெரியோரை இவ்வாறு அழைத்தனர். மிகுதியாகக் கற்றவரைச் சான்றோர் என்று கூறும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. சான்றோரை மதிக்கும் பண்பு எல்லோருக்கும் வற்புறுத்தப்பட்டது. நாடகம், கலை முதலியவற்றை அறிந்து அவற்றை கற்றுத் தந்தவர்களையும் சங்க காலத்தில் சான்றோர் என வழங்கினர். அந்தணர், அரசர், வணிகர் என்னும் பலதரப்பிலும் சான்றோர்கள் உருவாயினர். ஊர்ச் சான்றோர்களை அழைத்து மன்னர் தீர்பு முதலியவற்றை கூறினர். அரச அவையில் சான்றோர்க்கு உரிய மதிப்பும், பண்பும் அளித்தனர் என்பதை புலவர்கள் தாம் பாடிய பாடலில் கூறியுள்ளார்.*

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை[61]

*என்று திருக்குறள் கூறுகிறது. இதுபோலவே பல்சான்றீரே, பல்சான்றீரே போன்ற சொற்கள் சங்க இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளன. பெரியோரை போற்ற வேண்டும் என்பதற்கு பல்வேறு பழங்கதைகளும் கூறி நற்பழக்கங்களை மக்களுக்கு உண்டாக்கினர். அரசவையில் புலவர்கள் மதிக்கப்பட்டனர். பரிசுகள் வழங்கப்பட்டன. புலவர்களைப் புகழ்ந்து புலவர்களுக்கு எனத் தனி இடம் அமைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சமயத்தில் இரு மன்னர்களுக்கு இடையே பிரச்சனைகள் எழும்போது புலவர்கள் தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்தனர். ஒவ்வொரு புலவரும் தனித்தன்மை வாய்ந்தவராய்க் காணப்பட்டனர். சான்றாண்மையைப் பொருத்தவரையில் அது கற்க வேண்டிய பண்பாகக் காணப்பட்டிருந்தது. இதற்கென்று தனிப் பள்ளிகள் இல்லையாயினும் மரபு வழியாகவே அவை பயிலப்படும் நிலை இருந்தது. மன்னர்கள் ஆட்சியில் சில குறைகள் இருப்பினும்*

> சங்க காலத்தில் அரசாட்சி, செங்கோலாட்சியாகவே எப்போதும் விளங்கியதாவென்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆனால் அக்காலக் கொள்கைப்படி அரசர்கள் நீதி, நற்குணம் ஆகிய பண்பாடுகள் அமைந்தவர்களாகவும் ஆட்சி புரிந்திருக்கக் கூடும். செங்கோலாட்சியின் மேன்மையை எடுத்து விளக்கும் திருவள்ளுவர் கொடுங்கோன்மை பற்றியும் நன்கு விளக்கியுள்ளார்[62]

*என்று அக்காலச் சமூகப் பண்பு விளக்கப்படுகின்றது.*

*அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போரில் அந்தணர் சிறப்பித்துப் பேசப்பட்டனர். இவர்களும் சான்றோராகவே கருதப்பட்டனர். பார்ப்பார்க்குத் தீங்கு செய்தல் பாவம் எனப்பட்டது. அவர்களுக்கு நிகராப் பசு பேசப்பட்டது. பகை ஏற்பட்டுப் போர் தொடங்குங்கால் அந்தணர்களை அப்புறப்படுத்தினர். சிலப்பதிகாரத்திலும் மதுரைக் காண்டத்தில் அந்தணர்களைக் கைவிட்டுத் தீப்பற்றுக எனக் கூறப்பட்டுள்ளது. அந்தணர்கள் அரசவையிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தூதுவராகவும், நீதி அவையின்*

(அறங்கூர் அவை) முதன்மையாளராகவும் இருந்தனர். அமைதியும் நற்பண்பும் கொண்டவர்களாகவும் இவர்கள் விளங்கினர். சிறந்த சொல்வன்மையும் அறிவுக்கூர்மையும் இருந்தமையால் தூது செல்லற்கு இவர்கள் பொருத்தம் உடையவராகத் தோன்றினர்.

### 5.12. மரபு வழிக்கல்வி

'மரபு' என்பது தொன்மையானது. இலக்கியத்தில் பயின்று வரும் இலக்கண நிலையில் பின்பற்றப்பட்டதாகும். இதுவன்றி நடைமுறையில் மக்கள் வழக்கிலும் மொழி பற்றிய மரபு பின்பற்றப்பட்டது. இந்த மரபுகள் கற்பிக்கப்பட்ட பாடப்பொருள்கள் போல் காணப்பட்டன. அந்தந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அங்கங்குப் பின்பற்றப்பட்ட தொழில்களையும் பழக்க வழக்கங்களையும் கற்பிக்கத் தொடங்கினர். தனிப்பட்ட ஆசிரியர்களிடம் கற்றவர்கள் குறிப்பிட்ட சில பழக்கவழக்கங்களே கற்றுக் கொண்டனர். சமூகம் பின்பற்றாதவற்றைப் புதுமை என்ற நோக்கிலோ சீர்திருத்தம் என்ற முறையிலோ கற்பிக்கவில்லை. சடங்குகள், பழக்கவழக்கங்கள் போன்றவையும் அவ்வாறே அமைந்தன. ஒரு சில அடிப்படைக் கல்வி வீடுகளிலேயே கற்றுத் தரப்பட்டன. தாங்கள் வாழும் இல்லத்திடமிருந்தும் பழகும் இடங்களிலிருந்தும் சிலவற்றை அறிந்த பின்னரே கற்போர் ஆசிரியர்களை நாடிச் சென்றனர். விலங்குகள் வளர்த்தல், பயிர் செய்தல், தாவரங்கள் வளர்த்தல் போன்றவை இம்முறை வழியே பின்பற்றப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள், நீர் மேலாண்மை போன்றவையும் எழுதி வைக்கப்பட்டுள்ள குறிப்புக்களாளின்றியே சொல்லப்பட்டன. உணவு முறைகள், சிறுசிறுநோய்கள் தீர்க்கும் வழிகள் ஆகியனவும் கற்றுக் கொள்ளப்பட்டன.

வேதகாலக் கல்வி முறையில் பாடத்திட்டம் வரையறுக்கப் பட்டிருந்ததாகவும் அது வழியே மாணவர்கள் கற்று வந்தனர் என்றும் கல்வித்துறை ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஜி.பங்கஜம்,

> வேதகாலக் கல்விமுறையில் ஆசிரியர் தமது முன்னோர்களிடமிருந்து தாம் கற்ற பாரம்பரியக் கல்வியினைத் தமது மாணவருக்குக் கற்றுத் தருதலே முறையாகக் கொள்ளப்பட்டது. வேதங்கள் மனனம் செய்யப்பட்டன. கடவுளுக்குப் பலியிடுதல் போன்ற புனிதச் சடங்குகளே பல்வேறு வகையான கல்விக்கு வித்திட்டன. பலியிடத்தில் அமைப்புக்குரிய விதிமுறைகளிலிருந்து தோன்றியது 'ஜியோமதி' (Geomithi) கணிதம் பலியிடுதலுக்குரிய காலத்தைக் கணக்கிடுதற்கென உருவாக்கப்பட்டது. வான சாஸ்திரம் பலியிடப்பட்ட உயிரினங்களின் உடல் பிரிக்கப்பட்ட முறையினின்று தோன்றியது. உடலியல் (Antinomy) புனித வேதங்களைக் காத்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட இலக்கணமும் தத்துவமும் ஆகும். அக்கால மக்களுக்குப் பிரம்ம சூத்திரப்படி பரம்பரையாக ஆறு பாடங்கள் வகுக்கப்பட்டிருந்தன. அவை வேதங்களின் பகுதிகள் (Member of Veda) எனக் கருதப்பட்டன. அவையாவன **1.**ஒலியியல் (Phonetic), **2.**தந்தம் (Meter), **3.** இலக்கணம் (Grammar), **4.** சொற்களின் வரலாறு (Etymology), **5.** வானசாஸ்திரம் (Astrology), **6.**மதச்சடங்குகள் பற்றிய கல்வி (Religious recites) ஆகியவை ஆகும்[63]

*எனக் கூறுகின்றார்.*

*ஒவ்வொரு ஊரிலும் பாடஞ்சொல்லித் தரும் ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் மாணவர்களுக்கு எத்தகைய கல்வியைத் தர வேண்டும் என்பதை முடிவு செய்தனர்.*

> அக்காலத்தில் கல்வி பயிற்றுவிப்பார் ஆசிரியர். கணக்காயர், காலாசிரியர், இளம்பாலாசிரியர் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். மதுரைக் கணக்காயனார் என்னும் புலவர் மாணவர்கட்குக் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்தார் என்ற வரலாறு இதைத் தெரிவிக்கும். கணக்காயர் என்பார் கணிதத்திலும் வல்ல ஆசிரியராக இருந்து வந்தனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியரான கணக்காயனார் ஒவ்வொரு ஊரிலும் இன்றியமையாதவராகக் கருதப்பட்டார்.

> கணக்காயர் இல்லாத ஊர் என்னதான் உயர்ந்த ஊராக இருந்தாலும் பயனற்ற ஊராகவே கருதப்பட்டு வந்தது[64]

*என்று பண்டைத் தமிழகத்தில் மரபுவழிக் கல்வியிலான பொருளைக் கற்பிக்கத் தனி ஆசிரியர்கள் இருந்தமையைக் கூறுகின்றனர். பழங்காலத் தொடர்ச்சியைப் பிற்கால நீதிநூல்களும் குறிப்பிடுகின்றன.*

> கணக்காயர் இல்லாத ஊரும் பிணங்களுக்கும்
> மூத்தோரை யில்லா அவைக்களனும் - பாத்துண்ணும்
> தன்மையி லாள ரயலிருப்பும் இம்மூன்றும்
> நன்மை பயத்த லில[65]

*என்ற 'திரிகடுகம்' மரபுவழிப்பட்டு நின்ற பழந்தமிழகத்தில் ஆசிரியரின் இன்றியமையாமையை விளக்குகின்றது.*

## 5.13. மனித நேயம்

*பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் மனிதநேயம் மிக முக்கியமான கற்பிக்கப்படும் பொருளாக இருந்தது. அனைத்துத் தரப்பில் உள்ளோரும் ஆங்கிலத்தில் இதனை (Humanism) என்று அழைப்பர். சங்க இலக்கியங்களில் மனித நேயம் வலியுறுத்திச் சொல்லப்பட்டது. பொதுமக்களிடையே இக்கருத்து பரவலாகப் பதிவாகி இருந்தது. தற்காலத்தில் மனிதநேயம் பற்றிய கருத்துக்கள், கொள்கைகள் வரையறுத்துக் கூறப்படுகின்றன.*

> மானுடக் கோட்பாடு என்பது மனிதனை மெய்யான மனித தத்துவம் உள்ளவனாக ஆக்குவதிலும் இயற்கையிலும் வரலாற்றிலும் நிறைந்துள்ள அனைத்துக் கூறுகளிலும் பங்கு கொண்டு மனிதன் தன் அசல் மகத்துவத்தை எய்துவதிலும் அமைந்துள்ளது. மாக்ஸ் ஸ்கீலர் சொற்களில் சொன்னால் மனிதனுக்குள் இருக்கும் உலகத்தின் மீது கவம் செலுத்தி மனிதனை உலகத்துக்கு நிகராப் பெரிதாக்கிக் காண்பது! அறிவு சார்ந்த வாழ்வையும் தன் படைப்புத் திறனையும் தன் ஆற்றலையும் மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். பௌதீக உலகின் சக்திகளைத் தன் விடுதலைக்கான கருவிகளாக்க உழைக்க வேண்டும் என மானுடக் கோட்பாடு எதிர்பார்க்கிறது[66]

*என்று சிற்பி பாலசுப்பிரமணியம் தன் நூலில் குறிப்பிடுகிறார்.*

*மனிதப் பண்புகள் ஒவ்வொரு குடும்பத்திலும் பிற சமூக நிறுவனங்களிலும் சான்றோர் செய்யுட்களிலும் எடுத்துரைக்கப்பட்டன. பிறர்க்கு உதவுதல், பசிக்கு உணவிடல், செய்ந்நன்றியுணர்தல், விருந்தினர் போற்றல் போன்றவை உயர்ந்த மனிதப் பண்புகளாகப் பொதுமக்களுக்குக் கூறப்பட்டன. புறநானூறு,*

நீர்இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே (புறம்.18)

*என்று உணவிடுவதை உயர்ந்த அறமாகக் குறிப்பிடுகிறது. ஆய் அண்டிரன் என்ற குறுநில மன்னனை பசிப்பிணி மருத்துவன் எனப் புறநானூறுகூறுகின்றது. சமயக் கொள்கைகள் தமிழர் வாழ்வோடு இணைந்திருந்ததாகவும் இத்தகையத் தொண்டுகள் மனித நேயச் சிந்தனை எனவும் ப.அருணாசலம் குறிப்பிடுகிறார்.*[67]

*கோவூர் கிழார் என்னும் புலவர் கிள்ளி வளவனைப் பாராட்டும் பொழுது அவனது முன்னோர்கள் எவ்வுயிர்க்கும் தீமை வராது காத்து நாடாண்ட மனித நேயப் பண்பைப் பாடுகிறார். இப்புலவர் மன்னன் சினமுற்று மலையமான் குழந்தைகளை யானையின் காலில் இட்டுக் கொள்ள முயன்றபோது இப்பாடலைப் பாடியுள்ளார்.*

நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழுதுண்மார் புன்கண் அஞ்சித்
தமது படுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழுஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கண் நோவுடையார்
கேட்டனை யாயின் நீவேட்டது செய்ம்மே (புறம்.40)

*இப்பாடலில் பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை வலியுறுத்தப்படுகிறது.*

*புலவர்கள் தங்கள் வாழ்க்கையே மனித நேயம்மிக்கது என்றுணர்ந்தனர். மனித நேயம் அடிப்படையில் உலக வாழ்க்கை நெறிப்படுத்தப்படுகிறது என்று அவர்கள் பாடியுள்ளனர்.*

. . . . . . .          . . . . . . .

. . . . . . .          . . . . . . .

பெற்றது மகிழ்ந்து சுற்றமருத்தி

ஓம்பா துண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே (புறம்.40)

*என்ற பகுதியில் பிறர்க்குத் தீங்கு செய்யாமை மனித நேயப் பண்பாகக் காட்டப்பட்டிருக்கிறது. தகடூர் எரிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தன் அரண்மனையில் இருந்த முரசுக் கட்டிலில் அறியாது உறங்கிய மோசிகீரனார் என்ற புலவர்க்குக் கவரிக் கொண்டு வீசினார் என்று கூறுப்படுகிறது (புறம்.50) 'நல்லது செய்தல் ஆற்றிராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம்.195) என்பதும் மனித நேயத்தை வலியுறுத்துவதாகும். இதுபோலக் கொடை முதலிய அறச்செயல்களும் கூறப்பட்டுள்ளன. மன்னர் பலர் புலவர்களுக்கும் மற்றோருக்கும் கொடை வழங்குதலைச் செய்துள்ளனர்.*

**நூலறிவு**

*ஒவ்வொருவரும் தாம் கற்ற நூல்களை மற்றவர்க்குச் சொல்லித்தரும் சூழலை ஏற்படுத்திக் கொண்டனர். இலக்கணம், இலக்கியம் போன்றவற்றை நன்கு கற்றறிந்த தனித்தனி ஆசிரியர்கள் இருந்தனர். இவர்களிடம் பல மாணவர்கள் பாடம் கற்றனர். இவர்கள் கற்றறிந்த பாடத்தைப் பாடப்பொருளாக வைத்து மாணவர்களுக்குச் சொல்லித் தந்தனர். இதனால் ஆசிரியர் கல்வியே பாடம் சொல்லித் தரும் பாடப்பொருள் ஆயிற்று.*

*பொதுவாக மக்கள் சிறப்பான கல்வியைப் பெற விரும்பினர். அதற்காகக் கல்வி கற்றோரைத் தேடிச் சென்றனர். ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதற்காகத் தனி நூல்களை எழுதினர். அவற்றின் வழிப் புதிய கருத்துக்கள்*

*மாணவர்களுக்குச் சொல்லப்பட்டன. இவ்வாறு சமுதாயத்தில் இருந்த நூலறிவே மாணவர்களுக்குப் பாடப் பொருளாகவும் சொல்லப்பட்டன.*

> ஆசிரியர் மாணவர்களுக்கு எளிதில் கல்வி பயிற்றற்கு உதவியாகப் புதிய நூல்களைச் செய்வதும் வழக்கமாக இருந்தது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காகச் செய்யப்பட்டவை. ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர் அவருடைய வீட்டுப் பணிகளை செய்து அவனுக்கு உதவியாக இருந்தனர். அரசகுமாரர் ஆட்சிக்குரிய கல்வியையும் போர்க்கல்வியையும் வெவ்வேறு ஆசிரியரிடம் பயின்றார்கள். முற்கால மாணவர் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் மாத்திரமல்லாமல் இசைக்கூத்து, ஓவியம் போன்ற பலவகைக் கல்விகளையும் பயின்றனர்[68]

*என்று ந.சி.கந்தையாப்பிள்ளை கூறுகின்றார்.*

## தொகுப்புரை

*பாடப்பொருள் பற்றிய விளக்கம், பாடத் திட்டத்தின் சமூக நோக்கம், பல்வேறு வகைப் பாடற்பொருள்கள் ஆகியன இவ்வியலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழகத்தில் வேதக்கல்வி நிலை விளக்கப்பட்டுள்ளது. மக்களிடையே பரவிய அறச்சிந்தனைகள், நல்லொழுக்கம், போர்க்களவீரம், நீதிநூற் கருத்துக்கள் ஆகியவை கற்பிக்கப்பட்ட முறை கூறப்பட்டுள்ளது. அரசு ஆட்சி முறை, இல்லறக் கடமைகள், சான்றாண்மைப் பண்பு வழிவழியாகப் பின்பற்றிவரும் மரபுகள் விளக்கப்பட்டுள்ளன. அறநூல்கள் பாடப்பொருள் ஆன முறை அது போல இலக்கண இலக்கியங்கள் பாடற்பொருளாக போதிக்கப்பட்ட முறை ஆகியவை இவ்வியலில் தொகுக்கப்பட்டுள்ளன. பாடம் கூறுதற்கென்று உருவாக்கப்பெற்ற நூல்கள் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.*

## சான்றெண் குறிப்புகள்

1. *எஸ்.சந்தானம்,* ***கல்வியின் தத்துவ அடிப்படைகள்,*** *ப.23.*
2. *வி.கனகசபை, க.அப்பாதுரை (மொ.ஆ.),* ***ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்,*** *ப.433.*
3. *து.சேகர்,* ***தமிழ் இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள்,*** *ப.30.*
4. ***நற். கடவுள் வாழ்த்து.***
5. ***நன்.,*** *நூ.36.*
6. *மேலது.*
7. *இரவீந்தர்நாத்தாகூர், மேற்கோள்: து.சேகர்,* ***தமிழ் இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள்,*** *ப.32.*
8. *து.சேகர், மு.கு.நூ., ப.30.*
9. *கா.சுப்பிரமணியன்,* ***சங்ககாலச் சமுதாயம்,*** *ப.81.*
10. *சி.பக்தவச்சலபாரதி,* ***பண்பாட்டு மானிடவியல்,*** *ப.157.*
11. *எஸ்.சந்தானம், மு.கு.நூ., ப.157.*
12. ***குறள்.****140.*
13. *பரி. (உ.ஆ.),* ***குறள்.***
14. Rabindaranath Thagore, The Home and the world, Everyman has a natural right to possess and therefore greed in natural. It is not in the wisdom of nature that we should be content to be deprived, p.81.
15. *இ.பா.வேணுகோபால், மேற்கோள்: து.சேகர்,* ***தமிழ் இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள்,*** *ப.29.*
16. *அ.த.,* ***சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்,*** *ப.44.*
17. ***விடுதலை (நாளேடு),*** *27.2.2014, திருச்சிப் பதிப்பு.*
18. *அகம்பன்,* ***எல்லாருக்கும் இலவசக் கல்வி,*** *ப.44.*
19. *சு.ஸ்ரீபால், "முன்னுரை", மேற்கோள்: அகம்பன், மு.கு.நூ., ப.6.*
20. *எஸ்.சந்தானம்,* ***கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்,*** *பக்.22-23.*
21. ***குறள்.*** *134.*
22. *பரி. (உ.ஆ.), மேலது.*

23. எஸ்.சந்தானம், **கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்,** ப31.
24. மேலது., ப.24.
25. **குறள்.**391.
26. அகம்பன், **எல்லாருக்கும் இலவசக் கல்வி (ஓர் ஆய்வு),** ப.4.
27. எஸ்.என்.கந்தசாமி, Buddhism as Expounded in Manimekalai, மேற்கோள்: கு.வெ.பா., **சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்**, ப.193.
28. அ.தட்சிணாமூர்த்தி, **சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்,** ப.313.
29. **தொல்.மரபு.** 56.
30. பரி. (உ.ஆ.), **உரைப்பாயிரம், திருக்குறள்.**
31. பரி. (உ.ஆ.), **ஒழுக்கமுடைமை, அதிகாரவிளக்கம், திருக்குறள்.**
32. கு.வெ.பா., மு.கு.நூ., ப.115.
33. பேராசிரியன் ஆத்திரையன், மேற்கோள்: வீ.சந்திரன், **தமிழர் கல்வி,** பக்.30-31.
34. அறவாம்பிள்ளையோன் பெனடிகல், **லெனினது கல்விச் சிந்தனைகள்,** ப.13.
35. கு.வெ.பா., மு.கு.நூ., ப.117.
36. மேலது., ப.116.
37. ப.சிவகாமி, **இலக்கியப் பொருள் பகுப்பாய்வு,** ப.121.
38. மேலது.
39. தி.செல்வம், **தமிழக வரலாறும் பண்பாடும்,** ப.111.
40. மேலது., ப.108.
41. தி.செல்வம், மு.கு.நூ., ப.110.
42. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., பக்.222-223.
43. **பெரும்பாண்.**443.
44. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.93.
45. வே.தி.செல்வம், **தமிழக வரலாறும் பண்பாடும்,** ப.110.
46. அ.ம.பரிமணம், **சங்க இலக்கியத்தில் வேந்தர்கள்,** சங்க இலக்கியக் கட்டுரைகள், ப.96.

47. கே.கே.பிள்ளை, **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,** ப.63.

48. மேலது., ப.79.

49. மேலது., ப.164.

50. மேலது., ப.166.

51. மேலது., பக்.168-169.

52. மேலது., ப.168.

53. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.64.

54. மேலது., ப.64.

55. கே.கே.பிள்ளை, **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,** ப.173.

56. அரங்க.சுப்பையா, **சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும்,** ப.73.

57. **குறள்.**118.

58. **குறள்.338.**

59. **பொரு.** 183-184.

60. ந.சுப்பிரமணியன், மு.கு.நூ., ப.178.

61. **குறள்.408.**

62. கே.கே.பிள்ளை, **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,** ப.168.

63. ஜி.பங்கஜம், **கல்வியும் சமுதாயமும்,** ப.14.

64. **திராவிடநாட்டுக் கல்வி வரலாறு,** ப.83.

65. **திரிகடுகம்,** மேலது., ப.83.

66. சா.கிருஷ்ணமூர்த்தி, கு.நிர்மலாதேவி (ப.ஆ.), **தமிழ் இலக்கியத்தில் மனித நேயம்,** ப.233.

67. ப.அருணாசலம், **பக்தி இலக்கியம்,** ப.26.

68. **புறம்.**40.

69. ந.சி.கந்தையாப்பிள்ளை, **தமிழர் பண்பாடு,** பக்.105-106.

# இயல் 6

# கற்றல் முறை

*'கல்வி' பயிற்சியுடன் உறவுடையது. பயிற்சி சிந்தனையையும் அறிவாற்றலையும் வளர்க்கிறது. தகவல்களைப் படிக்கப் படிக்க, அறிவு மேலும் மேலும் வளர்கிறது. இந்தப் பயிற்சியையும் சிந்தனையையும் கற்றலுடன் தொடர்பு படுத்துகின்றனர். கற்றல் செயலுக்குப் பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இதற்கு நெடிய வரலாறுண்டு. சங்க கால முதல் இன்று வரை கற்றல் செயலுக்கும் பயிற்சிக்கும் அறிஞர்கள் முதன்மை தந்து வந்துள்ளனர். கற்றல் செயலுக்கு வகுக்கப்பட்டு வரும் பயிற்சி முறைகள் காலந்தோறும் மாறி வருவன. ஒரே சீராக இருப்பதில்லை. காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்பக் கற்றல் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. சங்க காலத்தில் கற்றல் தொழிலில் செயற்பட்டுவந்து முறைகள் சங்க இலக்கியங்களிலும் பிற வரலாற்று ஆவணங்களிலும் பதிவாகியுள்ளன. சங்க காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த முறைகட்குச் சங்க இலக்கியங்களே பெரும்பகுதியும் அகச்சான்றுகளாய் அமைகின்றன. அவற்றைத் தொகுக்குங்கால் கிடைக்கும் தரவுகளின் வழிச் சில கற்றல் முறைகள் விளக்கப்படும் வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன. அவை இங்குப் பகுத்து விளக்கப்படுகின்றன.*

1. *கற்றல் முறை விளக்கம்*
2. *எழுதிக் கற்றல்*
3. *பாடிக் கற்றல்*
4. *உரைத்தலும் உரையும்*
5. *செவிவழிச் செய்தி*
6. *கலந்துரையாடல்*
7. *மனனம் செய்தல்*
8. *படியெடுத்தலும் பயிற்சியும்*
9. *பொருள் தந்து கற்றல்*
10. *விரதமும் கற்றலும்*

*11. இருப்பிடக் கல்வி*

*12. அரசு வழிக்கற்றல்*

## 6.1. கற்றல் முறை - விளக்கம்

*கற்றல் பயிற்சி என்பது கற்றல் முறை எனக் கூறப்படுவது. ஆங்கிலத்தில்* Learnig Process *எனவும் கூறலாம். ஒன்றைக் கற்பித்தலுக்கு முறைகள் வகுக்கப்பட்டிருப்பது போலவே கற்றலுக்கும் சில பயிற்சி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.* Educate, Learn *என்ற இரு சொற்களும் ஒன்றற்கு ஒன்று தொடர்புள்ளவை. கற்றல் முறை காலத்துக்குக் காலம் வேறுபட்டுள்ளது. அறிவியல் வளர்ச்சியாலும் ஆராய்ச்சி நெறிமுறைகளாலும் புதிய பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்ச் சூழலைப் பொருத்தவரையில் சங்ககாலம் கற்றல் முறைக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளதை அறியலாம். 'மாணாக்கன், ஆசிரியன்'[1] என்ற சொற்கள் மொழி வளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் காட்டுகின்றன.இறைவனைக் குறிக்கும்போதும் எல்லாம் 'கற்றறிந்த இறைவன்'[2] என்றும் வேதம் உணர்ந்தவன்[3] என்றும் கூறப்படும் தொடர்கள் எண்ணத்தக்கனவாயுள்ளன. தொல்காப்பியப் பாயிரத்தில் இடம்பெறும் சில தொடர்கள் தொல்காப்பியரின் கற்றுணர்ந்த திறமே கூறி முடிப்பனவாய் காணப்படுகின்றன.*

> முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி
> ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியன்[4]

*போன்றவை மேலதை உறுதி செய்வன. தொல்காப்பியத்தில் வரும் 'என்ப' என்னும் சொல்லிற்கு 'என்பர் புலவர்'[5] எனப் பொருள் கூறுவர். புலவர் கற்றோர். இவையனைத்தும் கற்றலின் தேவையையும் சமூக மதிப்பையும் உணர்த்துவன. சங்ககாலம் மரபுவழிக் கற்றலுக்கு முதன்மை தந்தது. இல்லத்திலுள்ள முதியோரும், பொதுவில் காணப்பட்ட சான்றோரும், தனி ஆசிரியர்களும் எடுத்துக் கூற அதன்வழிக் கற்றோர் சமூகத்தில் பெரும் பகுதியாய் இருந்தனர். தொடக்கக் காலத்தில் கற்றல் பொருள் வேறுவேறாக அமையினும் கற்றல் முறை குறிப்பிட்ட சில நெறிமுறைகளைக் கொண்டு*

அமைந்தன. 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்று கலித்தொகை குறித்த சொல்லாடலொன்றும் தமிழில் காணப்படுகிறது.

கல்வி என்பது கல்லுதல் என்பதை அடிப்படையாகக் கொண்டது. கற்றல் என்பதும் 'கல்' என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியது. மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மனிதன் ஒன்றிலிருந்து ஒன்றை அறிந்து கொண்டான். இந்த அறிந்து கொள்ளும் முறைக்கு (aware of knowing) கற்றல் (Learning) என்றே பொருள். இது பற்றி விளக்கும் கல்வியலாளர்கள் கூறும் கருத்துக்களை எண்ணிப் பார்த்தல் தேவையாகும்.

> கல்வி என்பது இன்றோ நேற்றோ தோன்றிய செயலல்ல. மனித இனம் தோன்றிய காலம் முதலே கல்வியும் தோன்றி விட்டது. பள்ளியில் சென்று படிப்பது மட்டும் கல்வியல்ல. ஒவ்வொரு நாளும் தன் ஒவ்வொரு செயலையும் மாறுபடுத்தியும் மேம்படுத்தியும் கொள்வதும் கல்வியே ஆகும். உலகில் பெருகி வரும் சவால்களைச் சந்திக்க மனித குலம் தன் இளைய சமுதாயத்தைத் தயார் படுத்தக் கல்வியை ஒரு சாதனமாகவே பயன்படுத்தி வருகின்றது. தான் அடைந்த திறமைகளையும் அறிவையும் தனது அடுத்த தலைமுறைக்குக் கற்றுத் தருகிறது. எனவே நன்கு முக்கியமான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது[6]

என்று வ.வாசுகி என்பார் தம் நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

கற்றல் என்பதற்குரிய விளக்கமும் இதுபோலவே அமைகிறது. கல்வியியல் துறையில் பல்வேறு கற்றல் முறைகள் தற்காலத்தில் காணப்படுகின்றன. குறிப்பாக உளவியல் பாடப் பொருளைக் கற்றலில் பல முறைகள் உள்ளன.

1. ஆக்கநிலை உறுத்தல்
2. முயன்று தவறிக் கற்றல்
3. பின்பற்றல்
4. உட்காட்சி
5. பயிற்சி வழிக் கற்றல்

போன்ற பலவற்றைக் கூறுகின்றனர்.[7]

*இத்தகைய கற்றல் முறைக்கும் பழங்காலக் கற்றல் முறைக்கும் பல்வேறு வேறுபாடுகள் உண்டு. சில கற்றல் முறைகளுடன் பழங்கால முறைகள் ஒத்தும் காணப்படுகின்றன. குறிப்பாகப் 'பின்பற்றல்' கல்வி முறையைக் கூறலாம்.*

## 6.2. எழுதிக் கற்றல்

*பழங்காலக் கற்றல் முறையில் இது முதன்மை வாய்ந்தது. முதலில் எழுத்துப்பயிற்சி ஏற்பட்ட பின்னரே எதையும் படிக்க முடியும். எழுத்துக்களைப் படிக்கத் தெரிந்த மாணவன் ஒருவன் தானே முயன்று கற்றலுக்கும் சென்று விடுவான். முயன்று கற்றல் இன்று வரை தனி மனிதர்கள் கற்றலில் காணப்படுகிறது. தொடக்கக் காலத்தில் மணலைத் தரையில் பரப்பி அதன்மீது எழுதிப் பழகினர். ஆனால் ஓலைச்சுவடிகளில் எழுதுங்கால் அம்முறையைப் பயன்படுத்த இயலாது. சுவடியில் விரிவடிவச் சிக்கல் படிப்போர்க்கு மிகுதியும் இருந்தது.*

> ஏட்டில் எழுத்தாணியால் எழுதமக்கள் சில முறைகளை மேற்கொண்டனர். ஏடுகளில் இருப்பக்கமும் எழுதுவதால் புள்ளியிடுவதைத் தவிர்த்தனர். எழுத்துவடிவத்தையும் பிறமொழிகள் போலச் செங்குத்து வசமாகவோ நேர்க்கோட்டு வசமாகவோ அமைக்காமல் சாய்வு நிலையிலும் வட்ட நிலையிலும் அமைத்தனர். இவற்றால் ஏடு முறிவினின்றும் பாதுகாப்புப் பெற்றது. மேலும் னகர ஒகர உயிர்மெய் எழுத்துக்களில் குறிகளையும் நெடிலையும் ஒன்றாகவே அமைத்தனர். இடையின 'ர'வுக்கும் காலுக்கும் வேறுபாடு உணர முடியாது[8]

*எனக் கூறப்படுவது எழுத்துப் பயிற்சியே முதற்கண் வாசிப்புக்குத் தேவை என்பதை உணர்த்தும். ஏடு பிரித்து அச்சிடுவோர்க்கும் எழுத்தில் ஏற்படும் சிக்கல்கள் நிரம்ப இருந்தன. பாடவேறுபாடு முதலானவை நிறைந்ததாக ஏடுகள் காணப்பட்டன.*

> இது கொம்பு இது சுழி என்று வேறுபிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்தும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம் சரபமாகத் தோற்றும் ஓரிடத்தில் சரடு என

> வந்திருந்தது. அந்த வார்த்தையைப் பல காலம் ‘சாடு’ என்றே எண்ணியிருந்தேன். தரன் என்பதைத் தான் என்று நினைத்தேன். இடையின ரகரத்திற்கும் வல்லின ரகரத்திற்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கின இடங்கள் பல[9]

என்றெழுதுகிறார் உ.வே.சா. எனவே சுவடிகளில் உள்ள எழுத்தமைப்பைக் கண்டறிவதற்கு நடைமுறையில் உள்ள எழுத்துக்கள் பற்றிய பயிற்சி தேவையாகிறது. அவ்வாறெனில் மாணவர்களுக்குக் கற்றுத்தரப்பட்ட எழுத்து வடிவங்கள் வேறெனத் தெரிகிறது.

மாணவர்கள் வீடுகளிலிருந்து வரும்போது சிறு சிறு பைகளில் மணலைக் கொண்டு வந்தனர். தம் இருக்கைக்கு முன்னர் அதனைப் பரப்பி அதன் மீது கைவிரலால் எழுதிப் பழகினர். இந்த மணல் அடிக்கடி மாற்றப்பட்டது. கைவிரல் வலதுகை ஆட்காட்டி விரலாக இருந்தது. எழுத்தும் பயிற்சி நடக்கும் போதே வாய்மொழியாகச் சொற்களும் கூறப்பட்டன.

தமிழைப் பொருத்தவரையில் எழுத்தின் வடிவங்கள் காலந்தோறும் மாறியே வந்துள்ளன. எழுத்தறிவு வீரயுகக் காலகட்டத்தில் தோன்றியுள்ளது என்பது ஆராய்ச்சியாளர் குறிப்பு. சங்க இலக்கியங்களிலும் எழுத்துக்கள் வளர்ச்சியடைந்த நிலை குறித்தும் குறிப்பாக ஓலை எழுத்துக்கள் பற்றியும் பேசப்பட்டிருப்பதையும் ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர்.

> தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்களில் பெரும்பாலானவை புலவர்களால் பாடப்பெற்றவை. எனினும் இவ்வாறு பாடிய புலவர்கள் தமக்கு முன் இருந்த வாய்மொழிப் பாவலர்களான பாணர்கள் மரபை முற்றாகப் பின்பற்றிய பாடினார்கள். உலகம் முழுவதும் வீரயுகத்தின் பிற்கூறில் எழுத்தறிவு பரவியது போன்று பழந்தமிழகத்திலும் வீரயுகத்தின் பிற்கூறில் எழுத்தறிவு தோன்றியிருத்தல் வேண்டும். தொகை நூல்களில் பழமையானது என்று கருதப்பெறும் அகநானூற்றில் பனை ஓலையில் எழுதப்பட்டதற்கான குறிப்பு உள்ளது. தூதன் ஒருவன் மன்னன் தன்னிடம் கொடுத்தனுப்பிய ஓலையை எடுத்துச் செல்கிறான். எழுதப்பட்ட அவ்வோலைகள் கயிற்றினால் நன்கு கோக்கப்பட்டு ஒரு

பானையில் வைத்து மூடப்படுகின்றன. பானையின் மேல் அரசனின் முத்திரை இடப்பெறுகின்றது. ஆறலை கள்வர்கள் தூதனைக் கொன்று அவனிடமிருந்து பானையைக் கைப்பற்றி முத்திரையை அழித்து ஓலையைப் பிரிக்கின்றனர். (அகம், 77: 5-12)[10]

*என்று அ.பாண்டுரங்கன் தொகை நூல்கள் பற்றிய ஆய்வொன்றில் குறிப்பிடுகின்றார். எனவே சங்க காலம் எழுத்துச் செம்மையுடைய காலம் என்பதை அறிய முடிகிறது. இத்தகைய காலகட்டத்தில் பல்வேறு நடைமுறைப் பயிற்சியில் மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சி தரப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

சாத்தன் கையெழுது மாறுவல்லன. அதனால் தந்தை, உவக்கும்[11]

*என வரும் உரைக்குறிப்புக்களும் எழுத்துப் பயிற்சியுடைமையை உணர்த்தும். மேலும் எழுத்துக்களுக்குரிய வரிவடிவம் அமைவதற்கு முன்னரே சித்திரம், (ஓவியம்) வரையும் கலையை மக்கள் அறிந்திருந்தனர். சித்திரங்களாக எழுத்துக்கள் முதற்கண் தோன்றியிருத்தல் கூடும்.*

*தொடக்கக் காலத்தில் பல நாட்கள் இந்த எழுத்துப் பயிற்சியே நடந்தது எனலாம். இவ்வாறு செய்வதற்குரிய காலம் போதுமானதாகவும் இருந்தது. நூல்கள் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்தாலும் சுவடி எழுத்துக்களின் வரிவடிவத்திற்கும் நடைமுறை எழுத்து வடிவத்திற்கும் மாறுபாடு காணப்பட்டதாலும் சுவடிகளைப் படிப்பதற்குச் சிரமம் இருந்தது. இதனை நீக்குவதற்குத் தொடக்கக்கால எழுத்துப் பயிற்சி தேவையாகப்பட்டது. 'எழுதிக் கற்றல்' என்பது எழுத்தை எழுதிப்பழகுதலாகும். இவ்வாறு எழுத்து வடிவத்தை அறிவதால் சுவடிகளை எளிதிற் படிப்பதற்குரிய பயனும் உண்டாயிற்று.*[12]

பொதுவாக ஏடுகளிலோ காகிதங்களிலோ எழுதுபவர் விரைவாக எழுதப்பழகுதல் வேண்டும். அங்ஙனம் எழுதும் போது எழுத்துக்களின் வடிவு, அளவு, தெளிவு என்பவற்றை உட்கொண்டு எழுதுதல் வேண்டும். வடிவாவது ஒவ்வொரெழுத்துக்கும் சான்றோர் கொடுத்துள்ள வடிவம். அளவாவது பல எழுத்துக்களைத் தொடர்ந்து எழுதும் போது ஓரெழுத்துச் சிறியதாகவும் ஓரெழுத்துப் பெரியதாகவும் அமையாமல் யாவும் ஒரு

> சீரான அளவினவாக இருத்தல். தெளிவாவது விரைந்து எழுதும்போது ஒரெழுத்துப் பிறிதோர் எழுத்துடன் சேர்ந்து வடிவில் வேற்றுமை தோற்றி வாசிப்பவர்க்கு இது எந்த எழுத்தோ என்று மயங்கும் நிலையைத் தாராமல் ஐயுறவு இன்றி வாசிப்பதற்கு ஏற்பத் தெளிவாக அமைநத்திருத்தல். எழுதும் போது வடிவு, அளவு, விரைவு என்ற நான்கும் உள்ளத்துக் கொள்ளப்படல் வேண்டும். எனினும் இறுதியில் கூறப்பட்டுள்ள விரைவு நிகழும் போது ஏனைய மூன்றும் நெகிழ்க்கப்படுகின்றன[13]

*என்று எழுத்துக் கல்வியின் பயிற்சி, பயன் ஆகியவற்றைக் கூறுகின்றனர்.*

*பண்டைக் காலத்தே பலவகைக் கல்வி முறைகள் பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர். கல்வியின் வகைப்பாடு பலதிறத்தனவாய் இருந்ததால் அதனைக் கற்ற முறையும் பலவாய் இருந்ததைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக,*

1. *போர்க்கல்வி*
2. *வேதக் கல்வி*
3. *இல்லறக் கல்வி*
4. *ஆட்சித்துறைக் கல்வி*

*என நான்கு வகையாகக் கற்றுத்தரப்பட்டது.*[14] *இவற்றுள் பெரும்பகுதியும் வாய் வழியாக எடுத்துச் சொல்லித் திரும்பத் திரும்ப மனத்திருத்திக் கொள்ளும்படி செய்யப்பட்டன. எனினும் ஒன்றிரண்டிற்கு எழுத்துமுறையிலும் போதிக்கும் சூழல் இருந்தது.*

> நுண்ணிய நூல் பல கற்ற அறிவும் பட்டறிவும் மனிதர்க்கு வேண்டும். எழுத்துக் கல்வியும் தொழிற் கல்வியும் வாழ்க்கை நெறிக்கல்வியும் எனப் பன்மான் கல்வி நலங்கள் நாகரீக அணியிற் பதிக்கத்தக்க மணிகள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்விச் சிறப்பால் அரசும் தாயும் ஒருவனை இளையனென்று கருதாது போற்று என மொழிவான்[15]

*என்று சங்ககாலக் கல்விப் போக்கை ஆசிரியர் விவரித்துள்ளனர். இங்குக் கூறப்பட்ட எழுத்துக் கல்வி என்பது எழுதி வைக்கப்பட்ட ஏடுகளைக் கற்ற கல்வியெனவும் கருத்தை நூலாக எழுதும் ஆற்றலுடைய கல்வி எனவும்*

பொருள் உரைக்கலாம். சங்ககாலத்தில் ‘நடுகல்’ அமைக்கும் பழக்கம் இருந்தது. இறந்த வீரர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. இவற்றில் இறந்த வீரர்களின் பெயரையும் பெருமையையும் அக்கால எழுத்து வடிவமுறையில் எழுதி வைத்துள்ளனர். ‘பீடும் பெயரும் … பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்’ எனக் கூறப்படுதல் காணலாம்.

எழுதிக் கற்றலில் பல வகைகள் காணப்படுகின்றன. முதலில் தரையில் மணல் பரப்பி அதன் மீது வலது ஆள் காட்டி விரலால் எழுதச் செய்து பயிற்சித் தரப்பட்டது. இப்பழக்கம் சங்க காலத்திலும் இருந்திருக்கக்கூடும். இத்தொடக்ககாலப் பழக்கம் நாளடைவில் எழுத்தாணிக் கொண்டு எழுதுவதற்கும் வழிகாட்டியாய் அமைந்தது. இதன் பின்னர் பனை ஓலைத் துண்டுகளைச் சரிசெய்து அவற்றைப் பதப்படுத்திச் சுட்டி வைத்தனர். இச்சுட்டிற்கு ‘சுவடி’ என்று பெயர். உலர்ந்த, நறுக்குத் தரிக்கப்பட்ட, நீண்ட, குறுகிய பனை ஓலைத் துண்டுகளில் (ஒரு அடி நீளம், ஈரங்குல அகலம்) மாணவர்கள் எழுதினர். அவை ஒரு மூலையிலோ இரு மூலைகளிலுமோ தொளையிடப்பட்டன; அவற்றிற்கும் பக்கம் இட்டு அவற்றை ஒன்றாகக் கோத்துக் கெட்டியான கயிறுகளால் பிணித்தனர்.

பல பக்கங்களை இவ்வாறு சேர்த்துக் கட்டிய பின் அக்கட்டுக்களை அதே அளவுள்ள இரு பலகைகளுக்கிடையே இட்டுக் கட்டினர். இப்பக்கங்கள் ஓலை எனப்பட்டன. அவர்களது எழுதுகோல் நீண்ட கூரிய ஆனால் திரண்ட ஊசி போன்றது. அது ஏழு மரப்பிடியில் செருகப்பட்டது. அதனை ஊசி அல்லது எழுத்தாணி என்றனர். இக்கூரிய எழுதுகோலைக் கட்டை விரலால் எழுத்திப் பிற விரல்களுக்கு இடையில் செருகிக் கொண்டு மாணவர்கள் அவ்வுலர்ந்த சருகுகளில் எழுதினர்.

### 6.3. பாடிக் கற்றல்

சங்கத் தமிழ்ப் பாடல்கள் அனைத்தும் இசையுடன் பாடப்பெறும் தன்மை கொண்டவை. தமிழ்மொழியைப் பாட்டு மொழி எனவே அழைப்பர்.

பத்துப்பாட்டில் கூறப்பட்ட நூல்களுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு எனவும் கூறப்பெறும். இது ‘கபிலரது பாட்டு’ என்றாற்போல’ என எடுத்துக்காட்டுக்கள் கூறப்பெறுவதும் இதனை வலியுறுத்துவனவாகும். மொழியின் இலக்கிய வடிவங்கள் மிகுதியும் பாடல் வடிவிலேயே கற்றுத் தரப்பட்டன. ஆசிரியர்களும் மாணவர்களும் இசையுடன் பாடும் திறம் படைத்தவர்களாக இருந்தனர். நெடுங்கணக்கு முறையிலுள்ள எழுத்துக்களும் இசை வடிவில் கற்றுத்தரப்பட்டன. சங்ககாலத்திற்குப் பின்னர் தனி இசையே வகுக்கப்பட்டுள்ளது. ஓலைச் சுவடிகளிலிருந்து பழந்தமிழ் நூல்களை அச்சிடுவோர்க்கு யாப்பு மற்றும் இலக்கண அறிவாற்றல் இருத்தல் தேவை எனப் பிற்காலத்தே கூறினர்.

> இசை ஓவியம் நாடகம் போன்ற கலைகளுக்குரிய இலக்கணத்தை விளக்கும் சுவடிகளை முறையாகப் பதிப்பிக்க முயலும் போது ஏற்படும் சிக்கல்களை இக்கட்டுரை சிந்திக்கிறது. வாத்திய மரபு என்னும் சுவடியைப் பற்றிய பல செய்திகளின் பின் இத்தகைய நூல்களின் பதிப்பில் மொழியறிவோடு குறிப்பிட்ட அந்தக் கலையிலும் பதிப்பாசிரியர்க்குப் போதுமான அறிவு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. தாள நூல்கள் தரும் கணக்கில் சில தாளங்களின் மாத்திரை அளவு மாற்றியுள்ளதைச் சுட்டிக் காட்டி இசைக் கலைஞர்கள் இதற்குத் தக்க முடிவு எடுக்க வேண்டும் என்கிறது. சுவடிப் பதிப்பில் நூல் மட்டுமேயன்றி அதன் முன்னும் பின்னும் அமைந்துள்ள குறிப்புகளும் நன்கு ஆராயப்பட வேண்டும்[16]

என்று இசைநூல் பதிப்புப் பணியில் இறங்கியவர்கள் குறிப்பிடுகின்றனர். இசைநூல் குறித்த இலக்கண நூல்கள் இருந்தன என்பது தமிழ்ச் செய்யுட்கள் இசை அடிப்படையில் பாடப்பெற்றன என்பதைக் காட்டுகின்றது. கடவுள் வாழ்த்துப் போன்றவற்றை ‘வாழ்த்துப் பாடல்’ என்றே தெரிவிக்கின்றனர்.

சமூகத்திற்கு வேண்டிய கருத்துக்களைப் பெறவும் இலக்கண இலக்கியக் கருதுகோள்களைப் பெறவும் துணையாக நின்றவை சங்க இலக்கியங்களாகும். நீதி நூல்கள் பிற்காலத்தில் இயற்றப்பட்டவை. சங்க இலக்கியங்களில்

*கூறப்பட்ட அறக்கருத்துக்களும் சமுதாயத்தில் மரபு வழியாகப் பின்பற்றப்பட்ட அறக் கருத்துக்களுமே மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. செய்யுட்கள் இசையுடன் பாடப்பட்டன. நாட்டுப்புறப் பாடல்களும் அக்காலத்தில் மிகுந்திருந்தன. புலவர்கள் வாய்வழியாகப் பாடிய பாடல்கள் பிறர் கேட்டுப் பாடும் அளவிற்கு இசைத் தன்மை கொண்டனவாக இருந்தன. எழுதி வைத்துக் கொண்டு புலவர்கள் பாடினாரில்லை. பேச்சு வழக்குத் தவிரப் பிற அனைத்தும் இசையுடன் பாடப்பட்டன. சங்க இலக்கிய ஆய்வாளர்கள் கல்வி இசைப் பாடல்களுடன் தொடர்ந்திருந்ததைக் குறிப்பிட்டுச் செல்கின்றனர்.*

> பாணர்களும் புலவர்களும் பாடல்களைப் பாடினார்களேயன்றி எழுதி வைத்துப் படித்தார்கள் என்று கருதுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. பெருங்கற்படைக் காலப் பண்பாட்டின் எச்சங்களாக கருதப்படக் கூடிய பாடல்களும் இனக்குழுச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் பாடல்களும் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன... ஆனால் பாடல்களின் தொகுப்பு கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய உள்ள மூன்று அல்லது நான்கு தலை முறைகளில் தொகுக்கப்பட்டன வாதல் வேண்டும் என்னும் கருதுகோளையும் நாம் முன்வைத்துள்ளோம். அவ்வாறாயின் இந்நீண்ட இடைவெளியில் பாடல்கள் எவ்வாறு கையளிக்கப்பட்டு வந்தன என்னும் வினா நம்முன் எழுகின்றது[17]

*அறிஞர் அ.பாண்டுரங்கன் தமிழில் பாடல்கள் பயின்று வந்துள்ள முறை பற்றிக் குறிப்பிடுகின்றார்.*

*இசையுடன் பாடுவது மனத்தில் ஆழமாகப் பதியும் என்பது பிறிதொரு செய்தியாகும். பாடங்கற்பிக்கும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் பாடலைப் பாடிக் காட்டினர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடங்கேட்கச் சென்ற உ.வே.சா.விடம் பாடல் ஒன்றை ஓர் இலக்கியத்திலிருந்து கூறுமாறு கேட்கச் சிறு வயதினராகிய உ.வே.சா. அதனைக் குறிப்பிட்டதொரு இசை பொருந்தப் பாடிக் காட்டியதாகத் தம் வாழ்க்கைச் சரித்திர நூலில் குறிப்பிட்டுள்ளார்.[18] எனவே பாடம் படிப்பதென்பதும், பாடம் கேட்பதென்பதும் இசை வடிவிலேயே இருந்தமை புலனாகும். தொல்காப்பியம் போன்ற இலக்கண*

*நூல்களில் காணப்பெறும் இலக்கண விதிகளும் ஓரளவு இசையுடன் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். சங்கப் பாடல்களிலேயே பாடினேன், பாடினது என்னும் சொற்கள் வருவதைச் சுட்டிக்காட்டி இசை வடிவில் இப்பாடல்கள் எடுத்துரைக்கப் பெற்றன என்பதை நிறுவுகின்றனர்.*

> தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பயிலும் போது புலவர்கள் வேந்தர், மன்னன், தலைவன் முன்னிலையில் பாடியபோது அவர்கள் அப்பாடல்களை எழுதி வைத்துப் பாடியதாகத் தெரியவில்லை. தொகைப் பாடல்களில் பாடினேன் (புறம்.394:9), பாடினேம் (புறம்.144:3), பாடினம் (கலி,106:48), பாடினர் (புறம்.109:17) பாடினை (புறம்.105:8, 328:16, பதி.62:23), பாடினன் (புறம்.99:12, 126:13) பாடினள் (குறு.89:7, நற்.373:3, புறம்.111:4) என வினைமுற்று வடிவங்களும் பாடி என்னும் வினையெச்ச வடிவங்களும் பாடிய, பாடின என்னும் பெயரெச்ச வடிவங்களும் பாடு என்னும் வினைபடியும் பெருமளவில் பயன்படுத்தப் பெற்றுள்ளதால் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பாடப் பெற்றவை எனக் கொள்வதே பொருந்தும்[19]

*என்று குறிப்பிடுவது பாடல்கள் வாயளவில் பாடப்பெற்றவை என்பதையும் அவ்வாறே கற்பிக்கப்பட்டன வென்பதையும் உணர்த்தும்.*

*பாணர்கள் என்பாரின் அடிப்படைத் தொழில் பாடுதலாம். ஒருவர் பாடியவுடன் அதனைக் கேட்டு உடனே பாடும் பயிற்சியை அவர்கள் பெற்றிருந்தனர். அவர்களுக்குப் பாடல்களை விரைவில் மனனம் செய்யும் பயிற்சியும் இருந்தது. வீரயுகப் பாடல்கள் தொடர்ச்சியாக மனனம் செய்தே வைக்கப்பட்டிருந்தன. ஒரு தலை முறையினர் அடுத்த தலை முறையினர்க்குப் பாடிக் கற்றுக் கொடுத்தனர். எழுத்து வடிவம் இல்லாமலே பல நூறாண்டுகள் மக்கள் மனத்தில் இவ்வகைப் பாடல்கள் நிலைத்து நின்றன எனலாம்.*

### 6.4. உரைத்தலும் உரையும்

*'உரை' என்பது உரைத்தல் என்ற தொழிற்பெயரின் வினையடி. ஒன்றை எடுத்துக் கூறு என்னும் முன்னிலை ஏவலாக உள்ளது இது. 'உரை' என்ற*

பெயர்ச்சொல்லாகவும் நின்றது. தமிழ் லெக்சிகன் பெயர், வினை என்ற இரு பொருளையும் இதற்கு வழங்கியுள்ளது.[20] கற்றறிந்தார் பண்டைச் செய்யுட்கெழுதிய விளக்கம் உரை ஆயிற்று. செய்யுள் வடிவின்றி மொழி வழக்கில் எழுதப்படுவது உரைநடை (Prosody) எனக் கூறப்பட்டது. ஆசிரியர்கள், சங்கக் காலத்தும் பெரும்பகுதியும் செய்யுட்களையே பாடமாகச் சொல்லித் தந்தனர். செய்யுட்களுக்கு அவர்கள் அளித்த விளக்கம் கற்பிக்கும் முறையாயிற்று. இதற்கு உரை என்று பெயர். ஆசிரியர்கள் உரைத்த இவ்வுரையையே இவர்கள் கற்றனர். பாடப் பொருளை இதன் வழியே அறிந்தனர். எனவே உரை என்பதும் மாணவர்கள் பாடம் கற்கும் ஒரு வழி முறையாக இருந்தது. இவ்வுரை பிற்காலத்தில் எழுத்து வடிவில் எழுதப்பட்டும் வந்தது. உரைநடையில் எழுதப்பட்ட நூல்களை வசன நூல்கள் என்றழைத்தனர். மக்களின் கல்வித்தரம் உயர வசன நூல்கள் மிகவும் பயன்பட்டன.

> மக்களின் கல்வி சிறக்க வேண்டுமானால் வசன நூல்கள் பெருகி இருக்க வேண்டும். வசன நூல்கள் மட்டுமே மக்கள் முன்னேற்ற மடைய முடியும். செய்யுள் இலக்கிய நூல்களால் முன்னேற்றமடைவது முடியாத காரியமே. செய்யுளில் இயற்றப்பட்டுள்ள நூல்களைக் கற்பதற்கு முதலில் நிகண்டு முதலிய அகராதி நூல்களைக் கற்றுணர வேண்டியது அவசியமாகும். இப்படி நிகண்டுகளைக் கற்று, பின்னர் இலக்கியங்களைப் பயில்வது என்பது யாரோ ஒரு சிலரால் தான் முடியுமே தவிர பெரும்பாலனவர்களால் முடியாததாகும். ஆகவே செய்யுள் நூல்களை விட நடைமுறை வசனநடை நூல்களே கற்றறிதற்கு இலகுவான நூல்களாகும். அன்றியும் குறுகிய காலத்திற்குள் பல தரப்பட்ட நூல்களையும் கற்றியவும் வசனநூல்கள் உதவியாக உள்ளன. இச்சிறப்பான வசனநடை வழிவகைகளைச் செப்பனிட்டுத் தந்தவர்கள் மேல்நாட்டு ஐரோப்பியர்களும் பாதிரிமார்களுமே ஆவர்[21]

என்கிறார் திராவிடப் பித்தன், இக்காலகட்டத்திற்கு முன்னர் தமிழில் உரைகள் எழுந்திருந்தன. சங்க இலக்கியங்கள் அனைத்திற்கும் புலவர்களால் உரையெழுதப்பட்டன. இதனைப் பாடங்கேட்ட மாணவர்கள் இலக்கிய நுட்பத்தையும் சிறப்பையும் உணர்ந்தனர். மொழி அறிவு வளர்ந்தது.

*பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகளில் முதன்மையானது இறையனார் அகப்பொருள் விளக்கம் ஆகும். இதன் மூலத்தைக் காட்டிலும் இதற்கு எழுதப்பட்ட உரையே சிறந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வுரையை சங்ககாலத்துப் புலவராகிய நக்கீரர் செய்தார். இந்நூலுக்கு இவ்உரை எழுந்தபின் தமிழ் அகப்பொருளின் தனித்தன்மை விளங்கலாயிற்று. இது உரைநடையாயினும் சொல் இனிமையும் தொடர் இனிமையும் கலந்து கவிதை நயம் தோன்ற அமைந்த உரைப்பகுதியாகும். களவியல், சூத்திரங்களின் வழி அறிவதைக் காட்டிலும் இதற்கு எழுதப்பட்ட உரைவழி அறியும் செய்தி மிகுதியாகும். இந்நூல் பற்றி,*

> பண்டைக் காலத்தில் வசன நூல்கள் இருந்தன என்பதைத் தமிழ் நூல்களை ஆராய்ந்தால் தெரிந்து கொள்ள முடிகின்றது. "இறையனார் அகப்பொருள் உரை" என்பது அக்காலத்தில் ஆசிரியர்கள் வசன நடை நூல்கள் இயற்றுவதில் வல்லவர்களாக இருந்தனர் என்னும் உண்மையைப் பறைசாற்றி நிற்கின்றது. இறையனார் அகப்பொருளின் உரைப்பாயிர வசன நடையின் அமைப்பையும் இனிமையையும் கவர்ச்சியையும் படித்து இன்புறாத தமிழ் அறிஞர்கள் இருக்க முடியாது என்றே கூறலாம். இத்துணை ஆசிரியர்கள் தனி வசன நூல்களை இயற்றாமல் இருந்திருக்க முடியாது என்பதே நமது யூகமாகும்[22]

*என்று திராவிடப்பித்தன் தம் நூலில் குறிப்பிடுகின்றார். இதனால் உரைகளின் வழிப் பண்டைய தமிழரின் கல்வி வரலாறு சிறந்து இருந்ததை அறிய முடிகிறது. உரையாசிரியர்கள் நூலை உரைக்கும் பொழுது மாணவர்கள் வினவுவது போலவும் அதற்கு அவர்கள் விடை கூறுவது போலவும் உரையை அமைத்தனர். இதனாலும் உரை வகைகள் ஒரு கல்வி ஏற்பாடாகவே அமைந்தன.*

*சேனாவரையர் பண்புத் தொகையை விளக்கும் பொழுது மாணவன் அவரிடம் வினா எழுப்புவதாகக்கூறி அதற்கு விடைதருவதாக விளக்கம் தருகிறார்.*

> பாம்பைச் சாரை விசேஷத்தல்லது சாரையைப் பாம்பு விசேஷத்தின்றாகலின் ஒன்றையொன்று பொதுமை நீக்காமையாற்

> சாரைப்பாம்பென்பது முதலாயின பண்புத் தொகையாயினவா றென்னையெனின் நன்று சொன்னாய் விசேடிப்பதும் விசேஷக்கப்படுவதுமாகிய இரண்டனுள் விசேஷப்பது விசேடியாக்கால் அது குற்றமாம். விசேடிக்கப்படுவது விசேடித்தின்றென்றலும் விசேடிக்கப்படுதலாகிய தன் தன்மைக் கிழுக்கின்மையான் விசேடியாது இற்பினும் அமையுமென்க. இவ்வேறுபாடு பெறுதற்கன்றே, 'இன்னதிதுவென வரூஉ' மெனப் பின்மொழியை விசேடிப்பதாகவும், முன்மொழியை விசேடிக்கப்படுவதாகவும் ஆசிரியர் ஒதுவாராயிற்றென்பது[23]

*என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கற்றோர் பண்புத் தொகை இலக்கணம் பற்றிய விவரத்தை விளங்கிகொள்ள முடியும்.*

## 6.5. செவிவழிச் செய்தி

*கல்வி வாய்ப்புச் சமூக சூழலால் உருவாகிறது. சமுதாயத்தில் வாய்ப்பும் வசதியையும் பெற்றோர் கல்வி கற்க முடிந்தது. சங்க காலக் கல்வி நிலையில் அனைவருக்கும் கல்வி என்னும் பொதுவாய்ப்புக் கிடைக்கவில்லை. அரசுக்கு நெருக்கமானவர்களுக்கும் பொருளாதார வசதி படைத்தவர்களுக்கும் கல்வி எளிதாகக் கிடைத்தது. ஏழையாக இருப்பினும் கற்றோர்க்கு நாட்டிலே சிறந்த மதிப்பு இருந்தது. கற்றோர் மற்ற யாவரினும் உயர்வாகப் போற்றப்பட்டனர். திருக்குறளில் "கற்றிலனாயினும் கேட்க" எனக் கூறப்படுவது கல்வி பெறும் வாய்ப்பு பெற்றவர் இருந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது.*

*சான்றோர் என்னும் சொல் ஓரளவிற்குக் கல்வி வாய்ப்பை அறிந்தவர்களையே சுட்டும். இத்தகையோர் கல்வி பற்றிய தகவல்களைச் செவிவழிச் செய்தியாகவும் அறிந்தனர். சங்ககாலப் பெண்கள் பெரும்பாலும் கேட்டறிந்தே தகவல்களைப் பெற்றனர். நின் மகன் எவ்விடத்துள்ளான் எனக் கேட்ட ஒரு பெண்ணிடத்தில் அவன் இருக்கும் இடம் தெரியாது என்றும் ஆயினும் போர்களத்தில் இருக்கலாம் என்றும் கேட்டறிந்த செய்தியையே கூறுகின்றாள். இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது கல்வி பெறும்*

வாய்ப்பற்றோர் ஒருவரிடத்தில் கேட்டறிந்த தகவல்களே கல்வியாகப் பயன்பட்ட காலம் இருந்தது. ‘ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே’ என்று தாய் கூறுவதாகக் கூறியிருப்பது பிள்ளைகளுக்கு கல்வித் தருவது தந்தை முதலான மற்றவர்களும் உரியது என்பதைக் காட்டுகிறது. பழைய வரலாறுகளும் புராணக் கதைகளும் செவிவழிச் செய்தியாகவே கற்பிக்கப்பட்டன. இத்தகவல்கள் வழிவழியாக அறிமுகம் செய்யப்பட்டன. மன்னர்கள், புலவர்கள் ஆகியோர் கூறும் செய்திகள் ஒரு சில மக்களிடம் நேரிடையாகச் சொல்லப்பட்டன. மேலும் பறை அறிவித்தல் அடையாளக் குறியீடுகள் ஆகியவை அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ப அறியப்பட்டு இருந்தன.

பெண்களைப் பற்றிக் கூறப்படும் பல தகவல்கள் அவர்களின் கேட்டறிதல் பண்பை விளக்கும். எங்கும் சென்று கற்க இயலாத அளவில் பெண்கள் இருந்தனர். அவர்களின் உடல், உள்ளம் பற்றிய அறிவும் அவர்களுக்குப் பிறரால் கூறப்பட்டது (அகம்.7).

பெண் பேதைப் பருவம் அடைந்ததையும் அடக்கம் முதலிய பண்புகள் அவளுக்கு நிறைய வேண்டும் என்பது இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இச்செய்யுளில் பெண்ணின் ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய மாற்றங்களும் கூறப்பட்டடுள்ளன கற்பு, ஒழுக்கம், வீரம் போன்றவை விளக்கிக் கூறப்பட்ட நிலையில் அல்லது ஒருவரைப் பார்த்து ஒருவர் பழகிய நிலையில் சமூக ஒழுக்கங்கள் பயிற்சிக்கு உள்ளாயின. புலவர்கள் தவறிழைப்பின் அவரை மன்னன் மன்னித்தான். உலகியலைக் கற்று அறிந்த பண்பு நிலையாகும். கணிதம் நில அளவை வானியல் சாஸ்திரம் ஆகியவை பலருக்குச் செவிவழிச் செய்தியாகவே உணர்த்தப்பட்டன. ஐம்பூதங்களின் பண்பு போற்றார்ப் பொறுத்தல் என்பது போன்ற கருத்துக்கள் அனுபவத்தால் வந்தவை. மருத்துவம், ஓவியம், சிற்பக்கலைகள் போன்றவை தனி நிறுவனங்களில் சொல்லித்தரப்படவில்லை. இவை தனித்தனியாக அறிந்து கொள்ளப்பட்டவையாகும்.

## 6.6. கலந்துரையாடல்

*பழங்காலத்தில் ஆசிரியர் மிக அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் சூழ்நிலை காணப்படவில்லை. ஓரிரு மாணவர்களுக்குப் பாடம் சொன்ன பிறகு அந்த மாணவர்களைக் கொண்டே மற்ற மாணவர்களுக்குப் பாடம்சொல்லித்தர ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர்களே தமக்குள் ஒருவருக்கொருவர் பாடம் சொல்லிக் கொடுப்பதை முறையாகக் கொண்டனர். ஓய்வு நேரங்களிலும் ஆசிரியர் இல்லாத நேரங்களிலும் மாணவர்களே தங்களுக்குள் கலந்துரையாடிக் கொண்டனர். இதனால் கல்வி அறிவானது பரவி வந்தது.*

*இது மட்டுமன்றி மொழி பற்றிய அறிவும் புதிய புதிய இலக்கியங்கள் படைப்பதும் மாணவர்களுக்கு எளிதில் ஏற்பட்டது. சங்க காலத்தில் தமிழ் ஆய்வு மன்றங்கள் ஆங்காங்கே இருந்தன. இங்குத் தமிழ்ப் புலவர்கள் கூடித் தம் பாடல்களை எடுத்துரைத்துப் பிழை நீக்கி நல்ல நூல்களை உருவாக்கினர். ஆசிரியர்கள் கல்வியைப் போதிப்பதுடன் சமூக ஒழுக்கங்களையுளும் எடுத்துரைத்தனர். சமூகக் கட்டுப்பாடுகள் ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்லப்பட்டது. பொதுமக்களும் ஆசிரியர்களும் நெருங்கிய உறவு உடையவர்களாக இருந்தனர். மாணவர்கள் தங்களுக்குள் கலந்துரையாடிக் கற்ற பாடங்களை விவாதித்துக் கொண்டனர்.*[24]

*கல்வி பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காததால் பலர் கல்வி கற்கும் ஆசிரியரிடமும் கல்விச் சாலைகளுக்குள்ளும் செல்ல இயலவில்லை. அதனால் பலவற்றைச் செவிவழிச் செய்தியாகவே அறிந்திருந்தனர். சங்க காலத்திற்குப் பிறகு சோழர் காலம் வரையிலும் கூடக் கல்வி பொதுமக்கள் அனைவருக்கும் எட்டாததாக இருந்தது. மக்களே ஒருவருக்கொருவர் ஆசிரியராய் இருந்து தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். பிற்காலச் சோழர் காலத்தில் கல்வி நிலையை நன்கு ஆராய்ந்த* K.K.*பிள்ளை கூறும் செய்தி எண்ணத்தக்கது.*

ஊர்ப் பொதுமக்களுக்குக் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டதா, கல்வி அளிக்கப்பட்டிருந்தால் அதன் தரமும் அதன் பயிற்றப்பட்ட முறையும் எத்தகையன என்ற கேள்விகளுக்கு விடை காண முடியவில்லை. ஊர்ப் பொதுமக்கள் பிழையற எழுதும் அளவுக்குக் கல்வி அறிவு பெறவில்லை என்று ஊகிக்க வேண்டியுள்ளது. அரசாணைகளையும் உடைமை மாற்று ஆவணங்களையும் அழிவின்றிக் கல்லில் பொறிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த கல்தட்சர்கள் பொறித்த கல்வெட்டுக்களில் நூற்றுக்கணக்கான எழுத்துப் பிழைகளைக் காண்கிறோம்...[25]

*என்கிறார் அவர். பல நூறாண்டுகட்குப் பின்னர் தமிழக நிலை இவ்வாறெனில் பழங்காலக் கல்வி நிலை மிகவும் அரிதாக இருந்ததென்பதற்கு ஐயமில்லை. எனினும் சிறுதொழில் நுட்பங்கள், கட்டிடக்கலைகள் ஆகியன ஒருவருக்கொருவர் சொல்லித் தந்த பயிற்சியின் வழியே அறியப்பட்டிருக்கின்றன. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்கச் சென்ற உ.வே.சா.வைச் சோதித்தபின் சவேரிநாதன் என்பவரை அழைத்து ஒரு குறிப்பிட்ட நூலைப் பாடம் சொல்லுமாறு பணித்திருக்கிறார். அதன்படியே சவேரிநாதன் உ.வே.சா.விற்குப் பாடஞ்சொன்னதாக உ.வே.சா. தம் சரித்திரத்தில் குறிப்பிட்டள்ளார்.[26]*

### 6.7. மனனம் செய்தல்

*நூல்களை மனப்பாடம் செய்தல் என்பது பழங்காலக் கல்வி முறையாக இருந்தது. இறையனார் களவியல் உரை ஒன்பது தலைமுறையாகப் பாடம் போற்றி வந்ததைத் மிழ் நூல்கள் அறிவிக்கின்றன. பாடம் போற்றல் என்பது பாடம் பயிலும் முறைகளில் ஒன்று நூல்களை மனதில் இருத்தி மனப்பாடம் செய்வதைப் பாடம் போற்றல் என்று கூறினர். உரையாசிரியர்கள் பலரும் எடுத்துக்காட்டும் மேற்கோள்களுள் பெரும்பகுதி மனப்பாடத்திலிருந்து பயன்படுத்தப்பட்டவையாகும். மனப்பாடம் செய்தல் பழங்காலக் கல்வி முறையில் முதன்மையாக அறியப்பட்டது. மாணாக்கர்கள் முதற்கண் எழுத்துக்களைக் கற்றனர். எழுத்தறிவு பெற்றவுடன் நூல்களைப் படிக்கத் தொடங்கி விடுவர். சிறுசிறு பாடல்கள் முதற்கொண்டு தொகுப்புக்களாக வரும்*

நூல்கள் அத்தனையும் மாணர்வகட்கு மனப்பாடமாகப்பட்டது. மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் ஒரு பயிற்சி முறையாகவே பயன்பட்டது.

மனப்பாட முறையினால் பலநன்மைகள் உண்டாயின. குறிப்பாக அச்சுப்பதிப்பில் இது மிகுந்த பயன்பாடுடையதாகக் கருதப்பட்டது. சில சுவடிகளில் விடுபட்ட செய்யுட்களை மனப்பாடத்திலிருந்தே கண்டறிந்து அச்சிட்டுள்ளனர். மூலபாடத்தை மனப்பாடம் செய்தல் ‘பாடம் போற்றல்’ எனப்பட்டது. பாடம் போற்றாதான் பயிலுதற்கு ஏலாதவன் எனவும் கருதப்பட்டது.[27] மனப்பாடமாகத் தமக்குப் பயிற்சியான நூலையோ அல்லது புதிதாகத் தாம் படைக்கும் நூலையோ படியெடுக்கும் ஆசிரியர்கள் எழுத்துமுறை அறிந்த தம் மாணவர்களையும் பிறரையும் பயன்படுத்துவர். அவர்கள் செய்யும் பிழையினால் பாட வேறுபாடுகள் தோன்றுவதுண்டு.

> தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் செய்யுளியல் பற்றிக் காக்கை பாடினியம் போன்றவையும் ஏரம்பம் போன்ற கணித நூல்களும் எந்த மாணவனாலும் கற்கப்பட்டன... பிற்கால மாணவர்கள் நிகண்டு போன்ற சொல்வரிசைகளை மனப்பாடம் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டனர். ஆனால் ‘சங்க காலத்தில் நிகண்டுகள் இருந்தனவா என்பதை அறியேம்’.... மாணவர்கள் எழுதிப் பயின்றது குறைவே. ஆனால் படித்தயாவற்றையும் நெட்டுருச் செய்தனர். ஞாபகத்திறமையை வளர்த்தல் ஆயிரக்கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்து வரி பிறழாமல் ஒப்புவித்தல் அன்றியும் ஆசிரியரிடமிருந்து கேட்ட ஒவ்வொரு சொல்லையும் சற்றும் மாறாமல் திரும்பிச் சொல்ல இயலுதல் முதலியவை நல்ல மாணவர்களின் வியக்கத்தக்க நினைவாற்றலேயாவாம். அக்காலத்தில் எழுத்துச் சாதனங்கள் மிகக் குறைவாயிருந்த போதிலும் இது நிகழ்ந்தது போற்றத்தக்கது[28]

என்று மனப்பாடக் கல்வி குறித்து ந.சுப்பிரமணியன் கூறுவது கருதத்தக்கது. கல்வி வளர்ச்சி மனப்பாடத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்பதை இது காட்டுகிறது.

*தொல்காப்பியம், காக்கைப்பாடினியம் ஆகிய நூல்களை அனைத்து மாணவர்களையும் கற்க வேண்டும் என்ற கட்டாயச் சூழல் அக்காலத்திலே இருந்தது. எண்கள் பற்றிய அறிவும் வானவியல் புலமையும் அக்காலப் புலவர்களுக்கு இருந்ததைச் சங்க இலக்கியங்களை ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர் K.K.பிள்ளை தம்முடைய தமிழக வரலாற்று ஆய்வு நூலில் பின்வருமாறு கூறுகிறார்.*

> மாணவர்கள் தொல்காப்பியம், காக்கைபாடினியம் ஆகிய இலக்கண நூல்களையும் பயின்றனர். ஏரம்பம் என்றொரு கணித நூல் பழந்தமிழகத்தில் வழங்கி வந்தது. அது இப்போது மறைந்து போயிற்று. கணிதத்தில் மிக நுண்ணிய அளவையையும், மிகப்பெரிய அளவையையும் கையாண்டு வந்தனர். மிக நுண்ணிய நீட்டலளவைக்குத் தேர்த்துகள் அன்று பெயர். இருண்ட அறையொன்றன் கூரையினின்றும் பாயும் ஞாயிற்றின் கதிரொளியில் மிதந்தோடும் துகள் எட்டுக் கொண்டது ஒரு தேர்த்துகளாகும். மிகப் பெரிய எண் வெள்ளம் என்பது. மக்களுக்கு வானவியல் புலமையும் இருந்தது.[29]

*பல இலக்கியங்கள் வாய்வழியாகவே பல நூறு ஆண்டுகள் பேசப்பட்டு வந்திருக்கின்றன. இந்த முறையும் மனப்பாடத்தினால் அமைந்தது எனலாம். குறிப்பாக இறையனார் அகப்பொருள் உரை மனப்பாடத்திலேயே ஒருவர் ஒருவர்க்குச் சொல்ல வாய்வழியாகவே கற்பித்து வந்துள்ளனர்.*

*பண்டை நாளில் மகாபாரதக் கதையும் பேச்சு வடிவிலேயே மக்களிடம் பதிவாகியிருந்தது. ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்டு அவர் பலரிடம் சொல்லி ஒவ்வொருவர் மனதிலும் அக்கதை நிலைத்து விட்டதாகக் கூறுவர்.*

> வியாசர் மகாபாரதக் கதையைத் தம் 5 சீடர்களுக்கும் மொழிந்தார். அவர்கள் அதனை ஆங்காங்குச் சொற்பொழிவாகப் பரவச் செய்தனர். அவர்கள் தாம் சென்றநாடு, திசை, மொழி கேட்கும் மக்கள், சூழல் இவற்றையொட்டித் தம் விளக்கங்களை மாற்றித்தான் பரப்பியிருப்பர். ஆகத் தொடக்க காலத்திலேயே வியாசர் காலத்திலேயே 5 வகைப்பட்ட பாரதக்கதை உருவாக்கப்பட்டுவிட்டது எனலாம். அதாவது ஒன்று

ஐந்தாக ஐந்து பத்தாக, பத்து நூறாக என அக்கதை நாடு முழுவதும் பரவப் பரவப் பல்கிப் பெருகிவிட்டது. அடிப்படை ஒன்றாக அமைந்தாலும் இடம், காலம், சூழல், மொழி, அரசியல், கேட்போர் அறிவு முதலான பல்வேறு சூழல்களுக்கு ஏற்பச் சொற்பொழிவாளரின் மொழித் தன்மை, கற்பனைச் சூழல், பாத்திரப்படைப்பு விளக்கக் கதைகள் ஆகியன மாறிவிட்டன[30]

*என்று த.கோ.பரமசிவம் குறிப்பிடுகின்றார்.*

### 6.8. படியெடுத்தலும் பயிற்சியும்

*நூல் கருத்துக்களை சுவடியில் எழுதும் முறை அதற்கான பயிற்சி ஆகியன ஒரு தனி வகையாகச் சொல்லித்தரப்பட்டன சுவடி எழுதுவோரை எழுத்தாளர்கள் என்றே குறிப்பிட்டனர் எழுதும் செய்திகளை ஓரளவுக்கு அறிந்தவர்களே சுவடிகளில் எழுதினர். எழுத்து, சொல் பற்றிய இலக்கணமும் யாப்புப் பற்றிய இலக்கணமும் அறிந்தவர்களாக இவர்கள் இருந்தனர். சுவடிப் பெயர்த்து எழுதுவோர் பற்றி சா.கிருஷ்ணமூர்த்தி,*

சுவடிபெயர்த்தெழுதுவது என்பது எல்லாராலும் செய்யவியன்ற எளிய செயலன்று. அதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றவரும் மரபுவழிக் கற்றவருமாகிய சிலரால் மட்டுமே செய்யவியலும். பிழையற்ற முறையில் எழுதப்படும் பெயர்ப்பே பதிப்புப் பணியின் சிக்கலைக் கறைக்கத் துணை செய்யும். அவ்வாறு செய்வதற்கு முதற்கண் யாப்பியல் அறிவு மிக இன்றியமையாதது. யாப்பின் பல்வேறு நிலைகளையும் அறிந்தவராலேயே அந்தந்தக் கால இலக்கியங்களைப் பெயர்த்தெழுதிப் பதிப்பிக்கவியலும்[31]

*எனக் கூறுகிறார். சுவடி எழுதுவோர் இலக்கிய இலக்கணக் கல்வி ஆற்றலும் உடையவராய் இருந்தனர்.*

*சுவடிகளைப் படியெடுத்து எழுதுவதால் யாப்பு அறிவும் எழுத்தறிவும் கிடைக்கிறது. பாடல்களைப் பிறர் சொல்லும் பொழுது கேட்டு எழுதுவதால் எழுத்துக்களின் குறில் நெடில் அமையும் முறை பற்றியும் புள்ளி எழுத்துக்கள்*

அமையும் முறை பற்றியும் யாப்பில் அமையும் சீர், தளை குறித்தும் பயிற்சி ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் பயிற்சி பின்னாளில் அவர்களையே சிறந்த ஆசிரியர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு உண்டாகிறது. இது போலவே சந்தப் பாடல்களைப் படியெடுப்போர்க்கும் அவற்றிற்குரிய பயிற்சி உண்டாகிறது. ஏடுகளில் எழுதுவதற்கும் கூடத் தனிப் பயிற்சி தேவைப்பட்டது. இலக்கியம் பற்றிய அறிவு பெற்றிருந்தாலும் ஓலையில் எழுதுவதற்கென்று தனிப்பயிற்சி தேவைப்பட்டது. இது பற்றி விளக்கும் மு.கோ.இராமன்,

> ஏட்டில் எழுத்தாளியால் எழுத மக்கள் சில முறைகளை மேற்கொண்டனர். ஏடுகளில் இரு பக்கமும் எழுதுவதால் புள்ளியிடுவதைத் தவிர்த்தனர். எழுத்து வடிவத்தையும் பிற மொழிகள் போலச் செங்குத்துவசமாகவோ நேர்கோட்டு வசமாகவோ அமைக்காமல் சாய்வு நிலையிலும், வட்ட நிலையிலும் அமைத்தனர். இவற்றால் ஏடு முறிவினின்றும் பாதுகாப்புப் பெற்றது. மேலும் எகர, ஒகர, உயிர்மெய் எழுத்துக்களில் குறிலையும், நெடிலையும் ஒன்றாகவே அமைத்தனர். இடையின 'ர'வுக்கும், 'காலு'க்கும் வேறுபாடு உணரமுடியாது[32]

என்று சுவடி எழுதுவோர்க்குக் கிடைக்கும் மொழி அறிவையும் எழுத்தறிவையும் குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் பக்தி இலக்கியங்கள் பெயர்த் தெழுத்தப்பட்டன. பக்திச் சுவடியெழுதுவோர்க்கு ஆலயங்கள் மற்றும் மடங்களிலிருந்து மானியங்கள் வழங்கியுள்ளனர். நாஞ்சில் நாட்டிலும் கேரள மாநிலத்தில் பாலக்காட்டைச் சேர்ந்த சில பகுதிகளிலும் கம்பராமாயணத்தைப் பெயர்த்தெழுத மாணியங்கள் இருந்தன எனத் தெரிகிறது. சுவடிப் பயிற்சியில் ஈடுபடுவோர் மொழியிற்சிறந்த புலமை பெறவேண்டும். ஆதலால் அவர்களுக்கு,

1. மொழி வரலாறு
2. எழுத்து வரலாறு
3. சுவடியில் எழுதிய முறை
4. யாப்பியல்
5. பாட்டியல்
6. செயல்முறை

என்னும் நிலையில் பயிற்சிகள் தேவைப்பட்டன.

*இப்பயிற்சி உடையோர் சுவடி எழுதுவதற்குரிய தகுதியுடையவர் எனக் கருதப்பட்டனர். நாடோறும் இவர்கள் ஏடுகளில் எழுதி வருவதால் சுவடி எழுதும்போது நேரும் பிழைகளை நன்கு அறிந்து கொள்ளவும் பின்னர் அவை நிகழா வண்ணம் பார்த்துக் கொண்டனர் என்றும் கூறப்படுகிறது. சங்க இலக்கியங்கள் இவ்வாறே திறமை மிகுந்தவர்களால் படியெடுக்கப் பெற்றதென்று கொள்ளலாம். பண்டை நாளில் ஆசிரியரின் மாணவரே ஆசிரியர் கூறும் கருத்துக்களைச் சுவடி செய்தனர். அவை மிகச்சரியான எழுத்து மற்றும் சொற்களுடன் வரிவடிவத்தை அமைத்தனர்.*

### 6.9. பொருள் தந்து கற்றல்

*சங்க காலத்தில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பொருள் தந்து கல்வி கற்றனர். மாணவர்கள் கொடுக்கும் பொருள்களை ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். சில நேரங்களில் மாணவர்கள் ஆசிரியர்கள் இல்லத்திலேயே தங்கி உள்ளதால் அவர்கள் கொடுக்கும் பொருளிலேயே மாணவர்களுக்கு உணவும் தரப்பட்டது. பண்டைத் தமிழரின் வாழ்க்கையை ஆராய்ந்தறிந்த* K.K.*பிள்ளை,*

> ஆசிரியர்களுக்கு பொருள்கள் கொடுத்தும் தொண்டுகள் புரிந்தும் மக்கள் கல்வி பயின்றனர் எனினும் கபிலர் பரணர், திருவள்ளுவர், நக்கீரர் போன்ற பெரும்புலவர் பலர் சங்க காலத்தில் வாழ்ந்து வந்தனர்[33]

*என்று குறிப்பிடுகின்றார். மேலும் சங்க இலக்கியத்திலேயே மாணவர்கள் பொருள் கொடுத்துக் கல்விக் கற்றதைப் புலவர்கள் பாடியுள்ளனர். மேலும் வரலாற்று ஆசிரியர் ந.சுப்பிரமணியன் அக்கால கல்வி முறையில் மாணவர்களிடம் ஆசிரியர் பொருள் பெற்று கல்விக் கற்பிப்பதை ந.சுப்பிரமணியன்,*

> மாணவர்கள் ஆசிரியருக்குக் காசாகவோ பொருளாகவோ 'குருதட்சிணை யளித்தனர் நல்ல மாணவன் ஆசிரியருக்கு ஆபத்து உற்றுழி அவர் நம்பத்தக்க உதவியாக அமைந்தனன். அவன் குருவிற்கு மிகுந்த செல்வம் தந்தனன். அன்றியும் அவர் இட்ட சில்லறை அலுவல்களையும் பணிந்து கேட்டான். ஆசிரியரை வணங்குதலும்

> வழிபடுதலும் தன் பெருமைக்கிழுக்கு என்று அவன் எண்ணவில்லை. மாணவனை ஆசிரியர் அடித்து ஒறுப்பதை யாரும் எதிர்க்கவில்லை. சில மாணவர்கள் மன்றங்கள் போன்ற பொது இடங்களில் தங்கி இருந்து பிச்சை ஏற்றுப் பிழைத்து வந்தனர்[34]

எனக் குறிப்பிடுகிறார்.

குடிமக்கள் யாவரும் கல்விக் கற்றுத் தக்கோராய் விளங்க வேண்டும் என்ற எண்ணம் அக்காலத்தில் பலரிடமும் பரவியிருந்தது. செல்வந்தர்களும் வணிகர்களும் அரசர்களும் ஆசிரியரை அடைந்து அவற்குப் பணிவிடை செய்து தக்க ஊதியம் தந்து கல்வி கற்றிட மன்னர்களும் உதவினர். பொருள் வளம் படைத்த யாவரும் தம் செல்வத்தைக் கல்வி பெறுவதற்கு மிகுதியும் செலவிட்டனர். ஆங்காங்கே ஆசிரியர்களை அல்லது புலவர்களை நிறுவி அவர்களின் மூலம் கல்வி பரவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சங்க கால மக்கள் வாழ்க்கையில் கல்வி கற்பதற்குப் பொருள் அடிப்படையாக இருந்தது என்பதை உணரலாம்.

### 6.10. விரதமும் கற்றலும்

சமய சாஸ்திர அடிப்படையில் விரதங்களைப் பழகி கல்வி கற்ற முறையும் பழங்காலத்தில் இருந்தது. பழங்காலத்தில் இளமையிலேயே கல்விப் பயிற்சி தொடங்கியதாகக் கூறுகின்றனர். அந்தணர்கள் பெரும்பாலும் வேதம் ஓதி விரதம் இருந்து கல்வி அறிவைப் பெற்றனர் அரசர்களும் இந்த நெறிமுறையைப் பின்பற்றி வந்தனர். குல வேறுபாடு இல்லாமல் கல்வி கற்பிக்கப்பட்டது. வறுமை கல்விக்குப் பகையாக இருக்கும் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.[41] அந்தணர்கள் கற்ற கல்வியை வைதீகக் கல்வி என்று அழைத்தனர் வைதீகக் கல்வி என்பது வேதத்தையும் அதன் அடிப்படைகளையும் கற்பதாகும். பார்பனர்கள் கல்வி குறித்து தொல்காப்பியமும் பின்னாள் வந்த நம்பி அகப்பொருளும் கூறியுள்ளன.

> அதற்குப் பிரியும் பிரிவில், அந்தணர், அரசர் வணிகரென்ற மூவரும் வேதங்களும் வேதத்துப் பிறந்த வடநூல்களும் கற்றற்குரியரென்பதும்

> உயர்ந்த வேளாளர் அகத்தியம் முதலிய தமிழ் நூல்கள் கற்றற்குரியவர் என்பதும் உயர்ந்தோர்குரிய ஒத்தினான என்ற சூத்திரத்தனுரையால் தெரியலாம். "ஓதற்றொழில் லுயர்ந்தோர் மூவர்க்கும்" அல்லாக்கல்வி எல்லார்க்கு முரித்தே என்றார் நம்பியார்[35]

*என்று தவம் மேற்கொண்டு ஒழுகிக் கல்வி கற்கும் அந்தணர்களின் கற்றல் முறையை விளக்குகிறது. மேலும் தொல்காப்பியர்,*

> வேண்டிய கல்வி யாண்டு மூன்றறிறாவது[36]

*எனக் கூறுவது அந்தணர்களின் கல்வியையே குறிக்கிறது. இக்கல்வி முறை பின்பற்றப்பட்ட வழிகளைக் கல்வியிடம் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். சங்க காலத்திலும் இவர்கள் குறிப்பிடும் இந்த முறை பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பாக அந்தணர்கள் குருகுலத்தில் கல்வி கற்ற முறையை டாக்டர் ஜி.பங்கஜம்,*

> உபநயனச் சடங்கிற்குப் பின்னரே மாணவப் பருவம் ஆரம்பமாகிறது. அதிலிருந்து 25 வயதுவரை அவன் பிரம்மச்சாரி என அழைக்கப்படுகிறான். உபநயனச் சடங்கு அவனது இரண்டாம் பிறப்பைக் குறிக்கிறது. அதன் பின்னர் ஆன்மிக வாழ்விற்கு அவன் தம் குருவால் வழி நடத்தப்படுகிறான். ஆசிரியர் ஒரு மானவனைத் தமது குருகுலத்தில் அனுமதிக்கும் முன்னர் அவனது குலம் பிறப்பு, சிறப்பியல்புகள் திறமைகள், தியாக மனப்பான்மை முதலியவற்றைத் தெரிந்து கொண்டே அனுமதியளிப்பது வழக்கமாக இருந்தது 12 வயதில் ஆரம்பமாகும் கல்வி 12 வருடங்கள் தொடர்ந்து நடைபெற்றது[37]

*என்று கூறுகிறார்.*

### 6.11. இருப்பிடக்கல்வி

*தொல்காப்பியர் பிரிவின் வகைகளைக் கூறும் பொழுது ஓதல் பகை தூது ஆகியவற்றைக் குறிப்பர்[39] என்று கூறுகிறார் இதில் ஓதல் என்பது கல்விக் கற்பதற்காகச் செல்லும் பிரிவாகும். தாம் இருக்கும் இடத்திலிருந்து நீங்கிக் கல்வியைக் கற்றுத் தருவோர் இடத்திற்குச் செல்வதும் மாணவர்கள் இருக்கும் இடத்திற்கு ஆசிரியர்களே வந்து கற்றுத் தருவதும் இருப்பிடக் கல்வி வகையில்*

அடங்குவன. மேலும் வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர்களே கல்வியைத் தருவதும் இருப்பிடக் கல்வி வகையில் அடக்கலாம். அரசர், அமைச்சர் போன்றோர் வீட்டுக் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் வந்து குழந்தைகளின் இல்லத்தில் கல்வி கற்றுத் தந்திருக்கக் கூடும். ஆசிரியர்கள் இருக்கும் இடத்திற்கு மாணவர்கள் சென்று சொல்லிக் கொடுக்கும் முறை பரவலாக இருந்தது. இம்முறைகளில் ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் தனிச்சிறப்பு இருந்தது. மாணவர்கள் செல்வச் செழிப்பு உடையவராயினும் ஆசிரியர் முன் பணிந்து கற்றல் வேண்டும் என்பது இருப்பிடத்தில் கற்பதற்குப் பொருந்தும். தம் மாணவர்கள் இருக்குமிடத்திலோ அல்லது ஆசிரியர்கள் வசிக்கும் இடத்திலோ கற்றல் தொழில் நடக்குங்கால் மாணவர்கள் பணிவாக இருத்தல் வேண்டும் என்பதைத் திருக்குறள் வலியுறுத்துகிறது.

உடையார்முன் இல்லார்போல் ஏற்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்[39]

இதற்கு உரையெழும் பரிமேழகர்.

> செல்வர்முன் நல் கூர்ந்தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று நின்றும் கற்றார் தலையாயினார் என்று உரை எழுதி உடையார் இல்லார் என்பன உலக வழக்கு, ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல்[40]

எனக் கூறுகிறார். இதனால் அக்காலத்தில் ஆசிரியர்கள் குறிப்பிட்டதொரு மதிப்பையும், சிறப்பையும் பெற்றிருந்தனர் என்பது புலப்படும். ஆசிரியரின் கட்டளைக்கு இணங்கி அக்காலத்து மாணவர்கள் நடந்தனர் என்பதை நச்சினார்க்கினியர் தம் உரையில் எடுத்தளுகிறார். எழுத்ததிகார உரையில்,

> வா என வந்து ஆங்கு இருவென இருந்து ஏடு அவிழென அவிழ்த்து சொல்லெனச் சொல்லி செல்லெனச் சென்று[41]

என்று ஆசிரியர்கள் கூறியதும் மாணவர்கள் அதைக் கேட்டு நடந்ததும் குறிப்பிடப்படுவன. இவ்வாறு மாணவர்கள் ஆசிரியரிடம் பணிந்தும் விரும்பியும் நடந்ததை நன்னூலும் எடுத்துக் கூறுகின்றது.

இருவென விருந்து சொல்லெனச் சொல்லி
. . . . . . . . . . . . . . . . போவெனப் போதல்[42]

என்பது நன்னூல்.

## 6.12. அரசுவழிக் கற்றல்

சங்க கால மக்கள் கல்வி கற்பதற்கு அரசர்களே உதவியாக இருந்துள்ளனர். கல்வி கற்றவர்களையும் வீரச்செயல் புரிந்தவர்களையும் அரசு பாராட்டியுள்ளது. கற்றோருக்குச் சமுதாயத்தில் உள்ள மதிப்பு அரசர்களே வியந்து பாராட்டியுள்ளனர். அரசியல் சமூகம் பற்றி நன்கு அறிந்தோரையும் மொழிபற்றி அறிந்தோரையும் பழங்கால அரசர்கள் போற்றியுள்ளனர். அரசர்களின் குற்றங்களைக் கண்டிக்கும் அளவிற்குப் புலவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். படைப்பயிற்சி படைகளை நிர்வகித்தல், செலுத்துதல் போன்றவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. போர் வீரன் கல்வி ஆற்றல் உடையவனாக இருந்தான். அவனுக்கென்று உணவு, உடை, பயிற்சி முதலியன தரப்பட்டன.

மக்கள் சமுதாயத்தல் அரசக் குலத்தார் உயர்ந்து விளங்கினர். நாட்டை ஆளுதற்கு முழுத் தகுதி பெற்ற மன்னர்கள் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினர். தொல்காப்பியம் இதனை,

ஐவகை மரபின் அரசர் பக்கம்[43]

எனக் கூறுகிறது. வேள்பாரி என்ற மன்னனைப் புகழ்ந்து பாடும் கபிலர் அந்நாட்டுச் சிறப்பைக் கூறுங்கால் கல்வியறிவுடன் ஒழுக்கம் நிறைந்த சான்றோர் பலர் இருக்கும் நாடு எனக் கல்வியுடன் தொடர்புபடுத்தி அவனது செங்கோல் சிறப்பைக் கூறுகிறார். இதனை,

மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்புலாரக்
கோளூற் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே (புறம்.183)

*என்ற பாடல்வழி அறியலாம். இதன்கண் வரும் சான்றோர் பல்கி என்ற சொல் குறிப்பிடத்தக்கது. அரசர்கள் கல்வியறிவுடைய சான்றோர்கள் பலர் தம் நாட்டின்கண் வாழ்வதை விரும்பினர் என்றும் அத்தகைய சான்றாண்மை தமக்கும் அமைய வேண்டும் என்றும் விரும்பி உள்ளனர். இத்தகைய அரசர்க்கு கல்வி உறுதுணையாக இருந்தது. ஒரு நாட்டில் கல்வி சிறந்து வளர்வதற்கு மன்னனுடைய அரசாட்சியே அடிப்படை. திருவள்ளுவரும் கல்வி முதலான பல சிறப்புக்களுக்கும் மன்னனது செங்கோல் ஆட்சி குறியீடு என்பதை,*

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்[44]

*என்ற குறள் மூலம் விளக்குகிறார். இவ்வாறு அரசர்க்கும் கல்விக்கும் உள்ள தொடர்புகள் விளக்கப்பட்டுள்ளன. அரசன் கற்றவனை ஏற்கிறான்.*

**தொகுப்புரை**

*கற்றல் முறை என்ற இவ்வியலில் கற்றலைப் பற்றி அறிஞர்கள் கூறும் விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எழுதிக் கற்றலில் பின்பற்றப்பட்டுள்ள முறைகள் விளக்கப்பட்டுள்ளன. பாடிக் கற்றல் முறை அதன் பயன் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன உரைத்தல் முறை, உரை எழுதுதல் அதன்வழிக் கற்றல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. செவி வழியாகக் கற்றல் முறைகள் கலந்துரையாடல் மூலமாகக் கற்றல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. மனப்பாடம் செய்தலின் முறைகள் அதன் பயன்கள் என்பன விளக்கப்பட்டுள்ளன. சுவடிகளைப் படியெடுத்தல் பயிற்சி அதனால் அடைந்த கல்வி, பொருள் கொடுத்துக் கற்றல், கற்றலுக்கு விரதம் காத்து கற்றல், இருப்பிடக் கல்வி, கல்விக்கு அரசர்கள் தந்த முதன்மை, கல்வி வளர்ச்சியில் அரசாட்சியின் பங்கு என வரும் செய்திகள் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன.*

## சான்றெண் குறிப்புகள்

1. இளம்பூரணர் (உ.ஆ.), **தொல். எழுத்து. பாயிரம்.**
2. நற். கடவுள் வாழ்த்து.
3. மேலது.
4. தொல். பாயிரம்.
5. இரா.திராவிடப்பித்தன், **திராவிடநாட்டுக் கல்வி வரலாறு**, ப.32.
6. வ.வாசுகி, **கல்வி உளவியல் (கற்றல்)**, ப.1.
7. மேலது., ப.23.
8. மு.கோ.இராமன், "தமிழ்ச் சுவடிகள் பயிற்சியும் பதிப்பும்", **சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்**, (ப.ஆ.த.கோ.ப.), ப.7.
9. உ.வே.சா., மேற்கோள், மேலது., ப.7.
10. அ.பாண்டுரங்கன், **தொகையியல்**, ப.194.
11. சேனா, தொல்.சொல். நூ.21, 'ஆக்கந்தானே காரணமுதற்றே'.
12. த.கோ.ப., **சுவடிப் பயிற்சி**, ப.46.
13. பூ.சுப்பிரமணியன், **சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்**, ப.196.
14. கு.வெ.பா., **சங்ககாலச் சமூக அமைப்புகள்**, ப.247.
15. மேலது., ப.247.
16. அ.நா.பெருமாள், "கலை இலக்கணப் பதிப்பு முறைகள்", **சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்**, (தொ.ஆ.தா.கோ.ப.), ப.?.
17. அ.பாண்டுரங்கன், **தொகையியல்**, பக்.194-195.
18. உ.வே.சா., **என் சரித்திரம்**, ப.426.
19. அ.பாண்டுரங்கன், **மு.கு.நூ.**, பக்.196-197.
20. **தமிழ் லெக்சிகன்**, Vol.1.
21. திராவிடபித்தன், **திராவிட நாட்டுக் கல்வி வரலாறு**, ப.118.
22. மேலது.
23. **தொல்.சொல்.(சேனாவரையம்) எச்.**, நூ.410.
24. நன்., நூ.37.

25. K.K.பிள்ளை, **தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்**, பக்.318-19.
26. உ.வே.சா. **என் சரித்திரம்**, ப.326.
27. பூ.சுப்பிரமணியன், **சுவடியியல்**, ப.128.
28. ந.சு., **சங்ககால வாழ்வியல்**, ப.397.
29. K.K.பிள்ளை, **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**, ப.160.
30. த.கோ.பரமசிவம் (ப.ஆ.), **சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்**, ப.32.
31. மேலது., ப.31.
32. மு.கோ.இராமன், "தமிழ்ச் சுவடிகள் பயிற்சியும் பதிப்பும்", **சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்**, (த.கோ.ப.), ப.5.
33. K.K.பிள்ளை, **தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்**, ப.156.
34. ந.சுப்பிரமணியன், **சங்க கால வாழ்வியல்**, ப.394.
35. திராவிடபித்தன், **திராவிட நாட்டுக்கல்வி வரலாறு**, ப.74.
36. **தொல்.பொருள்.கற்.**, 188.
37. மு.பங்கஜம், **கல்வியும் சமுதாயமும்**, ப.18.
38. **தொல்.பொருள்.**, அகத்.27.
39. குறள்.46.
40. பரிமே. (உ.ஆ.), மேலது., 46.
41. நச்சர் (உ.ஆ.), **தொல். பாயிரம்**.
42. நன்னூல், நூ.26.
43. **தொல். பொருள். புறத்திணையியல்,** நூ.74.
44. **குறள்**.543.

# இயல் 7

# கல்வி குறித்த சமூக மதிப்புகள்

சங்க காலத்தில் பல்வேறு சமூக மதிப்புகள் காணப்பட்டன. கற்பொழுக்கம் பிறர்க்கு உதவுதல், கல்வி போன்றவை உயர்ந்த சமூக மதிப்புகளாகப் பேசப்பட்டன. காதல், போர், வீரம் ஆகியவை சமுதாயத்தில் சிறந்த புகழைப் பெற்றன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய மக்களும் இவர்கள் தம் ஒழுக்கமும் சிறப்பாகக் கருதப்பட்டன. சான்றோர், புலவர், கணக்காயர் ஆகியோர் உயர்வைப் பெற்றிருந்தனர். கட்டுப்பாடும் ஒழுக்கமும் நீதியும் தனித்தனி பண்புகளாக வலியுறுத்தப்பட்டன. மக்கள் வாழக்கை அகம், புறம் என்ற இரண்டாகப் பகுக்கப்பட்டது. அகத்திற்கு ஏழு திணைகளும் என்று புறத்திற்கு ஏழு திணைகளும் மக்கள் வாழ்க்கையை வெளிப்படுத்தின. சமூக வாழ்க்கையில் கல்வி மிக முக்கியமான இடத்தைப் பெற்றது. கல்வியின் சமூக மதிப்பு சங்க காலத்து ஆழப்பட்டிருந்ததை விளக்குவதாக இவ்வியல் அமைந்துள்ளது. இவ்வியல் பின்வருமாறு பிரிக்கப்படுகிறது.

1. கல்வி விளக்கம்
2. சமூக மதிப்பு விளக்கம்
3. கல்வியைப் போற்றும் பண்பு
4. அரசர்கள் கல்வியைப் போற்றுதல்
5. புலவர்கள் போற்றுதல்
6. பெற்றோர் போற்றுதல்
7. ஆசிரியர்கள் கல்விக்குத் தந்த மதிப்பு
8. மாணவர்கள் தந்த மதிப்பு
9. அந்தணர்கள் போற்றும் கல்வி

## 7.1. கல்வி விளக்கம்

கல்வி என்பது கற்றல் என்னும் தொழிற்பெயர் கல் என்னும் அடிச்சொல்லைக் கொண்டது. புதிதாகத் தெரிந்து கொள்கின்ற ஒவ்வொன்றும்

*கற்றல் முறையால் தெரியவருகின்றது. தனி மனிதரும் கல்வி நிறுவனங்களும் கற்றல் தொழிலை நிறைவேற்ற இயலும் குடும்பமும் சமுதாயமும் கல்வி நிறுவனங்களாகக் கூறப்படுகின்றன. தாயர் குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர்களாக இருக்கின்றனர் என்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.*

> கல்வி என்பது ஒரு சமுதாயம் ஆசிரியர் வழி மாணவர்களுக்கு முறையும் ஒழுங்கும் தம்மையுணர்ந்தொழுகும் பண்பும் ஆகியவற்றை அளிப்பதேயாகும் என்பர் அமெரிக்க மொழியியல் ஆசிரியர்[1]

*என்று கல்விக்கு விளக்கம் தந்துள்ளனர். கல்வி கற்பித்தலை ஈதல் இயல்பு என்று தமிழ் இலக்கணம் கூறுகிறது.*

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன்தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப[2]

*என்று ஆசிரியர் பாடம் கற்பித்தலின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. கல்வி சமூகம் சார்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் சங்க கால கல்வி வளர்ச்சி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கல்வி தனிமனிதச் செயற்பாடாக இல்லாது சமூகச் செயலாக இருப்பது வெளிப்படை.*

## 7.2. சமூக மதிப்பு விளக்கம்

*மதிப்பு கோட்பாடு என்று மேலைநாடுகளில் உருவான ஒரு தத்துவம் மதிப்புக் கொள்கையாகும். இது சமூகம் பொருளாதாரம் பண்பாடு ஆகியவை குறித்துச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள ஆதரவை, விருப்பத்தை வரையறுப்பதாகும். மொழி, இலக்கியம், கலை, அறிவு ஆகியவற்றின் பின்னணியிலும் இது விளக்கப்படுகிறது.*

> மதிப்பு என்னும் சொல் தகுதி மிக்க எண்ணம், உறுதிப்பொருள், உயர் விருப்பம், கடப்பாடு, ஒழுக்க நிலை, மேல்வரிச் சட்டம், முருகியல் அழகு, அறத்தாறு, உலகியல் உண்மை எனப் பல்வேறு நிலைகளில் இன்று

> பயன்படுத்தப்படுகிறது. இவைகளுக்கு மேலாகவும் உரைப்பார் உள்ளக் கருத்தின் அளவே பெருமை என்னும் நிலையில் விருந்த பொருளை 'மதிப்பு' என்னும் சொல் கொண்டுள்ளது[3]

*என்று மதிப்பு என்பதற்கு பொருள் கூறப்படுகிறது. தமிழ்க்கலைக் களஞ்சியம் மதிப்பு என்பதை,*

> மதிப்பு என்னும் சொல்லிற்கு நிகராக மனப்பான்மை தேவை, உணர்ச்சி, மனப்போக்கு, ஆர்வம், முன்னுரிமை உட்கருத்து, மனஅவா, கவர்ச்சி ஆகிய சொற்களை உளஇயல் அறிஞர்கள் கையாள்கின்றனர். கடமை உணர்ச்சி, ஒழுக்க உயர்வு, கலாச்சாரப் பாகுபாடு ஆய்வு முறை, வாழ்க்கைமுறை என்னும் சொற்களை மதிப்பிற்கு நிகராகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர்.[4]

*இவ்வாறு கூறப்படும் மதிப்புகள் தமிழ்க்கலை இலக்கியத்திலும் கூறப்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தில் கல்வி குறித்த மதிப்பீடு மிகச் சிறப்பாக இருந்துள்ளது. தொல்காப்பியத்தில் கல்விச் சிறப்பு முதன்மையாகப் பேசப்படுகிறது.*

> கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
> சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே[5]

*எனத் தொல்காப்பியம் கூறுகிறது. சமூக மதிப்பு என்பது இந்தச் சமூகத்தில் வாழும் மக்களால் போற்றப்படுவதாகும். இது கருத்துச் சார்ந்தது. ஒரு கருத்துக்கு அல்லது பழக்கத்திற்கு அல்லது ஒழுக்கத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த எண்ணம், சிந்தனை ஆகியவை சமூக மதிப்பு எனக் கூறப்படுகிறது. சமூக மதிப்புகளுள் சில மாறும் தன்மை கொண்டவை. சில மாறாதவை. நெடுநாளைக்கு நிலைத்த தன்மையைக் கொண்டு வளரக்கூடியன.*

## 7.3. கல்வியைப் போற்றும் பண்பு

*சங்க காலத்து மக்கள் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாய் இருந்தனர். இலக்கண இலக்கிய நூல்கள் தோன்றியிருப்பதைக் கொண்டும் தலைச் செயல்கள் நிகழ்ந்ததைக் கொண்டும் கல்வி வளர்ச்சி மிகுந்து இருந்ததை*

*அறிய முடிகிறது. சங்க காலச் சமுதாயம் கல்வியறிவில் சிறப்புப் பெற்றிருப்பதைத் தொல்காப்பிய இலக்கணம் உணர்த்துகிறது.*

> சங்ககாலத்துத் தமிழர் சமுதாயம் முன்னேறிய பண்பட்ட சமூகம்; அது வாணிப வளத்திலும் நுண்கலைத் திறனிலும் மிகுந்த உயர்நிலை எய்தியிருந்தது. ஆட்சியின் பெருமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு உணர்ந்திருந்தது எவ்வகையிலும் 'அநாகரிக' அல்லது 'மிருக'ப் பிராயத்தில் இருந்ததாகக் கருதக் கூடிய தன்று. மக்களின் உலகியல், கலைச் சாதனைகளுக்கும் காணமாயிருக்க வேண்டிய கல்வியைப் பற்றி அவர்கள் அறிந்து வைத்து அதனை ஊக்குவித்தனர். அன்றியும் அஃது ஒரு பரவலான சமூகச் செயற்பாடாகவும் அமைந்தது[6]

*என்று குறிப்பிடுகின்றனர். சங்க காலத்தில் கல்வி, கற்றல் போன்ற சொற்கள் மிகுந்த மதிப்புடையனவாக காணப்பட்டன. சங்க கால இலக்கியப் பதிவுகள் அனைத்திலும் கல்வி சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளது. சாதி, மத பேதமின்றி எல்லோருக்கும் கல்வி கிடைத்ததாகக் கூறப்படுகிறது.*

> உலகியற் கல்வி எக்குலத்தாருக்கும் சாதியார்க்கும் பாலார்க்கும் எந்நிலையார்க்கும் தனி உடைமையன்று. சங்க காலத்தைப் பற்றி நாம் அறிதற்கு ஒரே முக்கியமான வரலாற்று மூலமாக விளங்கும் சங்க இலக்கியத்தை இயற்றிய புலவர் குழாம் பெரும்பாலும் எக்குலத்தாரையும் உள்ளடக்கிற்று. கல்வி தன்னம்பிக்கையையும், பெருத்தன்மையையும் மனிதற்கு எய்துவித்தது என்று கருதப்பட்டது. ஆதலால் அஃது வேண்டப்படுவதாயிற்று[7]

*எனக் கல்வி எல்லோருக்கும் உரியதாக இருந்ததை அறிஞர்கள் சுட்டியுள்ளனர்.*

*பண்டைய தமிழகத்தில் தமிழ்ப்புலவர்கள் கூடிச் சங்கம் அமைத்ததும் அதில் இலக்கிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டதும் வரலாற்றில் காணமுடிகின்றது.*

> தமிழ்ச்சங்கத்தைப் பற்றிக் குறிப்புகள் இறையனார் களவியல் உரையில் தான் காணப்படுகின்றன..... மூன்று சங்கங்கள் பல்வேறு காலங்களில் மதுரையில் தமிழ் வளர்த்த வரலாற்றைப் பல புராண ஆசிரியரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.... வில்லிப்புத்தூரார் 15 ஆம் நூற்றாண்டினர். அவர் தாம் பாடிய பாரதத்தில் 'நன்றறிவார் வீற்றிருக்கும் நான்மாடக்கூடல்'

என்று மதுரையைப் புகழ்கின்றார். தமிழ் வளர்க்கும் சீரிய நோக்கத்துடன் பண்டைய காலத்துப் பாண்டிய மன்னர்கள் தமிழ்ப்புலவர்கள் பலரையும் ஒன்று கூட்டித் தமிழ்ச்சங்கங்களை நிறுவி. தமிழுக்கு ஏற்றம் புரிந்தார் என்பதும் இவ்வாறே சங்கம் தோற்றுவித்தார்கள் என்பதும் இறையனார் அகப்பொருள் கூறும் செய்தியாகும்[8]

*என்று கல்விக்கு முதன்மை தந்து தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் அமைத்த வரலாறு கூறப்படுகிறது. சங்க இலக்கியங்களைத் தொகுத்ததும் வகைப்படுத்தியதும் பாடல்களுக்குத் திணை, துறை அமைத்ததும் சங்க காலக் கல்வி வளர்ச்சியைக் காட்டுகின்றன. தொல்காப்பியத்தின் பாயிரத்தில் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'[9] எனக் கூறப்பட்டிருப்பதால் தொல்காப்பியரின் கல்விச் சிறப்புத் தெரியவரும். ஐந்திரம் என்பது வடமொழியில் சிறந்த இலக்கண நூலாகும்.*

*பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஏற்றுக் கொள்வதையும் தமிழ் நடைக்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொள்வதையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியத்தில் குறிப்பிட்டிருக்கும் செய்யுள் பற்றிய இலக்கணங்கள் தமிழில் யாப்புப் பற்றிய கல்வியைச் சிறப்பிக்கும். கல்வியின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள் கல்விக்காக நான்கு அதிகாரங்களை ஒதிக்கியுள்ளது. கல்வியைப் போற்றும் இந்நூல் கசடறக் கற்றல், கற்றபடி நடத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. கற்கக் கற்க அறிவு வளரும் என்றும் கல்வி கற்ற ஒருவனுக்கு உலகம் முழுவதும் சொந்தம் என்றும் கல்வி அழியாத செல்வம் என்றும் உண்மையை அறிவதற்குக் கல்வி பயன்படும் என்றும் இந்நூல் ஓதுகிறது.[10] ஊர்தோறும் பள்ளிகள் அமைத்தது, ஆசிரியருகளுக்குக் கணக்காயர் என்ற பெயர் அமைந்தது, நக்கண்ணனார் என்ற புலவர் ஆயிரம் மாணவர்களுக்குக் கல்வி பயிற்சி அளித்தது, ஆயிரம் மாணவர்களுக்கு பாடம் சொன்னவரை 'குலபதி' என்று அழைத்தது கல்வி பயின்ற இடத்திற்குப் பள்ளி எனப் பெயரிட்டது, கல்வியையும் கடவுளையும் ஒன்றாகப் போற்றியது ஆகிய செய்திகள் கல்வியின் சிறப்பைப் போற்றியவை எனக் கூறப்படுகிறது.[11] மாணவர்கள் கல்வி கற்கும் போது இரந்துண்டு வாழ்ந்தனர் என்று குறுந்தொகை கூறுகிறது.*

அன்னாய் இவன்ஓர் இள மாணாக்கன்
தம்முர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊறும் பெருஞ் செம்மன் னரனே (குறுந்.133)

என்று கூறப்படும் செய்திகளில் உணவை இரந்து உண்ணும் மாணவன் எனக் குறிக்கப்படுவது கல்விக்கு அளித்திருந்த முதன்மையைச் சுட்டுகிறது.

பல குலத்தைச் சேர்ந்த புலவர்களும் அறிஞர்களும் ஒன்றிணைந்து பாடல்கள் இயற்றியதும் பல இடங்களிலும் ஒன்று கூடியதும் காணத் தக்க செய்திகளாகும். பொதுவாகக் கல்வி அனைவராலும் போற்றப்படும் ஒன்றாகச் சங்க காலத்தில் இருந்தது.

நுண்கலைகளும் கலைகளை உருவாக்கும் கலைஞர்களும் சங்க இலக்கியத்தில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. சிற்பக் கலை அறிஞர்கள் எழுதியுள்ள சிற்பங்களையும் நம்பகமான சான்றுகளாக அறியமுடிகின்றன. சங்க காலத் தமிழகம் நாட்டியம், நாடகம், இசை போன்ற கலைகளைக் காலத்திற்கு ஏற்பப் பெற்றிருந்தது. இக்கலைகளும் சங்ககாலக் கல்விச் சிறப்பை அறிவிப்பனவாகும். சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களிலும் கல்வியைப் பற்றிய சமூக மதிப்பைக் காண முடிகிறது. தொடர்ந்து வந்த வரலாற்றில் கல்வி பற்றிய முழுமையான சித்திரத்தை காட்டுவது திருக்குறளாகும். கல்வி குறித்த சமூக மதிப்பைத் திருக்குறள் பின்வருமாறு கூறுகிறது.

1. கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டும்[12]
2. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்[13]
3. பகுத்தறிவைத் தரக் கூடியது கல்வி[14]
4. கற்றறிந்தார்க்கு நாடும் ஊரும் பொது[15]
5. கல்வி கேடில் விழுச்செல்வமாகும்[16]
6. கற்றார் கீழோர் ஆகார்[17]
7. கற்றாரே மக்கள் ஆவர்[18]

*என்பவை கல்வியினால் ஏற்படும் சிறப்புக்களைக் குறிப்பிடுவன. இத்தகைய கருத்துக்கள் பழங்காலத்தின் இலக்கிய எச்சங்கள் எனலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களின் தனிச்சிறப்புக்கள் அனைத்தும் அக்காலப் புலவர்களின் கல்விச் சிறப்பை எடுத்துரைப்பனவாகும்.*

> வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைய தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர். அசோகரின் காலத்திற்கு முந்தைய எழுத்துவடிவமாகக் கருதப்படும் தமிழ் பிரமி எழுத்துக்கள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வழக்கில் இருந்துள்ளன. இந்த எழுத்து முறையின் தாக்கம் இலங்கைத் தமிழ்ப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. இதனால் பண்டைய தமிழகத்தின் வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தை ‘முதல் அறிவொளி இயக்கம்’ என ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுவார்[19]

*என்கிறார் இரா.பாவேந்தன். கல்வி வளர்ச்சியில் எழுத்து வளர்ச்சிக்கும் முக்கியப் பங்குண்டு என்பது இப்பகுதி சுட்டும் வரலாறாகும். சங்ககாலத்தில் இத்தகைய எழுத்துருக்கள் தோன்றவில்லை. அதற்குப் பின்னர் எழுத்து வடிவங்கள் தோன்றிவிட்டன. எழுத்தும் சொல்லும் நிரம்பிய மொழி தமிழ் மொழி எனச் சிறப்பிக்கப்படுகின்றது. கல்வி அறிவுடன் எழுத்தறிவும் சிறப்பாகப் போற்றப்பட்டது. இவை இரண்டுமே மக்களுக்கு வழிகாட்டிகள் என்னும் அளவிற்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன.*

> அறிவுப் பரவ இரு நிலைகள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. அதற்கு அடிப்படைக் கல்வியறிவு தேவை. மேலும் எழுத்தறிவும் தேவை. இவை இரண்டும் இல்லாமல் அறிவொளி பரவ முடியாது. முறையான கல்வி இல்லாமல் சமூக வளங்களையும், சாதனைகளையும் அனைவருக்கும் பரப்ப முடியாது. அடிப்படையான கல்வியறிவுல்லாமல் சமுதாயத்தில் திரண்டுள்ள அறிவையும், பட்டறிவையும் இளைஞர்கள் அடைய முடியாது..... அடிப்படைக் கல்விக்குப் பள்ளிக் கூடங்கள், பாடப்புத்தகங்கள், திட்டமிட்ட பயிற்சிகள் போன்ற அமைப்புகள் தேவை. எழுத்தறிவில்லாமல் எழுதப்படிக்கத் தெரியாமல் மேற்கூறிய வசதிகளை எப்படிப் பயன்படுத்த முடியும்[20]

*என அம்பேத்கர் விளக்குகிறார். இது தற்கால நிலை எனில் பழங்காலத்தில் இத்தகைய கல்வி வாய்ப்புகளும் வசதிகளும் மிக மிகக் குறைந்த அளவிலேயே இருந்திருக்கும். பழங்காலத் தமிழ் மக்கள் கல்வியறிவு ஓரளவு மேம்பட்டு இருந்தது. கல்வியை உயர்வாகப் போற்றியது அக்காலச் சமூகம். ஏற்றத் தாழ்வுடைய சமூகத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள ஒருவன் கல்வி பெறும்போது அவன் உயர்நிலைச் சமூக மதிப்பைப் பெறுகிறான் எனக் கல்வி காரணக் கருவியாக இருப்பதை புறநானூறு விளக்குகிறது (புறம்.183).*

*கல்வி அறிவு பலவகையாகப் பெருத்துக் காணப்பட்டது. இயல், இசை, நாடகம் ஆகியவற்றிற்குத் தனித்தனி ஆசிரியர்கள் காணப்பட்டனர். எண் கணிதமுறை, வானநூல் அறிவு ஆகியவற்றைச் சங்க காலம் அறிந்திருந்தது.*

> மொழிநூல் ஆசிரியர்களாக மட்டுமின்றிப் பற்பல கலைகளிலும் வல்ல கலையாசிரியர்களாகவும் சிலர் திகழ்ந்தனர். அக்கால ஆசிரியர்கள் கலைநுட்பம் உடையவர்கள் என்னும் உண்மையையும் சங்க கால இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அதன் ஆசிரியரான இளங்கோவடிகள் கலைவல்ல ஆசிரியர்கள் பலரைக் குறிப்பிடுகின்றார். ஆடல் ஆசிரியர், இயலாசிரியர், இசை ஆசிரியர், குழலாசிரியர், யாழாசிரியர், சிற்ப நூல் ஆசிரியர், கட்டுரை ஆசிரியர் என்றெல்லாம் இருந்து வந்துள்ள உண்மைகளும் சங்ககாலப் பாட்டுக்களினால் தெரிய வருகின்றன. இப்படியாக உயர்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அக்காலத்து மிகப் பலராக இருந்து வந்த உண்மையினால் பண்டைக் காலத்திய உயர்தரக் கல்வியின் சிறப்பினை ஒருவாறு அறியலாம்[21]

*என்று திராவிடப்பித்தன் குறிப்பிடுகிறார். வாழ்க்கையில் அனைத்தையும் பிரித்து ஆராயும் திறனை மக்களுக்கு ஊட்டியது கல்வியாகும் என்பது இதன் கருத்து.*

*இவ்வாறு மதிப்பிற்குரியதாக இருந்த கல்வி வயதிற்கு ஏற்றவாறு பழங்காலத்தில் பிரித்துக் கற்பிக்கப்பட்டது. மிகச்சிறு வயதிலேயே குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் முறை ஒன்று இருந்ததைச் சில சங்க நூல்*

*குறிப்புகளால் காண முடிகிறது. சிறியோர், பெரியோர் என மாணவர்கள் தரம் பிரிக்கப்பட்டனர்.*

> சிறார்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் துவக்கக் கல்வி ஆசிரியர்களும் அக்காலத்தில் இருந்தனர் என்னும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும். அகநானூறு, குறுந்தொகை ஆகியவைகளில் பாலாசிரியர் என்றும் இளம்பாலாசிரியர் என்றும் புலவர் சிலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இளம்பாலகர்களாகிய சிறுவர்களுக்கு ஆரம்பக்கல்வியைப் புகட்டும் காரணம் பற்றியே இவர்கள் பாலாசிரியர்கள் என்றும் இளம்பாலாசிரியர்கள் என்றும் வழங்கப்பட்டனர் எனக் கொள்ளுதல் சிறப்புடையதே ஆகும். மதுரை பாலாசிரியர் நப்பாலனார், மதுரை பாலாசிரியர் நற்றேவனார் எனவும் மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார் எனவும் கடைச் சங்கப் புலவர்களுக்கு வழங்கும் பெயர்களால் இச்செய்தி காணவருவதைக் காணலாம்[22]

*என்றும் மேற்சுட்டிய நூலாசிரியர் கல்வி வகைமைப்படுத்தப்பட்ட சிறப்புடையதாக விளங்கப்பட்டதைச் சங்க கால வரலாற்றிலிருந்து எடுத்துக் கூறுகிறார். இவற்றை எல்லாம் உற்று நோக்கக் கல்வியைப் போற்றும் சங்க காலச் சமூகச் சூழலும் கல்வியைப் போற்றும் தன்மையில் இருந்ததை அறியலாம். மதிப்புடைய ஒன்றாகக் கல்வி சமூகத்தில் இடம்பெற்றது வரலாற்றுச் சிறப்புடைய சமூகத்தையும் காலத்தையும் உணர்த்துவதாம்.*

### 7.4. அரசர்கள் கல்வியைப் போற்றுதல்

*சங்க காலத்தில் கல்வி எனும் அருந்தொழிலைப் புலவர்கள் போற்றிப் பாடியதைப் போல அரசர்களும் அதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். மக்கள் சமூகத்தில் சிறப்புடன் விளங்கியவர்கள் அரசப் பரம்பரையினர். சமுதாயத்தில் அவர்களுக்குத் தனிச் சமூக மதிப்பு இருந்தது. ஆட்சி செய்வதில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்பது அரசர்களுக்கு சமூகம் விதித்த கட்டளையாகும். அவர்கள் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்க வேண்டும் என்பதும் அரசக் கொள்கையாக இருந்தது. நாட்டில் இன்றியமையாதனவாகக் கூறப்படும்*

*உணவு, நீர் ஆகியவற்றைக் காட்டிலும் மன்னனே உயர்ந்தவன் என்று கூறப்பட்டது. சமுதாயமும் மன்னனின்றிப் பிரிதேதும் இல்லை எனக் கருதிற்று. அரசன் ஒருவனால் நாடு உயிர்க்கிறது என்பதை,*

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம்.186)

*என்று புறநானூறு கூறுகிறது. இதனால் மன்னனுக்குச் சமூகம் இட்ட கட்டளை இது. திருக்குறளில் இவ்வற்புறுத்தல்,*

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்[23]

*எனக் கூறுப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்ந்து விளங்கிய அரசர்கள் கல்வியின் சிறப்பைப் போற்றி உள்ளனர். புலவர்களும் அரசர்களுக்கு இருந்த கல்விச் சிறப்பைப் பாடியுள்ளனர்.*

செஞ்ஞாயிற்றுச் செலவுஞ் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
திரி தரு திசையும்
வறிது நிலைய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போலவென்றும்
அனைத் தென் போருமுளரே யனைத்தும்
அறிவறி வாகாச் செறிவினை யாகிக்
களிறுகவு ளடுத்த வெளிகற் போல
ஒளித்த துப்பினை... (புறம்.30)

*என்று சோழன் நலங்கிள்ளியை முதுகண்ணன் சாத்தனார் பாடுகிறார். இதில் மிகுந்த கல்விச் சிறப்புடையவன் அவன் என்றும் அதனால் பெருமை கொள்ளாது அடக்கமும் பணிவும் கொண்டிருந்தான் என்றும் அவ்வரசனைப் புலவர் ஏத்திப் பாடுகின்றார். அரசர்கள் கல்வியில் சிறந்த புலவர்களைப் போற்றி வந்தனர். சங்க இலக்கியங்களின் வழி இவ்வரலாற்றைக் காணமுடிகின்றது. கல்வி பயிலும் ஒருவன் ஆசிரியரை அணுகிக் கல்வி பயில வேண்டிய முறையையும் கல்வியால் ஏற்றத்தாழ்வு நீங்குவதையும் குடும்பத்திலேயும் கற்றவர்க்கே சிறப்புண்டு என்பதையும் பாண்டியன்*

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடலாகப் பாடியுள்ளதை புறநானூற்றில் காணலாம் (புறம்.183).

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் புலவர்களுள் அவர்க்கு நிகராக அரசர் பல இருந்த செய்தியை அறிய முடிகிறது.

1. சேரமான் கரைக்கால் இரும்பொறை
2. சேரமான் மோட்டப்பழனத்துத்துஞ்சிய மாக்கோதை
3. நெடுஞ்சேரலாதன்
4. சேரமான் இளங்குட்டுவன்
5. சேரமான் எந்தை
6. நம்பிகுட்டுவன்
7. பாலை பாடிய பெருஞ்கடுக்கோ
8. மருதம் பாடிய இளங்கடுங்கோ
9. சோழன் நெடுங்கிள்ளி
10. சோழன் நல் உருத்திரன்

போன்ற அரசர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. மேலும் இவர்களைப் போலவே பாண்டிய மன்னர் பலரும் இருந்து வந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவராகச் சிலரைச் சுட்டலாம்.

1. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
2. பாண்டியன் அறிவுடை நம்பி
3. தலையாலங்காணத்து செருவென்ற நெடுஞ்செழியன்
4. பன்னாடு தந்த பாண்டியன்
5. மாறன் வழுதி
6. முடத்திருமாறன்
7. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
8. உக்கிரப் பெருவழுதி
9. கடலுள் மாய்ந்த இளம்பெரும் வழுதி

ஆகிய மன்னர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. மேலும் இம்மன்னர்களின் பாடல்களைத் தொகுத்தவர்களும் காணப்படுகின்றனர்.[24]

மன்னர்கள் பாடிய பாடல்கள் அவர்களது புலமைத் திறத்தையும் அறிவாற்றலையும் வரலாற்றறிவையும் கல்விச் சிறப்பையும் விளக்குவனவாய் உள்ளன. புலவர்களை அமைச்சர்களாக்கியும் ஆசிரியர்களாகக் கொண்டும் மன்னர்கள் நாடாண்டதை வரலாறு உணர்த்துகின்றது.

## 7.5. புலவர்கள் போற்றுதல்

சங்க காலப் புலவர்கள் தம் பாடல்களில் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளனர். அவர்களுடைய கூற்றுக்கள் சங்க காலச் சமூகம் கல்வியை உயர்வாகப் போற்றியதை வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்களில்,

1. அகம்
2. அருள்
3. அழகு
4. அறம்
5. அறிவு
6. அன்பு
7. ஆண்மை
8. இன்பம்
9. ஈகை
10. உலகு
11. ஊழ்
12. ஒழுக்கம்
13. கடமை
14. கடவுள் வழிபாடு
15. கல்வி
16. காதல்

போன்ற பல்வேறு பண்புகளின் உயர் மதிப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அகம் பற்றிய மதிப்பினைச் சங்க காலத்தில் காணப்பட்ட காதற்களவு கோட்பாடு பிற்காலத்தில் பக்தி இலக்கியங்களிலும் காணப்பட்டது. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கை உயர்வாக மதிக்கப்பட்டது. களவுத் தோல்விகள் மணவாழ்க்கை முறிவுகள் ஆகியன இருந்துள்ளன. களவு, கற்பு வாழ்க்கை உயர்ந்த அக அறமாகக் கருதப்பட்டன எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இதில் ஐந்திணை ஒழுக்கம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றைச் சார்ந்தது. எல்லா வகையிலும் அற ஒழுக்கமே சிறப்பாகக் கருதப்பட்டது. தனிமனிதன் அறச் சிந்தனை உடையவனாக வாழ்தல் வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இல்லறத்தில் கூறப்பட்ட குடும்ப நெறிகளுள் ஒன்றாக அறஞ்செய்தல் கூறப்பட்டது. பிற்காலத்தில் மனைவி, கணவன் என்னும் இருபாலர்க்கும் அது கற்பிக்கப்பட்டது. அறம் பற்றிய சிறப்பினை,

1. அறம் செய் மாக்கள் (குறுந்.252, புறம்.128)
2. அறம் பாடிற்றே (புறம்.201, 38)

என்னும் சங்க இலக்கியத் தொடர்கள் எடுத்துரைக்கின்றன.

அறிவுடையோரை உயர்த்திக் கூறும் சங்கப் பாடல்கள்.

அறிவெனப்படுவது பேதையர் சொல் நோன்றல் (கலி.133)
ஆன்றடங்கறிஞர் (மதுரை.476-81)
நல்லறிவுடையோர் நல்குரவு (குறுந்.231)
அறிவுடையோர் ஆறு அரசும் செல்லும் (புறம்.183)

என்னும் இடங்களில் சுட்டப்படுபவை புலவர்கள் அறிவு குறித்துக் கொண்டிருந்த உயர்மனப்பான்மையைக் குறிப்பனவாகும். இதுபோல அன்பு என்னும் உணர்வை மிகைப்படுத்திச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. தன்னலமற்ற தன்மையை அன்பு என்னும் உணர்வை மிகைப்படுத்திச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. தன்னலமற்ற தன்மையை அன்பு என்னும் சொல் சுட்டுகிறது. அன்பினை உயர்த்தும் சங்க இலக்கியங்கள்,

எம்புநெகிழ்க்கும் கிளவி (அகம்.225)
பாரி கைவண்மை (புறம்.106)

என்ற தொடர்களால் சுட்டுகின்றன. ஆளுமைப் பண்பை அதாவது ஆளும் தன்மையை ஆண்மை எனக் குறிப்பர்.[25]

| | |
|---|---|
| துப்புத் துறைப் போகிய துணிவுடை ஆண்மை | (பதிற்று.14) |
| பகைவர் புகழ்ந்த ஆண்மை | (புறம்.373) |
| எற்படைக்கு ஓடா ஆண்மை | (புறம்.154) |
| பேராண்மை | (புறம்.373) |

போன்ற தொடர்கள் ஆண்மையின் மதிப்பை உயர்த்திக் கூறப்படுவனவாகும். இனி, இன்பம் என்பது ஏனைய உணர்வினைக் காட்டினும் சிறப்புப்படக் கூறப்படுகிறது. சங்க இலக்கியங்கள் இதனைப் பலவாறு கூறுகின்றன. ஐம்புலன்களால் உணரப்படும் நல்லுணர்வு இன்பம் எனக் கருதப்படும்.

| | |
|---|---|
| கண்டு தண்டாக்கட்கு இன்பத்து | (மதுரை.16) |
| பல்தால் காண்டலும் உள்ளத்துக்கினிதே | (குறுந்.60) |
| சுவைக்கு இனிதாகிய குயில் உடை அடிசில் | (புறம்.127) |
| இனிதெனக் கணவன் உண்டலின் | (குறுந்.167) |

போன்றவை இன்பத்தின் சிறப்புக் குறித்து வருவன. இதுபோல ஈகை, உலகு, ஊழ், ஒழுக்கம், கடமை, கல்வி, கற்பு, காதல், செல்வம், செங்கோண்மை, நன்றி, நாணம், நிலையாமை, புகழ், பெண்மை, மானம் வாய்மை, விருந்தோம்பல், வீரம் போன்ற பண்புக் கூறுகளும் அவற்றின் சமூக மதிப்புகளும் புலவர்களின் பாடல்கள் வழி எடுத்துரைக்கப்படுகின்றன.

**கல்வி**

கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறுவதற்குச் சங்க காலப் புலவர்கள் மிகவும் உழைத்தனர். பொதுவாகக் கல்வியைக் குறிக்கக் கல்வி என்ற சொல் பயன்பட்டாலும் இதன் தன்மையை வேறுவேறு சொற்களால் பண்டைப் புலவர்கள் குறித்துள்ளனர்.

ஒல்லியோர் பிறந்த இம்மலர்தலை உலகத்து (புறம்.53)

என்று புறநானூறு கூறுகின்றது. புலவர்கள் கற்றுவல்ல சான்றோர் எனப் போற்றப்பட்டனர். இதுபோலவே மற்றக் கல்வியாளர்களைப் புலவர்கள் ‘சான்றோர்’ எனக் குறித்தனர். ‘சான்றோர்’ என்ற சொல்லைப் புலவர்கள்

*பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர். கல்வியாளர் எனும் பொருளிலேயே இச்சொல் ஆளப்பட்டுள்ளது. கல்வித் தொடர்பில்லாதவரை இவ்வாறு அழைத்தல் தமிழ் மரபில் இல்லை. மிகவுயரிய அறிவும் பண்பட்ட உள்ளமும் கொண்டோர் சான்றோர் என அழைக்கப்பட்டனர்.*

*பல்சான்றீரே பல்சான் றீரே (புறம்.195) என்ற தொடர் புறநானூற்றில் மட்டும் மூன்றிடங்களில் வருகின்றது. இவ்விடங்களிலெல்லாம் கற்றுவல்ல சான்றோர் என்ற பொருளிலேயே இச்சொல் கையாளப்பட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தில் மதுரையில் சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்த மன்னர்கள் பற்றியும் மதுரை பற்றியும் குறிப்பிடும்போது,*

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை (சிறுபாண்.66-67)

*என்றும்,*

நீயே, தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (புறம்.58)

*எனவும் கூறப்பட்டுள்ள செய்திகள் மதுரையில் கல்வி நிலவியதையும் கல்வியை வளர்க்க மன்னர்கள் உழைத்ததையும் அது மன்னர்க்குப் பெருமையாக இருந்ததையும் சுட்டிக் காட்டுகின்றன.*

*வேதக் கல்விக்குத் தனிப்பெருமையும் மதிப்பும் இருந்தமையைச் சங்க இலக்கியங்கள் சிறப்பிக்கின்றன. கல்வி மிகப்பெரிய சமூக மதிப்புடையதாக இருந்ததால் கல்வியின் நெறிமுறைகள், கற்றதில் வழுவாதிருத்தல் ஆகியன உயர்நடத்தைகளாகவும் வலியுறுத்துப்பட்டன.*

பாஅல் புலிப்பினும் பகலி ருளினும்
நாள்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேன் விளங்கி (புறம்.2)

*என்று மன்னைப் புலவர்கள் பாடியுள்ளனர். 'நால்வேத நெறி திரிதல் கூடாது' என்பதனை இத்தொடர்கள் எடுத்துரைப்பன. புலவர்க்கும் அவர்கள் இயற்றிய செய்யுட்களுக்கும் பண்டைத் தமிழகத்தில் கிடைத்த பெருமையினைச் சங்கப் புலவர்கள் குறித்துள்ள சில குறிப்புகளால் அறிய முடிகிறது.*

செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங் குபுகழ்க் கபிலன் (புறம்.53)

*என்றும்,*

பொய்யா நாவிற் கபிலன் (புறம்.174)

*என்றும்,*

திருந்துமொழி மோசி (புறம்.138)

*என்றும்,*

அம் சொல் நுண்டேர்ச்சிப் புலவர் (புறம்.235)

*என்றும்,*

புகழ்ந்த செய்யுட் கழாஅத்தலை (புறம்.202)

*என்றும் கூறப்படும் சங்கச் செய்யுட்களில் கல்வி குறித்தும் கல்வியாற்றலுடைய புலவர்கள் குறித்தும் கூறப்படும் செய்திகள் கல்விச் சிறப்பை உணர்த்துவன.*

*சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களின் எண்ணிக்கையினைக் கொண்டு அக்காலக் கல்வி வளர்ச்சியை நன்குணரலாம். சிறுவர்களுக்கே கல்வியளிக்க ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டார்கள் எனில் கல்விக்குத் தரப்பட்ட முதன்மையை அறியலாம்.*[26]

> பெண்ணின் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதில் செவிலிக்குப் பெரும்பங்குண்டு என்பது தொல்காப்பியத்தாலறியப்படுகின்றது. பெருஞ்செல்வர் மாளிகையில் செவிலியும் குமரிப் பெண்ணும் சங்குதற்குத் தனியான இடமிருந்தமை உணரப்படுகின்றது[27]

*என்று அ.தட்சிணமூர்த்தி கூறியுள்ளார். பெண்ணின் அறிவை வளர்த்தல் என்பது கல்வி வளர்ச்சியையே குறிப்பிடுகின்றது. செவிலியும் பல்வேறு அனுபவங்களைக் கொண்டிருந்தாள். அதனைத் தலைவிக்கு எடுத்துரைத்தாள்.*

> சங்க கால மன்னர்கள் பாணர்களையும் கூத்தர்களையும் புலவர்களையும் பேணிக் காத்தமையால் இசையும், கூத்தும் இலக்கியமும் வளர்ச்சியுள்ளன. சான்றோரை மதித்து அவர் சொற்படி மன்னர் நடந்தமையின் கற்றோர்க்குச் சமூகத்தில் மதிற்பேற்பட்டது. மேலும் பலர் கல்வியில் ஈடுபாடு கொள்ள மன்னரின் அரவணைப்பு உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை[28]

*என்பது கலைக்கல்விக்கு அக்காலத்திருந்த மதிப்பைக் காட்டுகிறது. அதற்கு மன்னர் பெரிதும் உதவினர்.*

*தொல்காப்பியர் காலத்தில் பெண் கல்வி போற்றப்பட்டது என்பதற்குத் தொல்காப்பியத்திலேயே ஆதாரங்களைக் காண முடிகிறது.*

செறிவு நிறைவுந் செம்மையுஞ் செப்பு
மறிவு மருமையும் பெண்பாலான[29]

*எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. ஈண்டு அறிவெனப்பட்டது பெண்கள் பெற்ற கல்வியறிவை எனலாம். மற்றப் பண்புகள் சமூகத்தால் கிடைத்தன.*

*சங்ககால நூல்களில் காணப்படும் பெண்பாற் புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் அவற்றைத் தொகுத்துள்ள முறை ஆகியவற்றை நோக்கும்போது கல்வி கற்ற பெண்களுக்குச் சிறந்த மதிப்பு இருந்ததை அறிய முடிகிறது. பெண்பாற் புலவர்கள் மதிக்கப்பட்டனர். அவர்களது கல்வி பெருமையும் அதனால் அவர்களைச் சமூகம் மதித்துப் போற்றியதையும் ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளனர்.*

பெண் புலவர்களது கல்வித் திறனையும் புலமையினையும் வியந்தும் புகழ்ந்தும் ஆதரித்தும் வந்தனர். அக்காலத் தமிழ் வேந்தர்களும் வேளிர்களும் பெருநிலக்கிழாரும், அவர்கட்குப் பரிசில்கள் நல்கியும், ஆடையும், பொன்னும், பொருளும் கொடுத்தும் அவர்களது புலமையை வளமுறச் செய்தனர். அவர்களது அறிவின் மேன்மையைக் கண்டு தமக்கு அமைச்சர்களாகக் கொண்டனர். அவர்களது திறமையையும் செயலாற்றலையும் தெரிந்து தமக்கு உகந்த நாட்டுத் தூதுவர்களாகவும் அமைத்துக் கொண்டனர். இப்படியெல்லாம் அக்காலப் பெண்கள் கல்வி சிறப்பு சீரும் அடைந்திருந்தது[30]

*என்பது கல்வியில் சிறந்த பெண்கள் போற்றப்பட்டமையைக் குறிக்கிறது.*

*பண்டைக் காலத்தில் அறிவையும் பண்பையும் வளர்க்கும் கருவியாகவே கல்வி இருந்தது. ஆட்சி முறைக்கும் படைகளை நிர்வாகம்*

*செய்வதற்கும் இறைவழிபாட்டில் மக்களை வழிநடத்துவதற்கும் நுண்மை அறியும் திறன் உணர்த்தப்பட்டது. அறிவு வளர்ச்சிக்கு மூலமாய் இருப்பவர் ஆசிரியர் என நம்பப்பட்டது. கல்விக்குரிய மதிப்பு ஏற்படவே கல்வியைத் தரும் ஆசிரியர், குரு எனப் போற்றப்பட்டனர். இத்தகைய சிறப்பினையுடைய கல்வி சங்ககாலத்திலேயே தரப்பட்டது.*[31]

*பிற்காலத்தில் எழுந்த திருக்குறள் கல்வியைப் போற்றுவதை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழ் சமூகத்தில் கல்விக்கு இருந்த மதிப்பினை அறிய முடிகிறது. குறிப்பாக, கல்வி ஊன்றுகோல் போன்றது.*[32] *ஆசிரியரைப் போற்றிக் கற்கக் கூடியது கல்வி*[33] *எனப் பேசப்படுகிறது.*

*காக்கைப் பாடினியம் போன்ற இலக்கண நூல்கள் இசை, கூத்து, நாடகம் போன்றவற்றைக் கற்பிக்கும் நூல்கள் ஆகியன இயற்றப்பட்டன. இவ்வாறு பண்டைத் தமிழகத்தில் கல்வி செல்வாக்கு மிகுந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் வழியும் பிறசான்றுகள் வழியும் அறிய முடிகிறது.*

### 7.6. பெற்றோர் போற்றுதல்

*பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கல்வி தருவதில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தனர். சங்க இலக்கியத்தில் நற்றாய், செவிலி போன்றோர் தலைவிக்குக் கூறியதாகச் சொல்லப்படும் செய்திகள் யாவும் ஒழுக்கங்களைக் கற்பிக்கும் மரபை வெளிப்படுத்துகின்றன. சமூகப் பழக்கவழக்கங்களையும் இவர்கள் சொல்லித் தந்ததை இலக்கியங்கள் வழிஅறிய முடிகின்றது. விருந்து உபசரித்தல் தெய்வவழிபாடு போன்றவை குடும்பத்தில் இருந்தே கற்றுத் தரப்பட்டன. குறிஞ்சிப் பாட்டில் விருந்தினர் நல் உணவு உண்டனர்.*

சாறு சுயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொருப்ப
மலரத் திறந்த வாயில் பலர்வுண
பயின்னிம் ஒழுகிய நெய்மலி அடிசில்

வசயில் வான் திணைப் பொறையோர் கரும்பொடு

விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் (குறிஞ்சிப்.101-106)

விருந்து உண்ணுதலும் உபசரித்தலும் கூறப்பட்டுள்ளன. இப்பழக்கங்கள் குடும்பத்தில் இருந்து பெற்றோர் அல்லது மூத்தோர் வழிக்கற்றுத் தரப்பட்டன. மேலும் விருந்தினர் வந்தால் இல்லறத்தார் இருக்கையை விட்டு எழுந்து உள்ளன்போடு வரவேற்க வேண்டும் என நாலடியார் கூறுகின்றது.

இருக்கை எழுலும் எதிர் செலவும் ஏனை

விருப்ப ஒழிதலோடு இன்னக் குடிப்பிறந்தார்

குன்றா ஒழுக்கமாகக் கொண்டார் கயவரோடு

ஒன்றா ஒணர பாட்டு அன்று[34]

என்பது நாலடியார் தரும் பாடல்.

'ஈன்று புறம் தருதல்' எனத் தொடங்கும் புறப்பாடலில் கல்வியில் சிறந்தவராகத் தம் மக்களை மேலோங்கச் செய்வது தந்தையின் கடமை எனக் கூறப்பட்டிருப்பது எண்ணத்தக்கது. பெற்றோர்கள் ஆசிரியராக இருந்து தம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்த வரலாற்றைப் பிற்காலத்தில் காணமுடிகிறது. உ.வே.சாமிநாதையர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோரும் தம் தொடக்ககால கல்வியைப் பெற்றோரிடமே கற்றனர். தன் மகனுக்கு ஆசிரியரே பாடம் சொல்லுவர் என்கிறது நன்னூல்.[35]

## 7.7. ஆசிரியர்கள் தந்த மதிப்பு

பாடம் கற்பித்தல் ஆசிரியரே கல்வியை மிக உயர்வாகக் கருதினர். அது சமூகத்திற்கே பயன் விளைவிப்பதால் உயர்வு தாழ்வு கருதப்படாமல் எல்லா மாணவர்களுக்கும் கற்றுத் தந்தனர். சங்ககாலத்தைப் பொறுத்தவரை கல்வி எல்லார்க்கும் கற்பிக்கப்பட்டது என்பதனை எல்லாக் குலத்தில் இருந்தும் உருவாகியுள்ள புலவர்கள் வரலாற்றில் இருந்து அறியலாம். ஆசிரியர்கள் தாம் செய்வது மிகச் சிறந்த அறச்செயல் எனக் கருதினர். நீதி, அறம், ஒழுக்கம் போன்றவற்றை முக்கியமாக எடுத்துக் கூறியதால் இவ்வொழுக்கங்களுக்கே

கல்வியின் தன்மை தரப்பட்டதை அறியலாம். ஆசிரியர்கள், முனிவர்கள் என்றும், சான்றோர் என்றும் குறிக்கப்பட்டனர்.

மாணவர்களின் உள்ளம் திறன் ஆகியவற்றை நன்குணர்ந்து தாம் சொல்லும் பாடத்தைச் சிறப்புடன் கற்பித்தனர். ஆசிரியர் பாடம் கற்கும் கால் காலம், இடம் ஆகியவற்றை அறிந்து பாடத்தை மிக விரும்பித் தம் தெய்வத்தை வாழ்த்தி வெகுளி முதலான குணங்கள் கற்றுப் பாடஞ் சொன்னார்கள் என நன்னூல் கூறுகிறது.[36] தெய்வம் வாழ்த்துதல் சிறந்துழி இருத்தல் போன்றவை கல்வியை ஆசிரியர்கள் உயர்வாகப் போற்றியதைக் காட்டுவனவாகும். அக்கால ஆசிரியர்கள் இவ்வாறு செய்தமை பிற்காலத்தில் மரபாகவே பின்பற்றப்பட்டது.

### 7.8. மாணவர் தந்த் மதிப்பு

மாணவர்கள் கல்வியை மிக விரும்பி கற்றனர். சிலர் கற்றல் தொழிலுக்கு மாறாக நடந்து கொண்டதையும் காணமுடிகிறது. மாணவர்கள் தாமே படித்தறிவதும் நூல்களின் வழி ஆசிரியர்களிடம் கேட்டறிவதும் ஆகிய இருவழியில் பாடம் கற்றனர். சங்க காலத்தில் இளம் வயதில் கற்பவரை மாணக்கர் என்றே கூறியுள்ளனர். மாணவர்க்கென்று சொல்லப்பட்ட குணங்களுள் கல்வியே பெரும் பொருளாகப் போற்றும் மாணவர் உள்ளத்தைக் காண முடிகிறது.

கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்து உண்ணான்
விச்சைக்கண்
தப்பித்தான் பொருளே போல் தமியவே தேயுமான் (கலி.149)

என்ற கலித்தொகைச் செய்யளுள் ஆசிரியர்களுக்கு வஞ்சம் செய்யாத மாணவர் உள்ளத்தைப் பின்புலமாகக் காட்டுகிறது.

கற்றோர்களின் அறிவுரைகளையும் அனுபவத்தையும் பாடஞ் சொல்லுதலின் வழிப் பயன் கொள்ள முடியும் என்று அக்கால மாணவர்கள் கருதினர்.[37] மாணவர்கள் பொருள், உணவு, உடை போன்றவற்றைத் தந்து

*பாடம் கற்றனர் என்று சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்றது (புறம்.39). இதனால் கல்வியின் மீதும் கற்றலின் மீதும் அவர்கள் கொண்டிருந்த மதிப்பு விளங்குகிறது. "உணர்ச்சி வாயில் உணர்வோர் வழித்தே"[38] என்ற தொல்காப்பிய நூற்பா மாணாக்கர்க்கு உரிய இயல்பை உணர்த்துவதாகக் கூறுவர். மாணாக்கர் இயல்பை இதில் தொடர்புபடுத்தி, "இது மாணாக்கர்க்கு உரியதோர் இயல்பு நுதலிற்று"[39] என்கிறார் நச்சர்.*

*அகத்தியரிடம் மிகுந்த மதிப்புக் கொண்டு தொல்காப்பியர் பாடம் கேட்டார் என்பதை,*

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின்னுணர்ந்த
வன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்[40]

*என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது.*

## 7.9. அந்தணர் போற்றுதல்

*அந்தணர்களின் கல்வி பற்றியும் கல்வியை அவர்கள் உயர்வாகக் கருதியது பற்றியும் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் செய்திகள் பரவிக் கிடக்கின்றன. இவை சங்ககாலச் சமூகத்தின் கல்வி நிலையை அறிவிக்கும் சான்றுகளாகவும் விளங்குகின்றன. அந்தணர்களை 'அறு தொழில் அந்தணர்' என்றும் அறுதொழிலோர் என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.*

ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் (புறம்.33)

*என்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது. அந்தணர்கள் மறைநூல்களையும் அறநூல்களையும் நாள் தவறாமல் ஓதி வந்தனர். ஓதி வந்ததுடன் மற்றவர்க்கு*

ஓதுவித்தலையும் செய்து வந்தனர். தினந்தோறும் ஓதுதல் இவர்க்குரிய தொழில் என்பதால் கல்விக்கு அந்தணர்கள் அளித்த முதன்மை பெறப்படும்.

பரிபாடலில் அந்தணர் அறிவாற்றலை "கெடுவில் கேள்வி" (பரி.96) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாள்தோறும் வைகறையில் ஓதுதலை அந்தணர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கனள் குறிப்பிடுகின்றன. அதிகாலையில் இவர்கள் பாடிய வேதஒலி மதுரை நகர் முழுவதும் ஒலித்ததாகப் பரிபாடல் கூறுகிறது. அந்தணரை "மறைகாப்பாளர்" (பெரும்பாண்.300-301) என்று பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. மேலும் "ஓதல் அந்தணர் வேதம் பாட" (பெரும்பாண்.657) எனவும் "நாவினால் வேதம் கரைகண்ட பார்ப்பான்"[41] என்றும் கூறப்படும் செய்திகள் பார்ப்பார்க்கும் கல்விக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன. அந்தணர் ஓதிய மறை சமூகத்தில் இருந்த சிறப்பையும் உயர்வையும் கற்றுத் தந்தது. இதனை,

> அரிதின் முயன்று கற்பதற்குரிய விரிந்ததும் பரந்ததும் ஆன நூல்கள் பலவற்றிற்கும் உரிய அந்தணர், என்ற செய்தியை 'விரிநூல் அந்தணர்' எனக் கூறித் தெரிவித்துள்ளதும் இவன் குறிக்கத் தக்கதாகும். 'ஒத்துடை அந்தணர்' எனச் சிலப்பதிகாரமும், 'அந்தணர் ஓத்துடைமை ஆற்றமிக இனிதே' என இனியவை நாற்பதும் கூறியுள்ளன. இப்படிப்பட்ட சான்றுகளை எடுத்துக் கூறப்புகின் விரிந்து செல்லும்[42]

என்று வீ.சந்திரன் குறிப்பிடுகின்றார்.

## தொகுப்புரை

கல்வி விளக்கம் கல்வி பற்றிய அறிஞர்கள் கருத்து ஆகியவை தொகுத்தரைக்கப்பட்டுள்ளன. சமூக மதிப்பு என்பதன் விளக்கம் தரப்பட்டுள்ளது. சமூகம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பண்டைச் சமூகத்தில் உயர் மதிப்புக்களாகப் போற்றப்பட்டவை எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அரசர்கள் கல்வியைப் போற்றிய முறை புலவர்கள் கல்வியைப் போற்றிய முறை புலவர்கள்

போற்றிய கல்வி குறித்து சங்க இலக்கியங்களில் காணப்படும் மதிப்புகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. உலக அறிஞர்களின் பார்வையில் கல்வி பற்றிய தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பெற்றோர்கள், பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோர் கல்வியை உயர்வாக மதித்தமை எடுத்துரைக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் கல்விக்கு உரிய மதிப்புத் தந்ததை இவ்வியல் சுட்டிக்காட்டுகிறது. அந்தணர்கள் பார்வையில் கல்வி போற்றப்பட்டமை தொகுக்கப்பட்டுள்ளது.

## சான்றெண் குறிப்புக்கள்

1. கு.வெ.பாலசுப்பிரமணியன், **சங்க இலக்கியத்தின் சமூக அமைப்புகள்**, ப.243.
2. **நன்னூல்**, நூ.36, ப.26.
3. ஈ.கோ.பாஸ்கரதாஸ், **மானிட மதிப்புகள்**, ப.19.
4. மேலது., ப.21.
5. **தொல்.மெய்ப்.**, ப.253.
6. ந.சுப்ரமணியன், **சங்ககால வாழ்வியல்**, ப.390.
7. மேலது., ப.392.
8. K.K.பிள்ளை, மு.கு.நூ., ப.74.
9. **தொல்.பாயிரம்**.
10. K.K.பிள்ளை, மு.கு.நூ., ப.74.
11. மேலது., ப.159.
12. **குறள்**.391.
13. **குறள்**.392.
14. **குறள்**.396.
15. **குறள்**.397.
16. **குறள்**.400.
17. **குறள்**.409.
18. **குறள்**.410.
19. இரா.திராவிடப்பித்தன், மு.கு.நூ., ப.66.
20. அம்பேத்கர், மேற்கோள்: இரா.திராவிடப்பித்தன், மு.கு.நூ., பக்.25-26.
21. மேலது., ப.84.
22. மேலது., ப.128.
23. **குறள்**.388.
24. வீ.சந்திரன், மு.கு.நூ., ப.128.
25. தமிழ் லெக்சிகன்.

26. *அ.தட்சிணாமூர்த்தி,* ***சங்க இலக்கியத்தில் சமூக உறவுகள்,*** *ப.146.*

27. *மேலது., ப.147.*

28. *மேலது., ப.216.*

29. **தொல்.பொருள்.**, *பா.14.*

30. *இரா.திராவிடப்பித்தன்,* ***திராவிடநாட்டுக்கல்வி வரலாறு,*** *ப.79.*

31. *பங்கஜம், மு.கு.நூ., பக்.13-14.*

32. **குறள்**.*415.*

33. *மேலது., 396*

34. **நாலடியார்**, *143.*

35. **நன்.**, *நூ.38.*

36. *மேலது., நூ.36.*

37. **நன்.**, *நூ.390.*

38. **தொல்.சொல்.உரி.**, *நூ.95.*

39. **தொல்.சொல்.** *(நச்சர். உரை), நூ.95.*

40. **புறப்பொருள் வெண்பாமாலை பாயிரம்.**

41. **திரி.**, *பா.42.*

42. *வீ.சந்திரன்,* ***தமிழர் கல்வி,*** *ப.105.*

# முடிவுரை

இயல்கள்தோறும் பதிவு செய்யப் பெற்ற தரவுகளின் வழிக்கிடைத்த மெய்ம்மைகளின் அடிப்படையில் கிடைத்த முடிபுகள் கீழே தரப்படுகின்றன.

கல்வி பற்றிய சிந்தனைகள் சங்க இலக்கியங்களில் ஒரு நூலில் ஓர் இடத்தில் மட்டும் இல்லாமல் பல இடங்களில் தனித்தனியாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை முழுமையாக்கும் போது சங்க காலக் கல்வி வரலாற்றைக் கண்டறிய முடிகிறது.

சங்க இலக்கியப் பெயர்கள் பாடப்பெற்ற புலவர்களால் அன்றி அக்காலத்தில் வாழ்ந்து வந்தவர்களால் இடம் பெற்ற குறியீடாகும்.

சங்ககால எல்லை, புலவர் எண்ணிக்கை, நிகழ்ந்த இடம் போன்றவை ஆராயச்சியாளர்களால் சிறுசிறு வேறுபாடுகளுடன் கூறப்பட்டிருக்கின்றன.

சங்க இலக்கியத் தொகுப்புகள் தொகுத்தோர், தொகுப்பித்தோர் ஆகிய பெயர்களுடன் சுட்டப்படுகின்றன. காரண காரிய அடிப்படையில் பாடல்கள் தொகுப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

சங்ககாலப் புலவர்கள் இலக்கியம், இலக்கணம், யாப்பு, இசை போன்றவற்றில் நுட்பம் செறிந்தவர்களாக உள்ளனர். புலமை, புலவர் என்ற சொற்கள் ஒன்றற்கு ஒன்று தொடர்புடையவை.

சங்ககாலச் சமூகம் புலவர்களையும் அவர்களது புலமையையும் கல்வியின் சிறப்புக்கருதிப் போற்றியது. அரசர்களும் பாடிய பாடல்களில் குறிப்பாகக் கல்வியின் சிறப்பைப் போற்றியுள்ளனர். சங்ககால அரசு கல்விக்குத் தனி இடத்தைத் தந்தது.

பொதுமக்களின் பலர் ஓவியம், சிற்பம், கூத்து, இசை போன்றவற்றில் அனுபவம் உடையவர்களாகவும் ஆர்வம் உடையவர்களாகவும் இருந்தனர் எனத் தெரிய வருகிறது.

பாணர், கூத்தர், விறலியர் போன்ற கலைஞர்கள் கல்வியறிவு உடையவராக இருந்தனர். கற்போர், கற்பிப்போர் ஆகியவர்களின் பண்புகள் இவர்களிடம் காணப்பட்டன.

தச்சுத் தொழில், இரும்புத் தொழில், பின்னல் (கயிறு) தொழில், ஆடை நெய்தல், உழவுத்தொழில் போன்றவை முறைசாரா முறையில் கற்றுத் தரப்பட்டன.

முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களும் செய்த பணிகள் கல்வி அறிவை வளர்ப்பதாகவே இருந்தன.

பொருளைக் கற்பிப்போர் பலதரப்பட்டனர். ஆசிரியர், புலவர், கணக்காயர், பாலாசிரியர், இளம்பாலாசிரியர், உரையாசிரியர், நூலாசிரியர் எனப் பலதிறத்தினராக இருந்தனர். கற்பிக்கும் நிறுவனங்களாக இல்லம், பொது மன்றம், அரண்மனை போன்றவை கூறப்படுகின்றன.

ஒழுக்கம், போர்வீரம் போன்றவற்றையும் கற்பு போன்ற பண்புகளையும் தாய் கற்பித்ததாகத் தெரிகிறது.

மற்றவர் புகழும் கல்வியை மகனுக்குக் கற்பிக்க தந்தை ஆவன செய்வதும் சில இடங்களில் தாமே கற்பிப்பதும் காணப்படுகின்றன.

தோழிக்கும் தலைவனுக்கும் தன் மனநிலையை விளங்க எடுத்துரைக்கும் பண்பு தலைவியிடம் காணப்படுகின்றது.

தலைவி, தலைவன் ஆகியோர்க்குக் களவியல் வாழ்க்கையில் சிலவற்றைத் தோழி அறிவுறுத்துவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

செவிலி தோழிக்கும் தலைவிக்கும் நல்லுரைகளைக் கற்பிக்கிறாள். தலைவன் தலைவிக்கும் தோழிக்கு மன உறுதியைக் கற்பிக்கிறான்.

அரசர் அரச நெறிமுகைளை அமைச்சருக்கும் பிறருக்கும் கற்பிக்கும் முறைகள் காணப்படுகின்றன.

சான்றோர் கல்வியறிவு நிறைந்தவர். அதனால் கற்பிப்பதே அவருடைய தொழிலாக இருந்தது.

தாம் இயற்றிய பாடல்களின் வழிப் பல்வேறு நீதிக்கருத்துக்களை எடுத்துரைப்பதால் புலவர்களும் ஒரு வகையில் ஆசிரியர்களே ஆவர்.

வேதக்கல்வியை கற்பிக்கும் தொழிலாக அந்தணர்கள் மேற்கொள்கின்றனர்.

பாடம் சொல்வதற்கே என்று தனியாக ஆசிரியர்கள் உருவாகி இருந்தனர். அவர்கள் அத்தொழிலை விரும்பி செய்தனர்.

கணிதங்களையும், வாணியல் கணிதத்தையும் கற்பிப்பதற்குத் தனித்தனி ஆசிரியர்கள் காணப்பட்டனர்.

ஆரசர்க்கு அரச விதிமுறைகளை கற்பிப்பதற்குக் குழுக்கள் இருந்தன (ஐம்பெருங்குழு எண்பேராயம்).

மரபு வழியாகக் கற்ற தொழில் முறைகளை அவரவர் தம் உடன் இருப்பவர்க்குக் கற்றுத்தந்தனர்.

உழவுத்தொழில் பரவலாக மரபு வழியில் கற்பிக்கப்பட்டது.

சங்ககாலத்தில் பலவகை கற்பித்தல் முறை காணப்படுகின்றது. பெரும்பான்மையும் மரபுவழிக் கற்பித்தல் முறையே பின்பற்றப்பட்டுள்ளது.

குருகுலக் கல்வி முறை மிகப் பிற்காலத்தில் தோன்றியது. சங்க காலத்தில் குருகுலக் கல்வி முறை இருந்ததாகத் தெரியவில்லை.

இலக்கியம் கற்பிப்பதற்கும் எண்களைக் கற்பிப்பதற்கும் தனித்தனி ஆசிரியர்கள் இருந்தனர்.

அறம் கற்பித்தல் இல்லத்திலும், இல்லற வாழ்விலும் பொது இடங்களிலும் முறைசாரா முறையில் கற்பிக்கப்பட்டன.

கற்பிக்கும் இடங்களாக இல்லம் பொது மன்றுகள் விளங்கியிருக்கின்றன. ஆசிரியர் அல்லாத தனிமனிதர்களும் கற்றுத் தந்தனர்.

இசையுடன் பாடிக் கற்பிக்கும் முறை இருந்துள்ளது. பாணர்கள் இசையுடன் பாடிக் காட்டினர்.

புலவர்கள் செவியறிவுறூஉ முறையில் அரசர்க்குப் பலவற்றை எடுத்துரைத்தனர். செவியறிவுறூஉ ஒரு கற்பித்தல் முறை எனவும் கூறலாம்.

சந்து செய்துவித்தல் நன்மை, தீமைகளைக் கற்பிக்கும் முறையாகப் பயன்பட்டுள்ளது.

சுவடிகளைக் கொண்டு கற்பிக்கும் முறை இருந்துள்ளது.

கற்றோரில் மாணாக்கரைக் குறிக்கும் சொல் சங்க இலக்கியத்திலேயே காணப்படுகிறது.

கல்வி கற்போர்க்கு ஒழுக்கமே அடிப்படைக் கல்வியாக வற்புறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார வசதி குறைந்தோர்க்குக் கற்பது அரிதாக இருந்தது. சான்றோர் என்பார் கல்வியறிவிலும் மேம்பட்டவராகக் கருதப்பட்டார்.

அந்தணர்கள் விரதம் இருந்து ஒழுக்க நெறியுடன் கல்வி கற்றனர். அரசர்கள் புலவர்களிடமும் அரசவை அமைச்சர்களிடம் பலவற்றைக் கற்றுக் கொண்டுள்ளனர்.

கூத்து முதலான கலைத்தொழில் அறிந்தவர்களிடம் இருந்து அவரது குடும்பத்தினரும் இனத்தவர்களும் கற்றனர்.

போர் வீரர்களுக்கு என்று தனிப்பயிற்சி முறையைக் கடைப்பிடித்துக் கற்றனர்.

அயல்தேயங்களுக்குச் சென்று பலவற்றைத் தமிழகத்து மக்கள் கற்று வந்துள்ளனர். ஓதல் பிரிவு இதனை உணர்த்தும்.

இல்லத்தில் உள்ள முதியோர்கள் எடுத்துக் கூறியதை இளையராய் உள்ளோர் கற்றுக் கொண்டனர்.

பழங்காலத்தில் பாடப்பொருள்கள் முறைசாரா முறையில் கூறப்பட்டு வந்தன. பழங்காலப் பாடப் பொருள்கள் ஒழுக்கத்தை மையமாகக் கொண்டு கற்பிக்கப்பட்டன.

வேதக்கல்வியில் மட்டும் பாடப்பொருள் வரையறுக்கப்பட்டிருந்தது. இளமைத்தொட்டே மாணவர்களுக்கு அறச்சிந்தனைகள் பாடப் பொருளாக விளங்கின.

இளம் வயதுடைய சிறுவர்களுக்குக் கூடத் தாய் வீரத்தை எடுத்துரைப்பதாகக் கூறுவது வீரம் ஒரு கல்விப் பொருளாக இருப்பதை உணர்த்துகிறது.

நீதி நெறிமுறைகள் சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும் கடைப்பிடித்து வந்ததைக் காட்டுகின்றது.

அரச மரபினர் வழிவழியாக அரசாட்சி முறையை ஒருவர் மற்றவரிடம் இருந்து கற்றனர்.

குடும்பம் ஒரு கல்வி நிறுவனமாக அமையும்பொழுது இல்லறக் கடமைகள் பாடப் பொருளாகின்றன.

எல்லா நிலையிலும் சமூக மரபு பின்பற்றப்பட்டது. ஒவ்வொன்றையும் கற்கும் பொழுதும் கற்பிக்கும் பொழுதும் அவற்றிற்குரிய மரபுகளே பின்பற்றப்பட்டன. பாடப்பொருளாயின.

சுவடியில் எழுதுதல், மணலில் எழுதுதல் என இருவேறு பயிற்சிகள் கற்பதில் இருந்தன. இசையுடன் பாடிப் பயிற்சி பெறும் முறையும் இருந்துள்ளது.

உரையாசிரியர்கள் செய்யுளுக்கு உரைத்த உரையும் கற்றலுக்கு உதவியாக இருந்தது.

படிக்க வாய்ப்பு இல்லாதோர் செவிவழிச் செய்தியாகக் கேட்டுக் கற்றறிந்தனர். மாணவர்களிடையே கலந்துரையாடிக் கற்கும் முறை காணப்படுகின்றது.

இலக்கண இலக்கியங்களை மனனம் செய்து சொல்லிப் பழகுதல் ஒரு வகைக் கற்றல் முறையாக இருந்தது.

சுவடிகளைப் படியெடுப்போர்க்கு இலக்கியப் பயிற்சிகள் கிடைத்தன. ஆசிரியர்களுக்கு உணவு, பொருள் முதலானவற்றைத் தந்தும் தனிப்பட்ட முறையில் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

அந்தணர்கள் வேதக் கல்வியை விரதம் இருந்து கற்றனர்.

கல்வி அறிதாகக் கிடைக்கும் ஒன்றாகவும் செல்வமாகவும் மதிக்கப்பட்டது. அரசர்கள், அமைச்சர்கள், புலவர்கள், பொது மக்கள், ஆண்கள், பெண்கள், வணிகர், அந்தணர் எனப் பல திறத்தினரும் கல்வியை மிக உயர்ந்த கருவியாகக் கருதினர். கல்விக்கு மிக உயர்ந்த சமூக மதிப்புக் கிடைத்தது.

உயர்ந்த அரசனையும் தாழ்ந்த குலத்தவனையும் இணைக்கும் கருவியாகக் கல்வி இருந்தது.

சங்க இலக்கியங்களில் கல்வி குறித்த பாடல்களைத் தொகுத்துத் தமிழகச் சமூக வரலாற்றையும் கல்வி வரலாற்றையும் அவற்றோடு இணைந்த அரசியல் பொருளாதார நிலைகளையும் ஆராய்வதற்கு மேலும் வாய்ப்புகள் இருக்கின்றன.

# துணைநூற் பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்


*மாணிக்கனார், அ.,* அகநானூறு, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. ஐங்குறுநூறு, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. கலித்தொகை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. குறிஞ்சிப்பாட்டு, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. குறுந்தொகை மூலமும் உரையும், *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. கூத்தராற்றுப்படை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. சிறுபாணாற்றுப்படை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. திருமுருகாற்றுப்படை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

*மாணிக்கனார், அ.,* நற்றிணை மூலமும் உரையும், *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. நெடுநல்வாடை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. பட்டினப்பாலை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. பதிற்றுப்பத்து, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. பரிபாடல், *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. புறநானூறு, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. பெரும்பாணாற்றுப்படை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. பொருநராற்றுப்படை, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

---. மதுரைக்காஞ்சி, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

*மாணிக்கனார், அ.,* **முல்லைப்பாட்டு,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*


## துணைமை ஆதாரங்கள்


*அப்பாத்துரையார், கா., கனகசபை, வி.,* **1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்,** *வசந்தா பதிப்பகம், சென்னை, மு.ப., 2001.*

*அருணாசலம், ப.,* **பக்தி இலக்கியம்,** *முல்லை நிலையம், சென்னை, ம.ப., 2007.*

*அறிவுடைநம்பி, ம.சா.,* **தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுகள்,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, மு.ப., 2010.*

*ஆறுமுகநாவலர் (உ.ஆ.)* **நன்னூல் காண்டிகையுரை எழுத்ததிகாரம்,** *முல்லை நிலையம், சென்னை, ம.ப., 2001.*

*ஆறுமுகநாவலர் (உ.ஆ.)* **நன்னூல் காண்டிகையுரை சொல்லதிகாரம்,** *முல்லை நிலையம், சென்னை, ம.ப., 2001.*

*இளங்குமரன், இரா. (ப.ஆ.)* **தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பேராசிரியம்,** *தமிழ்மண் பதிப்பகம், சென்னை, மு.ப., 2003.*

---. **தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணம்,** *தமிழ்மண் பதிப்பகம், சென்னை, மு.ப., 2005.*

*இளங்குமரன், இரா.*
*(ப.ஆ.)*

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்,
நச்சினார்க்கினியம்,
*தமிழ்மண் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2005.*

---.

தொல்காப்பியம் சொல்லதிகாரம்,
சேனாவரையம்,
*தமிழ்மண் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2007.*

*கணேசையர்*
*(ப.ஆ.)*

தொல்காப்பியம் சொல்லதிகாரம்
மூலமும் சேனாவரையருரையும்,
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*மு.ப., 2007.*

*கந்தசாமி, சோ.ந.,*

உலகத் தமிழிலக்கிய வரலாறு,
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*மு.ப., 2004.*

---.

புறத்திணை வாழ்வியல்,
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 2004.*

*கந்தையா பிள்ளை, ந.சி.,*

தமிழர் பண்பாடு,
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*மு.ப., 2006.*

*கமலக்கண்ணன், இரா.வ.*
*(உ.ஆ.)*

நாலாயிர திவ்விய பிரபந்தம்,
*வர்த்தமானன் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2009.*

*கலியபெருமாள், அ.,*

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு
விழா மலர்,
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி,*
*1991.*

*கார்த்திகேசு சிவத்தம்பி,* **தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப., 2001.*

---. **பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, இ.ப., 2011.*

*கிருஷ்ணமூர்த்தி, சா., நிர்மலாதேவி, கு. (ப.ஆ.)* **தமிழ் இலக்கியத்தில் மனித நேயம்,** *மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப., 2009.*

*குழந்தை, புலவர். (உ.ஆ.)* **நீதிக்களஞ்சியம்,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2007.*

*கோவிந்தன், கா.,* **தமிழர் வரலாறு,** *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, ப.ஆ., 2000.*

*கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.)* **நற்றிணை,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2000.*

---. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2009.*

---. தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்) மூலமும் உரையும், *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2010.*

*கௌமாரீஸ்வரி, எஸ். (தொ.ஆ.)* **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2012.*

*சண்முகதாஸ், அ.,* **தமிழ்மொழி இலக்கண இயல்புகள்,** *பூபாலசிங்கப் புத்தக சாலை, கொழும்பு, மு.ப., 1997.*

*சந்தானம், எஸ்.,* **கல்வியல் தத்துவ சமூக அடிப்படைகள்,** *பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இ.ப., 1979.*

*சந்திரமதி, குளோரியா.,* **இலக்கிய கல்வியும் பகுப்பாய்வும்,** *மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், மு.ப., 2001.*

*சந்திரன், வீ.,* **தமிழர் கல்வி,** *ராஜகுமாரி பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப., 2001.*

*சாமிநாதசர்மா, வெ.,* **புராதான இந்தியாவில் அரசியல்,** *ராஜராஜன் பதிப்பகம், சென்னை, இ.ப., 2000.*

*சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.)* **என் சரித்திரம்,** *உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, இ.ப., 1982.*

---. **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்,** *உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, ப.ப., 2001.*

| | |
|---|---|
| *சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.)* | **புறநானூறு மூலமும் பழைய உரையும்,** *உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, ஏ.ப., 1982.* |
| *சிவக்குமார், ஐ. (ப.ஆ.)* | **செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, மு.ப., 2011.* |
| *சிவசாமி, ப.,* | **இலக்கிய பொருள் பகுப்பாய்வு,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப., 1991.* |
| *சுப்பிரமணியம், பூ.,* | **சுவடியியல்,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப., 1982.* |
| *சுப்பிரமணியன், கா.,* | **சங்ககால சமுதாயம்,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, மு.ப., 1993.* |
| *சுப்பிரமணியன், ந.,* | **சங்ககால வாழ்வியல்,** *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, மு.ப., 1986.* |
| *சுப்பிரமணியன், ந.,* | **தமிழ்ப்பயிற்றும் முறை,** *மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், மு.ப., 2007.* |
| *சுப்பையா, அரங்க.,* | **சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும்,** *நலங்கிள்ளி பதிப்பகம், தஞ்சாவூர், ம.ப., 2009.* |
| *செல்வராசு, சிலம்பு நா., அறவேந்தன், இரா. (ப.ஆ.)* | **தமிழாசிரியர் மன்ற இரண்டாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப., 2000.* |

செல்வராசு, சிலம்பு நா. *(ப.ஆ.)*
**சிலப்பதிகாரம்: கவிதையியல்-பண்பாட்டியல்-மொழியியல்-அரசியல்,**
**மொழியியல் பண்பாடு,**
*புதுச்சேரி பல்கலைக்கழகம்,*
*புதுச்சேரி,*
*மு.ப., 2013.*

செல்லம், தி.,
**தமிழக வரலாறும் பண்பாடும்,**
*மணிவாசகர் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2001.*

சேகர், து.,
**தமிழ் இலக்கணங்களில் கல்வியல் சிந்தனைகள்,**
*சோமா பதிப்பகம்,*
*பெரம்பலூர்,*
*மு.ப., 2003.*

சோமசுந்தரனார், பொ.வே., *(உ.ஆ.)*
**ஐங்குறுநூறு,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*மு.ப., 2007.*

---.
**குறுந்தொகை,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*ம.அ., 2007.*

---.
**பத்துப்பாட்டு, தொகுதி-ஒன்று,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*மு.ப., 2008.*

---.
**பத்துப்பாட்டு, தொகுதி-இரண்டு,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*ம.ப., 2007.*

*சோமசுந்தரனார், பொ.வே., (உ.ஆ.)* — **பதிற்றுப்பத்து**, *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, மு.ப., 2007.*

---. — **பரிபாடல்**, *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, மு.ப., 2007.*

---. — **புறப்பொருள் வெண்பாமாலை**, *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, ஐ.ப., 1969.*

*ஞானசம்பந்தன், அ.ச., ஞானசுந்தரம், தெ. (ப.ஆ.)* — **கம்பராமாயணம்**, *கங்கைப் புத்தக நிலையம், சென்னை, மு.ப., 2002.*

*தட்சிணாமூர்த்தி, அ.,* — **சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்**, *மங்கையர்க்கரசி பதிப்பகம், தஞ்சாவூர், மு.ப., 2001.*

*தண்டபாணி தேசிகர், ச. (கு.ஆ.)* — **நன்னூல் விருத்தியுரை**, *பாரி நிலையம், சென்னை, நா.ப., 2003.*

*தனஞ்சயன், ஆ.,* — **சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும்**, *நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, மு.ப., 2010.*

*திராவிடப்பித்தன், இரா.,* — **திராவிட நாட்டுக் கல்வி வரலாறு**, *கயல்கவின் பதிப்பகம், சென்னை, மு.ப., 2009.*

*திரிலோக சீத்தாராம்,* **மநுதர்ம சாஸ்திரம்,**
*ஏ.கே.கோபலர் பப்ளிஷர்,*
*சென்னை,*
*மூ.ப., 1994.*

*திருச்சிற்றம்பலம், சிவ. (உ.ஆ.)* **பெரியபுராணம்,**
*கங்கைப் புத்தக நிலையம்,*
*சென்னை,*
*இ.ப., 2009.*

*துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. (உ.ஆ.)* **புறநானூறு, பகுதி-I,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*ம.ப., 2002.*

---. **புறநானூறு, தொகுதி-II,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*ம.ப., 2002.*

---. **பதிற்றுப்பத்து,**
*கழகப் பதிப்பு*
*சென்னை,*
*ம.ப., 2007.*

*நச்சினார்க்கினியர், (உ.ஆ.)* **கலித்தொகை,**
*திருநெல்வேலி தென்னிந்திய*
*சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*மு.ப., 2007.*

*பக்தவத்சலபாரதி, சீ.,* **பண்பாட்டு மாணிடவியல்,**
*மணிவாசகர் பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 1990.*

*பங்கஜம், G.,* **கல்வியும் சமுதாயமும்,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை.*
*மு.ப., 2007.*

*பதிப்பாசிரியர் குழு,* **சங்க இலக்கியக் கட்டுரைகள்,**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 1984.*

*பரமசிவம், த.கோ.,* **சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்,**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 1989.*

*பரிமேலழகர் (உ.ஆ.)* **திருக்குறள்,**
*பழனியப்பா பிரதர்ஸ்,*
*சென்னை,*
*நா.ப., 1994.*

*பழனியப்பன்,* **பழந்தமிழ் இலக்கியம் ஓர் ஆய்வு,**
*நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.) லிட்.,*
*சென்னை,*
*மு.ப., 2003.*

*பாண்டுரங்கன், அ.,* **தொகையியல்,**
*தமிழரங்கம்,*
*புதுவை,*
*ம.ப., 2008.*

*பாலசுப்பிரமணியன், கு.வெ.,* **சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்,**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 1994.*

*பாஸ்கரதாஸ்., ஈ.கோ.,* **மானிட மதிப்புகள்,**
*திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*ப.ஆ., 1997.*

*பாஸ்கரன், க.,* **சமுதாயத் தத்துவம்,**
*எட்டாம் உலகத் தமிழ் மாநாடு பதிப்புச் சூழல் நிதி வெளியீடு,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 1994.*

*பிங்கலமுனிவர்,* **பிங்கல நிகண்டு,**
*சரசுவதிமகால் நூல் நிலையம்,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 1987.*

*பிரபாகரன், உ.,* **பெரியார் ஈ.வே.ராவின் கல்வியியல் சிந்தனைகள்,**
*சண்முகவடிவு பிரபாகரன் வெளியீடு,*
*தஞ்சாவூர்,*
*மு.ப., 2007.*

*பிள்ளை, கா.சு.,* **தமிழ் இலக்கிய வரலாறு,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*மு.ப., 2011.*

*பிள்ளை, கே.கே.,* **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,**
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*ம.ப., 2009.*

*புத்தமித்திரர் (ப.ஆ.)* **வீரசோழியம்,**
*திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,*
*சென்னை,*
*மு.ப., 1970.*

*புலியூர்க்கேசிகன் (உ.ஆ.)* **அகநானூறு,**
*கங்கை புத்தக நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 2010.*

---. **பட்டினப்பாலை**
*கங்கை புத்தக நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 2010.*

---. **பரிபாடல்,**
*கங்கை புத்தக நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 2010.*

---. **புறநானூறு,**
*கங்கை புத்தக நிலையம்,*
*சென்னை,*
*மு.ப., 2010.*

| | |
|---|---|
| *புலியூர்க்கேசிகன் (உ.ஆ.)* | **மணிமேகலை**, *பாரி நிலையம், சென்னை, மு.ப., 2011.* |
| *மர்ரே ராஜம் (ப.ஆ.)* | **நற்றிணை**, *மர்ரே பதிப்பு, சென்னை, இ.ப., 1981.* |
| *மாணிக்கம், வ.சுப.,* | **இரட்டைக்காப்பியங்கள்**, *மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மு.ப., 1969.* |
| ---. | **தமிழ்க் காதல்**, *ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப., 2009.* |
| *மாணிக்கனார், அ. (உ.ஆ.)* | **மதுரைக்காஞ்சி மூலமும் உரையும்**, *வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மு.ப., 1997.* |
| *முத்துக்குமாரசாமி தம்பிரான் (ப.ஆ.)* | **திருநாவுக்கரசர் தேவாரம்**, *ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், மு.ப., 1965.* |
| *முரளி, ஜீ.ச. (ப.ஆ.)* | **பன்னிரு திருமுறை**, *சதுரா பதிப்பகம், சென்னை, மு.ப., 2007.* |
| *மீனாட்சிசுந்தரம், அ.,* | **இந்திய சமுதாயத்தில் கல்வி**, *காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல், மு.ப., 2008.* |
| *வாசுகி. வ.,* | **கல்வி உளவியல்**, *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2006.* |

*விக்ரமாதித்யன்,* **தமிழ்க்கவிதை மரபும் நவீனமும்,** *மருதா வெளியீடு, சென்னை, மு.ப., 2004.*

*வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.)* **கொன்றை வேந்தன்,** *கழகப் பதிப்பு, சென்னை, மு.ப., 1962.*

---. **கொன்றை வேந்தன்,** *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, மு.ப., 1986.*

---. **சிலப்பதிகாரம்,** *கழகப் பதிப்பு, சென்னை, மு.ப., 1977.*

*வேங்கடசாமி, மயிலை சீனி.,* **சங்ககால வரலாற்று ஆய்வுகள்,** *வெற்றியரசி வெளியீடு, சென்னை, மு.ப., 1996.*

*வையாபுரிப்பிள்ளை, எஸ்.,* **இலக்கியச் சிந்தனைகள்,** *பாரி நிலையம், சென்னை, மு.ப., 2009.*

---. **தமிழின் மறுமலர்ச்சி,** *பாரி நிலையம், சென்னை, மு.ப., 2009.*

*ஜம்புலிங்கம், அ.,* **சங்ககால வேந்தர்களின் சமுதாயப்பணி,** *இந்துமதி பதிப்பகம், சிதம்பரம், மு.ப., 2003.*

### ஆங்கில நூல்கள்


Elavarasu, R., **Rhetorical Linguistics: An introduction,** Nathi Publications, Thanjavur, First Edition, 2012.

Manickam, V.T., **Marutham An aspect of love in Tamil Literature,** Thema Publishers, Karaikudi, 1982.

Rabindranath Thagore, **The Home and the World,** NCBH, Chennai, 2001.

Subramanian, G., **Virgil and Kamban,** Geetha Publications, Trichirappalli, First Edition, 2012.


### தமிழ் அகராதிகள்


*கௌமாரீஸ்வரி. எஸ். (ப.ஆ.)* **நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி,** *சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2003.*

*வையாபுரிப்பிள்ளை, எஸ்.,* **தமிழ் லெக்சிகன், தொகுதி-இரண்டு,** *சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மு.ப., 1982.*

*வையாபுரிப்பிள்ளை, எஸ்.,* **தமிழ் லெக்சிகன், தொகுதி ஐந்து,** *சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மு.ப., 1982.*

**களஞ்சியம்**


*பாலுசாமி, நா. (ப.ஆ.)* — **வாழ்வியல் களஞ்சியம், தொகுதி நான்கு,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ம.ப., 2002.*

---. — **வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஆறு,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ம.ப., 2002.*


**இதழ்**


*பெரியார், ஈ.வெ. (ஆசிரியர்),* — **குடியரசு,** *ஈ.வெ.ராமசாமி கல்வி அறக்கட்டளை, சென்னை, மு.ப., 1998.*

*வீரமணி, கி.,* — **விடுதலை நாளிதழ்,** *திராவிட முன்னேற்றக் கழகம், திருச்சிராப்பள்ளி, 27.02.2014.*

# முடிவுரை

இயல்கள்தோறும் பதிவு செய்யப் பெற்ற தரவுகளின் வழிக்கிடைத்த மெய்ம்மைகளின் அடிப்படையில் கிடைத்த முடிபுகள் கீழே தரப்படுகின்றன.

கல்வி பற்றிய சிந்தனைகள் சங்க இலக்கியங்களில் ஒரு நூலில் ஓர் இடத்தில் மட்டும் இல்லாமல் பல இடங்களில் தனித்தனியாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை முழுமையாக்கும் போது சங்க காலக் கல்வி வரலாற்றைக் கண்டறிய முடிகிறது.

சங்க இலக்கியப் பெயர்கள் பாடப்பெற்ற புலவர்களால் அன்றி அக்காலத்தில் வாழ்ந்து வந்தவர்களால் இடம் பெற்ற குறியீடாகும்.

சங்ககால எல்லை, புலவர் எண்ணிக்கை, நிகழ்ந்த இடம் போன்றவை ஆராயச்சியாளர்களால் சிறுசிறு வேறுபாடுகளுடன் கூறப்பட்டிருக்கின்றன.

சங்க இலக்கியத் தொகுப்புகள் தொகுத்தோர், தொகுப்பித்தோர் ஆகிய பெயர்களுடன் சுட்டப்படுகின்றன. காரண காரிய அடிப்படையில் பாடல்கள் தொகுப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

சங்ககாலப் புலவர்கள் இலக்கியம், இலக்கணம், யாப்பு, இசை போன்றவற்றில் நுட்பம் செறிந்தவர்களாக உள்ளனர். புலமை, புலவர் என்ற சொற்கள் ஒன்றற்கு ஒன்று தொடர்புடையவை.

சங்ககாலச் சமூகம் புலவர்களையும் அவர்களது புலமையையும் கல்வியின் சிறப்புக்கருதிப் போற்றியது. அரசர்களும் பாடிய பாடல்களில் குறிப்பாகக் கல்வியின் சிறப்பைப் போற்றியுள்ளனர். சங்ககால அரசு கல்விக்குத் தனி இடத்தைத் தந்தது.

பொதுமக்களின் பலர் ஓவியம், சிற்பம், கூத்து, இசை போன்றவற்றில் அனுபவம் உடையவர்களாகவும் ஆர்வம் உடையவர்களாகவும் இருந்தனர் எனத் தெரிய வருகிறது.

பாணர், கூத்தர், விறலியர் போன்ற கலைஞர்கள் கல்வியறிவு உடையவராக இருந்தனர். கற்போர், கற்பிப்போர் ஆகியவர்களின் பண்புகள் இவர்களிடம் காணப்பட்டன.

தச்சுத் தொழில், இரும்புத் தொழில், பின்னல் (கயிறு) தொழில், ஆடை நெய்தல், உழவுத்தொழில் போன்றவை முறைசாரா முறையில் கற்றுத் தரப்பட்டன.

முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களும் செய்த பணிகள் கல்வி அறிவை வளர்ப்பதாகவே இருந்தன.

பொருளைக் கற்பிப்போர் பலதரப்பட்டனர். ஆசிரியர், புலவர், கணக்காயர், பாலாசிரியர், இளம்பாலாசிரியர், உரையாசிரியர், நூலாசிரியர் எனப் பலதிறத்தினராக இருந்தனர். கற்பிக்கும் நிறுவனங்களாக இல்லம், பொது மன்றம், அரண்மனை போன்றவை கூறப்படுகின்றன.

ஒழுக்கம், போர்வீரம் போன்றவற்றையும் கற்பு போன்ற பண்புகளையும் தாய் கற்பித்ததாகத் தெரிகிறது.

மற்றவர் புகழும் கல்வியை மகனுக்குக் கற்பிக்க தந்தை ஆவன செய்வதும் சில இடங்களில் தாமே கற்பிப்பதும் காணப்படுகின்றன.

தோழிக்கும் தலைவனுக்கும் தன் மனநிலையை விளங்க எடுத்துரைக்கும் பண்பு தலைவியிடம் காணப்படுகின்றது.

தலைவி, தலைவன் ஆகியோர்க்குக் களவியல் வாழ்க்கையில் சிலவற்றைத் தோழி அறிவுறுத்துவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

செவிலி தோழிக்கும் தலைவிக்கும் நல்லுரைகளைக் கற்பிக்கிறாள். தலைவன் தலைவிக்கும் தோழிக்கு மன உறுதியைக் கற்பிக்கிறான்.

அரசர் அரச நெறிமுகைகளை அமைச்சருக்கும் பிறருக்கும் கற்பிக்கும் முறைகள் காணப்படுகின்றன.

சான்றோர் கல்வியறிவு நிறைந்தவர். அதனால் கற்பிப்பதே அவருடைய தொழிலாக இருந்தது.

தாம் இயற்றிய பாடல்களின் வழிப் பல்வேறு நீதிக்கருத்துக்களை எடுத்துரைப்பதால் புலவர்களும் ஒரு வகையில் ஆசிரியர்களே ஆவர்.

வேதக்கல்வியை கற்பிக்கும் தொழிலாக அந்தணர்கள் மேற்கொள்கின்றனர்.

பாடம் சொல்வதற்கே என்று தனியாக ஆசிரியர்கள் உருவாகி இருந்தனர். அவர்கள் அத்தொழிலை விரும்பி செய்தனர்.

கணிதங்களையும், வாணியல் கணிதத்தையும் கற்பிப்பதற்குத் தனித்தனி ஆசிரியர்கள் காணப்பட்டனர்.

ஆரசர்க்கு அரச விதிமுறைகளை கற்பிப்பதற்குக் குழுக்கள் இருந்தன (ஐம்பெருங்குழு எண்பேராயம்).

மரபு வழியாகக் கற்ற தொழில் முறைகளை அவரவர் தம் உடன் இருப்பவர்க்குக் கற்றுத்தந்தனர்.

உழவுத்தொழில் பரவலாக மரபு வழியில் கற்பிக்கப்பட்டது.

சங்ககாலத்தில் பலவகை கற்பித்தல் முறை காணப்படுகின்றது. பெரும்பான்மையும் மரபுவழிக் கற்பித்தல் முறையே பின்பற்றப்பட்டுள்ளது.

குருகுலக் கல்வி முறை மிகப் பிற்காலத்தில் தோன்றியது. சங்க காலத்தில் குருகுலக் கல்வி முறை இருந்ததாகத் தெரியவில்லை.

இலக்கியம் கற்பிப்பதற்கும் எண்களைக் கற்பிப்பதற்கும் தனித்தனி ஆசிரியர்கள் இருந்தனர்.

அறம் கற்பித்தல் இல்லத்திலும், இல்லற வாழ்விலும் பொது இடங்களிலும் முறைசாரா முறையில் கற்பிக்கப்பட்டன.

கற்பிக்கும் இடங்களாக இல்லம் பொது மன்றுகள் விளங்கியிருக்கின்றன. ஆசிரியர் அல்லாத தனிமனிதர்களும் கற்றுத் தந்தனர்.

இசையுடன் பாடிக் கற்பிக்கும் முறை இருந்துள்ளது. பாணர்கள் இசையுடன் பாடிக் காட்டினர்.

புலவர்கள் செவியறிவுறூஉ முறையில் அரசர்க்குப் பலவற்றை எடுத்துரைத்தனர். செவியறிவுறூஉ ஒரு கற்பித்தல் முறை எனவும் கூறலாம்.

சந்து செய்துவித்தல் நன்மை, தீமைகளைக் கற்பிக்கும் முறையாகப் பயன்பட்டுள்ளது.

சுவடிகளைக் கொண்டு கற்பிக்கும் முறை இருந்துள்ளது.

கற்றோரில் மாணாக்கரைக் குறிக்கும் சொல் சங்க இலக்கியத்திலேயே காணப்படுகிறது.

கல்வி கற்போர்க்கு ஒழுக்கமே அடிப்படைக் கல்வியாக வற்புறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார வசதி குறைந்தோர்க்குக் கற்பது அரிதாக இருந்தது. சான்றோர் என்பார் கல்வியறிவிலும் மேம்பட்டவராகக் கருதப்பட்டார்.

அந்தணர்கள் விரதம் இருந்து ஒழுக்க நெறியுடன் கல்வி கற்றனர். அரசர்கள் புலவர்களிடமும் அரசவை அமைச்சர்களிடம் பலவற்றைக் கற்றுக் கொண்டுள்ளனர்.

கூத்து முதலான கலைத்தொழில் அறிந்தவர்களிடம் இருந்து அவரது குடும்பத்தினரும் இனத்தவர்களும் கற்றனர்.

போர் வீரர்களுக்கு என்று தனிப்பயிற்சி முறையைக் கடைப்பிடித்துக் கற்றனர்.

அயல்தேயங்களுக்குச் சென்று பலவற்றைத் தமிழகத்து மக்கள் கற்று வந்துள்ளனர். ஓதல் பிரிவு இதனை உணர்த்தும்.

இல்லத்தில் உள்ள முதியோர்கள் எடுத்துக் கூறியதை இளையராய் உள்ளோர் கற்றுக் கொண்டனர்.

பழங்காலத்தில் பாடப்பொருள்கள் முறைசாரா முறையில் கூறப்பட்டு வந்தன. பழங்காலப் பாடப் பொருள்கள் ஒழுக்கத்தை மையமாகக் கொண்டு கற்பிக்கப்பட்டன.

வேதக்கல்வியில் மட்டும் பாடப்பொருள் வரையறுக்கப்பட்டிருந்தது. இளமைத்தொட்டே மாணவர்களுக்கு அறச்சிந்தனைகள் பாடப் பொருளாக விளங்கின.

இளம் வயதுடைய சிறுவர்களுக்குக் கூடத் தாய் வீரத்தை எடுத்துரைப்பதாகக் கூறுவது வீரம் ஒரு கல்விப் பொருளாக இருப்பதை உணர்த்துகிறது.

நீதி நெறிமுறைகள் சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும் கடைப்பிடித்து வந்ததைக் காட்டுகின்றது.

அரச மரபினர் வழிவழியாக அரசாட்சி முறையை ஒருவர் மற்றவரிடம் இருந்து கற்றனர்.

குடும்பம் ஒரு கல்வி நிறுவனமாக அமையும்பொழுது இல்லறக் கடமைகள் பாடப் பொருளாகின்றன.

எல்லா நிலையிலும் சமூக மரபு பின்பற்றப்பட்டது. ஒவ்வொன்றையும் கற்கும் பொழுதும் கற்பிக்கும் பொழுதும் அவற்றிற்குரிய மரபுகளே பின்பற்றப்பட்டன. பாடப்பொருளாயின.

சுவடியில் எழுதுதல், மணலில் எழுதுதல் என இருவேறு பயிற்சிகள் கற்பதில் இருந்தன. இசையுடன் பாடிப் பயிற்சி பெறும் முறையும் இருந்துள்ளது.

உரையாசிரியர்கள் செய்யுளுக்கு உரைத்த உரையும் கற்றலுக்கு உதவியாக இருந்தது.

படிக்க வாய்ப்பு இல்லாதோர் செவிவழிச் செய்தியாகக் கேட்டுக் கற்றறிந்தனர். மாணவர்களிடையே கலந்துரையாடிக் கற்கும் முறை காணப்படுகின்றது.

இலக்கண இலக்கியங்களை மனனம் செய்து சொல்லிப் பழகுதல் ஒரு வகைக் கற்றல் முறையாக இருந்தது.

சுவடிகளைப் படியெடுப்போர்க்கு இலக்கியப் பயிற்சிகள் கிடைத்தன. ஆசிரியர்களுக்கு உணவு, பொருள் முதலானவற்றைத் தந்தும் தனிப்பட்ட முறையில் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

அந்தணர்கள் வேதக் கல்வியை விரதம் இருந்து கற்றனர்.

கல்வி அறிதாகக் கிடைக்கும் ஒன்றாகவும் செல்வமாகவும் மதிக்கப்பட்டது. அரசர்கள், அமைச்சர்கள், புலவர்கள், பொது மக்கள், ஆண்கள், பெண்கள், வணிகர், அந்தணர் எனப் பல திறத்தினரும் கல்வியை மிக உயர்ந்த கருவியாகக் கருதினர். கல்விக்கு மிக உயர்ந்த சமூக மதிப்புக் கிடைத்தது.

உயர்ந்த அரசனையும் தாழ்ந்த குலத்தவனையும் இணைக்கும் கருவியாகக் கல்வி இருந்தது.

சங்க இலக்கியங்களில் கல்வி குறித்த பாடல்களைத் தொகுத்துத் தமிழகச் சமூக வரலாற்றையும் கல்வி வரலாற்றையும் அவற்றோடு இணைந்த அரசியல் பொருளாதார நிலைகளையும் ஆராய்வதற்கு மேலும் வாய்ப்புகள் இருக்கின்றன.